# உதயன்

சுடர் 30 | கதிர் 249 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆடி 17, ஞாயிற்றுக்கிழமை 02.08.2015


# விக்கியின் கோரிக்கைக்கு ஐ.நா. ஆதரவு

## சர்வதேச விசாரணையா ? உள்ளகப் பொறிமுறையா? என அறிக்கை வெளியானதன் பின்னரே தீர்மானம்

கொழும்பு, ஓகஸ்ட் 2
நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல் மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுதல் போன்றவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஐக்கிய நாடுகள் சபையிடம் விடுத்த கோரிக்கைக்கு ஆதரவளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரி

பக்கம் 21



# சமஷ்டியை வாக்குகள் மூலம் தமிழ் மக்கள் ஏற்க வேண்டும்

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்து; சர்வதேசத்தின் எதிர்பார்ப்பெனவும் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்துள்ள சமஷ்டித் தீர்வுத் திட்டத்திற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கின்றீர்களா? என்பதனை சர்வதேச நாடுகள் பார்த்துக்கொண்டிருக்கின்றன. எனவே, தமிழ் மக்களின் வாக்குகள், தமிழர் பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்டுள்ள தீர்வை ஆதரித்து உறுதிசெய்வதாக அமையவேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
யாழ் முகாமையாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் 2015ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் தொடர்பான கேள்விக் கொத்து நிகழ்வு நேற்றைய தினம் சகல கட்சிகளையும் உள்ளடக்கி நல்லூர் யூரோவில் மண்டபத்

பக்கம் 21

# ஓகஸ்ட் 17 இற்குப் பின்னர் தமிழருக்கு தீர்வுத் திட்டம்

## முன்வைப்போம் என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஓக.2
தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தேவையான அரசியல் தீர்வுத் திட்டத்தை ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிக்குப் பின் உருவாகும் எமது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு வழங்கும்.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
அதேவேளை, நாடாளுமன்றத் தேர்

பக்கம் 21

# உள்ளக விசாரணையிலும் சர்வதேசத்தின் தலையீடு

## தமிழ்க் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலில் நடக்கிறதா என மஹிந்த தரப்பு சந்தேகம்

கொழும்பு, ஓக. 2
போர் தொடர்பான உத்தேச உள்நாட்டு விசாரணையில் சர்வதேச தலையீடு இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சந்தேகம் வெளியிட்டுள்ளது.
போர் தொடர்பான விசாரணைகளில் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின்

பக்கம் 21

# நேற்றுவரை 15 மில்லியன் வாக்குச் சீட்டுக்கள் அச்சடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்காக நேற்றுவரை 15 மில்லியன் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றை அச்சிடுவது இன்றுடன் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.
இதுவரையில் 18 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளதாக அரச அச்சக அதிபர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.
தேர்தல்கள் செயலகம் ஊடாக வாக்குச் சீட்டுக்களை மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி

பக்கம் 21

# தேர்தல் சட்ட மீறல்; 290 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஓக. 2
தேர்தல் சட்டமீறல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இதுவரை 290 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
பொலிஸாருக்குக் கிடைத்துள்ள 215 முறைப்பாடுகளின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தலைமையகம் கூறியுள்ளது.
இதேவேளை, தேர்தலுடன் தொடர்புடைய 732 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் சுட்டிக் காட்டியுள்ளது.
சட்டவிரோத நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பிலேயே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டுப் பணி

பக்கம் 21

# தேர்தல் கண்காணிப்பில் மாற்று வலுவுள்ளோரும்

யாழ்ப்பாணம், ஓக. 2
பொதுத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் மாற்றுவலுவுள்ளோரையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.
மாற்றுவலுவுள்ளோர் தொடர்பில் சமூகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
இதுதவிர அவர்களின் அரசியல் ரீதியான உரிமைகளை

பக்கம் 21

# தேர்தல் விதிமீறல்கள் 804 53 வன்முறைகளும் பதிவு

யாழ்ப்பாணம், ஓக. 2
தேர்தல் பரப்புரைகள் சூடு பிடித்துள்ள நிலையில் இதுவரை தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 804 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.
அவற்றில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 53 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாகவும் கபே கூறியுள்ளது.
கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவாக 120 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. கொழும்பிலும் இரத்தினபுரியிலுமாக 2 கொலைகளும் இடம்பெற்றுள்ளன. அடி காயப்படுத்தல், அச்சுறுத்தல் தொடர்பில் 17 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துதல் உள்

பக்கம் 21

# இலங்கைப் பயணத்தை பிற்போட்டது ஐ.நா. குழு

## தேர்தலே காரணம்

கொழும்பு, ஓக. 2
காணாமற்போனோர் தொடர்பான ஐ.நா. செயலணி, நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு மேற்கொள்ள விருந்த பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.
காணாமற்போனோர் தொடர்பான ஐ.நா. செயலணி நாளை தொடக்கம் 10 நாள்கள் இலங்கையில் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தது.
எனினும், எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால், இந்தப் பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்

பக்கம் 21

# தபால்மூல வாக்களிப்பு சகல பணிகளும் பூர்த்தி

கொழும்பு, ஓக. 2
நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூலம் வாக்களிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.
இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு நாடு முழுவதும் 5 லட்சத்து 66 ஆயிரத்து 823 பேர் தகுதி பெற்றுள்ளனர்.
பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும்,

பக்கம் 21






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் பற்றி சரித்திர ஆய்வு அவசியம்

## முதலமைச்சர் விக்கி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 2

இலங்கையின் தமிழ் மக்கள் பற்றியும், இந்து மதம் பற்றியும் விரைவில் சர்வதேச சரித்திர வல்லுநர் குழுவொன்று ஆராய்ந்து ஆதார பூர்வமான வெளியீடு ஒன்றைக் கொண்டுவர வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. ஆராய்ச்சி என்பது மிக மிக முக்கியமாக இன்றைய கால கட்டத்தில் தேவைப்படுகின்றது என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் இந்து ஆராய்ச்சி மாநாடு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் எம்மைப் பற்றி நாம் ஆராய வேண்டிய காலத்தை நாம் எட்டியுள்ளோம் என்றே கூறவேண்டும். அதாவது இதுவரை காலமும் எமது நாட்டின் சரித்திரம் தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காகத் தொடர்ந்து வந்த அரசுகளினால் பிறழ்வாகவுந் தவறாகவும் எழுதப்பட்டு உண்மைக்குப் புறம்பான சரித்தரச் செய்திகள் எமது மாணவ சமுதாயத்திற்குக் கூறப்பட்டு வந்துள்ளன. உண்மை என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து உலகிற்குக் கூறுங் காலம் தற்போது உதித்துள்ளது. நாமாகக் கூறினால் எமக்குப் புலிப்பட்டமுந் தீவிரவாதப் பட்டமுஞ் சூட்டி விடுவார்கள்.

உள்ளூர் சரித்திராசிரியர்கள் உண்மையை உள்ளவாறு கூறப் பயப்படுகின்றனர் அல்லது வேண்டுமென்றே பிறழ்வாகக் கூறத் தலைப்படுகின்றனர். இன்று பலவிதமான அகழ்வுகளும் கல்வெட்டுக்களும் உண்மையை உலகறியச் செய்யத் துடித்துக்கொண்டிருக்கின்றன.

பௌத்தம் இலங்கைக்கு வரமுன் இங்கு வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் பேசிய மொழி என்ன? அவர்களின் பாரம்பரியம் என்ன என்பவை சம்பந்தமாகச் சர்வதேச சரித்திர நிபுணர் குழுவொன்று ஆதார பூர்வமான வெளியீடொன்றைக் கொண்டு வந்தால் இன்று இந்த நாட்டில் நிலைபெற்றிருக்குந் தவறான முடிவுகள் யாவற்றையுந் தூக்கி எறிய வேண்டியிருக்கும்.

உண்மையை வெளிப்படுத்தாது ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் உயிர் வாழ்வோமானால் எமது வருங்காலச் சந்ததியினரே பாதிக்கப்படுவர். எம்முள் பலர் நாங்கள் பத்தாம் நூற்றாண்டில்



சோழர் படையெடுத்து வந்தபோது இங்கு வந்தவர்கள் தானே என்ற கருத்தைக் கொண்டுள்ளார்கள். பத்தாம் நூற்றாண்டிலும் வந்தோம். அதற்கு முன் பல்லாயிர வருடகாலமும் நாங்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளோம் என்பதை உலகறியச் செய்ய வேண்டும்.

இதுவரை காலமுஞ் சற்றுத் தயங்கித் தயங்கிச் சொன்ன வார்த்தைகளைச் சற்றுத் திடமாக இனிக் கூறினால் என்ன என்பது தான் என் கேள்வி. பிறநாட்டு நல்லறிஞர்கள் எமக்கேற்பட்டிருக்கும் நிலையினை நன்கறிந்து வைத்திருக்குங் காலமிது. ஆகவே அவற்றைக் கூறுவதால் எமக்கு நன்மையே கிடைக்கும்.

வெளிநாடுகளின் உதவியின்றிச் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இன்றி எம்நாட்டின் அரசியல் அதிகார பீடந் தன்னை மாற்ற முன்வராது. ஆகவே எமது ஆராய்வுகள் வெறுமனே தமிழில் மட்டும் வெளிவந்து பயனில்லை. வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்த்தாவது வெளிவரவேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்லுவதிலோர் மகிமை இல்லை திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும் என்றான் பாரதி. ஆனால் இன்று நாமாக எதைப் படைத்தாலும் அதற்குப் புலிப்பட்டம் கட்டப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் வெளிநாட்டோர் உதவியுடன் திறமான புலமையை நாங்கள் உருவாக்க உழைக்க வேண்டும்.

1956 இல் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எமக்கு எதிரானவர்களின் மனோநிலையை உணர்ந்து செயலாற்ற வேண்டிய ஒரு நிலையில் நாம் உள்ளோம். அவர்களின் செயலாற்றலுக்கு அத்திவாரமாக அமைந்திருப்பது அவர்கள் சித்திரித்துள்ள கட்டுக் கதைகள். அவை கட்டுக் கதைகள் தான் என்பதை நாங்கள் சரித்திர ரீதியாக நிரூபித்தோமானால் அவர்களின் அத்திவாரமே உலக அரங்கில் ஆட்டங்கண்டு விடும். அதற்கு அகிலதேச ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கையானது தேவைப்படுகின்றது–என்றார். (த–4)

## வாக்காளர் அட்டை 10 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும்

கொழும்பு, ஓக. 2

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தபாலில் அனுப்பப்பட்ட வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகில் உள்ள தபால் அலுவலகத்தில் ஆள் அடையாளத்தை உறுதி செய்து பெற்றுக் கொள்ளலாம் என தபால்மா அதிபர் ரோஹன ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

ஆள் அடையாளத்தை உறுதி செய்ய தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் அவசியம் என்றும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் அட்டைகள் கிடைக்கு வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## உள்ளக விசாரணைப் பொறுப்பு வடக்கு மாகாண சபையிடமா?

செப்ரெம்பரில் சர்வதேச தரத்திலான விசாரணைக்கான உள்ளூர் பொறிமுறையை ஏற்படுத்த அரசு எடுத்துள்ள தீர்மானத்தின் பின்னணியில் வட மாகாண சபையிடம் அந்தப் பொறுப்பை ஒப்ப டைப்பதற்கான உடன்பாடு களுடனே ஐக்கிய தேசியக் கட்சி செயற்படு கின்றது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்றுக் குற்றஞ்சாட்டியது.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ராஜித சேனாரத்ன அதனை நிராகரித்திருந்ததுடன், ஐக்கிய நாடுகள் சபை இணங்கக்கூடிய சர்வதேச தரத்திலான உள்ளக விசாரணை ஒன்றை நடத்த அரசு தயாராக உள்ளது என்றும், மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் செப்ரெம்பரில் உள்ளக விசாரணைக் கான பொறி முறை அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் நேற்று கொழும்பில் அமைந் துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத் தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலா[illegible] சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

ராஜித குறிப்பிட்ட விடயத்தில் பல சிக்கல்கள் உள்ளன. சர்வதேச தரத்திலான உள்ளக விசாரணையை நடத்துவதற்கான பொறுப்பை வட மாகாண சபையிடமே ஒப்படைக் கவுள்ளனர். இதற்கான உடன்பாட்டுடனேயே ஐக்கிய தேசியக் கட்சியும் செயற் படுகின்றது.

இதனால் எதிர்காலத்தில் நாங்கள் சவாலுக்கு முகங் கொடுக்கவேண்டி ஏற்படும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமிழ்த்தேசியக் கூட்[illegible]மைப்பின் சமஷ்டிக் கோரிக்கை[illegible] எதிராகவே செயற்படும். அது மாத்திரமல்லாது, சர்வதேச விசாரணையை நாங்கள் ஏற்கப்போவதில்லை என்பதுடன் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நாங்கள் ஒரு வருடத்துக்குள் நடைமுறைப் படுத்துவதாகவும் தெரிவித் துள்ளோம்." – என்றார். (த–சி)

## மு.காவின் கூட்டத்தில் குழப்பம்; ஊடகவியலாளர் மீதும் தாக்கு

அம்பாறை, ஓக. 2

பொத்துவில் பிரதேசத்தில் இடம் பெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். அத்துடன் மற்றுமொரு ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது ஒரு குழுவினர் சத்தம்போட்டு இடையூறு விளைவித்துள்ளனர். இந்த நிலையில் கூட்ட மேடைக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வந்தபோது பொத்துவில் பிரதேசத்தில் இரு தடவைகள் மின்சார துண்டிப்பு ஏற்பட்டது.

இதனையும் மீறி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாற்ற முற்பட்டபோது ஒரு குழுவினர் சத்தமிட்டுள்ளனர். அத்துடன் மேடையை நோக்கிக் கல்லெறிந்துள்ளனர்.

இந்தச் சமயத்தில் பிராந்திய ஊடகவியலாளரான சம்சுல் ஹுதா மீது ஒரு குழுவினரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் மற்று மொரு பிராந்திய ஊடகவியலாளரான ஏ.எல்.எம்.சியாத் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கூட்டம் இடம் பெற்ற மேடைக்கு விசேட அதிரடிப் படையினர் அழைக்கப் பட்ட பின்னர் அமைச்சர் ஹக்கீம் கூட்டத்தில் உரையாற்றினார்.

இதேவேளை, தாக்குதலுக்குள்ளான பிராந்திய ஊடகவியலாளரான பொத்துவிலைச் சேர்ந்த சம்சுல் ஹுதா பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுவிட்டு பொத்துவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

அத்துடன் கைது செய்யப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த பிராந்திய ஊடகவியலாளரான ஏ.எல்.எம்.சியாத் பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசார ணைகளைப் பொத்துவில் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (த–10)



ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2001 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் 14 ஆம் ஆண்டு நினைவு நாளை யொட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரத்ததான முகாம் கல்லூரி குமாசுவாமி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த இரத்ததான முகாமில் சுமார் ஐம்பது பேர் வரையில் இரத்த தானம் செய்தனர். (த–86)

## உடற் பயிற்சி செய்தவரை மோதித் தள்ளியது ஹன்ரர்

### ஆசிரியை உயிரிழப்பு

மட்டக்களப்பு கொழும்பு நெடுஞ் சாலையில் கொம்மாந்துறைப் பகுதியில் நடைபெற்ற வாகன விபத்தில் பாடசாலை ஆசிரியை ஒருவர் உயிரிழந்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொம்மாந்துறை பாலசுப்பிரமணியம் சதுக்கத்தைச் சேர்ந்த 58 வயதான கலையரசி பாலச்சந்திரன் என்பவரே உயிரி[illegible] [illegible] யளவில் நெடுஞ்சாலையின் ஓரமாக உடற்பயிற்சிக்காகச் சென்று கொண்டிருந்தபோது வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி எதிரே வந்த ஹன்ரர் ரக வாகனம் அவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றது எனக் கொல்லப்பட்ட ஆசிரியையின் கணவர் பாலச்சந்திரன் பொலிஸில் வழங்கிய வாக்குமூலத்தில் தெரி வித்துள்ளார்.

தலையிலும் காலிலும் காயம்பட்டு வீதியில் வீழ்ந்த ஆசிரியை உடனடியாகச் செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்துள்ளார். விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (த–10)

## தங்கக் கட்டி கடத்திய இலங்கையர் கைது

இந்தியாவின் மும்பை நகரில் இருந்து 12 மில்லியன் ரூபா பெறுமதியான 24 தங்கக் கட்டிகளை கடத்தி வந்த இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாகச் சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர்லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

9 டபிள்யு 256 என்ற விமானத்தில் குறித்த சந்தேக நபர் வந்ததாகவும், அந்த விமானத்தின் விமானி வழங்கிய தகவல்களின் படி அவர் கைது செய்யப்பட்டதாகவும் லெஸ்லி காமினி தெரிவித்தார். அத்துடன் சந்தேக நபரின் பயணப் பையில் இருந்த தங்கக் கட்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (த–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண இ.போ.சவின் பிரச்சினைக்கு தீர்வு தேவை

## பிரதம செயலாற்று அத்தியட்சகர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 2
இ.போ.சவின் வடபிராந்திய பஸ் சேவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்கின்றன.இதற்குப் பொலிஸார், மாவட்ட செயலகத்தினர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர் ஆகியோர் நீதியான தீர்வைப் பெற்றுதர வேண்டும் என இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம செயலாற்று அத்தியட்சகர் உபாலி கிரிபத் தொடுவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை வடபிராந்திய பஸ் சேவை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடபகுதியில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படாவிட்டால் நாங்கள் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியநிலை தற்போது இருக்கிறது. இதுவரை வட பகுதியைச் சேர்ந்த 44 பஸ்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. சாரதிகள் அடித்துக் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் சட்டத்தை மதிக்கிறோம் அதன்படி செயற்படுகிறோம். இதுவரை தனியார் துறையினருக்கோ அல்லது அவர்கள் சார்ந்தவர்க ளுக்கோ எந்தப் பாதிப்பையும் நாம் ஏற்படுத்தவில்லை. நாங்கள் எப்போதும் அமைதியான முறையிலேயே நடந்து கொள்கிறோம். எந்தக் கைகலப்பிலும் ஈடுபடவில்லை. பொறுமையுடன் செயற்பட்டு வருகிறோம்.

பொலிஸார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய போக்குவ ரத்து ஆணைக்குழுவினர் இது தொடர்பில் கரிசனையோடு செயல்பட்டு எமக்குரிய தீர்வைப்பெற்றுத் தர வேண்டும்.

எமது அன்றாடத் தேவைகளுள் ஒன்றாகப் போக்குவரத்து விளங்குகிறது. இலங்கைப் போக்குவரத்து சபையினரால் மக்களுக்கு வழங்கப்படும் தனித்துவமான சேவையை எந்த வொரு தனியார் துறையினராலும் வழங்க முடியாது. எமக்குத் தனியார் போக்குவரத்து துறையினரி டம் எந்தவிதபகைமையும்இல்லை. ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கான சராசரி வருமானம் தற்போது 55 ரூபாவாக இருக்கிறது. இந்த வீழ்ச்சிக் குக் காரணம் சட்டரீதியற்று மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போக்குவரத்து ஒழுங்குமுறை ஏற்பாடுகளே.

ஆகவே வழி அனுமதிப் பத்திரம் அற்ற வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதை நிறுத்த வேண் டும். தற்காலிக வழி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறையை நிறுத்த வேண்டும்.

அதேபோன்று இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 44 பஸ்கள் 2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரையான காலப்பகுதி வரை உள்ளூர் சேவையில் ஈடுபடும்போதும், வடக்கில் நீண்டதூர சேவையில் ஈடுபடும்போதும் பல்வேறு தாக்குதல் மற்றும் கல் எறிதல் காரணமாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், எந்த ஒரு தீர்வும் இது வரை பெற்றுத்தரப்படவில்லை.

இது தவிர தனியார் துறையினர் நேரசூசியை கடைப்பிடிக்காமல் அரச பஸ்கள் செல்கின்ற நேர சூசியை அண்மித்ததாகச் சேவையில் ஈடுபடுகின்றனர். இதனால் வருமானம் வீழ்ச்சி கண்டுள்ளது. ஏட்டிக்குப் போட்டியாக வாகனங்களைச் செலுத்தி அதிக விபத்து சம்பவங்களை ஏற்படுத்துகின்றனர். இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். ஏனைய மாகாணங்களைப்போன்று போக்குவரத்து நடைமுறை தொடர்பான ஒழுங்குபடுத்தலில் 50 வீதம் அரசதுறை 50 வீதம் தனியார் துறை என்ற நிலை உள்வாங்கப்பட வேண்டும்.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தனியார் துறையின ரும் பயணிகளுக்குப் பற்றுச்சீட்டு வழங்கும் நடைமுறையை கொண்டு வர வேண்டும், நிரந்தர வழித்தட அனுமதிப் பத்திரத்தை வைத்திருத்தல் வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் அதனை இந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அது கூட நிறைவேற்றப்படவில்லை –என்றார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடபிராந்திய தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் இணைப்பாளரும் யாழ்.மாவட்டச் செயலகக் கணக்காளருமான ச.குகதாஸிடம் கருத்துக் கேட்டபோது, மாவட்டச் செயலகத்தில் இடம்பெறுகின்ற கூட்டங்களின் போது இரு தரப்பினராலும் பரஸ்பரம் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவை தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. அவற்றில் சில தீர்மானங்கள் சுமுகமான முறையிலே தீர்க்கப்படுகின்றன. தற்போது வடக்கு மாகாணத்துக்கெனப் போக்குவரத்து அமைச்சு இருப்பதால் அவர்களே நேரப் பங்கீடு தொடர்பான அட்டவணைப்படுத்தலை மேற்கொண்டு வருகின்ற னர்.

அதேபோன்று போக்குவரத்து நடைமுறை தொடர்பிலான ஒழுங்குபடுத்தலில் உள்ளூர் தவிர்ந்த வெளி மாவட்டங்களுக்கான ஒழுங்குபடுத்தலில் 60 வீதம் தனியார்துறையும், 40 வீதம் அரசதுறையும் மேற்கொள்வதற்கான உடன்பாட்டை எட்டுவதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சு மேற்கொண் டுள்ளது என்று தெரிவித்தார். (த–ரி)

## வெலிவேரியாச் சம்பவத்தில் படையினர் குற்றம் புரிந்தனர்

வெலிவேரியா ரத்துபஸ்வல சம்பவத்தின் போது படையினர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக மனித உரிமை ஆணைக்குழு நடத்திய விசாரணைகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற போராட்டமொன்றின் போது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதலினால் இரண்டு பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட மூன்று பேர் கொல்லப்பட்டதுடன், 37 பேர் காயமடைந்திருந்தனர்.

ரத்துபஸ்வல வெனிக்ரோஸ் என்னும் கைத்தொழிற்சாலையை மூடிவிடுமாறு கோரி வெலிவேரியாவில் மக்கள் நடத்திய போராட்டத்தைப் படையினர் கட்டுப்படுத் தியிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்குப் படையினர் அழைக்கப்பட்டிருந்தனர். இதன் போது படையினர் அதிகார மீறல்களில் ஈடுபட்டதாக விசாரணைகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

போராட்டத்தைக் கட்டுப்படுத்தப் பொலி ஸார் இருந்தபோது, படையினர் எதற்காக யாரால் அழைக்கப்பட்டனர் என்பது இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய தன் பின்னரே, கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டதுடன், கலகத் தடுப்புப் பொலிஸாரின் உதவி பெறப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரிகளுக்கு எதிராக இராணுவச் சட்டங்களின் அடிப் படையில் உச்சபட்சத் தண்டனை விதிக்கப் படவேண்டுமென மனித உரிமை ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது. (த)


நாடாளுமன்றத் தேர்தல்
17.08.2015
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



தமிழ் தேசிய இனத்தின்
இறையாண்மை
சுயநிர்ணய உரிமை
வடக்கு கிழக்கு இணைந்த
தமிழர் தேசத்தில் தன்னாட்சி

தமிழ்த் தேசிய இனத்தின்
விடுதலை
அந்தக் கொள்கைக்காக
இலட்சியத்துக்காக தன்னை
முழுமையாக அர்ப்பணித்த
உதாரண மனிதன்
எம் தலைமகன்

எங்கள் தெரிவு
9
மாவை.சோ. சேனாதிராசா
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X 9

பாராளுமன்றத் தேர்தல் - 2015
தமிழ் தேசிய கூட்டமைப்பு (TNA)
வன்னி மாவட்டம்
(வவுனியா, மன்னார், முல்லைத்தீவு)
வன்னியின் வளர்ச்சிக்கு வரலாறு படைப்போம்






கந்தையா சிவநேசன் (பவன்) J.P
(வடமாகாணசபை உறுப்பினர்)
01. வேலையற்ற பட்டதாரிகளின் பக்கச் சார்பற்ற உடனடி வேலைவாய்ப்பிற்கு....
02. இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பினை அதிகரித்தல்
03. இளைஞர்கள் ஊடாக சமூகப் பொறுப்புக்களை அதிகரித்தல்
04. பிரதேச இளைஞர் கழகங்களின் ஊடாக திறமையான இளைஞர்களை இளைஞர் பாராளுமன்றம் அனுப்பப்படுபடல்
05. உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைத் தேர்தல்களில் தகுதியான இளைஞர்களை சமூகத்திற்கு அறிமுகம் செய்தல்
"உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைவோம்"
பட்டதாரிகளுடன் பல்கலைக்கழக மாணவர்கள்
- வன்னி மாவட்டம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சிறுநீரக நோய்த் தடுப்பில் விசேட கவனம் அவசியம்

வடக்கு மாகாணத்தில் வாழும் பல லட்சம் மக்களுக்கு, சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதற்கு தமது நாட்டு அரசு உதவும் என்று, கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியத் தூதுவர் வாக்குறுதி வழங்கி உள்ளார்.

அதேபோன்று இந்தியத் தூதுவர் வை.கே. சின்கா குண்டசாலை, பொல்காவலை, களுத்துறைப் பிரதேசங்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் வழங்குவதற்கு இந்தியா உதவும் என்று அறிவித்து உள்ளார்.

சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதற்கு வெளிநாடுகளின் உதவியைக் கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் மாநாடு ஒன்றை நடத்தினார்.

வெவ்வேறு வெளிநாடுகளின் தூதுவர்கள் தத்தமது தேசங்கள் வழங்கவல்ல உதவிகளை அங்கு வெளிப்படுத்தினர். அவற்றில் இரண்டே மேற்போந்தவை.

அதே வகையில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட பல நாடுகளின் தூதுவர்கள் தாம் குறித்த விடயத்தில் எந்தெந்த வகையில் உதவ இயலும் என்பதனை எடுத்து உணர்த்தியிருந்தனர்.

அனுராதபுரம் மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் நாற்பதாயிரம் பேர் பாதிப்புற்றுள்ளதாகவும், வருடாந்தம் நூற்றுக் கணக்கில் நோயாளர் சிறுநீரகப் பாதிப்பால் மரணிப்பதாகவும், புள்ளி விவரங்களை வெளிநாட்டுத் தூதுவர்களுக்குச் சுட்டிக் காட்டினார் ஜனாதிபதி.

சிறுநீரக நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு, உகந்த பல வைத்திய சேவைகளை வைத்தியசாலை ஊடாக வழங்கிய போதிலும், நோயைக் கட்டுப்படுத்த இயலாத நிலை உயர்ந்து செல்வதாகவும், ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவர்களிடம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்.

சுத்தமான குடிதண்ணீரை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதில் உள்ள இயலாமைகளை நீக்குவதற்கு, அனைத்துலக நாடுகள் உதவினால் மட்டுமே, சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த இயலும் என்ற நிலையையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஒட்டுமொத்தத்தில், சிறுநீரக நோய் வறண்ட பிரதேசங்களில் வேகமாகப் பரவி வருவதால், மக்களது மரணங்களை குறுகிய காலத்தில் உயர்த்தும் ஆபத்து மிக நெருங்கி வருகிறது.

வறண்ட பிரதேசமான வடக்கு மாகாண மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதற்கு உகந்த ஏற்பாடுகள் செய்யப்படாவிடில், அவர்களின் நிலை, மிகக் குறிப்பாக விவசாயிகளின் வாழ்க்கை, வாடிவறண்டு, துவண்டுவிடும் என்பதனை சம்பந்தப்பட்ட தரப்புகள் மனதில் கொள்ள வேண்டும்.

அதே வகை சார்ந்து, நாட்டின் ஏனைய மாகாணங்களில், பிராந்தியங்களில் தண்ணீர் மாசடைவதனையும், சிறுநீரக நோய் பரவுவதனையும் விரைந்து கட்டுப்படுத்தவும் கூட்டு முறைச் செயற்பாடு அவசியம்.

இந்த மனித இடரை இலங்கை அரசினால் தனித்துப் போக்கிவிட இயலாது என்பது மிக வெளிச்சம்.

மனித நேயம் நாடி வெளிநாடுகள் இயற்ற முன்வந்துள்ள சேவை, காலத்தால் செய்யும் பேருதவி எனின், அது மிகைப்படுத்தல் அன்று.

மனிதருக்கு ஏற்படும் நோய்களில் குணப்படுத்த மிகச் சிரமமான சிறுநீரகப் பாதிப்பு நோய் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணி, எமது வாழ்வியல் நடைமுறையிலுள்ள குறைபாடுகளே.

அவற்றை நேர்சீர் செய்தால் இந்த நோய்ப் பாதிப்பைப் பெரிய அளவில் தவிர்த்திட இயலும். இதனை மனதிருத்திச் செயற்பட வேண்டியது அனைவரதும் உடனடியான கூட்டுப் பொறுப்பாகும். எமது சமூக நலன் நாடிய விசேட தொண்டு என்றும் அதனைக் கொள்ளலாம்.

# பஸ் சாரதிகள், நடத்துநர்கள் கண்ணியத்துடன் நடவுங்கள்

## பயணிகள் முறைப்பாடு தெரிவித்தால் நடவடிக்கை என்கிறார் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஓக. 2

தனியார் பஸ்கள் உட்பட வடக்கில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களின் ஒரு சில நடத்துநர்கள், சாரதிகள் பயணிகளுடன் தவறான அணுகுமுறையில் செயற்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. எனவே அத்தகையவர்கள் இனிமேல் அவதானமாக இருக்க வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தனியார் பஸ்களில் பயணிகளை ஏற்றும்போது குறிப்பாக யுவதிகளுடன் சில சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தவறாக நடந்து கொள்கின்றனர் என்று முறைப்பாடுகள் வருகின்றன. அதாவது சில நடத்துநர்கள் பஸ்ஸின் மிதிபலகையில் நின்றவாறே பயணிகளை ஏற்றுவதனால் அந்தச் சிறிய இடைவெளி ஊடக யுவதிகள், பெண்கள் சிரமப்பட்டு, சங்கடப்பட்டே ஏற்றுவதாக ஒரு சாரார் முறைப்பாடு செய்துள்ளனர். அவ்வாறு பஸ்களில் தாம் ஏறும்போது ஒரு சில நடத்துநர்கள் தம்மில் கைபோட்டு அல்லது தம்மைக் கட்டியணைப்பதாக மற்றொரு சாரார் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். அவ்வாறே சில வேளைகளில் இறக்கியும் விடுகின்றனர்.

பயணிகள் தாமாகவே பஸ்ஸில் ஏறக்கூடியவர்கள். அவ்வாறு முடியாத வயதானவர்களுக்குத் தேவையென்றால் மாத்திரம் பஸ் படிக்கட்டில் ஏறுவதற்கு உதவி செய்யலாம். அதைவிட்டு முறைப்பாடுகள் வருமளவுக்கு நடத்துநர்களோ சாரதிகளோ நடந்து கொள்ளக்கூடாது.

இனிமேல் அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் உடனடி முறைப்பாடு செய்வது பற்றி ஆராயவேண்டியுள்ளது. அது தொடர்பில் இனிமேல் பஸ்களின் சாரதிகளும் நடத்துநர்களும் உரிய முறையில் செயற்பட வேண்டும். தவறின் ஒழுக்காற்று நடவடிக்கை, சட்ட நடவடிக்கை என்பன எடுக்க வேண்டிவரும். முறைப்பாடு வரும்போது அதிலிருந்து பின்வாங்க முடியாது.

அடுத்த மாகாண சபை அமர்வில் போக்குவரத்து நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது நடைமுறைக்கு வரும்போது போக்குவரத்துடன் தொடர்புடைய பல பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். அதனை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளேன்-என்றார். (த-4)

# பாடசாலை செல்லாத சிறுவர்களின் கல்விக்காக தொடர் வேலைத் திட்டம்

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

அச்சுவேலி, ஓக. 2

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களைப் பாடசாலைகளில் சேர்த்து கல்வி புகட்டுவதற்குக் கிராமஅலுவலர் பிரிவு ரீதியாகத் தொடர் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கிராம அலுவலர் பிரிவு வாரியாக நிறுவப்பட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டு குழுக்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கும் சிறுவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டுவதோடு பாடசாலை நாள்களில் குறித்தொதுக்கப்பட்ட தினத்தில் பிரதேச செயலர் பிரிவு சிறுவர் நலன் மேம்பாட்டு அலுவலர், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மற்றும் உள்ளூர் பிரமுகர் உள்ளடங்கிய குழுக்கள் பொலிஸாரின் அனுசரணையுடன் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை இனம்கண்டு பாடசாலையில் சேர்ப்பதோடு குறித்த மாணவர்களின் பெற்றோருக்கும் சிறுவர் பாதுகாப்பு மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கி வருகின்றன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புத்தூர் மேற்கு, ஆனந்தபுரம், நாவலடி, நீர்வேலி, ஆவரங்கால் மேற்கு, உரும்பிராய், கோப்பாய் வடக்கு உள்ளிட்ட பகுதியில் அமைந்துள்ள சில கிராமங்களில் தொடர் வேலைத் திட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி சிறுவர் மேம்பாடு பாதுகாப்பு தொடர்பான தொடர் வேலைத் திட்டத்தின் மதிப்பீடு மற்றும் மீள்பரிசீலனை மாதாந்தம் பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் நடை பெறும் சிறுவர் பாதுகாப்பு மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலில் பரிசீலனை செய்யப்படுகின்றது.

சிறுவர்களைப் பாடசாலையில் இணைத்து வேலைத்திட்டத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்படுவதாகவும் மேற்படி செயற்றிட்டத்துக்கு பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் உள்ளூர் சமூக அமைப்புக்கள் பொருத்தமான முறையில் உதவி வழங்கி ஒத்துழைத்து வருவதாகவும் கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார். (த-11)

# உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்கு 24 மணிநேரப் பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, ஓக 02

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்களாகச் செயற்படவுள்ள அனைத்துப் பாடசாலைகளுக் கும் 24 மணி நேரப் பொலிஸ் பாது காப்பு வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் தரப்பு அறிவித் துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 23ஆம் திகதி, 5ஆம் தர புலமைப் பரீட்சையும் இடம்பெறவுள்ளது. அனைத்துப் பரீட்சைகளும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி முடிவுக்கு வருகின்றன.

இந்த நிலையில், பரீட்சை முறைகேடுகள் மற்றும் வன்முறைச் சம்பவங் கள் இடம்பெறாது தடுப் பதற்காக பரீட்சை நிலையங்களாகச் செயற்பட வுள்ள பாடசாலைகளுக்கு 24 மணி நேர பொலிஸ்பாதுகாப்பு வழங்கப் படவுள்ளது. பரீட்சை எழுதும் மாணவர்களைக் குழப்பும் வகையில் வேட்பா ளர்கள் பிரசாரத்தை மேற்கொள்ளு தல், ஒலி எழுப்புதல் என்பன தடை செய்ய பட்டுள்ள தாகவும் பொலிஸ் தரப்பு மேலும் கூறியது. (த)

# மோசமான நிலையில் கிராமங்களின் வீதிகள்

## இதனால் தொடர்கின்றன விபத்துகள்

தென்மராட்சி ஓக. 2

சீரற்ற வீதிகளும் வீதியோரப் பற்றைகளும் விபரீத விபத்துக்களை ஏற்படுத்தி வரும் அவல நிலை தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த உசன், கெற்பேலி, விடத்தற்பளை, பாலாவி, தவசிகுளம் போன்ற கிராமங்களில் நீண்ட காலமாக வீதிகள் புனரமைக்கப்படாததால் அப் பகுதிகளில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும், வீதிகளைப் புனரமைக்கப் பல தரப்பினருடனும் தொடர்பு கொண்டும் இதுவரை பயன்கிடைக்கவில்லையெனவும் அப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரிவுகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த காலம் தொடக்கம் தற்போது வரை கனரக வாகனங்களின் பாவனை அதிகரிப்பினால் வீதிகள் குண்டும் குழியுமாகவும், மணல் வீதிகளாவும் மாறி போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்தப் பிரிவுகள் விவசாயக் கிராமங்களாகவும், மீன்பிடிக் கிராமங்களாகவும் உள்ளதால் பல்வேறு வாகனங்கள் வீதிகளைத் தினமும் பயன்படுத்தி வருகின்றன. அத்துடன் மோட்டார் சைக்கிள்களின் பாவனையும் அதிகரித்துள்ளன. இதனால் கட்டுப்பாடுகளை இழக்கும் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்பட்டு உயிராபத்துக்களும் காயமடைவோரின் எண்ணிக்கையும் நாளாந்தம் இடம் பெறும் சம்பவங்களாக மாறியுள்ளன.

நேற்றும் வேகமாக வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் வீதி வளைவுகளில் நிலைகுலைந்ததில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த இரு இளைஞர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மணல் வீதியில் வந்த மோட்டார் சைக்கிளின் முன்பிரேக்கை திடீரென அழுத்தி நிறுத்த முற்பட்ட வேளையில் அதில் பயணித்த இளைஞன் தூக்கி வீசப்பட்டதில் மூக்கிலிருந்து இரத்தம் வழிந்த நிலையிலும், வீ[illegible] வளைவில் திரும்பிய மோட்டார் சைக்கிள் எதிரே சைக்கிள் வந்ததால் நிலை குலைந்து வீதியோரம் செல்ல முடியாத அளவுக்குப் பற்றை காணப்பட்டதால் நிறுத்த முற் பட்ட வேளையில் பற்றைக்குள் தூக்கி வீசப்பட்டுக் காலில் காய மடைந்த நிலையிலும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் கதிரைகளை கைப்பற்றும் போர் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 2

சில மாகாணங்களின் முதலமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொள்வதில் மாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையில் கடுமையான போட்டி ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் வெற்றியீட்டினால் முதலமைச்சர் பதவியை எவர் பெற்றுக்கொள்வது என்பது தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

மேல் மாகாணசபை முதலமைச்சர் பதவிக்கு உபாலி கொடிக்கார, காமினி திலகசிறி, ரஞ்சித் சோமவன்ஸ ஆகியோருக்கு இடையில் கடுமையான போட்டி நிலவிவருகின்றது. முதலமைச்சர் கனவில்தான் நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடாமல் தனது மனைவியைக் கொடிக்கார களமிறக்கியுள்ளார் எனக் கூறப் படுகிறது.

வடமேல் மாகாண முதலமைச்சர் பதவிக்கு குணதாச தெஹிகம, மஞ்சுளா திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் போட்டி நிலவிவருகின்றது. இதேவேளை, ஊவா மாகாணசபை யின் அதிகாரத்தை மீளவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# கொட்டாஞ்சேனைத் தாக்குதல்; பின்னணியில் விமல் வீரவன்ஸ

## பொலிஸார் சந்தேகம்

கொழும்பு, ஓக. 2

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் விமல் வீரவன்ஸ தொடர்புபட்டுள்ளாரா எனப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீது நேற்றுமுன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இனந்தெரியாத நபர் களால் மேற்கொள்ளப்பட்ட துப் பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் உட்பட 2 பேர் உயிரிழந்ததுடன், 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவத்தின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் விமல் வீரவன்ஸ தொடர்புபட்டுள்ளதாகவும், இதனை ஆயுதக் குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவமென நிறுவும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸவின் இணையத் தளமே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பொலிஸார், விமல் வீரவன்ஸவின் இணையத்தளம் முன்னுக்குப் பின் முரணான செய்திகளைப் பிரசுரித்து வருவதாகவும், இந்த நிலையிலேயே குறித்த சம்பவத்தின் பின்னணியில் விமல் வீரவன்ஸ இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பிலான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொடர்ந்தும் இவ்வாறான பல்வேறு போலியான செய் திகளை வெளியிட்டு வரும் குறித்த இணையத்தளம் விமல் வீரவன்ஸவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்குவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (த)

**வவுனியாவில் அரிசி ஆலைக்கு வேலையாள்கள் தேவை**

மில் வேலைக்கு கூலி ஆள்கள் (ஆண்கள்), கணக்கு வேலை, விற்பனை உதவியாளர், விற்பனைமுகாமையாளர், பைக்கிங்வேலைகள்(பெண்கள்) இவ்வாறான வேலைக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு: 077 667 0740
077 522 5027

(61140)
(3.9.6)

**WE WANT YOU !!**
**Jaffna Branch**

Trainee Marketing Executives &
Managment Trainee (Marketing Only)

We offer exciting income potential and career opportunities. We are represented throughtout 21 countries in Asia.

- ★ Age 18 and above.
- ★ We provide Basic salary, Travelling & Commission.
- ★ Overseas travel for achievers.

Call us to schedule an interview within 07 days.

Mr. Anthony
Contact: 077 3566835
Email :jaffnapioneerhouse@gmail.com

Pioneer House,
2nd Floor, 100,
Manipay Road, Jaffna

**கடை வாடகைக்கு**

கிளிநொச்சி A9 பிரதான வீதியில் முன்பு ACTED நிறுவனம் இயங்கிவந்த கட்டடம் கந்தசுவாமி கோயில் ஏசியன் லீசிங் கம்பனி அருகில் (பால விநாயகர் பில்டிங்) 16 அடி அகலம் 80 அடி நீளம் 4 அடி பக்கப்பாதையுடன் கீழ் மேல்மாடி கடை வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 360 6592
077 057 0394
071 721 8946

**வேலைவாய்ப்பு**

பிரபல்யம்வாய்ந்த உணவு உற்பத்தி நிறுவனத்தின் யாழ்ப் பாணத்துக்கான விற்பனை பிரதிநிதிகள் (SALES REP) தேவை.

தகைமைகள்:
- ✔ அனுபவம் மிக்க விற்பனை பிரதிநிதிகள்
- ✔ G.C.E.(A/L) வர்த்தக பிரிவில் கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும்.
- ✔ வயது எல்லை 20-35
- ✔ கவர்ச்சிகரமான சம்பளம் & தரகு (COMMISION) கொடுக்கப்படும்.

கொழும்பில் பிரபல்யம் வாய்ந்த சுப்பர் மார்க்கெட்டுக்கு
- ✔ COMPUTER BILLING காசாளர் (CASHIER) தேவை.
- ✔ G.C.E.(A/L) வர்த்தக பிரிவில் கல்வி கற்ற பெண் தேவை.



தொடர்புகளுக்கு:
011 4378161/011 4378164

**சிங்கப்பூரில் உடனடி வேலைவாய்ப்பு**

சிங்கப்பூரிலுள்ள பிரபல கம்பனிக்கு வேலையாட்கள் தேவை

| இல | வகைகள் | தேவை | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | வீட்டுப் பணிப் பெண்கள் | 100 | Sin$ 450.00 Rs.45000.00 |

விதிமுறைகளும் நிபந்தனைகளும் : 1$ = Rs.100

- வயது : 23 - 40 • ஒப்பந்த காலம் 2 ஆண்டுகள் புதுப்பித்தலுடன்
- தகுதிகாண் காலம் 3 மாதங்கள் • வேலை நேரம் : 8 -12 மற்றும் ஒரு நாளுக்கு ஓய்வு 8 மணிநேரம்
- இலவச விடுதி • லீவு : ஒவ்வொரு ஞாயிறும் உண்டு
- வருவதற்கான இலவச விமான டிக்கெட் • இலவச உணவு
- மருத்துவம் : உள்ளூர் தொழிலாளர் (MOM) சட்டப்படி
- முனையம் (Terminal ) நன்மைகள்: உள்ளூர் தொழிலாளர் (MOM) சட்டப்படி
- சலுகைகளும் நிபந்தனைகளும் சிங்கப்பூர் உழைப்பாளர் சட்டப்படி.

அரச அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் - Rs.25000/-

Asian lanka Employment (Pvt) Ltd.
Tel : 011 2589365,011 2590067 | Fax : 011 2552790
E.Mail : als@webstation.lk
LL No : 2880

max adz

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111




**JOHN KEELLS FOUNDATION**
மற்றும்
**GATEWAY LANGUAGE CENTRE**
இணைந்து வழங்கும்
ஆங்கில புலமைப்பரிசில்
அனுமதி - 2015/16

GATEWAY Language Centre
JOHN KEELLS FOUNDATION

John Keells நிறுவனத்தின் சமூக பொறுப்பாண்மை செயற்றிட்டத்தின் கீழ் Gateway மொழிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் கற்கைகள் நிலையத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக வருடாந்தம் வழங்கப்படும் ஆங்கில மொழிக் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சிக் காலம் :**
தெரிவுப்பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு 2015 ஐப்பசி முதல் 2016 மாசி வரையான நான்கு மாத காலம் முற்றிலும் இலவசமாகப் பயிற்சி வழங்கப்படும். இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் மாணவர்களுக்கு அடுத்த கட்ட கற்கைக்கான புலமைப்பரிசிலும் வழங்கப்படும்

**யார் விண்ணப்பிக்கலாம்?**
யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 12 - 14 வயதுடைய எந்தவொரு மாணவரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிப்பது எப்படி?**
உங்கள் வதிவிடத்துக்கு அருகிலுள்ள "கேற்வே" நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 05.08.2015 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல். பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களுக்கு :**

GATEWAY LANGUAGE CENTRE

#39, College Road,
Neeraviady, Jaffna.
021 567 5555

#1, New Market Building,
Chavakacheri.
021 227 0323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொட்டாஞ்சேனையில் சுட்டவர் பிடிபடவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 2

கொட்டாஞ்சேனை புளுமெண்டல் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர் இதுவரை அடையாளம் காணப்பட வில்லை எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. புளுமெண்டல் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த சிலர் மீது நேற்று முன்தினம் முற்பகல் அடையாளம் தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருந்தது. அதன்போது பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் 12 பேர் காயங்களுடன் சிகிச்சைக்காகத் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் பிரதேசத்தில் நடத்தப்பட்ட தேடுதலின்போது சந்தேகத்துக்கிடமான காரொன்றும், ரி – 56 ரகத் துப்பாக்கியின் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டிருந்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

விசாரணைகளைப் பொலிஸ் மாஅதிபரின் பணிப்பின் பேரில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (த-4)

# கடுமையான போர்க் காலத்தில் கூட நீதிமன்றங்கள் தாக்கப்படவில்லை

## இப்போது யாழ். நீதிமன்றம் தாக்கப்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவேண்டும் என்கிறார் மேல்நீதிமன்ற நீதிபதி

யாழ்ப்பாணம், ஓக. 2

போர்க் காலத்தில் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள்கூட நீதிபதிகள் மீதோ நீதிமன்றங்களின் மீதோ தாக்குதல் நடத்தியிருக்கவில்லை. இந்நிலையில் யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மூலமாகக் கண்டறிய வேண்டிய சூழ்நிலையில் உள்ளது என்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தப்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பிணை விண்ணப்பத்தை ரத்துச் செய்கின்ற கட்டளையைப் புறமொதுக்குமாறு கோரி மறியலில் உள்ளவர்களில் 22 பேர் யாழ்.மேல்நீதிமன்றில் பிணை மீளாய்வு மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். அது தொடர்பில் பரிசீலித்த நீதிபதி குறித்த மனுக்களை விசாரிப்பதை ஒத்தி வைத்தார். அது தொடர்பான கட்டளையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி நீதிவான் மன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனை நீதிவான் மன்று நிராகரித்து ரத்துச் செய்துள்ளது என்றும், அந்தக் கட்டளையைப் புறமொதுக்கி வைக்குமாறும், சந்தேக நபர்களைப் பொருத்தமான பிணையில் விடுவிக்குமாறும் 22 பேரும் சட்டத்தரணிகள் மூலமாக மேல் நீதி மன்றில் கோரியிருந்தனர்.

அது தொடர்பில் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது கட்டளையில் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிமன்றம் மீதான தாக்குதலானது நீதித்துறையின் மீதான தாக்குதல் மட்டுமல்ல நீதித்துறைச் சுதந்திரத்துக்கு விழுந்த அடியாகவே மன்று கருதுகிறது. தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் அதே நீதிபதிகளிடம் பிணை கோரிப் பிணைத் தாக்கல் செய்ததை மன்று கவனத்தில் கொள்கிறது.

தாக்குதலானது யாழ்.மாவட்டத்தின் கலாசார சீரழிவு, காடைத்தனம், ரவுடித்தனம், வன்முறை ஆட்டத்தின் உச்சக் கட்டத்தைக் காட்டுகிறது. இது இலங்கையின் ஏனைய பாகத்திலுள்ள மக்கள் யாழ். மாவட்ட மக்களைக் கீழ்த்தரமாகக் கணிப்பீடு செய்த தாக்குதலாகவே கருதுகிறது. யாழ்.மாவட்டம் கல்வி, கலாசாரம் பாரம்பரியம் என்பனவற்றைப்பிரத்தியேகமாகக்கொண்ட மாவட்டம். பழக்கங்கள், பண்பாடுகள், கலாசாரத்தை மேலோங்கிப் பாதுகாத்து வாழும் மாவட்டம்.

போர்க்காலங்களில்கூட போராட்டங்களில் ஈடுபட்ட எந்தவொரு தரப்பினரும் நீதிபதிகள் மீதோ நீதிமன்றங்கள் மீதோ தாக்குதல் நடத்தவில்லை. இத்தகைய புனித தன்மையைக் கொண்ட மாவட்டத்தின் பெயரைக் கெடுக்கும் வகையில் நீதிபதிகளின் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துச் சோதிக்க வைத்த செயலாகவே அது அமைந்துள்ளது.

ஆர்ப்பாட்டம் செய்வது ஜனநாயக உரிமை எனக் கூறிக்கொண்டு வன்முறை, பேயாட்டம் ஆடியது மட்டுமன்றி அது நீதிமன்றத்தை நோக்கி ஏன் வந்தது? நீதிமன்றம் மீது ஏன் தாக்குதல் நடத்தியது என்? போன்ற செயற்பாடுகள் பற்றிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிய வேண்டிய சூழ்நிலை உள்ளது.

நீதிமன்றம் மீதான தாக்குதலில் குற்றவாளியாகக் காணப்படும் நபர்களுக்கு 20 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்க அரச ஆதனங்களை அழித்தல் சட்டத்தின் சட்டப் பிரிவுகள் பரிந்துரை செய்கின்றன. அரச ஆதனங்கள் சட்டத்தின் சட்டப் பிரிவு அரச நிறுவனம் மீது தாக்குதலில் ஈடுபடும் நபர்களுக்கு விஷேட விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே பிணை வழங்கப் பரிந்துரை செய்கிறது.

தாக்குதல் தொடர்பான அனைத்துப் பிணை மனுக்களும் மன்றினால் பரிசீலனை செய்யப்பட்டன. அதில் போதிய விதிவிலக்கான காரணங்கள் காணப்படுவதாகத் தெரியவில்லை.மக்களாட்சித் தேர்தல் நடக்கும்போது சட்ட ஆட்சியைப் பரிசோதித்து மன்றின் மீது தாக்குதல் நடத்திய குறித்த நபர்களுக்குத் தேர்தல் காலத்தில் பிணை வழங்க முடியாது. விரைவு விசாரணை செய்ய விதிவிலகக்கான காரணங்கள் காணப்படவில்லை என்று கூறினார். அத்துடன் பிணை மனுக்களையும் நிராகரித்துத் தீர்ப்பளித்தார்.

நீதிவானின் தீர்ப்பில் என்ன சட்டப் பிழை உள்ளது? அவ்வாறு வந்த மனுக்களில் என்னபிழை இருக்கிறது என்பதும் சுட்டிக் காட்டப்படவில்லை. நீதிவான் ஏதாவது தவறு விட்டிருந் தால் மாத்திரமே மீளாய்வு மனு பரிசீலனைக்கு எடுக்கலாம்.

இருப்பினும் இயற்கை நீதிக் கோட்பாட்டின்படி ஒருவரது கோரிக்கை மனுவை மன்றில் விசாரணை செய்து தீர்ப்பளிக்கவேண்டியுள்ளது. அவ்வாறு கோருபவர்களது உரிமையும், அதனடிப்படையில் மீளாய்வு மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அது பற்றிய விசாரணைக்காக அந்த 22 பேரதும் வழக்குகள் எதிர்வரும் செப்ரம்பர் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-4)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொறி ஆற்றில் பாய்ந்து நேற்று மூன்று பேர் சாவு

கொழும்பு, ஓக.2

யாத்திரையை முடித்து கொண்டு கதிர்காமத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த லொறி ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று ஹபராலுகல என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் ஆல யத்திற்கு சென்று திரும்பிக் கொண் டிருந்த மேலும் 16பேர் படுகாயம டைந்துள்ளனர். இவர்கள் அனை வரும் கதிர்காமத்துக்கு செவனகல பகுதியில் இருந்து சிறிய ரக லொறியில் யாத்திரை சென் றிருந்தனர். யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பிக் கொண்டிருந்தபோதே லொறி ஆற்றில் விழுந்து விபத்துக் குள்ளாகியுள்ளது. (த)

## மைத்திரி-மஹிந்த தரப்பு இரகசியப் பேச்சுக்களில்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற் றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகி யோரின் பிரதிநிதிகளுக்கிடையில் கடந்த சில தினங்களாக இரகசியப் பேச்சுக்கள் இடம் பெற்று வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

மேலும், தேர்தலுக்குப் பின்னர் மஹிந்தவைப் பிரதமராக நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் பங்கேற்றி ருந்த பிரதிநிதிகளிடம் மஹிந்த தரப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரி விக்கப்பட்டது.

குறித்த பேச்சுக்களை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஏற்பாடு செய்திருந்ததாகவும் செய்திகள் வெளியாகி யுள்ளன. (த)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

யாழ். மாவட்டம்

நாட்டிற்கான புதிய பயணம்

யாழ் மாவட்டத்தின் மக்கள்குரல்



நமது தேசத்தின் மனச்சாட்சி

மக்கள் விடுதலை முன்னணி (J.V.P)

நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

கிராம மட்டத்தில் விவசாய விரிவாக்கல் சேவை ஆரம்பிப்போம்...

- பயிர் செய்கைக்கு தேவைப்படும் அனைத்து விதைகளையும், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் வழங்கக்கூடிய வகையில் நவீன மயமாக்குவேன்
- உலர் வலயத்தில் நீர் பற்றாக்குறைக்கு மாற்று வழியினை குறுகிய காலத்தில் வடமாகாண விவசாய சம்மேளண தலைவர்களை ஒன்றிணைத்து ஜனாதிபதி செயலகமூடாக தீர்வினைப் பெற்றுக் கொடுப்பேன்
- வடமாகாண விவசாயப் பயிர்ச்செய்கைக்கு கடந்த காலங்களில் கடன் பெற்று சரியான அனுகுமுறையின்மையினாலும் சீரற்ற காலநிலைகளினாலும் நஷ்டமடைந்தவர்கள் சரியாக உறுதிப்படுத்துவதன் மூலம் ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் வர்த்தமானி மூலம் இரத்துச் செய்ய வழி செய்வேன்.
- காணியற்ற விவசாயிகளுக்கு ஒவ்வொரு விவசாயிகளுக்கும் காணித்துண்டொன்று வழங்க ஜனாதிபதி ஊடாக பரிந்துரை செய்வேன்



X

1

அங்கஜன் இராமநாதன்

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

இது ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் - 2015

யாழ் தேர்தல் மாவட்டம்



த. சித்தார்த்தன்

**அன்புக்கும் மதிப்பிற்குமுரிய தமிழ் மக்களே!**

தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகிய நான், நடைபெறவிருக்கும் இலங்கை நாடாளுமன்றுக்கான தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் பங்கேற்கிறேன்.

ஒரு தேர்தலை எதிர்கொண்டு, உங்களுக்குப் பணியாற்றுவதற்கான வாய்ப்பினையும் ஆதரவினையும் கேட்டுவந்து இரண்டே வருடங்களுக்குள் மீண்டும் இன்னொரு பணிக்காக ஆதரவுகேட்டு உங்களுக்கு இதனை எழுதுகின்றேன்.

2013ஆம் ஆண்டில் நடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது, எனக்கு அமோக ஆதரவு அளித்த யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட மக்கள் ஒவ்வொருவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். உங்கள் ஒவ்வொருவரையுமே நேரில் சந்தித்து உரையாட வேண்டும் என்ற உண்மையான விருப்பம் எனக்கு இருக்கின்றபோதும் - தேர்தல்கள் சட்டமும் நேரமும் அதற்கு இடம்தரவில்லை என்பதனாலேயே இந்த மடலை எழுதுகின்றேன்.

எனது தந்தையார் அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் நீண்ட கால தமிழர் அரசியல் வாழ்வால் எனக்கும் இளம்வயதுகளிலேயே அரசியலில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அந்த வகையில் தமிழ் அரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் (1961 ஆம் ஆண்டு) தொடக்கம் இற்றைவரை எமது உரிமைப் போராட்டத்தில் அனைத்து நிலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றேன்.

1985ஆம் ஆண்டு திம்பு மாநாட்டுப் பேச்சுவார்த்தையில் பங்கேற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க திம்பு தீர்மானங்களின் தயாரிப்பில் பங்களித்தவர்களில் இருவர் மட்டுமே தமிழர் அரசியலில் தொடர்ந்தும் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றோம். அந்த இருவரில் ஒருவர் எமது தலைவர் சம்பந்தன் அண்ணன் அவர்கள், மற்றயது நான். அண்ணர் அமிர்தலிங்கம், அண்ணர் மு.சிவசிதம்பரம், அண்ணர் சம்பந்தன் ஆகியோருடன் இணைந்து நானும் அந்த மாநாட்டில் பங்குபற்றியமை எனக்குப் பெருமையே.

அன்றிலிருந்து இன்றுவரை - தமிழ் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு என்பது திம்பு கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட வேண்டும் என்பதே எனதும் தனிப்பட்ட நிலைப்பாடு. தேவையான- பொருத்தமான - உரிய தரப்புக்களிடமெல்லாம் இதனை நான் எப்போதுமே வலியுறுத்தி வந்திருக்கின்றேன். இப்போதும் அதனையே வலியுறுத்துகின்றேன்.

தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்கான அரசியற் தீர்வுகாணும் முக்கிய விவகாரம் ஒரு தடத்தில் நகர்த்தப்படும் அதே வேளையில் - அதற்குச் சமாந்தரமாக - அதே அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு யுத்தத்தினால் பாரிய அழிவுகளுக்குள்ளான எமது சமூகம் இந்த மண்ணில் ஒரு தன்னிறைவான பொருளாதாரத்ததுடன் நிலைத்து வாழ வழி செய்யப்பட வேண்டும் என்பதுவும் எனது எண்ணமாகும். இவ்வாறாக - ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக எமது மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வின் சுபீட்சத்தை நோக்கி எனது செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதே எனது எண்ணம். எனது அனுபவங்கள் அதற்கான பலமாக அமையும்.

கொழும்பில் ஆட்சி அமைக்கும் சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகளாக எமது மாவட்டத்தில் களமிறங்கியிருப்பவர்கள், எமது இளைஞர்களில் ஒரு சிலருக்கு தனித்தனியான வேலைவாய்ப்புக்களை வழங்கலாம். ஆனால், பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக பல ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய, முயற்சிகள் செய்யப்படவேண்டும் என்பதுவே எனது விருப்பம். அதனால், எனது கவனத்தை நான் குவிக்க விரும்புவது ஒட்டுமொத்தமான எமது சமூகத்தினது பொருளாதார நல்வாழ்வில் ஆகும். அதற்கு அடிப்படையானது கல்வி.

எது நடந்தாலும் அழிக்கப்பட முடியாத சொத்தாக, எவ்வளவு காலம் கடந்து போனாலும் நிலைத்திருக்கும் சொத்தாக எமது சமூகத்தின் உச்சமகுடமாக - கல்வியும் அறிவும் இருப்பதால், எனது தனிப்பட்ட ஈடுபாடு எப்போதும் அறிவு வளர்ச்சியை நாடியதாகவே இருக்கின்றது. யாழ்ப்பாண கல்வியற் கல்லூரி அமைப்பதற்கு நிலம் இல்லாத ஒரு சூழலில், அந்த திட்டம் கைவிடப்படும் நிலை வந்தபோது கல்வியின் மீது இருந்த எனது தனிப்பட்ட ஈடுபாட்டின் காரணமாகவே எமது குடும்பத்துக்குச் சொந்தமானதாக இருந்த நிலத்தை (232 பரப்பு) வழங்கி அந்த நிலப் பிரச்சனையை நிவர்த்திசெய்தேன்.

இதற்கு முன்னர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய பொழுதில் மாவட்டத்தில் பெரியதான வவுனியா நூலகத்தையும் வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியையும் எனது முயற்சியில் உருவாக்கியதை எமது சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பாக நான் கருதுகின்றேன். இதேகால கட்டத்தில், கடும் பிராயத்தனம் செய்து வவுனியா - மன்னார் பகுதி பாடசாலைகளின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் பல பணிகளை செய்திருந்தமையானது எனக்கு நிறைவைத் தந்த விடயங்களாகும். இவையெல்லாமே, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அங்கீகாரம் இருந்தமையினால் அடைய முடிந்த இலக்குகளாகும். இவ்வாறாக தொடர்ந்தும் எமது கல்வி வளர்ச்சிக்கு என்னால் முடிந்த பணிகளைச் செய்ய வேண்டும் என்ற மனவிருப்பு என்னிடம் உள்ளது.

அரசியல் உரிமைகளையும், கல்வியையும், பொருளாதாரச் செழிப்பையும் பெற்று எமது சமூகம் நிறைவாக வாழ்வதற்கு அடிப்படையானது நிலம். யாழ். மாவட்டத்தின் ஓரத்தில், பலாலியைச் சூழவும் சிறீலங்கா அரச படைகள் பிடித்து வைத்திருக்கும் எமது மக்களின் காணிகள் உட்பட ஏனைய எமது தமிழ் பிரதேசங்களில் அரச படைகள் ஆக்கிரமித்து இருக்கும் காணிகள் அனைத்தும் மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதில் எவ்வித விட்டுக் கொடுப்பிற்கும் இடமில்லை. கொழும்பு அரசாங்கத்தின் உறுப்பினர்கள், தெற்கிலிருக்கும் செல்வாக்குமிக்க புத்திஜீவிகள், வெளிநாட்டுத் தூதரகங்களின் ராஜதந்திரிகள் என எல்லோரிடமுமே இந்த விடயத்தை நான் எப்போதுமே வலியுறுத்தி வருகின்றேன். மாகாண சபை அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்புக்கள் வகிக்காத காலங்களில்கூட இந்த விவகாரத்தை நான் வற்புறுத்தியே வந்துள்ளேன்.

நிலம் சார்ந்த விவகாரத்திற்குச் சமமாக நான் வலியுறுத்தி வரும் இன்னொரு முக்கிய விடயம் - போரின் போது காணாமல் போகச் செய்யப்பட்டோர் மற்றும் சிறையிடப்பட்டிருக்கும் அரசியற் கைதிகள் தொடர்பானது. காணாமற்போனோர் எல்லோரும் எங்கிருக்கின்றார்கள் என்பது கண்டறியப்பட வேண்டும். அவர்தம் உறவினர்களுக்கு அவர்கள் பற்றிய தகவல்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும். காணாமற் போய்விட்ட தமது அன்புயிர்கள் அனைவர் பற்றியும் அறிவதற்கு எமது மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமை மதிக்கப்படவேண்டும். இதற்கான முயற்சிகளை எனது வல்லமைக்கு உட்பட்டு நான் தொடர்ந்தும் செய்தபடியே உள்ளேன்.

அதே போலவே போர் நிகழ்ந்த காலத்தில், போராட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளின் சிரேஸ்ட போராளிகளே சமூகத்தோடு மீள் இணைக்கப்பட்டுவிட்ட நிலையில் - அவர்களுக்குத் துணையாக இருந்தமைக்காக கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தொடர்ந்தும் சிறைகளில் வாடுவது அர்த்தமோ நியாயமோ அற்றது. அனைத்து அரசியற் கைதிகளும் ஒரு பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்படல் வேண்டும் என்பதை தெற்கின் அரசியற் தலைவர்களிடமும் வெளிநாட்டின் ராஜதந்திரிகளிடமும் நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன்.

தனிப்பட்ட ரீதியில் எனக்கிருக்கும் அரசியற் தொடர்புகளினூடாக இந்த விடயங்களை நான் தொடர்ச்சியாக கொழும்புத் தலைவர்களிடம் வலியுறுத்தி வரும் போதும், நாடாளுமன்ற உறுப்புரிமை என்ற ஓர் அங்கீகாரம் எனது பணிகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் என்று நம்புகின்றேன்.

நிறையப் பேசுவதைவிட என்னால் செய்யக் கூடியவற்றை செயலில் நிரூபிக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். அதற்கான முயற்சிகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்வேன்.

எனவே - நாடாளுமன்ற உறுப்புரிமையினூடாக, எனது மக்களிற்காக ஆற்ற விரும்பும் பணிகளை ஆற்றுவதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் இலக்கம் 7இல் போட்டியிடும் எனக்கு வாய்ப்பளிக்குமாறு, யாழ்ப்பாண - கிளிநொச்சி மாவட்ட மக்களாகிய உங்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மிக்க நன்றி.

X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

**இவ்வண்ணம்,**
**என்றும் அன்புடன்,**

**(த. சித்தார்த்தன்)**
**தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர், இல: 7**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## ‘அற்புதகீதங்கள்’ வெளியீடு இன்று

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்மனின் வரலாற்றுப் புகழ்பாடும் ‘அற்புத கீதங்கள்’ இறுவட்டு வெளியீடு இன்று நடைபெறவுள்ளது. வருடாந்த மகோற்சவ முதலாம் நாளான இன்று கொடியேற்றத்தைத் தொடர்ந்து பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இந்த இறுவட்டு வெளியீடு இடம்பெறவுள்ளது. (த-10)




## தேர்தல் விஞ்ஞாபனத்தை மறந்த முஸ்லிம் கட்சிகள்

கொழும்பு, ஓக 02

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில்–பெரும்பாலான கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டுள்ள நிலையில், முஸ்லிம் கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கைகளை வெளியிடாதது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

தேர்தலுக்கு இன்னமும் 15 நாள்களே உள்ள நிலையில் அக்கட்சிகளிடமிருந்து தேர்தல் அறிக்கைகள் இதுவரை வெளிவராமை குறித்து விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

முஸ்லிம் அரசியல் கட்சிகளிடம் அரசியல் ரீதியான கொள்கைகள் இருந்தால்தானே தேர்தல் அறிக்கையை எதிர்பார்க்க முடியும் என்று சமூக ஆர்வலரான எஸ்.எல்.எம். ஹனிபா, பிபிசி தமிழோசைக்குத் தெரிவித்துள்ளார்.

பிரதான முஸ்லிம் அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமை யிலான ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டணிக் கட்சிகளாக இருந்து வருகின்றன.

சில மாவட்டங்களில் ஐ.தே.முன்னணியுடன் இணைந்து தமது வேட்பாளர்களை இந்தத் தேர்தலில் நிறுத்தியுள்ளபோதிலும், ஓரிரு மாவட்டங்களில் இக்கட்சிகள் தனித்தும் போட்டியிடுகின்றன.

இத்தகைய நிலைப்பாடு, அவர்களின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது என்று சேருவில உள்ளூராட்சி சபையின் முன்னாள் தலைவரான ஏ.கே.எம்.பௌஸி குறிப்பிட்டுள்ளார். ஐ.தே. முன்னணியின் தேர்தல் அறிக்கை யில் தங்களது யோசனைகளும் ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளதால் தங்களுக்கு என தனியான தேர்தல் அறிக்கை தேவை இல்லை என முஸ்லிம் கட்சிகள் கருதுகின்றன.

ஆனால், இது முஸ்லிம் கட்சிகள் தமது தனித்துவத்தை இழப்பதாக அமையும் என்று புத்தளத்தைச்சேர்ந்தபாத்திமா யரிக்கா குறிப்பிட்டுள்ளார்.

தமது கட்சியால் முன் வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் தொடர்பான அனேகமான யோசனைகள் ஐ.தே. முன்னணியின் தேர்தல் அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள் ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கூறுகிறது. (த)




பாராளுமன்றத் தேர்தல் - 2015

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

அகில இலங்கை தமிழர் மகாசபை



எதிர்வரும் தேர்தலூடாக மத்தியில் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், தமிழர் மகாசபை உறுப்பினர்கள் மூவரேனும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் சார்பில் பாராளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், பின்வரும் வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்போம்:

(1) இரணைமடு அணையைத் திருத்துவதாலும் உயர்த்துவதாலும் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அதிகரித்து, கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் விவசாயத்திற்குப் பாதிப்பு ஏற்படாமல், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், தீவுப் பகுதிக்கும் கிளிநொச்சி நகர்ப்புறங்களுக்கும் குடிநீர் வழங்கலை நாம் உறுதிப்படுத்துவோம்.

(2) கடும் வரட்சிக் காலத்தில் இரணைமடு நீர்த்தேக்கத்திற்கு கட்டுப்பாட்டுடன் நீர் வழங்கலுக்காக புதிய ஒரு நீர்த்தேக்கத்தைக் கனகராயன் ஆற்றுக்குக் குறுக்கே முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டமைத்தல்.

(3) யாழ்ப்பாணக் குடாநாட்டு நிலத்தடி நீர் அளவுக்கு அதிகமாக இறைத்தலால் உவர் கூடுதலாலும், பசளைகளிலுள்ள இரசாயனப் பதார்த்தங்களாலும், மனிதக் கழிவுகளாலும், கசிவெண்ணெயாலும் மாசடைந்து வருகிறது. நிலத்தினுள் கசிந்துள்ள எண்ணெயை அப்புறப்படுத்துவதற்கும் அனைத்து மாசடைதல்களைக் கட்டுப்படுத்துவதற்குமான திட்டம் எம்மிடம் உண்டு. அத்திட்டத்தை நாம் நடைமுறைப் படுத்து வோம். நிலத்தடி நீர் விவசாயத்திற்கும் கைத் தொழிலுக்கும் அவசியம்.

(4) அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையை முழுமையாகப் பயன்படுத்தி வேலை வாய்ப்புக்களை உருவாக்குவோம்.

(5) சேதமடைந்து கிடக்கும் சீமெந்துத் தொழிற்சாலையைப் புனரமைத்து வேலை வாய்ப்புக்களை உருவாக்குவோம்.

(6) முழுமையாகச் சேதமடைந்த இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் பரந்தனில் கட்டியமைத்து வேலைவாய்ப்புக்களை உருவாக்குவோம்.

(7) உப்பளங்களை நவீனமயமாக்குவோம்.

(8) மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தைப் படைகளிடமிருந்து மீட்டு அபிவிருத்தி செய்வோம். குருநகர் மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயப்படுத்துவோம். மருதங்கேணியில் மீன்பிடித்துறைமுகம் ஒன்றை அமைப்போம்.

(9) பலாலி விமானத்துறையை மீண்டும் தென்னிந்தியப் பயணங்களுக்கான விமானத்துறையாக்க நடவடிக்கை எடுப்போம்.

(10) காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி சேவைக்குப் பயன் படுத்துவோம்.

(11) மீன்பிடித் தோணிகளை உற்பத்தி செய்வதையும் வலைகள் நெய்தலையும் நவீனமயப்படுத்துவோம்.

(12) யுத்தத்தால் விதவைகளானவர்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும், இளைஞர்களுக்கும் வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

(13) பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றிற்குக் கூடிய முக்கியத்துவம் கொடுப்போம்.

(14) திருகோணமலை மாவட்டத்தில் மீள்குடியேற்றம் பற்றிக் கற்றுக்கொண்ட பாடங்களைக் கருத்திற்கொண்டு வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றத்தை மேற்கொள்வோம்.

(15) கிளிநொச்சி மாவட்டத்தில் சொந்தக் காணிகள் இல்லாது வாழும், குறிப்பாக, மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழ் அரசகாணிகளைப் பெற்றுக் கொடுப்போம்.

(16) கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, முழங்காவில் முதலிய பகுதிகளில் மரமுந்திரிகைச் செய்கையை விருத்தி செய்வோம்.

முதன்மை வேட்பாளர்

நயினை கலாநிதி எந்திரியர் காசிலிங்கம் விக்னேஸ்வரன்

(முன்னாள் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலின்கோ VIP ON THE SPOT உடன்

# 4 மில்லியன் ரூபாய் விபத்து மருத்துவக் காப்புறுதி இலவசம்!

## ஒரு சதமேனும் மேலதிகக் காப்புறுதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது!

- 1.3 மில்லியன் ரூபாய் — வீதி விபத்தினால் பாதிக்கப்பட்டவர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருத்துவமனைகளில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்படும்போது
  (கார்கள், வேன்கள், ஜீப்கள், டபள் கெப்கள், பேருந்துகள், லொறிகள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு)
- 1.3 மில்லியன் ரூபாய் — வெளிநாட்டு பயணங்களின்போது அவசர மருத்துவ சிகிச்சைகளுக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும்போது
- 2.6 மில்லியன் ரூபாய் — வெளிநாட்டு பயணங்களின்போது விபத்துகள் ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும்போது
- 1.3 மில்லியன் ரூபாய் — வெளிநாட்டு பயணங்களின்போது நிரந்தர அங்கவீனம் அல்லது இறப்பு ஏற்படின் தனிநபர் விபத்து காப்புறுதி வழங்கப்படும்
- 300,000 ரூபாய் — மோட்டார் சைக்கிள்களுக்காக - வீதி விபத்து ஏற்பட்டு உள்நாட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது

மேலும் பல சலுகைகளும் காத்திருக்கின்றன.

3ம் நபர் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு...

- 200,000 ரூபாய் — வீதி விபத்து ஏற்பட்டு உள்நாட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது
  (கார்கள், வேன்கள், ஜீப்கள், டபள் கெப்கள், பேருந்துகள், லொறிகள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு)
- 100,000 ரூபாய் — மோட்டார் சைக்கிள்களுக்காக - வீதி விபத்து ஏற்பட்டு உள்நாட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது

செலின்கோ VIP ON THE SPOT புதிய காப்புறுதி உரிமையாளர்கள் மற்றும் தற்போதைய உரிமையாளர்கள் தங்கள் காப்புறுதியை புதுப்பிக்கும் திகதியிலிருந்து இச்சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**தன்னிகரற்ற சலுகைகள் வழங்கும் காப்புறுதியாளன்!**

CEYLINCO
VIP
ON THE SPOT
ලෝකෙටම එකයි!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 228

# குறுநடை போடும் குழந்தைகள் ஏன் சரியாகச் சாப்பிடுவதில்லை?


**ஏன் எமது குழந்தை நன்றாகச் சாப்பிடுவதில்லை?** என்பது அனேக பெற்றோர்களின் கவலையாகும். சாதாரணமாகவே ஒரு வயது முடிந்தபின், குறுநடைபோடும் குழந்தைகள் (Toddlers) தாம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்து விடுவார்கள். இதற்கான பிரதான காரணி, இரண்டாம் வருடத்தில் குழந்தையின் வளர்ச்சி வீதம் குறைவடைவதால், உணவின் தேவை குறைவடைய பசியும் குறைவதாகும். அதைவிட குறுநடைபோடும் குழந்தைகள் எந்த நேரமும் துடிப்புடன் இருப்பதுடன், எப்போதும் விளையாடவே முயல்வார்கள். அதனால் உணவை மறுக்கவும் செய்கிறார்கள். குழந்தைகள் ஆரோக்கியமாகவும் வளர்ச்சி வீதம் சாதாரண நிலையிலும் இருப்பின் கவலையடையத் தேவையில்லை.


மேலும், எமது சமுதாயத்தில் காணப்படும் குறிப்பிடத்தக்க பிரச்சினை ஆறுமாத முடிவில் மேலதிக ஆகாரங்களை அறிமுகப்படுத்தும்போது, அதை சரிவரச் செயற்படுத்தாதது ஆகும். மேலதிக ஆகாரங்களாக வர்த்தக ரீதியில் தயாரித்த தானியமாக் கலவை, பிஸ்கட் என்பவற்றைக் கொடுத்து பழக்கிய பின்னர் சோறு, கறி போன்ற வழக்கமான குடும்ப உணவைக் கொடுக்கும்போது குழந்தைகளுக்கு அதில் நாட்டம் இருக்காது. ஏனெனில் வர்த்தக ரீதியான உணவு வகைகளின் சுவை குழந்தைக்கு பிடித்தால் அதையே தொடர்ந்தும் விரும்புவார்கள். அதனால் போஷாக்குகள் பலவும் நிறைந்த நமது அன்றாட உணவுகளைக் கொடுப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

### சரியாகச் சாப்பிடாத குழந்தையை எவ்வாறு சரிவர உணவருந்த வைப்பது?

1. வேளை தவறாது, சரியான நேரத்தில் உணவைக் கொடுக்க முயற்சிக்கவும். மூன்று வேளை பிரதான உணவுடன், ஓரிரு தடவை இடைப்பட்ட உணவையும் (Snacks) வழங்கவும். ஒவ்வொரு உணவு வேளைக்கும் இடையில் 3, 4 மணித்தியால இடைவேளை அவசியம். தாய்ப்பாலையோ அல்லது மற்றைய நீராகாரங்களையே சாப்பாட்டின் பின்னர் வழங்கவும்.
2. ஒரே வகையான உணவைத் தொடர்ந்து வழங்கும்போது, அந்த உணவின் மீது குழந்தைக்கு விருப்பமில்லாது போய் விடுகிறது. எனவே போஷாக்கான விதம் விதமான உணவுகளை வழங்கும் போது, குழந்தை தனக்கு விருப்பமான உணவைத் தெரிவு செய்யக் கூடியதாயிருக்கும். ஒரு போதும் புதிய வகையான உணவுப் பொருள்களை வற்புறுத்தி வழங்கக் கூடாது. புதிய உணவை ஒரு தடவை விரும்பாத குழந்தை, மறுதடவை அதை விரும்பலாம். எனவே புதிய வகை உணவுகளை பல தடவைகள் வழங்கிப் பார்க்க வேண்டும். குழந்தை சிறிதளவு உணவைத்தான் உட்கொள்கிறது எனின் அந்த உணவானது அதிக சக்தியும், போஷாக்கும் உடையதாக இருக்க வேண்டும். உதாரணமாக: ஒரு கிண்ணம் பாலில் சிறிதளவைத்தான் குழந்தை எடுக்கிறது எனின், அதே அளவைவிட குறைந்தளவுள்ள ஒரு சீஸ் துண்டின் மூலம் பாலிலுள்ள சத்தைவிடக் கூடிய போசணையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. எப்போதும் குடும்பமாக எல்லோரும் உணவருந்தும் போதே குழந்தைக்கும் உணவை வழங்க வேண்டும். குழந்தைகளுக்கு வளர்ந்தவர்கள் செய்வதைப் பார்த்துச் செய்யும் பழக்கம் உள்ளதால் பெரியவர்கள் சாப்பிடும் குடும்ப உணவில் ஆர்வம் ஏற்படும். அதேபோல் வழங்கும் உணவானது, சாதாரண குடும்ப உணவாக இயன்றவரை இருப்பது நன்று. வர்த்தக ரீதியில் தயாரித்த, தகரத்தில் அடைத்த அல்லது பொதி செய்யப்பட்ட உடனடி உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.
4. ஒரு போதும் குழந்தைக்கு முன்பாக, நீர் இதைச் சாப்பிடவில்லை, நீர் சாப்பிட்டது காணாது போன்ற எதிர்மறைவான விடயங்களைக் கூறாது, அவர்களைச் சாப்பிட ஊக்கப்படுத்தக்கூடிய வசனங்களைக் கூற வேண்டும். ஒரு போதும், பிள்ளைக்கு இலஞ்சம் கொடுத்து சாப்பிட வைக்க வேண்டாம். உதாரணமாக: சொக்லேட், இனிப்பு தருவேன் எனக்கூறி சாப்பிட வைக்க வேண்டாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் குழந்தை சிறிதளவைச் சாப்பிட்டபின், இனிப்பு வகைகளைக் கேட்டு அடம் பிடிக்கலாம்.
5. உணவு வேளையில், குழந்தையை விளையாட்டுப் பொருள்களுடன் விளையாட விட்டோ அல்லது தொலைக்காட்சியை, வீடியோவைப் பார்க்க விட்டோ உணவை வழங்க வேண்டாம். ஆரம்பத்தில் இது பயனளித்தாலும் குழந்தை முழு ஆர்வத்தையும் உணவில் செலுத்தாது. விளையாடவோ அல்லது தொலைக்காட்சி பார்ப்பதையோ தான் தொடரும். மாறாக குழந்தையும், குடும்ப உணவு வேளையில் மற்றோருடன் ஒன்றாகச் சேர்ந்து உணவு அருந்த வேண்டும். எல்லோரும் உணவருந்தும் வரை குழந்தையும் எல்லோருடனும் அமர்ந்திருக்க வேண்டும். மேலும், குழந்தையைத் தனது தூய கையினால், உணவை அள்ளி சாப்பிட இடமளிக்க வேண்டும். அப்போதுதான் அதற்கு உணவில் ஆர்வம் ஏற்படும். குடும்ப உணவு வேளை சந்தோசமாக அமைய வேண்டும். உணவுவேளைகளில் தேவையற்ற வேறு விடயங்கள், முறுகலை உண்டு பண்ணும் விவாதங்கள் இருத்தலாகாது. அவை குழந்தைகளுக்குத் தாக்கத்தை உண்டாக்கலாம்.
6. ஓரளவு வளர்ந்த பிள்ளைகளாயின், உணவு சமைக்கும் வேளைகளில், அவர்களுக்கு உணவுப் பொருள்களைக் காண்பித்து சமையல் செய்யும் போது, அவர்களுக்கு அந்த உணவின் மீது விருப்பம் உண்டாகும். அதேபோல் உணவுப் பொருள்களுக்கு பிள்ளைகளுக்கு பிடித்த பெயர்களை விகடமாக வைக்கும்போது, அந்த உணவுகளுக்கு விருப்பம் உண்டாகும்.
7. வீட்டிலுள்ள பெரியவர்களும், வளர்ந்த குழந்தைகளும், சிறு குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். வளர்ந்த பிள்ளை ஒன்று உணவொன்றை வெறுத்தால், சிறு குழந்தையும் அந்த உணவை வெறுக்கலாம். எனவே வளர்ந்த பிள்ளை உணவை ஒதுக்கக் கூடாது. எல்லோரும் உண்ணக் கூடிய குடும்ப உணவைப் பரிமாற வேண்டும்.

மேற்கூறப்பட்ட சரியான உணவூட்டல் முறைகளை கைக்கொள்வதன் மூலம் சரிவர உணவருந்தாத குழந்தைகளுக்கும் போஷாக்கான, குடும்ப உணவுகளை வழங்கி அவர்களை ஆரோக்கிமாக வைத்திருக்க முடியும்.





மேலதிக ஆகாரங்களாக வர்த்தக ரீதியில் தயாரித்த தானியமாக் கலவை, பிஸ்கட் என்பவற்றைக் கொடுத்து பழக்கிய பின்னர் சோறு கறி போன்ற வழக்கமான குடும்ப உணவைக் கொடுக்கும்போது குழந்தைகளுக்கு அதில் நாட்டம் இருக்காது.

**மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்,**
**குழந்தைநல வைத்திய நிபுணர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதி நீர் சரிந்து சிறுவன் காயம்

தென்மராட்சி ஓக. 02

பாத்திரத்தில் மின் கீற்றர் மூலம் கொதிக்க வைக்கப்பட்ட கொதி நீர் சரிந்து அருகிலிருந்த 10 வயதுச் சிறுவன் மீது ஊற்றியதில் சிறுவன் காயமடைந்தான்

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கைதடியில் இடம்பெற்றது.

இடுப்பு முன்பகுதி மற்றும் கைகளில் காயமடைந்த மாணவன் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(த- 9)





2014 க .பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகளில் சிறப்பு பெறுபேறுகளைப் பெற்ற ஆற்றல் மிகு மாணவர்களுக்கு "சுப பெத்தும்"

உங்களுக்காகவே 200 நிதி உதவிப் புலமைப்பரிசில்கள், இன்றே விண்ணப்பியுங்கள்.

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் லை..ப் சுப பெத்தும் தேசிய புலமைப்பரிசில் செயற்திட்டம் வழங்கும் புலமைப்பரிசில்கள், எதிர்கால உலகை வெல்லும் எங்கள் சிறார்களுக்கே.

| க .பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான புலமைப்பரிசில்கள் | க .பொ.த உயர் தரப் பரீட்சைக்கான புலமைப்பரிசில்கள் |
|---|---|
| எமக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் முதல் 4 மாணவர்கள் என மொத்தமாக 100 மாணவர்களுக்கு இவ் நிதி உதவிப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.<br><br>மாணவர்களின் தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுள் காப்புறுதியின் உரிமையாளர் எனின் குறித்த புலமைப்பரிசில் தொடர்ந்தும் 2 வருடங்கள் வரை வழங்கப்படும். | எமக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் கலை, வணிக, விஞ்ஞான, கணித பிரிவுகளில் சிறப்பு பெறுபேறுகளைப் பெறும் 100 மாணவர்களுக்கு இவ் நதி உதவிப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.<br><br>புலமைப்பரிசிலைப் பெறுபவர் அல்லது புலமைப்பரிசிலைப் பெறுபவரின் தாய்/தந்தை/பாதுகவலர் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுள் காப்புறுதியின் உரிமையாளர் எனின் குறித்த புலமைப்பரிசில் தொடர்ந்தும் 3 வருடங்கள் வரை வழங்கப்படும். |

விண்ணப்பங்களை 2015 ஒகஸ்ட் 24க்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அருகில் உள்ள ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் கிளையில் அல்லது www.srilankainsurance.com இணையத்தள முகவரியில் அல்லது SP இடைவெளி OL அல்லது AL இடைவெளி உங்கள் மின்னஞ்சல் முகவரி என்பவற்றை டைப் செய்து 7353க்கு SMS செய்யுங்கள்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது



# ஜீவக வாத தைலம்®

## Jeewaka Vāta Thailaya

Herbal Pain reliever



முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை பிரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை கால் விறைப்பு, முட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிச வாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல், ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம், காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

| | |
|---|---|
| Siva Narumanab Poonga - Jaffna | - 0212222567 |
| Kanesamoorthy & Sons - Vavuniya | - 0242222414 |
| Rasiah Medical - Vavuniya | - 0242224819 |
| Son Medical - Trincomalee | - 0262221057 |
| Paranjothi Medical - Trincomalee | - 0262222419 |
| Ifham Ayurvedic Osu Sala - Samanthurei | - 0672260615 |
| Royal Plus Pharmacy - Baticaloa | - 0770754119 |
| Kabeer Ayurvedic Osu Sala - Kalmunei | - 0777704448 |
| SaamSaan Ayurvedic Osu Sala - Kalmunei | - 0774667111 |
| Family Pharmacy - Kaththankudi | - 0774004578 |
| Jesmin Ayurvedic Osu Sala - Kaththankudi | - 0774460113 |

**Available on : Cargills Food City, Arpico, Laugfs & Island wide Ayurvedic shop & Pharmacy**



25ml Rs. 150.00
50ml Rs. 280.00
100ml Rs. 450.00

Jeewaka JH Herbals
Pure herbs for healthy living

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.117/3, "Wedagedara", Koskandawala, Yakkala
Ayu.Lic.No.6/2/1/02/11,B.R.No.W/Att/L/3621
Contact: 071-2271526



லீற்றரின் உச்சம்

ஹீரோ ஐ ஸ்மாட்
சாதிக்கக்கூடிய மைலேஜ்

Hero

கடந்த வாரத்தின் லீற்றரின் உச்ச சவாலில் ஒரு லீற்றரில் 80KM க்கு அதிகமாக சென்ற வாடிக்கையாளர்கள்






splendor

iSmart
It's Smart Thinking



ரூ. 204,990/-



## சாதிக்கக்கூடிய மைலேஜிக்கு உங்கள் ஐ ஸ்மாட்டுடன் வாருங்கள்

- ஆகஸ்ட் 2 – எக்ஸா ட்ரேடிங் – திருகோணமலை – காலை 9 மணி முதல்
- ஆகஸ்ட் 3 – எக்ஸா ட்ரேடிங் – மூதூர் – காலை 9 மணி முதல
- ஆகஸ்ட் 4 – சஹாரா மோட்டர்ஸ் – கிண்ணியா – காலை 9 மணி முதல்
- ஆகஸ்ட் 5 – ஹீரோ காட்சியறை – வவுனியா – காலை 9 மணி முதல்
- ஆகஸ்ட் 6 – T. மொபைல் – வவுனியா – காலை 9 மணி முதல்
- ஆகஸ்ட் 7 – ஹீரோ காட்சியறை – முல்லைத்தீவு – காலை 9 மணி முதல்

☎ 011 5777000

*நிபந்தனைகளுக்குட்பட்டது

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கேயர் காலம் முதல் பிரசித்தி பெற்ற மன்னார் பெரியகட்டு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்



## புனித அந்தோனியார் யாத்திரைத்தலம்

போர்த்துக்கேயர் காலம் முதல் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக விளங்கி யாத்திரிகர்களை மத பேதமின்றித் தன்பால் ஈர்த்து வரும் மன்னார் பெரியகட்டு புனித அந்தோனியார் யாத்திரைத்தல திருவிழா இன்று கொண்டாடப்படுவதையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

மன்னார் பெரியகட்டு புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் செட்டிக்குளம் பங்கில் செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவில் மன்னார் மதவாச்சி ஏ 14 வீதியில் அமைந்துள்ளது. மன்னார் வவுனியா வீதியும் மன்னார் மதவாச்சி வீதியும் சந்திக்கும் பறையனாலங்குளம் சந்தியில் இருந்து செட்டிக்குளம் நோக்கி செல்லும் பாதையில் 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.

போர்த்துக்கேயர் காலம் முதல் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக விளங்கிவரும் மன்னார் பெரியகட்டு புனித அந்தோனியார் யாத்திரைத்தல ஆலயம் தற்போது புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. பழைமை மிக்க அந்தோனியார் யாத்திரைத்தலத்திற்கு எதிர்ப்பக்கமாக தற்போது கட்டியெழுப்பப்படுகின்ற புதிய பெரிகட்டு அந்தோனியார் யாத்திரைத்தல கட்டுமானப் பணிகளில் துணைபுரிய விரும்புவோர் 071 - 861 26 25 என்ற தொலைபேசி இலக்கத்தில் செட்டிக்குளம் பங்குத்தந்தையும் பெரியகட்டு யாத்திரைத்தல பரிபாலகருமான டேவிட் அலெக்சாண்டர் சில்வா அடிகளாருடன் தொடர்புகொள்ளலாம்.

இக் கட்டுரைக்கான தகவல்கள் மன்னார் மறைமாவட்ட வரலாற்றுப் பொறுப்பாசிரியர் ம.க. அருள்பிரகாசம் அடிகளாரின் பெரியகட்டு தூய அந்தோனியார் ஆலய வரலாறு என்ற ஆக்கத்தில் இருந்தும் - செட்டிக்குளம் பங்குத்தந்தையும் பெரியகட்டு யாத்திரைத்தல பரிபாலகருமான டேவிட் அலெக்சாண்டர் சில்வா அடிகளாரின் நேரடி உரையாடலில் இருந்தும் பெறப்பட்டவை. படங்கள் எடுத்துத் தந்து உதவியவர் ச.மரியதாசன் சீமான் அடிகளார்.

ஆயர் மேதகு கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகை யாழ் மறைமாவட் ஆயராக (1893 ஜூலை 20 - 1919 பெப்ரவரி 98) பணியாற்றிய காலத்தில் தமது ஒரு வன்னிப் பகுதி தரிசிப்பின்போது அழிவுற்ற நிலையில் ஒரு ஆலயத்தைக் கண்டுள்ளார். இலங்கைக் கட்டடக்கலை வடிவத்தைக் கொண்ட அவ்வாலயத்தின் அடித்தளத்தை தேடிப்பார்க்கையில் கஸ்பார் அந்தோனியோ கல் என்ற மலேரியா - கொள்ளை நோய் - காய்ச்சல் - பாம்புக்கடி போன்ற நோய்களுக்கான மாத்திரையைக் கண்டுள்ளார்.

புனித யோசவ்வாஸ் அடிகளார் தனிப்பட்ட விதமாக இந்த தலத்திற்கு வந்து மரத்திலான ஒரு சிலுவையை வடிவமைத்து ஏராளமானவர்கள் தத்தமது நோய் நோக்காடுகளில் இருந்து குணம் பெற வழி செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. அந்த சிலுவை எங்கே நடப்பட்டது அல்லது இப்போது எங்கிருக்கின்றது போன்ற தகவல்கள் இன்றும் அறியப்படாமல் இருக்கின்றன.

இவ்வாறு ஜோசப்வாஸ் அடிகளாரும், ஒறேற்றோறியன் குருக்களும் இலங்கைக்கு வந்தபோது - கஸ்பார் அந்தோனியோ கல் - என்ற மாத்திரையை கொண்டு வந்திருக்க வேண்டும். இந்த கஸ்பார் அந்தோனியோ கல், ஒறேற்றோறியன் குருக்கள் வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது. (பேணியோலா : 1983 : பக்கம் 108)

ஆகவே பெரியகட்டுப் பகுதியிலே ஒறேற்றோறி யன் குருக்கள் காலத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட்டிருக்க வேண்டுமென எடுத்துக் கொள்ளலாம். 1697இல் பேதிறு பெறாஓ அடிகளார் மாதோட்டத்துக்கு வந்து ஜோசப்வாஸ் அடிகளாரின் பணிப்பின் பேரில் மாதோட்டம், வன்னி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணியாற்றிபோது மாதோட்டப் பகுதியிலும் வன்னிப்பகுதியிலும் பல சிற்றாலயங்களைக் கட்டினார் என - மடு அன்னை ஆலய சம்பவத் தொகுப்பு - என்னும் நூலில் அன்ரனைனஸ் அடிகளார் குறிப்பிடுகிறார்.

இதன்படி பேதிறு பெறாஓ அடிகளாரினால் கட்டப்பட்ட ஆலயமே அழிவுற்ற நிலையில் ஆயர் யூலன் ஆண்டகையால் அடையாளம் காணப்பட்ட ஆலயம் என எண்ணுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. பின்னர் இதே இடத்தில் மீண்டும் ஓர் ஆலயத்தை அமைக்க எல். பூலோகசிங்கம் அடிகளார் 1898ம் ஆண்டு அடிக்கல் நட்டார் என்றும் ஓலிவ் அடிகளார் பின்னர் பொறுப்பேற்று கட்டடப் பணியை முடித்திருந்தார் என்றும் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். (ஞானப்பிரகாசர் : (1925) 1999 : பக்கம் 278-279)

பெரியகட்டு புளியங்குளம் என அழைக்கப்பட்ட பெரியமுறிப்பு மற்றும் கள்ளிக்குள கிராமங்களுக்கு அருகாமையில் பிச்சம்பட்டி என்னும் கிராமத்தில் புனித அந்தோனியாருக்கு ஆலயமொன்று அமைக்கப்பட்டிருந்தது. கால ஓட்டத்தில் கொடிய நோய்கள் காரணமாகவும் தொழில் வாய்ப்பைத் தேடியும் பெரியமுறிப்பு பெரிய குஞ்சுக் குளப் பகுதிகளுக்கு மக்கள் சென்றமையால் அவ்வாலயம் கைவிடப்பட்டது. அதை அறிந்த வெள்ளக்கார குருவானவர் ஒருவர் புனித அந்தோனியார் சொரூபத்தை பெரியகட்டு கிராமத்துக்கு எடுத்து சென்றுள்ளார் என அறிய வருகிறது.

அன்று முதல் இன்று வரை பெரியகட்டு அந்தோனியார் திருவிழாவுக்கு கள்ளிக்குளம் பிச்சம்பட்டியூடாக யாத்திரையாக நடந்தே சென்று வருவதாக பெரியமுறிப்பு மூத்தோர் தெரிவித்தனர். பெரியகட்டில் அமைக்கப்பட்டிருந்த ஆலயமானது ஒரு கொட்டில் போன்ற அமைப்பைக் கொண்டே நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. இவ் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்து இந்து மக்களும் கத்தோலிக்க மக்களும் திருவிழாக் காலத்தில் நீண்ட தூரத்தை யாத் திரையாக நடந்தே வந்து அடைந்திருக் கிறார்கள் என அறியவருகின்றது.

மன்னார் - வவுனியா - மாதோட்டம் - யாழ்ப்பாணம் - நீர்கொழும்பு - சிலாபம் போன்ற இடங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் மத பேதமின்றி பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு வந்து கோடி அற்புதர் புனித அந்தோனியாரின் அருள் வரங்களைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள்.

இலங்கையில் நடைபெற்ற 30 ஆண்டு காலப் போரின்போது மேற்கொள்ளப்பட முடியாமல் இருந்த யாத்திரைகளும், பாரம்பரிய வழிபாடுகளும் இப்போது போர் முடிந்த பின்னர் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. இங்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் அந்தோனியாருக்கான நோவினையும், ஒவ்வொரு முதல் செவ்வாய்க்கிழமைகளிலும் குணமாக்கல் வழிபாடுகளும் இப்போது நடைபெற்று வருகின்றன. அரச வர்த்தமானியில் பதியப்பட்ட பெரியகட்டு புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பெருவிழா ஆவணி மாதத்தின் முதல் ஞாயிறு தினத்தில் தற்போது கொண்டாடப்படுகிறது.

பெரியகட்டு புனித அந்தோனியார் யாத்திரைத் தலத்துக்கு கால்நடையாக வரும் பக்தர்கள் அடர்ந்த காடுகள் வழியாக சில வேளைகளில் காடுகளின் மத்தியில் சிறு முகாம் அமைத்து இரவைக் கழித்து பின்னர் பகல் வேளையில் தம் பயணத்தைத் தொடர்ந்து இத்தலத்தை வந்து அடைந்திருக்கிறார்கள். சில பழையவர்கள் இன்னும் இந்தத் திருப் பயணத்தின் போது தாம் ஒன்றாகப் பயணிக்கும் யாத்திரிகர்கள் என்ற எண்ணத்துடன் தம்மிடமிருந்த அனைத்தையும் அனைவரோடும் பகிர்ந்து உண்டு மேற்கொண்ட பயணத்தை இன்றும் பசுமையாக நினைவு கூருகின்றனர்.

இந்த யாத்திரைத்தலத்தில் இருந்து பார்க்கக் கூடிய தூரத்தில் அமைந்திருந்த ஆறானது இப்பயணத்தின் ஒரு பகுதியாக நீராடி மகிழத் துணையாக இருந்திருக்கிறது. தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வோர் தமது தலையை மொட்டை அடித்தபின் இவ் ஆற்றில் வந்து நீராடுவதும் உண்டு என்று அறியவருகின்றது.

இன்று புதிய வீதிகளும் புதிய வசதிகளும் [illegible] அமைக்கப்பட்டு விட்டாலும் [illegible] இன்றும் இந்தப் பழைய பாரம்பரிய முறைகளை கைக்கொண்டே வருகின்றனர்.

பெரியகட்டு அந்தோனியார் ஆலய நிர்வாகத்தை ஆரம்ப காலத்தில் வஞ்சியன்குள கத்தோலிக்க மக்கள் கவனித்து வந்துள்ளனர். பின்னர் கன்னாட்டி - செட்டிகுளம் - கட்டைக்காடு - வவுனியா - பன்னவெட்டுவான் - இசைமாலைத்தாழ்வு - பறப்பான் கண்டல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் தமது நிர்வாகத்திற்குள் கொண்டு வந்து செயற்பட்டனர்.

கள்ளிக்குளம் பெரியமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களுக்கு ம்ட்டும் வழிபாடு செய்தல் - செபமாலை சொல்லுதல் - கவிபாடுதல் என்பவற்றில் முன்னுரிமை கொடுக்கப்பட்ட போது வங்காலை மற்றும் பேசாலையைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் தமக்கும் வழிபாடுகளில் இடம் தர வேண்டும் என பிரச்சினை எழுப்பினர். இந்நிலையில் வவுனியா பங்குத்தந்தை ஸ்பம்பதி அடிகளார் ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் அனுமதியுடன் பெரிய கட்டு புனித அந்தோனியார் ஆலயத்தை மறை மாவட்டத்தின் கீழ் நேரடியாக இயங்கும் யாத்திரைத் தலமாக மாற்றியமைத்தார்.

மாதகல் அல்பிரட் சுவாமியவர்கள் பெரியகட்டுப் பகுதியில் சிறிய குளம் அமைத்து வெள்ளாண்மை செய்து வந்தார் என்று கூறப்படும் நிலையில் இவ்விடத்திற்கு அருகாமையில் - கிறிஸ்தவ குளம் - என்னும் பெயரில் கிராமம் ஒன்று இன்றும் காணப்டுவது குறிப்பிடத்தக்கது.

பெரியகட்டு புனித அந்தோனியார் சொரூத்தை ஊரில் பஞ்சம் மற்றும் கொடிய நோய் நிலவும் போது பெரியமுறிப்பு ஆல யத்துக்கு பவனியாக எடுத்துச் செல்லப்படு வது ஒரு வழக்கமாகவுள்ளது. அவ்வாறு மூன்று தடவைகள் பெரியகட்டு புனித அந்தோனியார் சொரூபமானது பெரியமுறிப்பு ஆலயத்திற்கு பவனியாக எடுத்து வரப்பட்டதாக அறிய வருகிறது.

1922 ஆம் ஆண்டு பெரிய முறிப்பு கிராமத்தில் குளங்கள் கிணறுகள் எல் லாம் வற்றி பெரும் வறட்சி ஏற்பட்டு கால் நடைகள் எல்லாம் தண்ணீர் இன்றி இறக்கத் தொடங்கிய போது பெரியகட்டு அந்தோனி யார் சொரூபம் பவனியாக பெரிய முறிப்பு கிராமத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

கள்ளிக்குளத்தைத் தாண்டி பெரியமுறிப்பு கிராமத்துக்குள் அந்தோனியார் சொரூபம் வந்ததும் கோயிலடிக் கிணற்றிலிருந்து இரண்டு பெரிய வெடிச்சத்தம் கேட்டதையடுத்து போது கிணற்றைப் போய் பார்த்த போது இரண்டு நீரூற்றுக்கள் பீறிட்டு பாய்ந்து கொண்டிருந்தன. அதன் பின்னர் எந்த வறட்சியின் போதும் அக்கிணறு வற்றுவதேயில்லை என அறிய வருகிறது.

1945 ஆம் ஆண்டு மூப்பர் அந்தோனிப்பிள்ளை செட்டிகுளம் மூப்பராக இருந்த காலத்தில் பெரிய முறிப்பு கிராமத்தில் வயது வேறு பாடின்றி வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் என்று தொடர்ச்சியாக இறந்தபோது பெரியகட்டு அந்தோனியார் சொரூபம் பெரியமுறிப்பு கிராமத்துக்கு இரண்டாவது தடவை எடுத்து வரப்பட்டது என அறியவருகிறது.

பெரியமுறிப்புப் பகுதியில் நீண்ட காலமாக காணப்பட்ட சிலைக்கு அருகாமையில் சென்று வருபவர்கள் பேய் பிடித்தவர்கள் போல் திரிவார்கள். இப்படியாக ஒருமுறை ஒருவருக்கு இந்த நிலை ஏற்பட்டபோது அந்தோனியார் சொரூபம் கொண்டு வரப்பட்டது. அவரைப்பிடித்துக் கட்டி கோவிலில் வைத்திருந்தனர். சொரூபப் பவனி கோயிலுக் குக்கிட்ட வந்ததும் தீயசக்தி அவரை விட்டு நீங்கியது என அறியவருகிறது.

கோடி அற்புதர் பெரியகட்டு புனித அந்தோனியார் மதபேதமின்றி தமிழ் மக்கள் மேல் தன் அருள் வரங்களைக் குறிப்பாக இந்த தேர்தல் காலத்தில் வழங்குவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் ஜூலை வரை 1,606 பேர் விபத்துகளில் சாவு

கொழும்பு, ஓக 01
இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 23 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 1,498 வாகன விபத்துக்களில் 1,606 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது.

இந்த பாரதுரமான வாகன விபத்துக்களில் உயிரிழந்த 583 பேர் மோட்டார் சைக்கிளோட்டிகளும், மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்தவர்களும் ஆவர் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:– வாகன விபத்துக்களில் இதுவரை பாதசாரிகள் 440 பேரும், வாகனங்களில் பயணித்த பயணிகள் 296 பேரும், சாரதிகள் 123 பேரும், சைக்கிளோட்டிகள் 155 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார்சைக்கிள் விபத்துக்கள் அதிகளவில் இடம்பெறக் காரணம் தலைக் கவசங்களின் நாடிப் பட்டிகளை இறுக்கமாகப் பொருத்திக் கொள்ளாமை, முன்னால் தெளிவற்ற நிலை காணப்படும் வேளைகளில் வாகனங்களை முந்திச் செல்ல முற்படுதல், கட்டுப்படுத்திக் கொள்ள இயலாத வேகத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்துதல் என்பன என பொலிஸ் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இந்த விபத்துக்களின்போது நபர்களை மோதித் தள்ளிவிட்டுத் தப்பித்துச் சென்ற வாகனங்களின் எண்ணிக்கை 67 ஆகும்.

இதேவேளை, கடந்த ஆண்டில் இதே கால கட்டத்தில் நிகழ்ந்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 1,292 எனவும், அந்த விபத்துக்களில் உயிரிழந்துள்ளோரின் எண்ணிக்கை 387 எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறினார். (த–22)

## குடும்பஸ்தர் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக .1
14 வயதுச் சிறுவனை ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்திய 24 வயதுடைய குடும்பஸ்தர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளதாக யாழ். சிறுவர் பெண்கள் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். தட்டாதெருப் பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும்பஸ்தர்களும் கடந்த புதன்கிழமை சிறுவனை அழைத்துச் சென்று ஓட்டுமடம் பகுதியில் வைத்து அந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையச் சிறுவர் பெண்கள் பிரிவுப் பொலிஸார் சிறுவனை மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர். விசாரணையின் மூலமாகக் குறித்த இண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த–4–106)

## மோசமான நிலையில் கிராமங்களின் வீதிகள்

### இதனால் தொடர்கின்றன விபத்துகள்

தென்மராட்சி ஓக. 01
சீரற்ற வீதிகளும் வீதியோரப் பற்றைகளும் விபரீத விபத்துக்களை ஏற்படுத்தி வரும் அவல நிலை தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த உசன், கெற்பேலி, விடத்தற்பளை, பாலாவி, தவசிகுளம் போன்ற கிராமங்களில் நீண்ட காலமாக வீதிகள் புனரமைக்கப்படாததால் அப் பகுதிகளில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும், வீதிகளைப் புனரமைக்கப் பல தரப்பினருடன் தொடர்பு கொண்டும் இதுவரை பயன்கிடைக்கவில்லையெனவும் அப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரிவுகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த காலம் தொடக்கம் தற்போது வரை கனரக வாகனங்களின் பாவனை அதிகரிப்பினால் வீதிகள் குன்றும் குழியுமாகவும், மணல் வீதிகளாவும் மாறி போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்தப் பிரிவுகள் விவசாயக் கிராமங்களாகவும், மீன்பிடிக் கிராமங்களாகவும் உள்ளதால் பல்வேறு வாகனங்கள் வீதிகளைத் தினமும் பயன்படுத்தி வருகின்றன. இதனால் கட்டுப்பாடுகளை இழக்கும் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்பட்டு உயிராபத்துக்களும் காயமடைவோரின் எண்ணிக்கையும் நாளாந்தம் இடம்பெறும் சம்பவமாக மாறியுள்ளன.

கடந்த வாரமும் வேகமாக வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் வீதி வளைவுகளில் நிலைகுலைந்ததில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த இரு இளைஞர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

மணல் வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் திடீரென முன் பிரேக்கை அழுத்தி நிறுத்த முற்பட்டவேளையில் அதில் பயணித்த இளைஞன் தூக்கி வீசப்பட்டதில் காயமடைந்த வழிந்த நிலையிலும், வீதி வளைவில் திரும்பிய மோட்டார் சைக்கிள் எதிரே சைக்கிள் வந்ததால் நிலைகுலைந்து வீதியோரம் செல்ல முடியாத அளவுக்குப் பற்றை காணப்பட்டதால் நிறுத்த முற்பட்டவேளையில் பற்றைக்குள் தூக்கி வீசப்பட்டுக் காலில் காயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கெற்பேலி மத்தியைச் சேர்ந்த விவேகானந்தராசா விஜிதரன் (வயது 24), தட்சணாமூர்த்தி விஜிதரன் (வயது 24) அகிய இருவருமே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். இந்தக் கிராமங்களில் காணப்படும் அனைத்து வீதிகளின் இரு பக்கமும் பற்றைகள் மறைத்து போக்குவரத்து செய்வதில் வாகன சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர். (த–9)





இலங்கையின் மாபெரும் ஸ்தாபனம் மற்றும் பிரமாண்ட வாகன நிறுவனம் சிறந்த தகைமைகளையும் திறமைகளையும் ஒருங்கிணைந்த இளைஞர்களுக்கு விடுக்கும் ஓர் உன்னத அழைப்பு

**பயிற்சி விற்பனை பிரதிநிதிகள்**
(வட பகுதி)

**உத்தியோகத்தின் மாதிரி**
விண்ணப்பதாரர் விற்பனைத்துறையில் தேர்ந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். விற்பனைத்துறையின் அனைத்துவிதமான அங்கங்களையும் நன்கறிந்திருத்தல் வேண்டும். நல்லொழுக்கத்துடனும் சிறந்த ஈடுபாட்டுடனும் கடமையாற்றக்கூடியவராக இருத்தல் அவசியம். அத்துடன் நாட்டின் எப்பிரதேசத்திற்கும் சென்று கடமையாற்றக்கூடியவராகவும் களக்கடமையை மேற்கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் அவசியம்.

**தகைமைகள்**
விண்ணப்பதாரர் 20 முதல் 25 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். க.பொ.த. உயர்தரத்தில் இரு சித்திகளும் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் சாதாரண சித்தியினையும் பெற்றிருத்தல் வேண்டும். கணினித்துறையில் (MS Word / Excel / Power Point) நிபுணத்துவம் பெற்றிருத்தல் அவசியம். அங்கிகரிக்கப்பட்ட வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் அவசியம். முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி புலமையானது அத்தியாவசிய தகைமையாக கருதப்படுகின்றது. முன் அனுபவம் மற்றும் தகைமைகள் அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும். இவ் வாய்ப்பானது உங்களது தொழில் மற்றும் வாழ்க்கை அபிவிருத்தியினை அதிகரித்துக்கொள்வதற்கான ஓர் சிறந்த வாய்ப்பாகும்.

நாம் நோக்கும் நபர் நீங்களெனில் உங்கள் சுய விபரக்கோவையினை இவ் விளம்பர பிரசுரத்தின் பின் ஏழு நாட்களுக்குள் உங்களது தொடர்பு விபரங்களுடனும் இரு உறவினர்கள் அல்லாத மத்தியஸ்த்தர்களின் பெயர் மற்றும் விபரங்கள் ஆகியவற்றுடன் எமக்கு கிடைக்கப்பெறச்செய்யவும்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
முகாமையாளர் - மனித வளம், த.பெ.இலக்கம் 1909, கொழும்பு
careers@dpmco.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொமர்ஷல் வங்கியின் வைத்தியசாலை இயற்கை பொலிவூட்டும் செயற்றிட்டம்





கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அரை ஏக்கர் பூங்கா பிரதேசத்தை செப்பனிடும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்விரு நிறுவனங்களையும் சேர்ந்த அதிகாரிகள் இந்த பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளை அண்மையில் இணைந்து பார்வையிட்டனர். இந்த திட்டத்தில் கொமர்ஷல் வங்கியின் பங்களிப்பை பாராட்டும் வகையில் கொழும்பு தேசிய வைத்தியசாலை நினைவுச் சின்னம் ஒன்றையும் கையளித்தது. (த)

## தொல் பொருள் திணைக்களத்துக்கு பிரத்தியேக மொபைல் அப்ளிகேஷன்



மொபிடெல், தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புத்தமைவான மொபைல் அப்ளிகேஷனான HeritageSL அறிமுகம் செய்துள்ளது. இந்த அப்ளிகேஷன் மூலமாக பொதுமக்களுக்கு இலங்கையின் தொல்பொருள் மற்றும் கலாசார பாரம்பரியம் பற்றி அறிந்து கொள்வதற்கு வரையறைகளற்ற இலவச வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இடம்–அடிப்படையாக கொண்ட இந்த அப்ளிகேஷனை மொபிடெல் வடிவமைத்து தயாரித்துள்ளது. இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் 125 ஆவது வருட நிறைவை குறிக்கும் வகையில் இந்த அப்ளிகேஷன் iBeaco தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் மிகவும் வினைத்திறன் வாய்ந்த மொபைல் அப்ளிகேஷனாக HeritageSL அமைந்துள்ளது. இதன் மூலமாக பாரம்பரிய ஆய்வுகளின் மூலமாக கண்டறிய முடியாத பிரதான தொல்பொருள் பகுதிகள் மற்றும் கலைப்பொருள்கள் பற்றிய விவரங்களை வழங்கும் வகையில் இந்த அப்ளிகேஷன் அமைந்துள்ளது.

பாவனையாளர்களுக்கு நட்புறவான வகையில், இலங்கையின் தேசிய பாரம்பரியம் பற்றிய ஏராளமான இடங்களின் தகவல்களை பிரத்தியேகமான மொபைல் அனுபவத்தினூடாக மொபிடெல் வழங்குகிறது.

தேசிய பாரம்பரியம் மற்றும் தொல்பொருள் பெறுமதிகளை தேசிய எல்லைகளுக்கப்பால் பிரசாரப்படுத்த இலங்கை தொல்பொருள் திணைக்களத்துக்கு இவ் அப்ளிகேஷன் உதவும் வகையிலமைந்துள்ளது. இந்த ஊடகத்தினூடாக பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை பிரசுரங்கள், பயிற்றுவித்தல், பொதுச் செயற்பாடுகள், தொடர்பாடல்கள் மற்றும் இலங்கை யின் பாரம்பரியம் மற்றும் வரலாற்றுடன் தொடர்புடைய விவரங்களில் பயன்படுத்த முடியும். (த)

# தொடர் சந்திப்புக்கள் மூலம் அறிவைப் பகிர்கிறது சியெட்








இலங்கையில் டயர்களை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்கும் முன்னணி நிறுவனமான சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் தனது பஸ் மற்றும் டிரக் டயர்களுக்கான விநியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை இரண்டு முக்கிய அமர்வுகளில் சந்தித்தது.

தொழில்நுட்ப அறிவுகளை அவர்களுடன் பகிர்ந்துகொள்வதுடன் புதிய உற்பத்திகள் பற்றி அவர்களுக்கு விளக்கம் அளிப்பதுமே இந்தச் சந்திப்புக்களின் நோக்க மாகும்.

2014இல் தொடங்கப்பட்ட ஒரு செயற்பாட்டின் தொடராக தற்போதைய நிதி ஆண்டுக்கான இரண்டு கூட்டங்களும் மாத்தறையிலும் பிலியந்தலையிலும் இடம்பெற்றன.

சுமார் 150க்கும் மேற்பட்டவர்கள் இவற்றில் பங்கேற்றதாக கம்பனி அறிவித்துள்ளது.

ஒருகிலோ மீற்றருக்கான செலவினத்துக்கு பங்களிப்பு வழங்கும் பல்வேறு தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் பண்புகள் பற்றி இங்கு விளக்க உரைகள் வழங்கப்பட்டன. அத்தோடு உள்ளூர் வீதிகளின் நிலைமைகளில் எவ்வாறு கூடுதல் பயனைப் பெற்றுக் கொள்வது என்பது பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

பிரைம் மூவர் வாகனங்களுக்காகவும், பஸ் மற்றும் டிரக் என்பனவற்றுக்காகவும் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட உற்பத்திகளின் உற்பத்திப் பண்புகள், அவற்றின் நன்மைகள் என்பன பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த டயர்கள் கீர்த்தி மிக்க இந்திய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உள்ளூர் வீதிகளுக்கும் மற்றும் மேல் பரப்புக்கும் இசைவான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் உள்ள சியெட் பஸ் மற்றும் டிரக் டயர் விநியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான இத்தகைய சந்திப்பு நிகழ்ச்சிகள் சியெட் வர்த்தக முத்திரைக்கும் அவர்களுக்கும் இடையிலான நெருக்கத்தை மேலும் வலுப்படுத்துவதோடு கம்பனி பற்றியும் அதன் உற்பத்திகள் பற்றியும் அவர்களுக்கு மிகப் பிந்திய தகவல்களையும் வழங்கக் கூடியதாக உள்ளது.

2015–16 காலப் பகுதியில் இத்தகைய 15 சந்திப்புக்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் டயர் தேவைகளில் அரைவாசிக்கும் அதிகமான வற்றை உற்பத்தி செய்கின்றவர்கள் என்ற வகையில் இலங்கையின் உள்ளூர் வீதிகள் பற்றியும் தமது டயர்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றியும் இந்தநிலைமைகளுக்கு ஏற்ற வகையில் டயர்களை உற்பத்தி செய்ய என்ன செய்ய வேண்டும் எனபது பற்றியும் சியெட் நிறுவனம் ஆழமான அறிவினை கொண்டுள்ளது என்று கூறினார் சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு உப தலைவர் ரவிதத்லானி.

இவ்வாறான சந்திப்புக்கள் மூலம் நாம் எமது அறிவின் ஒருபகுதியை எமது வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிகின்றது என்று அவர் மேலும் கூறினார்.

தற்போது இந்தியாவில் தலைமை யகத்தைக் கொண்டுள்ள சியெட் உலகளாவிய ரீதியில் 110 நாடுகளில் நிலைகொண்டுள்ள ஒரு வர்த்தக முத்திரையாகும். (த)

# கொமர்ஷல் கிரெடிட்டின் இலாபம் ரூ.2.1 பில்லியன்

COMMERCIAL CREDIT

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. ஆனது 2015 மார்ச் 31ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான தேறிய இலாபமாக ரூபா 2.1 பில்லியனைப் பெற்று, 08.7 வீத வளர்ச்சி ஒன்றை பதிவு செய்துள் ளது. 2013/14 நிதியாண்டில் கொமர்ஷல் கிரெடிட் பெற்றுக் கொண்ட ரூபா 1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இந் நிதியாண்டில் பெற்றுள்ள தேறிய இலாபம் நிறுவனத்திற்குபுதியதொரு மைல்கல்லாக அமைகின்றது.

2014/15 நிதியாண்டில் நிறுவனத்தின் வாடிக்கையாளர் வைப்புக்கள் 84.6 வீதத்தினால் அதிகரித்த அதே வேளை, இதில் குறிப்பாக 93.7 வீதமான வளர்ச்சியானது நிலையான வைப்புக்களில் இருந்து கிடைக்கப் பெற்றதாக இருந்தது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிதியாண்டின் ஆரம்பத்தில் ரூபா 31.6 பில்லியனாக காணப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறு மதி, நிதியாண்டின் இறுதியில் ரூபா 57.7 பில்லியனாக அதிகரித்திருந்தது.

அதேவேளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிதியா ண்டில் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் வட்டி வருமானம் ரூபா 11.1 பில்லியனாக பதிவாகியது. கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இது 61.2 வீதம் அதிகமானதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் மொத்த கடன் வழங்கல் தொடர்களில் 80 வீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை முன்கொண்டு சென்ற பிரதான காரணிகளாக – குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு, அத்துடன் நுண் நிதிக் கடன்கள் என்பன காணப்பட்டதுடன், இவை முறையே 101.2 வீதத்தினாலும் 104.1 வீதத்தினாலும் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் சென்றடையும் விதத்தில் கொமர்ஷல் கிரெடிட் தனது சேவை வலையமைப்பையும் கணிசமான அளவுக்கு விஸ்தரித்திருக்கின்றது.

2014/15 நிதியாண்டு காலப்பகுதியில் நிறுவனம் தனது சேவை வலையமைப்பை 75 அமைவிடங்களில் இருந்து 119 இடங்களுக்கு விஸ்தரித்துள்ளது.

இவ்வாறு விஸ்தரிப்புச் செய்வதற்கான இடங்களை தெரிவு செய்யும் போது, தற்போதைய மற்றும் எதிர்கால வணிக ரீதியான உள்ளார்ந்த சாத்தியக்கூறுகளை மட்டும் கம்பனி கருத்திற் கொள்வதில்லை. மாறாக, அவ்வாறான பிரதேசங்களில் வாழும் மக்களின் தேவைகளையும் கவனத்தில் கொண்டு நிறுவனம் செயற்படுகின்றது.

சேவை வலையமைப்பை விஸ்தரிப்பு செய்ததன் மூலம், கொமர்ஷல் கிரெடிட் தனது வணிக ரீதியான நடவடிக்கைகளை மேலும் அபிவிருத்தி செய்யக் கூடிய ஒரு ஸ்தானத்தில் தன்னை சிறப்பாக நிலைநிறுத்தியுள்ளது. நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேலும் பலப்படுத்தும் வகையில் கணிசமான உபாய முதலீடுகளை மேற்கொள்வதிலும் கம்பனி ஈடுபட்டுள்ளது.

அதிகரித்துச் செல்லும் சேவை வலையமைப்பு, அதிகரிக்கும் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை, மற்றும் வணிக தேவைகளினால் வேண்டப்படுகின்ற முன்னேறிச் செல்லும் செயலாற்றல் மற்றும் இயலுமை ஆகியவற்றை கருத்திற் கொண்டு நோக்குகையில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை விருத்தி செய்தல் என்பது ஓர் அடிப்படை தேவைப்பாடாக காணப்படுகின்றது.

2015 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டுக்கான இறுதி பங்குலாபமாக ரூபா 1 இனை வழங்குமாறு பணிப்பாளர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இது, இந்நிதியாண்டில் இடைக்கால பங்குலாபமாக பங்கொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா 0.50 இற்கு மேலதிகமானதாகும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கண்டி பொக்காவெலை பிரின்ஸ்ரோ நிறுவனத்தில் சர்வமத மாநாடு நிகழ்வில் கலந்துகொண்ட மதகுருமார்கள், சமயத் தலைவர்களையும், யாழிலிருந்து சென்று மாநாட்டில் கலந்துகொண்ட [illegible] மார்களையும், சமயத் தலைவர்களையும் காணலாம்.





[illegible]







[illegible]











[illegible] (க-421)



[illegible] (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கரவெட்டி கிழக்கு கிழவிதோட்டம் விக்கின விநாயகர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் இடம் பெற்ற தேரத்திருவிழாக் காட்சி கள். (ஐ–421)









இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவில், ஆறுமுக சுவாமி அழகிய சிற்பத்தேரில் வெளி வீதியுலா வரும் நிகழ்வு இடம் பெற்றது. அடியவர் கள் கற்பூரச்சட்டி எடுத்தும் மற்றும் தூக்கு காவடிகள் காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திகளை நிறைவு செய்தார்கள். (ஐ–86)



சாவக்கச்சேரி சங்கத்தானை முருக மூர்த்தி ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழாக் காட்சிகள். (ஐ)





நோர்வே தமிழ் உறவுகளின் நிதி உதவியில் எஸ்.ரி.ஏ சொலிடரிட்டி பவுண்டேசன் அமைப்புக்கூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டா வளை பிரதேச செயலக பிரிவில் மூன்று மாத கால அழகுக்கலை தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுநர்களுக்கு சான்றிதழ்களும், கருவிகளும் வழங்கப்பட்டன. (ஐ–21)







உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர் தி.தேவதயாளன், மாகாண கல்வித் திணைக்களத்தின் நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கம் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படு வதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் (ஐ) பரிசில் வழங்கலையும் காணலாம்.





சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சங்கானை கிளையின் இலவச சித்த மருத்துவ முகாம் வேலணையில் நடைபெற்றது. இந்த இலவச சித்த மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கான பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### வீடு விற்பனைக்குண்டு
ஈச்சமோட்டையில் 1¾ பரப்பில் 5அறைகளும் குளியல் அறைகளுடனும் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 613 2444

### விற்பனைக்கு
(Beauty Parlor) இல் பாவித்த அனைத்துப் பொருள்களும் விற்பனைக்குள்ளன. ஒரு மாதம் மட்டும் பாவித்த ( Auto), Washing Mechine உம் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 076 669 4979

### காணி விற்பனைக்கு
மருதனார்மடம் பகுதியில் "4" பரப்புக்காணி விற்பனைக்குள்ளது.
தொடர்பு : 077 328 8795

### வீடுவளவு விற்பனைக்கு!
மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேறக்கூடிய, நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு காணி வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : நவா : 0766 686740
0061 3425808199
நவம் : 0775 977210

### காணி விற்பனைக்கு
*நல்லூர் ஆடியபாதம் வீதியில், 1 பரப்பு 8 குளி காணிவீடு மற்றும் தனிக்கிணறு மலசல கூட வசதிகளும் விற்பனைக்கு உண்டு.

யாழ்.வலய கல்விப் பணிப்பகத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுடன் வர்த்தக தொகுதி கட்டுவதற்கும் பொருத்தமான இடம். செம்மணி வீதி மற்றும் ஆடியபாதம் வீதி ஆகிய இரண்டு வீதிகளுக்கும் நுழைவாசல் உண்டு.
தொடர்பு : 077 999 9030

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், அரியாலை ஸ்ரான்லி பாடசாலைக்கு அருகிலுள்ள தொத்தாரிஸ் லேனில் 3 பரப்புக் காணியும் நாவலடியில் 22 பரப்பு வயலும் விற்பனைக்குண்டு.
(சி 11848) (46.3.6) 077 429 3444

### தோட்டவயல் காணி விற்பனைக்கு
நெல்லியடி, முடக்காடு, கட்டைவேலி கோயில் பற்றில் 70 பரப்பு தோட்டவயல் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 075 208 8663

### காணி விற்பனைக்கு
யாழ். கொக்குவில் கிழக்கு, இலக்கம் 60, உடையார் லேனில் 4 பரப்பு வெற்றுக்காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 3181149
0720431452

### விற்பனைக்கு
Toyota Hiace KDH200, Unregistered Super GL, Just Cleared, Full Option, P/Shutter, P/Mirror, R/Wiper, C/Locking, Cut glass, D/Air Bags, ABS, D/AC, R/Key, teak panal குறைந்த தூரம் ஓடியது, reverse camera, TV, DVD Player (option)
தெரிவுகள் அதிகம்.
டீசலில் ஓடக்கூடிய பிரச்சினையில்லாத DPF எஞ்சின் வாகனம்.



Contact: 077 233 1119

### காணி விற்பனைக்கு
நாற்புறம் மதில், நன்னீர்க் கிணறு, பத்து தென்னம்பிள்ளைகள் ஆகியவற்றுடன் பலாலி வீதி, பல்கலைக்கழகம், கோயில்களுக்கு அண்மையில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்மாடி(Flats) வியாபார நிறுவனங்கள், Supermarket போன்றவற்றை அமைக்கக்கூடியது.
தொடர்பு : 076 697 4427

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## தேவை

### மணமகள் தேவை
யாழ் (R.C) 5'-5" 1983 பிறந்த தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமை புரியும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு : 077 122 3425

### வேலையாள்கள் தேவை
நெல்லியடி/பருத்தித்துறையில் அமைந்துள்ள பிரபல புடைவைக்கடைக்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு : 077 917 3777

### வேலையாள்கள் தேவை
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அசைவ உணவகம் ஒன்றுக்கு அனுபவம் உள்ள சமையல் ஆள் தேவை.
குறிப்பு:- 1) காலை உணவு
2)மதிய உணவு
3)கொத்து, Rice இல் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கவர்ச்சிகரமானசம்பளமும், தங்குமிடவசதியும் உண்டு.
(63657) தொடர்பு:- 077 668 8337

### வீடு வாடகைக்குத்தேவை
உரும்பிராய்ப் பகுதியில் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு ஒன்று உடன் வாடகைக்குத் தேவை
தொடர்பு : 077 463 6767

### வேலையாள்கள் தேவை
த. குமாரசாமி அன் சன்ஸ் ஸ்தாபனத்திற்கு வேலையாள்கள் தேவை. கண்ணாடி, பிளைவுட் வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழகவிரும்புபவர்கள் தேவை.
ஆரம்ப சம்பளம் 20000/=
(தங்குமிடம் வழங்கப்படும்)
தொடர்பு : த. குமாரசாமி அன் சன்ஸ்
248/1, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

### காணி தேவை
சாவகச்சேரியில் A9 வீதியில் 1-3 பரப்புக் கிடையில் சந்திக்கு அருகில் பழைய கொமர்ஷல் வங்கிக்கும் வைத்தியசாலைக்கும் இடையில் அமைந்ததாகவும் இருக்கவேண்டும்.
(63661) தொடர்பு:- 077 551 7429

### தேவை
யாழ். நகரில் உள்ள பலசரக்குக் கடைக்கு முன் அனுபவமுள்ள
* சிட்டை எழுதுநர்
*விற்பனையாளர் } ஆண்
உடன் தேவை.
தொடர்பு : 077 544 4014

### மணமகள் தேவை
1985-08-11 இல் பிறந்த திருவோண நட்சத்திரமும் மகர ராசியையும் உடைய கண்டியை சேர்ந்த தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
* விரும்பியவர் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு : 076 837 9443

### விற்பனையாளர் தேவை
மோட்டார்/ஓட்டோ உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு மோட்டார்/ஓட்டோ வாகன உதிரிப்பாகத்துடன் அனுபவம் உள்ளவர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (அனுபவம் உள்ளவர்கள் ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(63500) தொடர்பு:- 075 854 2425
077 611 5199

### வீடு வாடகைக்கு தேவை
கன்னாகம், புன்னாலைக்கட்டுவன், மருதனார்மடம் உடுவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 077 308 7172

### தேவை.
ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு செயல்நூல்கள், மாதிரி வினாத்தாள்கள் பாடத்திட்டத்துக்கு அமைவாக தயாரிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில்வெளியீடு செய்யும் பதிப்பகத்துக்கு தேவை.
தொடர்பு கொள்ளவும் : 071 5794468

## வேலைவாய்ப்பு

### வேலைவாய்ப்பு
யாழ்ப்பாண கிளைக்கு Recovery Officer தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். மோட்டார் சைக்கிள் / சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 914 4018
075 344 4111

### வேலைவாய்ப்பு
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தமது தனியார் நிறுவனத்தில் பிஸ்கற், ஜாம், டிபிடிபி போன்ற பிரிவுகளுக்கு ஆண் பெண் வயது 20- 50 மாதச்சம்பளம் ரூபா 25000 -45000 உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். வரும் நாளிலே வேலை. தொடர்பு கொள்ளவும்.
238/7, COLOMBO ROAD, KRIPATHGODA.
தொடர்பு:
075 544 6898 ,077 673 3588
075 662 4295

### வேலைவாய்ப்பு
எமது பிரதான தொழிற்சாலைகளில் ஜாம், பிஸ்கற், பால்மா, யோக்கட், ஷம்போ போன்ற பிரிவுகளுக்கு ஆண், பெண் (20- 50) வயது. உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு. சம்பளம் (25000- 40000) கிழமை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம், நாள் சம்பளம் 1400/= OT- 150 (8 HRS வேலை) முஸ்லிம்களுக்கு விசேடமாக தொழுகை வசதி செய்து தரப்படும். தொடர்பு கொள்ளவும்.
154, COLOMBO ROAD, WARAKAPOLA.
தொடர்பு:
077 401 7543, 072 976 7800
078 941 9997

### வேலைவாய்ப்பு
உங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அதி உயர் சம்பளத்துடனான வேலை வாய்ப்புக்கள். ஜாம், கோடியல்,சொக்லேட், பிஸ்கற், பால்மா, யோக்கட் போன்ற தொழிற்சாலைகளில் (20 - 50) ஆண், பெண், நாள்சம்பளம் - (1500) OT-100, (8Hrs) வேலை. மாத சம்பளம் (25000 - 45000) இப்போது யாரும் தராத சலுகையாக நாங்கள் நாள் சம்பளம், கிழமை சம்பளம், மாத சம்பளம் தருகின்றோம். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம் . வரும் நாளிலே வேலை உண்டு. தொடர்பு கொள்ளவும்.
NO - 125/3 , Colombo Road, Nittambuwa.
077 597 7259, 077 891 0598

### வேலைவாய்ப்பு
இலங்கை முழுவதும் இப்போது உடனடி வேலைவாய்ப்புக்கள் நீங்கள் எதிர்பாராத வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம்.சொக்லேட், கோடியல், பால்மா, சோயா, குளிர்பானம் ஆகிய துறைகளில் உடனடியாக 75 வேலை வாய்ப்புக்கள். வயது - (20-55) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். ஆண், பெண்சம்பளம் ரூபா (20000 - 40000) நாள் சம்பளம் - OT யுடன் 1500 (OT-1Hrs-150) நாள் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
137/9, Boi Road, Wathupitiwala, Nittambuwa.
077 829 2330, 076 748 4289

### வேலைவாய்ப்பு
FR Advertising கம்பனியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கிளைகளுக்கான பதவி வெற்றிடங்களும் காணப்படுகின்றன.
தகைமைகள்: O/L A/L Qualification ,Other Qualification.(O/L தகைமை இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்)
தொடர்பு:
077 2083140, 077 354 8006,
077 526 7295

## ஏனையவை

### மிருகவைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைக்கு.
தொடர்பு : 077 973 8802,021 224 2502

### காணி குத்தகைக்கு விடப்படும்
கிளிநொச்சி, கனகபுரம், 5ஆம் பண்ணையில் இந்திய மின்சார நிறுவனத்தின் (K.E.C) பாவனையில் இருந்த காணி குத்தகைக்கு விடப்படும் (அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு :077 876 8718

### பெயர்மாற்றம்
கோப்பாய் மத்தி, கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த மகாதேவன் யோகேஸ்வரி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை மகாதேவன் யோகேஸ்வரி என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
மகாதேவன் யோகேஸ்வரி

### ஸ்ரீ காளி அம்மன் ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிடர் வல்லுனர் கைரேகை மூலம் துல்லியமான நடந்தவை,நடக்கின்றவை நடக்கபோகின்றவை பற்றிய விவரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

கைரேகை, நாம நட்சத்திரம், சாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி, ஒற்றுமையின்மை, வெளிநாட்டுப் பயணம், அனைத்தும் 11 நாள்களுக்குள் செய்துதரப்படும்.
சிவசங்கர் சாஸ்திரி
தொ.பே. 077 319 8014
[illegible] பிரியார் வீதி,யாழ்ப்பாணம்.
([illegible]கன் கூல்பார் இடநுாக்கம்)
நேரம்: காலை 7.30 மணிமுதல் மாலை 7.00 மணிவரை பார்க்கப்படும். (63722) (45.6.7.3)

### உடன் தேவை
சாவகச்சேரியில் உள்ள பிரபல Hotel ஒன்றுக்கு கணினி அறிவுள்ள , உயர்தரம் சித்தியடைந்த பெண் கணக்காளர் ஒருவர் உடன் தேவை.
தொடர்பு : 075 770 4402,
077 155 0151

### வீடு வாடகைக்கு
அருளம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 048 7422
0771993186

### பதவி வெற்றிடம்
திட்ட இணைப்பாளர்- முழங்காவில்
தகைமைகள்:
- வயது 25-40 வருடங்கள்
- வாழ்வாதார திட்டங்களை கையாள்வதிலும், சுயமாக அறிக்கை தயாரிப்பதிலும் ஆவணப்படுத்தலிலும் ஆகக்குறைந்தது 2 வருடங்கள் அனுபவம்
- தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், சிங்கள மொழி தெரிந்திருப்பது மேலதிக தன்மையாகும்.
- விண்ணப்பதாரி திட்ட அமுலாக்கும் பகுதிக்கு அண்மித்தவராக இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரங்களை இவ் விளம்பரம் பிரசுரமாகி 7 நாள்களுக்குள் இரண்டு உறவினரல்லாத நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு தபாலிலோ அல்லது மின் அஞ்சலிலோ அனுப்பி வைக்கவும்.
Friends Lanka Child Foundation
22/2,1/1, Perera Mawatha, Kalubowila, Dehiwala.
admin@flcf.lk
http://www.flcf.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பழைய மாணவ மன்றத்தின் முன்னைநாள் செயலாளரும் லண்டன் கிளையின்

செயலாளருமாகிய **சி.சோ.ஜீவரட்னம்**

*(வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவ மன்ற செயலாளர் (லண்டன் கிளை செயலாளர்)*

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் மன்றம்**
**வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(63735) (18.6)

## மரண அறிவித்தல்

### கந்தையா கந்தசாமி (கிளி)

(கோகுலம் பல்பொருள் வாணிப உரிமையாளர்)



தோற்றம் 05.07.1958 மறைவு 31.07.2015

யாழ்.வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி அவர்கள் 31.07.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நந்தகுமார், நந்தகுமாரி, அருள்வதனி, அருட்குமார், கோகுலதீபன், கோகுல கிருஷ்ணன், கோகுலவாணி, கலையரசன் காலஞ்சென்ற கோகுலவாணி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜசந்தா, ஜெகநாதன், மதுசன் ஆகியோரின் மாமனாரும் துஷாந்தன், டினுஸ்காந், லதுர்ஷயா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சுந்தரராஜா, அப்பாத்துரை, அருந்தவமலர், மகேஸ்வரி, துரைசிங்கம், சின்னபாலு, தர்மகுலசிங்கம் மற்றும் செல்வரத்தினம், பாலசுந்தரம், இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2015) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் செம்பியன்பற்று இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(63710)(3.9.7.6)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நடராசா

(கட்டுநாயக்கா எயார்போட் (விமானத்தளம்) சிவிலியன் சுப்பிரிண்டன்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிட மாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நடராசா 31.07.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி அம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான நீர்வேலியைச்சேர்ந்த பொன்னையா (மருந்துக்கடை) - சின்னத்தங்கம் தம்பதிகளின் பேரனும் ஆ.தேவியின் கணவரும் பாலசுப்பிரமணியத்தின் (ஆஸ்திரேலியா) சகோதரனும் காலஞ்சென்ற வசந்தி, சசிகலா, சரவணபவன் ஆகியோரின் தந்தையும் நல்லநாதன், பாம் ஆகியோரின் மாமனும் ஷாளினி, பைரவி, நிதர்சன், சஞ்சியன், லிண்டா, செல்வி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
கந்தசாமி கோயிலடி.

செல்வக்குமரன்.
0018174533427

(63719)(3.9.7)

## மரண அறிவித்தல்

### நடராசா திருப்பரநாதன்



தோற்றம் 1956.02.29 மறைவு 2015.07.30

மூத்ததம்பி லேன் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா திருப்பரநாதன் 30.07.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - விசாலாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வரும்,காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ரத்தினம் தம்பதியரின் அருமை மருமகனும், ராசநாயகியின் அன்புக் கணவரும், கௌசிகா, திரிசங்கி, மதுரா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆனந்தகோபாலன் மற்றும் திருமதி இரத்தினகாந்தி செல்வநாயகம், சிதம்பரநாதன், செந்தில்நாதன், நவநாதன், செல்வநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், லோகநாயகி, லோகநாதன், பத்மநாதன், மகேந்திரநாதன், ராசநாதன், ரஞ்சிதநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(03.08.2015) திங்கட்கிழமை Chapel Ridge Funeral Home, 8911, Woodbine Avenue, Markham, Ontario L3R 5 G1, Canada இல் நடைபெறும்,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்.

தொலைபேசி:
0014 1629 31574 (கனடா),
021 225 5169,
077 171 8376

(63676)(45.3.7)

தகவல்:
திருமதி இரத்தினகாந்தி செல்வநாயகம் (சகோதரி)
நடராசா சிதம்பரநாதன் (சகோதரன்)

## மஹிந்தவின் படங்களை அகற்றுமாறு உத்தரவு

கொழும்பு, ஓக. 2

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் புகைப்படங்களை அகற்றுமாறு தேர்தல் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இடங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒளிப் படங்கள் அடங்கிய பெயர்ப் பலகைகள், பதாகைகள் உள்ளிட்டவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான பதாகைகளை தற்காலிக அடிப்படையில் அகற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. காலி மாவட்டத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் பிமல் இந்திரஜித் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த உத்தரவை எந்தவொரு உள்ளூராட்சி மன்றமும் இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## திரைப்படத் தயாரிப்பாளர் போதை வர்த்தகத்தில்


இலங்கையில் முன்னணி போதைப் பொருள் வர்த்தகம் குறித்து பல தகவல்களைப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

இந்தத் தகவல்களுக்கமைய செல்வம் என்ற உள்ளூர் திரைப் படத்தைத் தயாரித்த மொஹமட் முபாரக் மொஹமட் முஜாஹிட்டை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதற்காக சர்வதேச பொலிஸாரின் உதவியும் கோரப்பட்டுள்ளது. இவர் கடந்த சில வருடங்களில் இலங் கைக்குள் சுமார் 1,000 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளை கடத்திவந்திருந்தார் என்று குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

இவர் 2013ஆம் ஆண்டு மலேசியாவைத் தளமாகக் கொண்டு இயங்கி வந்தார். இதன்போது இவரே நாட்டின் போதைவஸ்து விநியோகத் தலைமையாள ராகச் செயற்பட்டு வந்தார். (த)

## மரண அறிவித்தல்

### சந்திரசேகரம் தியாகராசா



தோற்றம் 1952.08.27 மறைவு 2015.08.01

வேம்போலை, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல 67, பாலிநகர், வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் தியாகராசா நேற்று முன்தினம் (31.07.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் ரஜனி (அமெரிக்கா), கோமதி, ராஜ்குமார், றஜிந்தன் (லண்டன்), சுவைனா, றஜீப், (ஜெகன் - டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோவான், ஜொனிலி (அமெரிக்கா), நரேஸ்குமார், ஜெனார்த்தனா, சத்தியசீலன், அபிசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜேடன், ஜோபி, ஜனிக், நிகேசா, நிகேடன், யனுஸ், யஸ்ரிப், யபிசான் ஆகியோரின் அன்புப் பேரனும் சாரதாமணி, யோகரத்தினம், செல்வராசா, சண்முகராசா(சின்னன்), விஜயலட்சுமி (கொலண்ட்), ரவிசந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பூவேந்திரநாதன், ஜெயகுமார், குணதேவி, சண்முகநாதன், றம்மியா, காலஞ்சென்ற நாகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, யோகேஸ்வரி, சர்வேஸ்வரி, கோகிலதாதன், றஞ்சனதாசன், ஸ்ரீதாதன், விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.08.2015) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்போலை,
இணுவில் கிழக்கு.

தொடர்பு:
சின்னன்:077 666 5455
பிரகாஸ்:077 494 6346

தகவல்:
குடும்பத்தினர்.

(63703)(9.3.8)

## மரண அறிவித்தல்

### திருமதி சிதம்பரம் கந்தையா (நல்லபிள்ளை)

(கேணியடி,குப்பிளான்)



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், இணுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரம் கந்தையா 30.07.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா (பிரபல வர்த்தகர் - ஆலிஎல) அவர்களின் அன்பு மனைவியும்,காலஞ்சென்றவர்களான சண்முகம்,வீரவாகு ஆகியோரின் சகோதரியும்,காலஞ்சென்ற கனகசபை மற்றும் பரமேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரி,காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் அருணகிரிநாதர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இந்திராவதி மற்றும் கிருஷ்ணவேணி,பரமகுருநாதர், சறோசினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், செல்லத்துரை (லண்டன்),தங்கமணி (கனடா), காலஞ்சென்றவர்களான சின்னத் துரை, தங்கவடிவேல் மற்றும் புஸ்பராணி (பிரான்ஸ்), வசந்தகுமார், மன்ன வராசன்,யோகராணி,சுதந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சங்கர், திலகேஸ்வரி, சத்தியேஸ்வரி, திருக்கேதீஸ்வரமூர்த்தி, திருஞானேஸ்வரமூர்த்தி ஜெகதீஸ்வரன், சிவகுமார், சிவராம், சிவந்தினி, சிவகௌரி, லதா, சுமதி, சுஜானா, சுஜிதா, வினுசன், வஜீந், நிருஷா, வசந்தா, வனோசன், வவிசன், மயூரி, வேணுகாந், மதனிகா, மதுராங்கினி, கேமிலா, ருஷானி, பிரசாந்,பிரதீப் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆர்த்தனா, ஜனனி, ஜான்சி, கணாதீபன், மதுசா, மதுசன், துவாரகா,பவித்திரன், சாருகா, திவியன், துசியன், இளமாறன், அகிலன்,சிவருக்சன், சர்னிகா,சிவசக்திகா, சிவாரணி, ஜாகவி, சிவவர்ஷன்,சுவர்ணன், சாத்விகா, தேன்மொழி, மோகனா, டினுஸ், பிரவின், நிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அங்களப்பாய், இணுவில் கிழக்கு, இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.
077 336 6326

(63688) (45.7.3)

தகவல்:
குடும்பத்தினர்.
(அ.மன்னவராசன் - மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களிற்கு FMCG பொருள்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை பரவலாக்க இருக்கும் எமது நிறுவனத்தில் கீழ்க்காணப்படும் வெற்றிடங்கள் உள்ளன.

* உதவி முகாமையாளர் - 1 வெற்றிடம்
* விநியோகஸ்தர்கள் (Sales Reps) - 5 வெற்றிடங்கள் (யாழ்ப்பாணம் -1, கிளிநொச்சி-1, முல்லைத்தீவு-1, மன்னார்-1, வவுனியா-1)

குறைந்தது 2 வருடங்கள் முன் அனுபவம் உள்ள ஆண்/பெண் இருபாலாரும் 10.08.2015ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். வேதனம் பேசித் தீர்மானிக்கலாம்.

பிராந்திய முகாமையாளர்,
(M/S KINGS GROUP OF COMPANIES)
A9, கண்டி வீதி மிருசுவில் (MIRUSUVIL)




இலங்கையின் முதல்தர சலூன்களில் ஒன்றான லா பசன் (La Passion) தனது 15 வது கிளையை யாழ்ப்பாணம் கே.கே.எஸ் றோட் இலக்கம் : 176 இல் ஆரம்பித்துள்ளது.

### ஆண்களுக்கான

* கெயாக் கட் (Hair Cut)
* கெயாக் கலர் (Hair Colour)
* கெட் மசாச் (Head Massage)
* (F)பேஸ் மசாச் (Face Massage)
* (F)பேஸ் கிளீனப் (Face Clean -UP)
* (F)பேஸ் பிளீச் (Face Bleach)
* பேசியல் (Facial)
* ஸ்ரெயிற்ட்னிங் (Straightening Etc)

### பெண்களுக்கான

* கெயாக் கட் (Hair Cut)
* திரட்டிங் (Threading)
* கெயாக் கலர் (Hair Colour, High Lights)
* கெயா ரீட்மன்ட் (Hair Treadment)
* ப் லோடிரை அயனிங் (Blow dry & Ironing)
* ப்புள் டிரெஸ்சிங் (Make -Up, Saree drepe,Hairstyle)
* கெட் மசாச் (Head Massage)
* பேஸ் மசாச் (Face Massage)
* பிளீச்சிங் (Bleaching)
* வக்சிங் (Waxing)
* பெடிக்கியூர் (Pedicure)
* மெடிக்கியூர் (Madicure)
* பேசியல் (Facial)
* ஸ்ரெயிற்னிங் (Straightening)
* பேமிங் (Perming-முடி சுருட்டுதல்)
* ரிபோன்டிங் (Re - Bonding Etc)

ஆண்களுக்கு:- 8am to 9.00pm
பெண்களுக்கு:- 9am to 6.00pm

**176, K.K.S றோட், யாழ்ப்பாணம்**
**Tel: 076 759 3357**
**www.lapassion salons.com**

---

வரையறுக்கப்பட்ட சேட்டிஸ் லங்கா நிறுவனமானது சிங்கப்பூரில் உள்ள வரையறுக்கப்பட்ட சேட்டிஸ் சிஸ்கோ நிறுவனத்துடன் இணைந்த ஓர் குழுமம் ஆகும். சேட்டிஸ் லங்கா இலங்கையில் பாதுகாப்பு சேவையை வழங்கும் முன்னணி நிறுவனமாகும்.

certis lanka
Securing Your World

**சுறுசுறுப்பான உங்களுக்கு தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம்....**

நாட்டின் மிக முக்கியமான கடுகதி தூதுவராக பயணத்தை மேற்கொள்ளும்
**சேர்டிஸ் லங்கா கூரியர் சேவை தனியார் நிறுவனம்**
இணைந்து உங்களது எதிர்காலத்தை ஒளிபெறச் செய்யவும்

**மேற்பார்வையாளர் (Supervisor)**
**கிளிநொச்சி**

* க.பொ.த.சாதாரணம் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
* வயது 25-40 க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
* கூரியர் நிறுவனத்தின் மேற்பார்வை சேவையில் இரண்டு வருடங்கள் அனுபவம் தகுதியாக கணிக்கப்படும்.
* மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

**கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.**

* அவசர விபத்துக்களுக்கான காப்புறுதி.
* வருடாந்த சம்பள ஏற்றம்.
* மிகை ஊதியம்.
* நிரந்தர பயிற்சியுடன் மனிதவளம் அபிவிருத்தி செய்தல்.
* நன்நடத்தைக் கொடுப்பனவு.

கல்வி, தொழில்தகமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் கூடிய பூரண விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 16.08.2015 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு **அனுப்பிவைக்கவும்:**

Director / General Manager
Certis Lanka Courier Services (Pvt) Ltd.
No. 175, Castle Street, Borella, Colombo - 08
Telephone No: 0112692692

**"A member of the Certis Group (Singapore)"**

---

## இரண்டு கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு

புங்கன்குளம் புகையிரத ஸ்ரேசன், அரியாலை சனசமூக நிலையம், சிறுவர் பூங்கா, A9 கண்டி வீதி, கச்சேரி ஆகியவற்றுக்கு அருகில் 34 அடி நீளமும், 24 அடி அகலமும் கொண்ட இரண்டு கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 077 232 6343**
**021 492 5006 செழியன்**

---

## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counsellors. This is a one year, week-end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand
2. Passed in Advanced Level
3. Interested in social Activities.

The applicants will have to buy a special application form from our office and submit them before the 20th of August. Only 30 applicants will be selected to follow this training.

**For further details please contact :**
**"AHAVOLI"**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway**
**St.Patrick's Road, Jaffna.**
**Contact No : 021 222 2856**

---

சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

## METRO
Travels & Tours (Pvt) Ltd.

**எமது சேவைகள்.....**

* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
* சகல நாடுகளுக்குமான காப்புறுதி சேவைகள்...
* இந்தியா,மலேசியா,தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்...
* வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல்...
* இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாட வேண்டியஒரே இடம்...

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
# 272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: 021 221 9424, 0212224647, 0212217199,
Mobile : 077 379 8767, 0777881115
Email: Bartheeban@metrotravels.lk

---

# மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

மலேசியாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை

| இல | வகைகள் | தேவை | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆடைதொழில் தயாரிப்பு தொழிலாளர்கள் (பெண்கள்) | 63 | RM 900 + 337.48(OT) **Rs.44,500.00** |

1RM = Rs.36

**விதிமுறைகளும் நிபந்தனைகளும் :**

* வயது : 18 - 30 • ஒப்பந்த காலம் 3 ஆண்டுகள்
* பெண்கள் மட்டும் • வேலை நேரம் : 8 மணி நேரம் / கிழமைக்கு 6 நாட்கள் • தங்குமிடத்திற்கு மாதம் சிறுகட்டணம் RM 50 கழிக்கப்படும் • உணவு - உங்கள் சொந்த செலவில் (சமைத்தல் வசதியுண்டு) • இலவச போக்குவரத்து வசதி ஹோஸ்டல் - தொழிச் சாலை வரை • இலவச போதல் - வருதல் விமான டிக்கெட்
* மருத்துவம் இலவசம் • லீவு : வருட/ நோய் விடுப்பு / பொது - 8 / 14 / 11 நாட்கள் வருடத்திற்கு • சலுகைகளும் நிபந்தனைகளும் மலேசியன் உழைப்பாளர் சட்டப்படி.

அரச அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் - **Rs.35000/-**

**Asian lanka Employment (Pvt) Ltd.**
No. 34/B, Frankfurt place, Colombo – 04
Tel : 011 2589365 , 011 2590067 | Fax : 011 2552790
E.Mail : als@webstation.lk
LL No : 2880

max adz

---

### வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர், திருநெல்வேலி பிரதேசங்களில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
**தொடர்பு : 077 275 8822**

---

திருத்துதல், கொள்வனவு செய்தல், விற்பனை ELEC - கருதிபெட்டி ELCE/Box, கிற்றார் விற்பனைக்கு உண்டு
இல.105, ...
(63726) (3.9.6) **தொடர்பு: 071 777 5757**

---

### வீடு வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியில் 100 யார் தூரம் நல்லூர்ப்பக்கம் 2¾ பரப்பில் சகல வசதிகளும் கொண்ட ஐந்து அறைகள் உள்ள வீடு வளவு விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 011 271 5130, 077 977 5017**
**077 430 9270** (11851)(3.9.6)

---

### விற்பனைக்கு

விருந்தகம் ஒன்றின் கண்ணாடி, அலுமினியக் கதவுகள், கிடாரங்கள், பில்போடும் Dotmatric Printer, Colour Printer, AC கள், உள்ளகத் தொலைபேசி (PABX) விற்பனைக்கு உண்டு.
(63730) (3.9.6) **தொடர்பு: 078 521 0573**

---

### காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் தெற்கு, பழைய வீதி வீரபத்திரர் கோயிலுக்கு அருகில் 6¾ பரப்பு வீட்டுடன் கூடிய காணி (திருமணமண்டபம் கட்ட ஏற்றது) விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு: 077 485 8960, 076 688 7709** (63724)(3.9.6)

---

### காணி விற்பனைக்கு

**பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட கடற்கரை வீதியையும் கடற்கரையையும் முற்புறமாகக் கொண்டு ஹொட்டேல் உல்லாச விடுதிக்கும் சிறந்ததான ஒரு ஏக்கர் நிலம் விற்பனைக் குண்டு.**
**தொடர்பு : 021 226 4202**
**011 2674599**

---

### நிலஅளவையாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் பணிபுரியக்கூடிய பகுதிநேர நிலஅளவையாளர் (Surveyor) தேவை.
தொடர்புகளுக்கு:
Email : realcommestate@gmail.com
0778535767

---

### வீடு வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனத்தில் உயர் பதவி வகிக்கும் ஒருவருக்கு சுற்று மதிலுடன் கூடிய தனி வீடு வாடகைக்கு தேவை. யாழ்நகர எல்லை மற்றும் நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் விரும்பத்தக்கது.
வாகன தரிப்பிடம் (Car)அவசியம்.
(63731) (3.9.6) **தொடர்பு: 071 240 3465**

---

**Majestic Cineplex Jaffna**
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
11.04.1941

விண்ணுலகில்
12.08.2014

### அமரர் விசுவலிங்கம் இரங்கநாதன்

திதி:அபரபக்க துதியை

ஆண்டொன்று போனாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆறாத மனச் சுமையில் அழுகிறதே எங்கள் மனம்
நீங்கள் பிரிந்தாலும் உங்கள் அன்பும் ஆசியும்
என்றும் எம்மை விட்டுப் பிரியாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

மனைவி, மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

சாத்தா கலட்டி,
அளவெட்டி வடக்கு,அளவெட்டி.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நடராசா தேவராஜா

தோற்றம் 23.12.1956
மறைவு 25.07.2013

திதி: அபரபக்க துதியை

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் எம்
வாழ்வில் ஒளியாய் எமக்கெல்லாம்
சுமைதாங்கியாய் நின்று எம் வளமான
வாழ்விற்கு வழிகாட்டிய எம் தெய்வம் எம்மை
விட்டுப் பிரிந்த துயர்தனை சுமந்த வண்ணம்
இன்றைய தினம் உங்கள் இரண்டாம் நினைவு
நாளில் நினைவு கூர்ந்து
பிரார்த்திக்கின்றோம்

என்றும் நினைவில்,
குடும்பத்தினர்.

இல.15, கற்குளலேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04.05.1929

மறைவு
01.08.2007



திதி: 02.08.2015

அமரர் கலாநிதி
### அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை B.A., FCA.
(பட்டயக் கணக்காளர்)
[முன்னாள் பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம்,
முன்னாள் போஷகர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை]

எமது மன்றத்தின் போஷகராக இருந்து எம்மை வழிநடத்திய
அமரர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின்
தன்னலம் கருதாச் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

திருமதி நளாயினி மூர்த்தி
(மகள்-கனடா)

நிர்வாகம்,
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(59795)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி அருந்தவ ஈஸ்வரி இரகுநாதன்



அன்னைமடியில் 07.04.1919
அரன்அடியில் 22.07.2005

திதி: ஆடிமாத அபரபக்க துதியை
02.08.2015

ஆண்டுகள் பத்து சென்றன அம்மா!ஆறவில்லை எம் மனது உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் ஸ்தாபித குலதெய்வமாம் வட்டுக்கோட்டை உழுத்தொல்லைப் பதி ஆத்தியடி சித்தி விநாயகனின் பாதம் பணிகின்றோம்.

அன்பு (மகள்)
செல்வி செந்திற் செல்வம்
இரகுநாதன் (இளைப்பாறிய அதிபர்)
உற்றார்,உறவினர், நண்பர்கள்.

உடையார் வீடு,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக
கடமையாற்றும்
நித்தியானந்தன் கரன்
அவர்களின் அன்புத் தந்தையார்
செல்லத்துரை
நித்தியானந்தன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவிப்பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்.
மாவட்ட அலுவலகம்
கடற்றொழில் நீரியல் வளத்துறைத்
திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### இராசா சுரேந்திரன்

மயிலிட்டி வடக்கு மயிலிட்டியை பிறப்பிடமாகவும் கப்பன்புலம், சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா சுரேந்திரன் 30.07.2015 வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் இராஜேஸ்வரி, விஜயகுமார்,அருணகிரிநாதன், சிவனேஸ்வரி காலஞ் சென்ற கெங்காதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வரதராஜன், ஜெயமதி, சந்திரலேகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஸ்ணு சாந்தி, சிவசக்தி , கிரிதரன், தமிழ்நிதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தரண்யன், திலக்சனா, கதிர்வேந்தன், பவித்திரா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கப்பன்புலம்,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
077 960 1666
077 427 8391

தகவல்: குடும்பத்தினர்
உறவினர்கள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பராசக்தி முருகேசு



தோற்றம்
22.03.1924

மறைவு
13.08.2014

திதி: 02.08.2015 ஆடி மாத
அபர பக்க திருதியை

பத்துத் திங்கள் எமைச் சுமந்து, பாரினிலே ஆளாக்கி
பாசத்தோடும் பரிவோடும் வளர்த்தெடுத்த அம்மாவே!
பன்னிரண்டு திங்கள் பறந்தோடிப் போனதுவோ
பரிதவித்து நிற்கின்றோம் பரமன் அடி தொழுது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

## ரவியின் குற்றச்சாட்டு; விசாரணை வேண்டும்

*டிலான் பெரேரா தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 2

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் மட்டுமன்றி, ரவி கருணா நாயக்கவின் குற்றச்சாட்டு குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டமொன்றின் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டத்தில் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்திருக்கும் டிலான் பெரேரா கொட்டாஞ்சேனைத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குபாதாள உலகக் குழுக்கள் ஆதரவளிப்பதாகவும், அவ்வாறான பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதலே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.மு. ஆதரவாளரைக் கடத்திய ஐ.ம.சு.முன்னணியின் 6 பேர் கைது

கொழும்பு, ஓக 02
நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர் சாகல ரத்நாயக்கவின் ஆதரவாளர் ஒருவரை ஓட்டோவுடன் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் அறுவரை, அக்குரஸ்ஸ பொலிஸார் கடந்த வியாழக்கிழமை காலை கைதுசெய்துள்ளனர்.

சாகல ரத்நாயக்கவின் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோதே அவரது ஆதரவாளர் கடத்தப்பட்டுள்ளார். கடத்தலில் ஈடுபட்டவர்களைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்ததுடன் அவர்கள் பயணித்த கெப் ரக வாகனத்தையும் அதிலிருந்த சாகலவின் 326 சுவரொட்டிகளையும் ஐ.ம.சு. கூட்டணியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர் மனோஜ்சிறிசேனவின் சுவரொட்டிகள்சிலவற்றுடன் இரும்புக் கம்பிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, பிலியந்தல வைத்திய சாலை வீதியில் ஐ.ம.சு.முன்னணியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸவின் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த மூவரை நேற்று முன்தினம் காலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான அதிரடி விரசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.(த)

## பெண்களும் சிறுவர்களுமே போரில் அதிகம் பாதிப்பு -கனடா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக .2
போர் காரணமாக சிறுவர்களும் பெண்களுமே அதிகளவு பாதிக்கப்பட்டு உள்ளதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் ஸெல்லி வைட்டிங் தெரிவித்துள்ளார்.

போர் காரணமாக பௌதீகளவில் ஏற்பட்ட பாதிப்பினை விடவும், சமூக ரீதியான பாதிப்புக்களே மிக அதிகம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் போர் இடம்பெற்ற நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் போரில் கணவரை இழந்த பெண்கள் அதிகளவில் காணப்படுவதாகவும் அவர்களுக்கான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது மிகவும் சவாலுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதற்கான மெய்யான விருப்பம், அனைத்து தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வும் நம்பிக்கையும் ஏற்படுத்துதல் ஆகியனவற்றின் மூலம் நல்லிணக்கத்தைக்கட்டியெழுப்பமுடியும் என கனேடிய உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)


## மரண அறிவித்தல்

திருமதி அன்ரனற் இருதயநாதர் (யோகமலர் ஒவல்)

பிறப்பு 07 * 04 * 1955



இறப்பு 01 * 08 * 2015

இல. 123 2/1 புதுச்செட்டிதெரு கொழும்பு -13 ஐ வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 6 ஆம் குறுக்குத்தெரு, குருநகரை பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரனற் இருதயநாதர் (யோகமலர்) 01.08.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இருதயநாதரின் (துரைமணி) அன்பு மனைவியும் திருமதி றொபின்சன் சினிகொலின்(பிறினா), திருமதி மேரி அனஸ்பல்பினா (பப்பி), லவுரேஞ்சியன்(பிரசாத்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கொலின், திருமதி செறின் டயானி லவுரேஞ்சியனின் அன்பு மாமியாரும் கிளாரா, மில்ரா(மரியரெல்லா) டவோரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 02.08.2015 காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைக்காக யாழ்ப்பாணம் எடுத்துச்செல்லப்பட்டு 05.08.2015 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ் பெரிய கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
தொடர்பு :- 076 831 6063 - பிரசாத்
071 060 1824 -பிறினா
075 241 6722 -அனஸ்
செ.இருதயநாதர் (துரைமணி-கணவர்)
077 150 8661
(63748)

## மரண அறிவித்தல்

சிவசுப்பிரமணியம் ரமேஸ் (யசோ)



கந்தர் மடத்தைப்பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப் பிரமணியம் ரமேஸ் (யசோ) 01.08. 2015 ஆம் திகதி லண்டனில் கால மானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - சோதீஸ்வரி தம்பதியரின் ஏகபுத்திரனும் சிவதாசன்-டில்லியாபுரணம் (செல்லம்) தம்பதியரின் மருமகனும் யஸ்மினியின் அன்புக் கணவரும் அபிஜா,சிறிஜா ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/9 மணல்தரை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
077 953 8207 (63749)

6 HAZEL WOOD CLOSE
HARROW
HAZ-6HD
LONDON
U.K
0044 2084 274 255

தகவல் :-
கா.சிவசுப்பிரமணியம்
(தந்தை)

## மரண அறிவித்தல்

திருமதி தங்கம்மா கந்தையா



மாரீசன் கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தையா நேற்று (01.08.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரவணமுத்து கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ் சென்ற செல்லம்மா (சுவிஸ்) மற்றும் யோகவனம் (கன டா), தங்கரத்தினம், சோதிப் பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவலிங்கம்(மயூரா), சிவசறோநிதி, இரத்தினலீலா (கியூமெடிக்கா மு.ப ஆசிரியர்), சிவகுமார்(ரவி), ரேணுகா(மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தனலட்சுமி, சிறீவள்ளல், காலஞ்சென்ற மணிமாறன் மற்றும் வசந்தலீலா, இராசபுலேந்திரன்(இ.போ.ச வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன், வத்சலா, கமலகாந், சசிகாந், வனுஜா,சியாமா, சஜிவன், வினோஜா, ஜிந்து, கமலராஜ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.08.2015)ஞாயிற்றுக்கிமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
இந்துக்கல்லூரி வீதி,
மானிப்பாய். (63742)
தொடர்பு :- 077 541 5461 சிவலிங்கம்(மகன்)
077 615 9612 சிவகுமார்(ரவி-மகன்)

## வீட்டுக்கிருத்திய நிகழ்வு ஒத்திவைப்பு

02.08.2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த
எமது குடும்பத் தலைவர்
சு.பொ.நடராஜா
(அண்ணா தொழிலக உரிமையாளர்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதிய போசன வைபவமும் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம். இந்த வைபவம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.
(C/11968)(10.3)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

நாகன் தேவகுமார்



வட்டுக்கோட்டை முதலியார் கோவிலடியை பிறப்பிடமாகவும் இணுவில் பாலாவோடையை வதிவிடமாகவும் கொண்ட நாகன் மாமா என்று அழைக்கப்படும் தேவகுமார் 31.07.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் சரஸ்வதி, கந்தையா ஆகியோரின் அன்பு மருமகனும் புஸ்பமலரின் அன்புக்கணவரும் ரவீந்தினி, ஜெயந்தி, கேமலா, கருணாகரன், அரவீந்தன், ஜவராணி, கஜீபன் ஆகியோரின் தந்தையும் கிருபாமூர்த்தி, சதானந்தன், கோகிலதாஸ் ஆகியோரின் மாமனும் பிரியா, கிசாந்தன், நியசாலினி, சஞ்சீவன், அனுஸ்ரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
இணுவில் (63756) சிவம், இராசேந்திரம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்,
கடந்த 29.06.2015 திங்கட்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

சபாபதிப்பிள்ளை தெய்வேந்திரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.08.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
வடலியடைப்பு
021 500 6591
021 225 1177
(c 11931)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

வெற்றிவேலு முத்துக்குமாரு



பிறப்பு 08.08.1915 இறப்பு 29.07.2015

சிறுப்பிட்டி தெற்கு , நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு முத்துக்குமாரு 29.07.2015 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு சின்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற CO நடராசாமற்றும் தியாகராசா, சறோஜினிதேவி, நவரட்ணராசா, ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற கிருஸ்ணராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் சகுந்தலாதேவி, காலஞ்சென்ற குகதாஸன் மற்றும் ஸ்ரீமதிதேவி, கலாராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுதர்ஜினி, ஊர்மிளா, இராஜினி, துஸ்யந்தன், மாதவன், றமணன், ராகவன், மதனமோகன், நித்தியா, தனுரசியா, விவேகானந்தன், ராகுலன், தனுஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஹரிஸ், சுவேதா, ஈஷானி, விஷ்ராம், ஷோபி, கிரிஷாந், துஷாந் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று நண்பகல் 12.00 மணிக்கு தகனக் கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
(63753)
தகவல் :-
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு
ஊர் கோழிக்குஞ்சு விற்பனைக் குண்டு.
தொடர்பு:-077 860 5098

## வாடகைக்கு
யாழ்ப்பாணம், நல்லூர், செம்மணி வீதியில் கல்விக் கந்தோருக்கு அருகில் வாகன தரிப்பிட வசதிகளுடன் 8 அறைகளைக்கொண்ட பெரிய வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு. அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(c 11844) தொடர்பு:- 071 815 3674

உதயன் advt@uthayan.com 0215671111

## கண்ணீர் அஞ்சலி
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும் இ.ரேணுகா அவர்களின் அன்புத் தாய்



திருமதி **தங்கம்மா கந்தையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி சமூகம்**

## யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள சைவ உணவகத்துக்கு பின்வருவோர் தேவை
- உதவி முகாமையாளர்
- உணவு பரிமாறுபவர்கள்
- உணவு தயாரிப்பாளர்கள்
- தேநீர் தயாரிப்பாளர்கள்
- பில் போடுபவர்கள் (Cashier)
- சுத்திகரிப்பாளர்கள்

தொடர்பு:
**077 480 3840**

## மாபெரும் ஆடித் தள்ளுபடி
### த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
ஸ்தாபனத்தின் புடைவை தினுசுகளுக்கு மாபெரும் ஆடித் தள்ளுபடி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது

சாறி
கொட்டன் சாறி
பஞ்சாபி சில்க்
பஞ்சாபி கொட்டன் } 500/=முதல்
ஜீன்ஸ் - 750/=
சேட் - 250/=

மேலும் அனைத்து புடைவைகளுக்கும் சிறப்புத் தள்ளுபடி

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
44,42 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு
### டோஹா-கட்டாரில் முதற்தர கம்பனிகளில்
இலகுரக வாகன சாரதி
(TOYOTA கம்பனியில்) 89
சம்பளம் 1600 QR 58,000/=

நிபந்தனைகள்:- இரண்டு வருடகால ஒப்பந்தம். தங்குமிடம். மருத்துவம் வழங்கப்படும். உணவுக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் வாரத்தில் 6 நாட்கள் வேலை. இருவழி விமான டிக்கட் இலவசம். SLBFE யினால் அனுமதிக்கப்பட்ட 55,000 ரூபா கட்டணம் மட்டுமே. மற்றையவை அந்நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமையும்.
Ad.App.No:AL/2769/32/15

நேர்முகத்தேர்வு இம்மாதம் 09.10 ஆம் திகதிகளில் வெளிநாட்டு அதிபர்களால் நடத்தப்படும்.

### 02. கட்டுமான கம்பனியில்
Ad.App.No:AL/2769/57/15

| தொழில் வகை | எண் | சம்பளம் QR | Rs. |
|---|---|---|---|
| டெக்னீசியன் | 50 | 1000-1500 | 36000-55000 |
| பிளம்பர்கள் | 25 | 1000-1500 | 36000-55000 |
| மேசன் | 25 | 1000-1500 | 36000-55000 |
| மெக்கானிக்கல் எஞ்சினியர் | 01 | 3000-5000 | 110,000-183,000 |
| எலக்ரீசியன்கள் | 22 | 1000-1500 | 36,000-55,000 |
| சட்டறிங் காப்பெண்டர் | 25 | 1000-1500 | 36,000-55,000 |
| போமன்- MEP | 02 | 2000 | 73,000 |
| கம்பைனசர் (பொது) | 03 | 1500-2000 | 55,000-73,000 |
| பாமர் (விவசாயி) | 23 | 1000-1200 | 36,000-44,000 |
| உருக்கு வேலை செய்பவர் | 50 | 1000-1500 | 36,000-55,000 |
| சாரதி - கனரக வாகனம் | 04 | 1500-2000 | 55,000-73,000 |

நிபந்தனைகள்:- இரண்டு வருடகால ஒப்பந்தம். தங்குமிடம். மருத்துவம் வழங்கப்படும் - 200QR உணவுக் கொடுப்பனவு. நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் வாரத்தில் 6 நாட்கள் வேலை. ஒப்பந்த முடிவில் திரும்பிவருவதற்கான விமான டிக்கட் இலவசம், மற்றையவை அந்நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமையும்.

நேர்முகத்தேர்வு இம்மாதம் 03.04.05 ஆம் திகதிகளில் வெளிநாட்டு முகவர்களால் நடத்தப்படும்.
செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் தகைமைச்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**புரடென்ஷல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
இல. 72/1, 2ஆவது மாடி, கொழும்பு வீதி, குருநாகல்.
077 4574555 037 494 55 55 077 9 200 500

## தையல்
இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீனமுறையில் தைத்துக்கொடுக்கப்படும். இடம் :-குமாரசாமி வீதி (யாழ்.பல்கலைக்கழகம் அருகில்)
**076 639 9277**

## வாடகைக்கு வீடு தேவை
3 பேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ்ப்பாணம் பலாலி வீதி,KKSவீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றிற்கு அருகில் இணைந்த குளியலறையுடன் கூடிய வீடு ஒன்று Annex (அனெக்ஸ்) ஆகவோ தனியாகவோ வாடகைக்குத் தேவை.
(63738) தொடர்பு:- 077 869 3370

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் சுண்டிக்குழி கோயில் பற்றில் (முதலைக்குளம் வயல்) நிலப்பரப்பு மூன்றும் அதனுள் அமைந்துள்ள வீடும் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 715 8327 (63732) (3.9.6)

## விற்பனைக்கு
யாழ் பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து 400m தூரத்தில் கல்வியங்காடு கட்டைப்பிராயில் உள்ள குளிக்கண்டி வீதியில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியும் கல் வீடும்,கிணறும் விற்பனைக்குண்டு.
தொ.பே.இல :-077 111 9671
077 401 1154
021 221 1171

## விற்பனைக்கு HD video camera
Canon XF100
300 hours use விற்பனைக் குண்டு.
விலை - 180.000
தொடர்பு:- 077 048 9650

## காணி விற்பனைக்கு
மிருசுவில் A9 வீதியில் 18½பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் பிரித்து கொடுக்கப்படும்.
(11842) (3.9.6) தொடர்பு: 077 607 9340

## வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் விபத்து
யாழ்ப்பாணம், ஓக. 2
வீதியால் சென்ற மினி பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து நிலையில் முன்னாள் சென்றவர்களை மோதியதுடன் பஸ்ஸும் வயலில் தடம் புரண்டதால் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர். இதில் ஆறு பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்று மாலை 5.30 மணியளவில் சங்கானை நகரப் பகுதிக்கு அண்மையில் இடம்பெற்றது. மாதகலில் இருந்து வேகமாக சங்கானை நகரை நோக்கி வந்த மினிபஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியோரமாக இருவரை மோதியதில் ஆண் ஒருவரின் கால் முறிந்துள்ளதுடன் பெண் ஒருவர் முகத்தில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.
இதேவேளை பாதையை விட்டு விலகிய மினி பஸ் குளத்திற்கு அருகில் உள்ள வயல் வெளியில் தடம் புரண்டதில் பஸ்ஸில் இருந்த குழந்தை உட்பட மூன்று பேர் படுகாயமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். சிறு காயங்களுக்கு உள்ளாகியவர்கள் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார்கள். வட்டுக்கோட்டை பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (த)

## வேலையாள்கள் தேவை
புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புவர்களும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாநகரசபை எல்லைக் குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:-077 202 6295

## கடை வாடகைக்கு
யாழ் நகர மத்தியில் நியூ மாக்கெற் முன்னால் சகல வியாபாரத்திற்கும் ஏற்ற கடை வாடகைக்கு விடப்படும் .பின்புற வீதிவரையும் நீளமானது.
தொடர்பு : 075 268 8144

## காணி விற்பனைக்கு
கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் A9 வீதியில் காணி விற்பனைக்கு உண்டு.
(63741) தொடர்பு:- 077 460 5329

## லொறி விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள (41-XXXX) லொறி விற்பனைக் குண்டு.
தொடர்பு:- 077 251 4981
021 222 5504

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சிறாம்பியடிப் பகுதியில். சுற்றுமதிலுடன் கிணறு உட்பட 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 078 652 1559

## வீடு வாடகைக்கு
யாழ்நகர மத்தியில்.வீடு வாடகைக்கு.
(63734) தொடர்பு:- 077 242 5509

## வேலை வாய்ப்பு
✱எழுதுவினைஞர்
கணினி ஆங்கில அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது.
முன் அனுபவம் மேலதிகமான தகைமையாகக் கொள்ளப்படும்.
தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 15.08.2015 ஆம் திகதிக்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
கிளீன்வெல் பிறைவேற் லிமிட்டெட்
இல.154,முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (c 11930)
தொடர்பு:- 021 222 4128
077 220 9592
kleenwell@sltnet.lk

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி
மலர்வு 28 05 1947



உதிர்வு 03 07 2015

அமரர் திருமதி **றங்கநாயகி நற்குணம்**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உருவமாய்,
பண்பின் இருப்பிடமாய், குடும்பத்தின் குலவிளக்காய்,
எங்கள் வளர்ச்சிக்கு வித்திட்ட
எங்கள் அன்புத்தெய்வமே
எத்தனை நாட்கள் கடந்தாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்
நீங்கள் காட்டிய வழியில் என்றும் நாம் வாழ
எமக்கு ஆசிதாருங்கள்.

உங்களின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிராத்திக்கின்றோம்.
... பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்.
30.5/1 நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

## விற்பனைக்கு
தற்போது பாவனையிலுள்ள சிறிய சாதாரண Block Ice மெசின் விற்பனைக்கு.
50 kg கட்டி 60
K.Karthigesan தொடர்பு:- 076 872 8070
011 261 0505

## தேவை
வெளிநாட்டில் இருந்து வருகை தந்த சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத்தேவை.திருநெல்வேலி, கொக்குவில் யாழ்ப்பாணம் அண்டிய பிரதேசம் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 2797087

## உடனடி வேலைவாய்ப்பு
பிரபல்யம் வாய்ந்த நிதி நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பிரதேசங்களில் இருந்து O/L,A/L தகைமையுடையவர்கள் உடனடியாகத் தேவை.
கோப்பாய், உரும்பிராய்,ஊரெழு,அச்செழு, நீர்வேலி, புத்தூர்
குறிப்பு :- அடிப்படை சம்பளம்-15000/=
சந்தைப்படுத்துதல் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு உடனடி பதவி உயர்வு உண்டு.
தொடர்பு:-076 872 0555
(63743)அழைக்கவும் OR S.M.S அனுப்பவும்.

## மணமக்கள் தேவை
இந்து கௌரவ குடும்பம் 1981 பூரம் 8இல் செவ்வாய் 59 கிரக பாவம் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் மணமகனுக்கும், 1986 அவிட்டம், செவ்வாக் குற்றமற்ற 7கிரகபாவமுடைய நிர்வாக உயர்பதவி வகிக்கும் மணமகளுக்கும் தகுந்த வரன்கள் தேவை.
(63736) (3.9.6)
தொடர்பு: 077 997 6896

## வேலை வாய்ப்பு
யாழில் தீவுப்பகுதியில் பாதுகாப்பு சேவைக்கு Visiting officer உம் Guardsஉம் (Jso) உடன் தேவை. மேலும் கொழும்பிலும் (Hospitals, Garments, Hotels) ஆகிய இடங்களுக்கு (OIC,SSO,JSO,LSO) தேவை. தங்குமிடம் இலவசம் உணவு சகாய விலையில் . சம்பளம் 20000/=, 30000/= வரை சிங்களம்/ ஆங்கில அறிவுக்கு முன்னுரிமை
T.P: 0712416926, 0112871280

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கண்காணிப்பில்

உறுதி செய்வதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.
முதல்கட்டமாக மொனராகலை மாவட்டத்தில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ள சகல வாகனங்களிலும் மாற்றுவலுவுள்ளோரை இணைத்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஏனைய பிரதேசங்களிலும் மாற்றுவலுவுள்ளோரைத் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## வக்கியின்

மைகள் சபையின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கை செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டதன் பின்னரே உள்ளக விசாரணைப் பொறிமுறைமையா அல்லது சர்வதேச விசாரணையா என்பது நிர்ணயிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தொழில்நுட்பம் மற்றும் நிதியியல் ரீதியான உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.
குற்றச்செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இலங்கை அரசினதும் மக்களினதும் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமையை முடிவுக்குக் கொண்டுவருதல், சமாதானத்தை கட்டியெழுப்புதல், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றல் போன்ற அனைத்து விவகாரங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதற்காக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## தபால்மூல

பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் நாளை திங்கட்கிழமை தபால் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இதுதவிர ஒகஸ்ட் மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள மற்றைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (த)

## இலங்கைப்

சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
தேர்தலுக்குப் பின்னரே இந்தக் குழுவின் பயணம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தேர்தல் பரப்புரைகள் நடந்து கொண்டிருக்கும்போது. ஐ.நா குழு பயணம் மேற்கொள்வது நெருக்கடியானதாக இருக்கும். சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்துப் பிரச்சினைகளை அணுகுவது கடினமானது. எனவே தான் தேர்தல் முடியும் வரை ஐ.நா. செயலணியின் பயணம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (த)

## தேர்தல் விதிமீறல்கள்

ளிட்டவை தொடர்பில் 293 முறைப்பாடுகள் பதிவா கியுள்ளன. சட்டவிரோத தேர்தல் பரப்புரைகள் தொடர்பில் 435 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் தொடர்பில் 34 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று கபே மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

## நேற்றுவரை

வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.
இதேவேளை, வாக்குகளை எண்ணும் பணிகளுக்கான ஆவணங்களை அச்சிடும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அச்சக அதிபர் காமினி பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (த-4)

## ஒகஸ்ட் 17

தல் பிரசாரப் பணிகளுக்குச் சீனா நிதி உதவி வழங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
எவ்வாறெனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்திற்கு இவ்வாறு நிதி உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
தமக்குப் பணம் வழங்குமாறு சீனாவிடம் கோருமாறு அவர் சிங்கள ஊடகமொன்றிடம் நகைச்சுவையாகக் குறிப்பிட்டுள்ளார்.
எந்தவொரு தரப்புடனும் இரகசியத் தொடர்புகளைப் பேணவில்லை எனவும், வெளிப் படையாகவே தாம் தொடர்புகளைப் பேணி வந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
நாம் ஜனநாயகத்திற்காகத் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். மேற்குலக நாடுகள் எமக்கு ஜன நாயகம் பற்றிக் கற்பிக்கவேண்டிய அவசியம் கிடையாது.
வடக்கில் எமக்கு வாக்குகள் கிடைக்காத காரணத்தினால் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவினோம். வடக்கு மக்கள் எமக்கு வாக்களிக்கமாட்டார்கள் எனத் தெரிந்தும், வடக்கு மாகாண சபையை நிறுவி தேர்தல் நடத்தினோம் –என்றார். (த)

## தேர்தல் சட்ட மீறல்;

யகம் குறிப்பிட்டுள்ளது. சட்டவிரோத நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் குறித்து 164 முறைப்பாடுகள் தேர்தல்கள் செயலகத்தில் பதிவாகியுள்ளன.
இதுதவிர பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட சுவரொட்டிகள் மற்றும் கட்டவுட்கள் காட்சிப்படுத்தல் குறித்து 156 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பொருள்களை பகிர்ந்தளித்தல் தொடர்பில் 103 சம்பவங்களும், அரச உடைமைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் தொடர்பில் 88 சம்பவங்களும், அரச ஊழியர்களைத் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் குறித்து 70 சம்பவங்களும் தேர்தல்கள் செயலகத்தில் பதிவாகியுள்ளன. கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான 122 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## உள்ளக

மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுடன் சர்வதேச நிறுவனங்கள் தலையீடுகளை மேற்கொள்ளும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
வெளிநாட்டு தொழில்நுட்ப உதவியுடன் உள்நாட்டு விசாரணைகள் நடத்தப்பட உள்ளதான தகவல், கசிந்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
போர் தொடர்பான உத்தேச உள்நாட்டு விசாரணையில் சர்வதேசத் தலையீடு உள்ளமைக்கான தகவல் சனல் 4 வெளியிட்ட ஐ.நா. விசாரணை அறிக்கையில் கசிந்துள்ள விடயங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. எவ்வாறாயினும் இந்த செயற்பாடுகளுக்குள் வெளிநாட்டு உதவிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பொறுப்புகளின் தன்மை இன்னும் தெளிவில்லை.
உள்நாட்டு விசாரணைகளுக்கு ஐ.நா. தலைமை தாங்குவதுடன் நிதியுதவிகளையும் வழங்குகிறது. இதனால், உள்நாட்டு விசாரணை என்பது வெறும் பெயர் மாத்திரமே.
அத்துடன் இலங்கை அரசும், வடக்கு மாகாண சபையும் இந்த விசாரணைகளை செயற்படுத்தும் முகவர்கள் அமைப்புகள் எனவும் கசிந்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபை எப்படி செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்பாக இருக்க முடியும். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்களை வடக்கு மாகாண சபை சுமத்தி வருகிறது. இந்த நிலையில், அவர்களுக்கு விசாரணைகளை செயற்படுத்துவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது –என்றார் பீரிஸ். (த)

## சமஷ்டியை

தில் இடம்பெற்றது.
இதன்போது 5 கேள்விகள் தொடர்பில் யாழில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தன.
குறித்த இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எம.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டு க ரு த் து ரை க் கை யி லே யே மேற்கண்டவாறு தெரிவித்தார்.,
இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சாத்தியமான தீர்வாக சமஷ்டி முறையை முன்வைத்துள்ளது. அத்துடன் இந்தப் பொதுத் தேர்தலில் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டுள்ளது. ஆனால், இவை எதனையும் செய்யத் தைரியமும், திறமையும் இல்லாதவர்கள், எம்மைக் குறை கூறி காலத்தைக் கழிக்கின்றனர். தம்மிடம் எதுவும் சொந்தமாக இல்லாத வெறுமையின் காழ்ப் புணர்ச்சியை, போலியான குற்றச்சாட்டுகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.
போர் முடிந்தது முதல் நாம் மக்களுடன் இருக்கின்றோம். மக்களுக்காகப் பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். வழக்குகள் மூலம் மக்களுக்கு வெற்றியும் பெற்றுக் கொடுத்தோம். ஆனால், இவை எதையுமே செய்யாமல் இருந்தவர்கள், தேர்தல் வந்ததும், திடீரென தூக்கத்தில் இருந்து விழித்தெழுந்தவர்கள் போன்று திடீர் என்று வடக்கு, கிழக்கில் முகாமிட்டு எம்மைத் திட்டித் தீர்த்துக் காலத்தை ஓட்டுகின்றனர். நேற்று வரை தமிழர்களைத் திரும்பிக் கூடப் பார்க்காத இவர்கள், தேர்தல் முடிந்த மறுகையோடு தமிழர்களை மறந்து விடுவார்கள்.
தமிழ் மக்களுக்காக எதையுமே செய்யாமல், வெறுமனே விமர்சித்துக்கொண்டும், குறை கூறிக்கொண்டும் இருப்பது முறையல்ல. தம்மிடமுள்ள மாற்றீடு என்ன என்பதனைச் சொல்லவேண்டும். ஆனால், அவர்களால் சொல்லமுடியாது. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள தீர்வை விட சிறந்த சாத்தியமான தீர்வை இவர்களால் மட்டுமல்ல, யாராலும் முன்வைக்க முடியாது.
தமிழ் மக்கள் நாம் முன் வைத்துள்ள தீர்வை எந்த அளவு ஏற்றுக் கொள்கின்றார்கள் என்று சர்வதேசம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள சமஷ்டித் தீர்வுத் திட்டத்திற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கின்றீர்களா என்பதனை உலக நாடுகள் பார்த்துக்கொண்டு இருக்கின்றன.
தமிழர்களில் யாராவது ஒரு சிலர் தமது வாக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்காமல், தவறியேனும் கொள்கை இல்லாதவர்களுக்கு வழங்கினால், அவை தீர்வுக்கு எதிரான வாக்குகளாகப் பார்க்கப்படுவதுடன் , தமிழர்களே தீர்வை விரும்பவில்லை என்று வழங்கிய அங்கீகாரமாகவும் கருதப்பட்டுவிடும் அபாயம் உள்ளது. ஆகவே, தமிழர்களின் வாக்குகள், தமிழர் பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்டுள்ள தீர்வை ஆதரித்து உறுதிசெய்வதாக அமையவேண்டும். வரலாற்றின் ஒவ்வொரு தீர்க்கமான சந்தர்ப்பங்களையும் தவறவிடாமல் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்– என்றார்.

சர்வதேச மற்றும் உள்ளக விசாரணைகள் தொடர்பாகவும், வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினரை அகற்றுவது தொடர்பிலும், படையினர் வசமிருக்கும் காணிகள் மற்றும் காணாமற்போனோர், சிறையிலிருக்கும் போராளிகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.
இந்த கேள்விக்கு பதிலளித்த எம். ஏ. சுமந்திரன்,
போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்படும் தரப்பினர், போர்க்குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்யக் கூடாது. அந்த வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு விசாரணை செய்யும் தகுதி இல்லை.
போரின் இறுதிக் கட்டத்திலே இரு தரப்பினராலும் மீறப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற வேண்டும்.
இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்ட இரு தரப்பினரில் ஒரு தரப்பினரால் விசாரணை நடத்தப்படக் கூடாது என்பதால் இலங்கை அரசாங்கம் போர்க்குற்ற விசாரணையை நடத்தக்கூடாது.
எந்தவொரு விசாரணையும் பக்கச் சார்பற்ற விசாரணையாக நடைபெறவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. எனவே பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமானால் அது சர்வதேச விசாரணையாகவே இருக்க வேண்டும் என்றும் கூறினார். (த-101)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கேஸ்வரி சோமசுந்தரம்




நீலர்வளவு தும்பளை,பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் புலோலி மத்தி, ஆத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கேஸ்வரி சோமசுந்தரம் நேற்று (01.08.2015) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஆனந்தநடராசா மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற ஆறுமுகம் சோமசுந்தரத்தின் (பிரபல சோதிடர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிதம்பர நடராசா மற்றும் ரட்ணேஸ்வரி (கனடா), ஞானேஸ்வரி , விஜயலக்சுமி, சிவகுமாரன், காலஞ்சென்ற மகாலக்சுமி மற்றும் சங்கரநாதன் (கனடா), கலாநிதி, நந்தகுமார் (பருத்தித்துறை ப.நோ. கூ. சங்கம்), கனகசபை (கணக்காளர், உதயன் பத்திரிகை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆறுமுகதாஸ் (ஜேர்மனி), அர விந்ததாஸ் (ஜேர்மனி), மோகனதாஸ் (சவூதி), சிவசக்தி (அம்பன் அ.மி.த.க. பாடசாலை), தங்கேஸ்வரன் (C.D.O, முல்லைத்தீவு), Dr. கனகசுந்தரம் (கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை, கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தாயும் கலைவாணி (ஜேர்மனி), கேதீஸ்வரி (ஜேர்மனி), துளசி (தாதிய உத்தியோகத்தர், மன்னார்), சிறிதரன் (உதவி முகாமையாளர், வா.எ.ச.அ. வங்கி, துன்னாலை), ரமணி (ஆசிரியை, யாழ். புற்றளை மகா வித்தியாலயம்), Dr. ரஜிதா (ஆயுள்வேத வைத்தியசாலை, மிருசுவில்) ஆகியோரின் அன்பு மாமியும் நிசான், சாளினி, மரின் நிரோசன், பிரியங்கா, தர்சிகா, ஆர்த்தியான், சிறிஜெனனி, ஆதித்தியான், வர்ஜிதா, தரணியா, மாதங்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி, புலோலி மத்தி,
021 226 0063, 0777172901

**தகவல்:**
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### J.P.E. செல்வராஜா அடிகளார்



யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை J.P.E.செல்வராஜா அடிகளார் நேற்று (01.08.2015) சனிக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.
அடிகளாரின் இறுதி அடக்கச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.
இந்த அறிவித்தலை அருள் தந்தையர்கள், துறவியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

**தகவல்:**
குருமுதல்வர்
அருள்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி, இளைஞர் அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 2
பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் மற்றும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன எதிரணிகளை இலகுவில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

***கலைமதி எதிர் சிவானந்தா***

குறித்த தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பித்த சில நிமிடங்கள் இரு அணிகளும் சம ஆதிக்கத்தையே செலுத்திக் கொண்டிருந்தன. இருப்பினும் கலைமதியின் ஆதிக்கம் ஆட்டத்தில் படிப்படியாக உயர ஆரம்பித்தது. வியூகங்களை கச்சிதமாக வகுத்து 11 ஆவது மற்றும் 21ஆவது நிமிடத்தில் கலைமதி கோல்களை விளாச சிவானந்தாவின் வெற்றி கேள்விக்குறியாகியது. இதே நிலைமை இடைவேளை வரை தொடரவும் செய்தது.

கிட்டத்தட்ட உறுதியான வெற்றி வாய்ப்புடன் கலைமதியும் பழிதீர்க்க வேண்டுமே என்ற கட்டாயத்தில் சிவானந்தாவும் இரண்டாவது பாதிக்காக களத்தில். ஏற்கனவே பலம்பெற்றிருந்த கலைமதி இரண்டாவது பாதியில் மேலும் 3 கோல்களை அடித்து நொருக்க முடிவில் 5:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதியானது.

***சென்.அன்ரனிஸ் எதிர் இளைஞர்***

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமாகிய அடுத்த நிமிடமே அன்ரனிஸின் பாதுகாப்பு அரண்கள் உடைக்கப்பட்டு இளைஞர் படையால் கோல் பதியப்பட ஆரம்பமாகியது திக்கம் இளைஞர் அணியின் ஆதிக்கம். முதல் பத்து நிமிடம் முடியமுன்னர் திக்கம் அணியின் திலீபனால் மற்றொரு கோல் பதியப்பட ஆட்டத்தின் முடிவு இளைஞரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.



சென்.அன்ரனிஸ் எதிர் இளைஞர் ஆட்டத்தின் ஒரு பதிவு

தானாக போய் வலையில் மாட்டிக் கொள்வதைப்போல் இளைஞர் அணியின் முறையற்ற ஆட்டத்தால் கிடைக்கப்பட்ட தண்டனை உதையை அன்ரனிஸ் அணி சிறப்பாகப் பயன்படுத்தி கோலாக்கினாலும் தம்மைச் சுதாகரித்துக்கொண்ட இளைஞர் அணி தொடர்ச்சியாக 3 கோல்களை விளாச 5:1 என்ற அசைக்க முடியாத ஆதிக்கத்தில் முதல்பாதி முடிவடைந்தது.

கிட்டத்தட்ட உறுதியான வெற்றி வாய்ப்புடன் திக்கம் இளைஞர் அணி. ஆட்டத்தின் முடிவு கைவிட்டுச் சென்றாலும் ஏதோ ஒரு நம்பிக்கையில் களத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ். இரண்டாவது பாதியிலும் பாஷையூர் சென்.அன்ரனிஸைப் பந்தாடத் தவறாமல் 6:3 என்ற கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது திக்கம் இளைஞர் படை. (ம-108-422)

## தாச்சித்தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணியை எதிர்த்து நாவற்குழி ஐயனார் அணி மோதிக் கொண்டது. இதில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணி 12:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் ஆனந்தா அணியை எதிர்த்து புதுமடம் வைகறை அணி மோதிக்கொண்டது. இதில் புதுமடம் வைகறை அணி 9:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## சென்.ஜோசப் இலகு வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு கலைவாணி சனசமூக நிலையத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கலைவாணி விளையாட்டுக்கழகத்தால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 9 வீராங்கனைகள் பங்குபற்றும் விலகல் முறையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மாதகல் சென்.ஜோசப் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக்கொண்டது. இதில் மாதகல் சென்.ஜோசப் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## பதக்கங்களைக் குவித்த கமலினிக்கு பாடசாலைச் சமூகம் உயர்கௌரவம்



வலி வடக்கு, ஓக. 2
வடமாகாண பாடசாலைக்களுக்கிடையில் நடைபெற்ற மாகாண மட்டத் தடகளத்தொடரில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கி மூன்று தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றிய மாணவி செல்வி. ம.கமலினியை கல்லூரிச் சமூகம், குறித்த கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பு, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து விழாவெடுத்துக் கௌரவித்துள்ளன.

கமலினி மாகாணமட்ட தடகளத் தொடரில் 100 மீற்றர், 200 மீற்றர், நீளம்பாய்தல் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி தங்கபதக்கங்களைக் கைப்பற்றியதுடன் நீளம்பாய்தலில் புதிய சாதனையை நிலைநாட்டியிருந்தார். மட்டுமல்லாது வடமாகாணத்தின் சிறந்த வீராங்கனையாகவும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இதனாலேயே அவருக்கு இவ்வாறான ஒரு உயரிய கௌரவம் கொடுக்கப்பட்டுள்ளது. குறித்த கௌரவிப்பு விழாவில் செல்வி கமலினி இதுவரை காலமும் பெற்ற பதக்கங்கள் கேடயங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-86)

## போராடி வெற்றி பெற்றது யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 2
கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத்தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிடைத்த அரிய சந்தர்ப்பங்கள் பலவற்றை இரு அணிகளின் முன்கள வீர்ர்களும் கோட்டை விட சமனிலை தகர்ப்பு உதையில் 3:2 என்ற கோல் கணக்கில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்.

நவஜீவன்ஸ் மற்றும் யங்கம்பன்ஸ் அணிகள் மோதிய குறித்த ஆட்டம் லீக் ஆட்டமாக இருந்த போதிலும் இறுதியாட்டத்துக்கு உரித்தான விறுவிறுப்புத்தன்மை பிரதிபலித்தது. ஒரு அணி பந்தைக்கொண்டு எதிரணியின் கோல்பரப்புவரை செல்வதும் மற்றைய அணி அதை முறியடிப்பதுமாக ஆட்டத்தில் மாறி மாறி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதே நிலைமை நீடிக்க ஆட்டம் சமநிலையானது. வெற்றி தோல்விகளை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலைத் தகர்ப்பு உதைகளை கச்சிதமாகப் பயன்படுத்திய யங்கம்பன்ஸ் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது. (ம-108)

## இறுதிவரை 'திக் திக்' ஆட்டம் அடுத்த சுற்றுக்குள் மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 2
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் பிரிவு இரண்டுக்கான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை சமநிலைத் தகர்ப்பு உதை மூலம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது நாவாந்துறை சென்.மேரிஸ் அணி.

நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற குறித்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. வீரர்களின் கால்களுக்குள் மிதிபட்டு பந்து அங்குமிங்கு [illegible] எந்தவொரு அணியாலும் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை. இந்நிலையில் முடிவடைந்தது ஆட்டத்தின் முதல்பாதி. ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் கோல்கள் பதியப்படுவதாக இல்லை. 70ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணியினர் தமது அணிக்கான முதலாவது கோலினை பதிவுசெய்ய பாடும்மீன் ரசிகர்களை பேரதிர்ச்சி தூக்கி வாரிப்போட்டது. பழிதீர்க்க வேண்டும் என்று படாதபாடுபட்ட பாடும்மீன் அணி ஆட்டம் முடிய ஒரு நிமிடம் இருக்கையில் கோலைப்பதிவு செய்ய ஆட்டம் 1:1 என்று சமநிலையானது. மேலதிக நேரத்திலும் 1:1 என்ற நிலைமையே பேணப்பட ஆட்டத்தின் முடிவு சமநிலைத் தகர்ப்புக்களில் தஞ்சமாகியது. வாய்ப்பினை கச்சிதமாகப் பயன்படுத்திய நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

***விக்னேஸ்வரா வி.கழகத் தொடர்***

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஸ்ரீஅம்பாள் அணி மோதவுள்ளது. மாலை 4.[illegible] மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எல்லாளன் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

***கழுகுகள் வி.கழகத்தொடர்***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து அன்பாலய அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரீஅம்பாள் அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் அணி மோவுள்ளது. (ம-108-23)

***உதயசூரியன் வி.கழகத்தொடர்***

உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் துடுப்பாட்டத்தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

காலை 8.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சம்பியன் அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானம்ஸ் அணியை எதிர்த்து வெண்மதி அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செந்தமிழ் அணியை எதிர்த்து ஐங்கரா அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாரதி அணியை எதிர்த்து கணேசானந்தா அணி மோதவுள்ளது.

***கலைவாணி வி.கழகத்தொடர்***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு கலைவாணி சனசமூக நிலையத்தின், 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் பெண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ் ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

***பாரதி வி.கழகத்தொடர்***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அத்தனையும் தோல்வி

# வரலாற்றை மாற்றியமைத்தது பாகிஸ்தான்

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி–20 ஆட்டத்தையும் ஒரு இலக்கினால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 வகையான தொடர்களையும் முதல்முறையாகக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் குஷல் பெரேராவுடன் டில்ஷான். ஆரம்பத்தில் சில பவுண்டரிகள் பாய்ந்தடித்துச் செல்லத்தான் செய்தன. ஆனால் அதிரடியை இருவராலும் தொடர முடியவில்லை. 10 ஓட்டங்களுடன் வெளியேறினார் டில்ஷான். 19 ஓட்டங்களுடன் போல்ட்டானார் பெரேரா. இலங்கையின் ஆரம்பத்துடன் இணைந்து அணியும் ஆட்டம் கண்டது. அறிமுக வீரர் ஜெயசூரிய ஓர் முனையில் நிலைத்து நின்று வேடிக்கை காட்டினாலும் மறு முனையில் டெஸ்ட் பாணியில் பயணித்தார் சில்வா. இதனால் ஜெயசூரிய அதிரடி காட்டியும் பாகிஸ்தான் பந்து வீச்சில் எவ்வித தடுமாற்றமும் ஏற்படவில்லை. பதின்மத்துடன் சில்வா வெளியேற ஒரே ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார் பெரேரா. களத்தில் கப்புக்கெதர. எதிர்கொண்ட முதல் பந்தில் இருந்து அடித்து நொறுக்கினார். இலங்கையின் இன்னிங்ஸ் 150 ஓட்டங்களில் அடங்கிப்போகும் என்ற எதிர்பார்ப்புக்களைப் பொய்யாக்கினார். சிறிவர்தனா சுமாரான பங்களிப்பை வழங்க இலங்கை 150 ஓட்டங்களை எட்டிச் சென்று கொண்டிருந்தது. கப்புக்கெதரவின் அதிரடி தொடரப்பட 20 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் இலங்கை 172–7. 25 பந்துகளில் 4 சிக்சர்கள் உட்பட 48 ஓட்டங்களை விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார் கப்புக்கெதர.

120 பந்துகளில் 172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. கொஞ்சம் கடினம் என்றாலும் பாகிஸ்தான் தற்போதிருக்கும் நிலைமைக்கு சாத்தியமாகலாம். ஆரம்பவீரர்களாக அஹமட் மற்றும் செஷாட். இருவரும் நிலைக்கத்தவறி ஒற்றையிலக்கத்துடன் வெளியேற பாகிஸ்தான் 16–2. ஹபீஸ் ஒரு ஓட்டத்துக்கு ஆசைப்பட்டு ஆடுகளத்தின் பாதியில் வைத்து பவிலியனுக்கு அனுப்பப்பட பாகிஸ்தானின் மத்திய வரிசை வீரர்களுக்கு பதட்டமே மிச்சமானது. உமர் அக்மலும் ஹபீஸைப்போல் ரண்அவுட் ஆக ஆட்டத்தின் முடிவு இலங்கையின் பக்கம் திரும்ப ஆரம்பித்தது. வந்தார் அப்ரிடி செய் அல்லது செத்துமடி என்ற பாணியில் விளாசினார். பந்துகளும் துடுப்புமட்டைக்கு ஏற்ப அமைய அடுத்தடுத்து வாணவேடிக்கைகள் தொடர்ந்தன. இலங்கையின் பக்கமிருந்த வாய்ப்பு மிகக் குறுகிய நேரத்தில் பாகிஸ்தானின் பக்கம் சாய்ந்தது. சிக்சர்களாகவும் பவுண்டரிகளாகவும் தாண்டவமாடிக்கொண்டிருந்த அப்ரிடியை 45 ஓட்டங்களுடன் போல்ட்டாக்கினார் ஜெயசூரிய. அப்ரிடியின் இழப்புடன் இலங்கை வீரர்கள் ஓவராக துள்ளிக் குதித்தனர். அதிரடியில் அப்ரிடியை ஒரு மூலையில் கொண்டுபோய் வைத்தார் அன்வர் அலி. 17 பந்துகளில் 46 ஓட்டங்களைக் குவித்து பாகிஸ்தானை வெற்றிக்கு அருகில் அழைத்துச் சென்றார். இருந்த போதிலும் அன்வரால் ஆட்டத்தை முடித்துவைக்க முடியவில்லை. திக்திக் நிமிடத்துடன் இறுதிப்பந்துப்பரிமாற்றம். 6 பந்துகளில் 6 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி சிக்சருடன் இலங்கை வீரர்களின் முகத்தில் கரியைப் பூசினார் இமாட் வசிம். (ம)



நேற்றைய ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மைதானத்துக்கு நேரடியாக வருகைதந்து வீரர்களை வாழ்த்தினார் இலங்கை ஜனாதிபதி மைத்திரி. தேடிவந்த ஜனாதிபதிக்கு இலங்கை வீரர்கள் தோல்வியைப் பரிசளித்தது தான் பரிதாபம்.




தென்னாபிரிக்கா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றையதினமும் அதிகரித்த மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் 246–8 என்ற நிலையிலிருந்து பங்களாதேஷ் தொடர்ந்து துடுப்பெடுத்தாடவுள்ளது.(ம)

## சென்னைக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டை

ஐ.பி.எல். தொடரில் சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அந்த அணிகளுக்கு இரண்டு வருட காலம் தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து சென்னை அணியைத் தொடர்ந்து செயற்பட வைக்கும் விதமாக சென்னையின் ஆதரவாளர்கள் அணிதிரண்டு கையெழுத்திட்டு வருகின்றனர்.

சென்னையினதும் டோனியினதும் தீவிர ரசிகரான சரவணன் என்பவரே குறித்த கையெழுத்து வேட்டைக்கு ரசிகர்களை தயார்ப்படுத்தியவராவார். சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தில் அவர்விட்ட அறைகூவலே மிகவிரைவாகப் பரவி இவ்வாறு கையெழுத்து வேட் டைக்கு ரசிகர்களைத் தயார்ப்படுத் தியது.



சென்னைக்கு ஆதரவாக அணிதிரள முடிவெடுத்த முதல் நாளிலேயே 7ஆயிரம் ரசிகர்கள் கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஒலிம்பிக் தொடருக்காக பாதுகாப்பை பலப்படுத்தும் பிரேஸில்

பிரேஸில் நாட்டில் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை ஒலிம்பிக் தொடர் நடைபெற இருக்கிறது. தொடர் சிறப்பாகவும், அமைதியாகவும் நடைபெறுவதற்காக பிரேஸில் அரசு உச்சக்கட்ட பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

57 ஆயிரம் ராணுவ வீரர்கள், 28 ஆயிரம் பொலிஸார் மற்றும் மற்ற பாதுகாப்பு படை வீரர்கள் என 85 ஆயிரம் வீரர்களை பிரேஸில் குவிக்க உள்ளது. ஒலிம்பிக் தொடரை நடத்தும் முதல் தென் அமெரிக்க நாடு பிரேஸில் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## புதிய மைல்கல்லை எட்டிய ரெய்னா



இந்திய அணியின் நட்சத்திர வீரர் ரெய்னா சர்வதேச கிரிக்கெட்டில் தனது 10 வருடப் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

2005ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் திகதி இலங்கைக்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்தில் ரெய்னா அறிமுகமானார். அதன்பிறகு வேகமாக வளர்ச்சி கண்ட ரெய்னா, ஒருநாள் கிரிக்கெட் அணியில் முன்னணி வீரராக உருவெடுத்ததோடு ஐ.பி.எல். தொடர்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நம்பிக்கை நாயகனாகியிருக்கிறார்.

சர்வதேச கிரிக்கெட்டில் 10 ஆண்டுகளை நிறைவு செய்தது தொடர்பாக ரெய்னா தெரிவித்ததாவது; சர்வதேச கிரிக்கெட்டில் 10 ஆண்டுகளை கடந்திருக்கிறேன். இந்த 10 ஆண்டு பயணம் மிகமிக மகிழ்ச்சியானதாக அமைந்திருக்கிறது. பல வெற்றிகளைக் குவித்துவிட்டாயிற்று. இவற்றில் உலகக்கிண்ணமும் அடங்கும். எனது பயணத்தை வெற்றி பயணமாக்க என்னுடன் சேர்ந்து பயணித்த அணித்தலைவர் டோனி, சக வீரர்கள் அனைவருக்கும் நன்றிகள் என்றார். (ம)

## சொந்தத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றியது யாழ். மத்தியின் பழைய மாணவர் அணி



யாழ்ப்பாணம், ஒக. 2

யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினத்தை முன்னிட்டு பழைய மாணவ அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட தொடரில்சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் அணியை 23 ஓட்டங்களால் வீழ்த்தி சம்பியன் ஆனது யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி.

நேற்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்ற குறித்த இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெனோசன் 36 ஓட்டங்களையும், செல்ரன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் அணி சார்பில் டக்சன் 2 இலக்குகளையும், சண் சேயன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

64 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களை மட்டுமே பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ரஜித்தன் பிரிந்தாபன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணி சார்பில் வதுசனன், ஜெனோசன் இருவரும் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் மருத்துவராகலாம்

Doctor of Medicine (MD)
(வைத்திய முதுமாணி)
Vitebsk State Medical University (VSMU)
Belarus (Eastern Europe)

O/L & A/L மாணவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம் !!!



Hotline-077 628 4845

நீங்கள் மருத்துவத்துறையில் சாதிக்க விரும்புபவரா !!!
உங்கள் இலட்சியம் ஓர் மருத்துவராவதா !!!

வாருங்கள்!! நேரடியாக சந்தியுங்கள்!! Vitebsk State Medical University யின் மருத்துவப்பீட பீடாதிபதியை இம்மாதம் 26ஆம் திகதி

மாணவர்கள் கல்விகற்பதற்கு உரிய சகல வசதிகளை வழங்குவதுடன் மாணவர்களுடைய அடிப்படை வசதிகளையும் அவற்றிற்குரிய தரத்தினையும் பேணிப்பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ள இந்த Vitebsk State Medical Universityயின் வெளிநாட்டு மாணவர்கள் மருத்துவப்பீட பீடாதிபதி Prof. VadimPristupa அவர்கள் இம்மாதம் 26ஆம் திகதி எங்கள் நிறுவனத்துக்கு வருகை தரவுள்ளதுடன் உங்களுடன் அவர் நேரடியாக கலந்துரையாடவும் உள்ளார்.

பெற்றோர்களே!!! மாணவர்களே!!! இந்த அருமையான சந்தர்ப்பத்தை தவறவிடாமல் உடனடியாக மேலே குறிப்பிட்டுள்ள எங்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உங்களது பதிவை மேற்கொள்ளுங்கள். நீங்கள் அவரை நேரில் சந்திக்கின்ற ஒழுங்குகளை எங்கள் நிறுவனம் மேற்கொள்ளுகின்ற அதேநேரத்தில் மாணவர்களுக்கு இந்த கற்கைநெறிக்குரிய பல்கலைக்கழக அனுமதியினையும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆசனங்களின் எண்ணிக்கை வரையறுக்கப் பட்டுள்ளதால் முதல் வருகின்ற குறிப்பிட்ட ஆசனப்பதிவுகளுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும்.

- இந்தக் கற்கை நெறியைப் பற்றிய மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள். மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இக் கற்கநெறி பற்றிய தெளிவூட்டலை உங்கள் வசதிக்கேற்ப எங்களுடைய அலுவலகத்திற்கு அழைத்து வழங்குவோம். நிறைவான கல்வி நியாயமான விலையில் உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்காக.

Official Partners for Nothern Province
ExamPoint (Pvt) Ltd.
No 120/6, Palaly Road, Kantharmadam,
Jaffna, Sri Lanka

BГМУ PATHE

e-mail : info@exampoint.lk Web : www.exampoint.lk Tel: 021 2216400


## டபிள்யூ.டி.ஏ. ரென்னிஸ் தொடரின் சம்பியனானார் சமந்தா

டபிள்யூ.டி.ஏ. ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பேட் கேஸ்டின் நகரில் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் சமந்தாவை எதிர்த்து இத்தாலியின் கரின் நாப் மோதினார். விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 3–6 என்ற கணக்கில் இழந்த சமந்தா, பின்னர் நடைபெற்ற 2ஆவது செற்றை 7–6 என்றும் 3ஆவது செற்றை 6–2 என்றும் கைப்பற்றி சம்பியன் ஆனார். (ம)




**Personal Class-கணினி**

- 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
- Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
- பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
- குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC

**வாடகைக்கு**

நல்லூரில் பாதுகாப்பான சூழலில் அரச பணி புரியும் பெண்கள் இருவருக்கு மாத்திரம், இணைந்த குளியலறை, சமையலறை இலவச wifi வசதியுடன் அறை வாடகைக்குண்டு.

தொடர்பு: 0714620806

(63729) (19.6)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

45 நாள் நிரம்பிய கிறேடன் குட்டியும், தாய் நாயும் (பூச்சி நீக்கப்பட்டது) விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 9592 945

(63782) (19.6)

**CHEMISTRY CENTRE - இணுவில்**
**2016 (A/L) Batch**

அசேதன இரசாயனம் சேதன இரசாயனம்
ஆரம்பம்: 03.08.2015 திங்கட்கிழமை
நேரம்: மாலை 6.00 P.M

By **Mr.T. Sivakumar** B.Sc, PGDE
தொடர்புகளுக்கு: 0779 297344.
[Sunthara Vasam, Inuvil west, Inuvil ]

**வேலையாள்கள் தேவை**

ஸ்ரான்லி வீதியிலமைந்துள்ள வியாபார நிலையத்துக்கு 40 வயதுக்குட்பட்ட Sales men தேவை.

தொடர்பு: 021 222 4544,
021 221 9305

(63721) (19.6)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற
பரம்பரை ஜோதிடர்
**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.124/11, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
(சிவன் கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
T.P: 072 681 6681, 072 681 6691

(57712) (14.3.6)

**நியூ லலிதாஸ் ஜுவலறியின் மாதாந்த சீட்டிழுப்பு**

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் விவரம்

01. பா.விமலாதேவி
கோபிற்கடவை துன்னாலை மத்தி, கரவெட்டி.

02. து.கவிதாஸ்
தாவடி வடக்கு, கொக்குவில்.

03. றோய் மதிவதனன்
41/7, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள் விற்பனைச் சிட்டையுடன் வருகைதந்து பரிசினைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நியூ லலிதாஸ் ஜுவலறி
இல.30,32 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5511

**வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன 7 ஆவது அணி டைமராட்சி பயிலுநர்களின் ஆக்கக் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்**

இடம் : உதயன் நெல்லியடி கிளை பணிமனை, கேட்போர் கூடம் 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
காலம் : 03.08.2015 திங்கட்கிழமை
நேரம் : காலை 10.00 மணி

பிரதம விருந்தினர்
**கௌரவ ஈ. சரவணபவன்**
உதயன் குழும இயக்குநரும்
வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன போஷகரும்

நிகழ்ச்சி நிரல்
- மங்கல விளக்கேற்றல்
- மௌன இறைவணக்கம்
- கண்காட்சி திறந்து வைத்தல்
- வரவேற்புரை
- தலைமை உரை
- நிறைவேற்று அறிக்கை
- பிரதம விருந்தினர் உரை
- சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
- பரிசு வழங்கும் நிகழ்வு
- நன்றியுரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
விழா ஏற்பாட்டுக் குழுவினர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்


ஞாயிறு சிறப்பிதழ் 02.08.2015


# கொது கொதுக்கிறது தெற்கு தேர்தல் களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதி கொதிக்கிறது தெற்கு தேர்தல்களம்



கொழும்பிலிருந்து எஸ்.ராஜ்குமார்

தெற்கில் தேர்தல் சாம்பார் கொத கொத என்று கொதிக்க ஆரம்பித்துவிட்டது. அங்கேயும் – இங்கேயும் சிறு சிறு வன்முறைகளாக இருந்தவை, கடந்த மாதத்தின் கடைசி நாளில் மிகப் பெரிதாகி ஒரு பெண்ணைக் காவுகொண்டுவிட்டது. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவுக் கூட்டத்தில் கலந்துகொண்டால் தனது குடும்பத்துக்கு வீடு கிடைக்கும் என்ற நப்பாசையில் சென்ற முஸ்லிம் பெண் ஒருவர் கொட்டாஞ்சேனைப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்திருக்கிறார்கள்.

கடந்த ஆட்சியில் நடத்தப்பட்ட தேர்தல்களில் இவை எல்லாம் சர்வசாதாரணம். சண்டை என்றால் சட்டை கிழியத்தான் செய்யும் என்பதைப்போல் தேர்தல் என்றால் உயிர் பிரியத்தான் செய்யும் என்பது வழமையான நிகழ்வாக இருந்தது. ஆனால் இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையிலே மிகவும் நன்றாய்த் தான் போய்க்கொண்டிருந்தது. இது இலங்கைத் தேர்தலா.... அல்லது லண்டனில் நடைபெறும் தேர்தலா என்று ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு நிலைமை சுமுகமாக இருந்தது. இதனை தனது உரையொன்றில் பிரதமர் ரணில்கூடக் குறிப்பிட்டிருந்தார். தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூட இது விடயத்தில் கிடிக்கிப்பிடிபோட்டிருந்தார். அவ்வளவையும் மீறி ஓர் உயிர் காவு கொள்ளப் பட்டுவிட்டது. இந்த நிலையில் இனிவரும் நாள்களில் நிலைமை இன்னும் சூடாகலாம் என்று நம்பப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் வாய்க்கு வந்தபடி வாக்குறுதிகளை அள்ளிவீசி வாக்காளர்களை வளைத்துப்போட வலு தீவிரமாக முயற்சி செய்து வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் குழப்பமில்லாத கூட்டணியுடன் களமிறங்கி – சுமுகமான பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறது. இந்தத் தேர்தலில் தாம் பெரும்பான்மை பெறுகிறோமோ இல்லையோ மற்றக்கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசு ஒன்றை அமைப்போம் எனப் பரப்புரை செய்கிறது.

ஜே.வி.பி. அந்தப் பக்கமும் இல்லாமல் இந்தப் பக்கமும் இல்லாமல் இரண்டு பகுதிகளையும் வாரு வாரென்று வாரி, தாங்கள் மட்டுமே சுத்தமான கைகளுக்கு சொந்தமானவர்கள் என்று பரப்புரை செய்கிறது. ஆனால் ஆட்சி அமைக்கும் 'ஐடியா'வெல்லாம் ரொம்ப 'ஓவர்' என்று நினைத்தார்களோ என்னவோ அது பற்றி மூச்.....

சரத் பொன்சேகாவின் கட்சி இன்னும் முழுமூச்சில் பரப்புரைப் பணிகளில் ஈடுபடவில்லையோ என்னவோ தற்போதைய நிலையில் கப் சிப். ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின், 'அல்ராசிட்டி' தான் தாங்கமுடியவில்லை. 'ஓவர் பில்ட் அப்'புக்கள், நிறைவேற்றப்பட முடியாத வாக்குறுதிகள், கிடைக்க முடியாத எதிர்பார்ப்புக்கள் என்று அதன் பரப்புரைப் பணிகள் படு தீவிரம்.

மஹிந்தவைப் பொறுத்தமட்டில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எவ்வளவு திமிருடனும், எவ்வளவு மமதையுடனும் பேசிச் செயற்பட்டரோ அதே நிலைமைதான் இந்தத் தேர்தலிலும் தொடர்கிறது. இன்னும் அவர் திருந்தவில்லையோ என்று பலரையும் எண்ண வைத்து இருக்கிறது அவரது பேச்சுக்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு நானே போட்டியாளன், எனது நிழலுடன்தான் நான் போட்டியிடுகிறேன், என்னுடன் போட்டியிட யார் இருக்கிறார்கள் என்று கர்வத்துடன் பேசி கவிழ்ந்து விழுந்த அவரது நிலைமையே இப்போதும் தொடர்கிறது. ஐ.தே.க. உட்பட பல கட்சிகளும் இந்தத் தேர்தலில் தனிப்பெரும்பான்மை பெறுவது சிரமம், கூட்டாட்சி தான், அல்லது தேசிய அரசுதான் என்று சொல்லித்திரியும்போது....

மஹிந்த மட்டும் 116 ஆசனங்களைப் பெறுவோம், மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுதி, வேறெந்தக் கட்சிகளினதும் உதவி தேவையில்லை. நானே பிரதமர். நமதே ஆட்சி என்று அகம்பாவப் பரப்புரையில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால், அவரது இந்த 116 கதையை நம்ப யாரும் தயாராயில்லை.

2010 தேர்தலின்போது மஹிந்த புகழின் உச்சத்தில் இருந்தார். போரில் வெற்றி பெற்று – நாட்டை காப்பாற்றிய வீரபுருஷராக வலம் வந்த நேரம், மஹாவம்சத்தில் மஹிந்தவின் பெயரை இணைக்க வேண்டும் என்று பலரும் கயிற்றை கொடுத்தபோது... அதனை விழுங்கிவிட்டு வீரபுருஷராக மஹிந்த வலம் வந்த நேரம், அந்த நேரத்தில் இடம்பெற்ற தேர்தலிலேகூட கிட்டத்தட்ட 98 ஆசனங்களையே மஹிந்த தலைமை தாங்கிய கட்சியால் பெற முடிந்தது. இந்த நிலையில் உடைந்துபோன சு.க. வைத்துக் கொண்டு... அதன் தலைவரான மைத்திரி வேறொரு பக்கமாகக் கட்சியை இழுத்துப் பிடித்தபடி இருக்க, தனது கட்சியிலே உள்ளவர்கள் மீதும் தன்மீதும் தனது குடும்பத்தவர்கள் மீதும் ஊழல், மோசடி என்று குற்றச்சாட்டுக்களை மூடை மூடையாக ஏற்றி வைக்கப்பட்டிருக்க, பெயர் மொத்தமும் ரிப்பெயராகி இருக்கும் இந்த நிலையில் 116ஐப் பெற முடியுமென்று மஹிந்த எப்படி ஓவராக சிந்திக்கிறாரோ தெரியவில்லை.



இது ஒருபுறமிருக்க மஹிந்த தரப்பு பரப்புரைகளும் இந்த முறை மந்தமானதாகவே காணப்படுகின்றன. எங்களைக் 'கள்ளன்' என்கிறார்கள், எங்களை ஊழல்வாதிகள் என்கிறார்கள் என்று சொல்லிச் சொல்லி அதற்கான காரணங்களையும் சொல்லி... தாம் தவறு ஏதும் செய்யவில்லை, தமது குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என்று தமது கைகளும் சுத்தம்தான் என்று காட்டுவதிலேயே பெரும்பொழுது போகிறதே ஒழிய... புதிதாக ஒன்றும் சொல்வதாகத் தெரியவில்லை.



இது தவிர அரச ஊழியர் சம்பள அதிகரிப்பு, திருமணம் முடிப்பவர்களுக்கு பணக் கொடுப்பனவு, இலவச வீட்டுத் திட் டம், வேலை வாய்ப்பு என்று ஆசை வார்த்தை காட்டி அநியாயத்துக்கு ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட் டிருந்தாலும் இதையெல்லாம் முன்னர் ஆட்சியில் இருந்தபோது ஏன் செய்யவில்லை என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

இது தவிர வடக்கிலே புலி என்ற வழமையான தமது இனவாதப் பேச்சையும் முழு வீச்சில் மேற்கொள்ள முடியாத நிலையில் தவிக்கிறார். ஏனென்றால், தம்மை நம்பி நிற்கும் சில தமிழ், முஸ்லிம் வாக்காளர்களையும் காப்பாற்ற வேண்டிய நிலை.

இதிலும் வடக்கிலே புலி வந்துவிட்டது, புலிக் கொடி பறக்கிறது என்ற பழைய பஞ்சாங்கம் பாடுவதையும் மஹிந்த தரப்பு இப்போது குறைத்திருக்கிறது. அப்படிப்பட்டதொரு நிலைமை தற்போது அங்கு இல்லை என்பதை அவர்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். இதற்கு உதாரணம் அண்மையில் தமது தேசிய பட்டியலிலிருந்து கருணாவை நீக்கிவிட்டதாகும். வடக்கிலே புலி மீண்டும் வந்துவிட்டதாக மஹிந்த தரப்பு கருதினால்... அந்தப் புலிகளை மீண்டும் வேரோடு அழிக்க கருணா போன்றவர்களின் உதவி தேவைப்படும் என்பது உறுதி. ஏனென்றால் கடந்தமுறை புலிகளை அழிப்பதற்கு தானே ராஜபக்ஷக்களுக்கு பெரும் உதவி புரிந்தார் என கருணா அண்மையில் சில ஊடகங்களுக்குத் தம்பட்டமடித்திருந்தார். இந்த நிலையில் கருணா கட்சியிலிருந்து நீக்கப்பட்டதானது, இனி அவரது தேவை தமக்கு தேவையில்லை என்ற மஹிந்தவின் நிலையினையே குறிக்கும். எனவே வடக்கிலே புலி இல்லை என்பதை இந்தச் செயற்பாட்டின் மூலம் மஹிந்த தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலையிலே இந்தப் பரப்புரை உத்தியும் அவர்களுக்குக் கை கொடுக்காத நிலையில் மிகவும் நொந்து நூலாகி, அந்து அவலாகி, வெந்து வேம்பாகிப் போயிருக்கிறது மஹிந்த தரப்பு தேர்தல் பரப்புரை.

வடக்கு–கிழக்கிலே தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைகளும் –கிழக்கிலும் – வன்னியிலும் முஸ்லிம் கட்சிகளின் பரப்புரைகள் முழுவீச்சிலே இருக்க...

ஏனைய கட்சிகள் எல்லாம் தமிழ்க் கூட்டமைப்பையும், முஸ்லிம் முன்னணிக் கட்சிகளையும் திட்டித் தீர்ப்பதிலேயே முழு மூச்சில் ஈடுபட்டிருக்கின்றன.

மலையகத்தில் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிடும் முற்போக்கு கூட்டணியின் பரப்புரைகள் சூடு பிடித்திருக்க... தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிலை பரிதாபமாக உள்ளது. ஏன்டா இவர்களுடன் சேர்ந்தோம் என்ற பாணியில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்தும்– சேராமலும் தாங்கள் மைத்திரி ஆள்கள் என்று காட்ட படாதபாடு பட்டுக்கொண்டு இருக்கிறது இ.தொ.கா. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை ஆதாரமாக வைத்து பரப்புரைகளில் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறு எல்லாக் கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக குதிரை ஓட்டத்தில் கலந்து கொண்டிருக்க அடுத்த 17இல் எந்தக் குதிரை முன்னுக்கு வருகிறதோ... அது வாக்காளர்களாகிய உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கலகலப்பு!



தி.அமுதன்

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், அனல் பறக்க வேண்டிய களங்கள் காற்று வாங்கிக்கொண்டிருக்கின்றன. வீட்டில் அல்லது அரச அலுவலகங்களிலிருந்தபடி முகப்புத்தகதில் வீராவேசம் காட்டுபவர்களைத் தவிர, தேர்தல் களம் அமைதியாகவே இருக்கிறது யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதியில். பொதுக் கூட்டங்களை நடத்துவதில் கட்சிகள் இதுவரை பெரிதாக நாட்டம் காட்டவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் ஆங்காங்கே சில கூட்டங்களை நடத் தியது. கடந்த வெள்ளியன்று ஐக்கிய தேசியக் கட்சி சில கூட்டங்களை நடத்தியது. இன்றைக்குத்தான் முதலா வது பொதுக் கூட்டத்தை நடத்தப்போவ தாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்திருக்கிறது. நடந்து முடிந்த கூட்டங்களுக்குள் ஒரு நடை நடந்துவிட்டு வரலாம் வாருங்கள்.....!

✖ கே.கே.எஸ்.பிரதான வீதியில் மருதனார்மடம் சந்தி முழுவதும், பச்சை – மஞ்சள் – சிவப்பு நிற கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிறமான, இந்த மூவர்ணக் கொடிகள் வீதி முழுவதிலும் பறந்து கொண்டிருந்தது. அதே போன்று ஒலி பெருக்கிகளும், பேச்சு மேடையிலிருந்து நான்கு புறமும் 500 மீற்றர் தூரத்தில் கட்டப்பட்டிருந்தது.

✖ பரப்புரைக் கூட்டம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் என்று ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொஞ்சம் வெள்ளைத்தலைகளை மாத்திரமே 3 மணிக்கு மேடையைச் சுற்றிக் காண முடிந்தது. ஒரு சில வேட்பாளர்களும் (அவர்களுள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடக்கம்) நேரத்துடன் வந்திருந்தனர்.

✖ பி.ப. 3.30 மணிக்கு இசை நிகழ்வு ஆரம்பமானது. பாடகர்கள் எம்.ஜி.ஆரின் புரட்சிப் பாடல்கள் – எழுச்சிப் பாடல்கள் பாடி அசத்தினர். பரப்புரைக் கூட்டத்துக்கு வந்திருந்த பல பெரியவர்கள் தலையை ஆட்டி ஆட்டி புன்சிரிப்புடன் அதனை ரசித்தனர்.

✖ 4 மணியளவில், பரப்புரைக்காக அமைக்கப் பட்டிருந்த கொட்டகை நிரம்பியது. ஆனால் தேர்தல் பரப்புரை ஆரம்பமாகவில்லை.

✖ பி.ப. 4.45 மணிக்கே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வந்து சேர்ந்தார். அவருக்கு உற்சாகமான வரவேற்பு வழங்கப்பட்டது. அவர் வந்திறங்கிய நேரம், தேர்தல் பரப்புரைக் கூட்ட மேடைக்கு அருகில் இருந்த ஆஞ்சநேயர் ஆலயத்தின் மணியும் ஒலித்தது. (மணி அடிச்சா நல்ல சகுணம்தானே!)

✖ பரப்புரை மேடையில் ஏறுவதற்கு முன்பாக, மேடையின் கீழ் பத்திரிகையாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வுக்காக அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது. இதில் யாழ்ப்பாண தமிழ் ஊடகவியலாளர்கள், சிங்கள – ஆங்கில ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங்கெடுத்தனர்.

✖ தலைவர்களைச் சுற்றி பத்திரிகையாளர்கள் குழுமி நின்றதனால், பின்னுக்கு இருந்த மக்கள் பத்திரிகையாளர்களுடன் முரண்படத் தொடங்கினர். தங்களுக்கு எதுவும் தெரியவில்லை, விலகுங்கள் என்று கூச்சலிட்டனர். இது பொதுக்கூட்டமல்ல பத்திரிகையாளர் சந்திப்புத்தான் என்று கூட்ட ஏற்பாட்டாளர்கள் மக்களைச் சமாளிக்கப் பார்த்தனர். [illegible] கேட்பதாக [illegible] என்ன இரகசியக் கிசுகிசுப்பு என்று முரண்டு கொண்டு நின்றனர். ஒருவழியாக தேர்தல் பரப்புரை மேடையில் ஆரம்பமானது. அதன் பின்பே கூட்டம் கொஞ்சம் அமைதியானது.

ஐக்கிய தேசியக் கட்சி பரப்புரைக்காக தென்னிந்தியாவிலிருந்து பாடகர்களை அழைத்து வந்திருந்தது. அவர்களை விஜயகலா அக்காதான் அழைத்து வந்தார் போலும் அறிவிப்பாளர் அடிக்கொரு தடவை எனக்கு மூன்று பிடிக்கும் மூன்று பிடிக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

✖ பத்திரிகையாளர் சந்திப்பு அரை மணி நேரத்தில் முடிந்தது. பின்னர் மங்கள விளக்கேற்றலுடன் மேடைப் பேச்சுக்கள் தொடங்கின. அப்போதுதான் பரப்புரைக்காக போடப்பட்ட கொட்டகை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதி மக்கள் கூட்டத்தால் நிறைந்தன.

✖ கூட்ட ஆரம்பத்திலேயே, தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நாமம் உச்சரிக்கப்பட, சனம் ஆர்ப்பரிக்க ஆரம்பித்தது. அரங்கத்தில் இருந்தவர்கள் தங்களை மறந்து கைகளைத் தட்டினர். விண்ணதிரக் கோஷம் எழும்பியது. அங்கிருந்த, வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஆச்சரியத்துடன் அதனைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

* வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் பேசினர். ஒற்றுமை – வாக்களிக்க வேண்டியதன் அவசியம், அதில் ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் தங்கள் உரைகளை முன்வைத்தனர். கைகளை முறுக்கேற்றி குரலிலே சூடேற்றி அவர்கள் பேசியதைப் பார்க்க, போர்க்களத்தில் இவர்களை தளபதிகளாக்கி முன் வரிசையில் நிற்பாட்டியிருந்தால் ஒருவேளை போரை வென்றிருக்கலாமோ என்று பட்டது.

* கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றியபோது, மக்கள் அனைவரும் உரையை கவனமாகச் செவிமடுத்துக் கொண்டிருந்தனர். அவரது உரை, அதைச் சொன்ன விதம் என்பன அவர் ஒரு பழுத்த [illegible]தி என்பதைக் காட்டி யது. [illegible] காலமும் அவர் ஆற்றி வந்த உரைகளிலிருந்து அது மாறு பட்டிருந்தது. "உதிரிக் கட்சி களை உதறித் தள்ளுவோம் என்று மிக அழுத்தம் திருத்தமாக உச்சரித்தார். அதை உச்சரிக்கும் போதே, தனது காலால் மேடையில் உதைந்து தனது முடிவின் திடத்தை கூடியிருந்தவர்களுக்கு உணர்ந்தினார்.

✖ கூட்டத்துக்கு கடைசியாக வந்தவர் வேட்பாளர் சிறீகாந்தா. அவர் கடைசியாக வந்தால் என்னவோ, ஏற்பாட்டாளர்கள் அவரைக் கடைசியாகவே பேச அழைத்தனர். அவர் பேசிய பேச்சு, சமூக வலைத்தளத்தில் தற்போதும் வைரலாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. "மின்சாரக் கண்ணா எல்லாருக்கும் உன்னை ஏன் பிடிச்சு இருக்கு, தெரியுமா? வயசான லும் உன் ஸ்டைலும் அழகும் உன்னைவிட்டு போகல.." என்ற படையப் பாபட வரிகளுடன் ஒரு சுற்று ஓடிக் கொண்டிருக்கிறார். எந்த ஒரு வரியிலும் தமிழுணர்வு நழுவி விடாமல் முறுக் கேற்றிக்கொண்டே இருந்தார். இத்தனை நாளாய் எங்கே ஐயா இருந்தீர்கள்? என்று பந்தலுக்கு வெளியே நின்றிருந்த இளைஞர் கூட்டம் கலகலத்துக் கொண்டிருந்தது.

✖ வேட்பாளர்களில் ஒரு சிலர் தவிர, ஏனையோர் பரப்புரைக் கூட்டங்களில் தங்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். இதில் வேடிக்கை, வேட்பாளர் சிறீதரனின் துண்டுப் பிரசுரத்தை அவரது ஆதரவாளர் ஒருவர் ஏனைய வேட்பாளர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், மாவை. சேனாதிராஜா, சுரேஷ் பிரேமசந்திரன் ஆகியோருக்கும் விநியோகித்தார். அப்படி கொடுத்தால் அவர்களின் வாக்கும் கிடைக்கும் என்று நினைத்தாரோ என்னவோ!

✖ பரப்புரைக் கூட்டம் ஆரம்பமாகும்போது வெண்பஞ்சுத் தலைகள் அதிகமாக இருந் தாலும், இரவு வேளை இளம் தலைகளையும் கூட்டத்தில் அதிகம் பார்க்கக் கிடைத்தது. ஆனால் ஒரேயொரு பெண்ணைக்கூட கடைசி வரை கூட்டத்தில் காணக் கிடைக்க வில்லை. மெகா தொடர்களைவிடவா அரசியல்கூட்டம் சுவாரஸியமாக இருந்து விடப்போகிறது என்று எண்ணிவிட்டார்கள் போலும்.

✖ ஐக்கிய தேசியக் கட்சி வெள்ளியிரவு நல்லூர், சங்கிலியன் பூங்காவில் பரப்புரைக் கூட்டத்தை நடத்தியிருந்தது. கூட்ட அரங்கு மற்றும் வீதிகளில், கட்டவுட்கள், பனர்கள் என்று ஆர்ப்பாட்டம் பலமாக இருந்தது. ஆனால் கூட்டமைப்பின் மருதனார்மடக் கூட்டத்தில் ஒரு கட்டவுட், பனர் என்று எதுவுமே வைக்கப்பட்டிருக்காமல் எளிமையாக இருந்தது.

* ஐக்கிய தேசியக் கட்சி பரப்புரைக்காக தென்னிந்தியாவிலிருந்து பாடகர்களை அழைத்து வந்திருந்தது. அவர்களை விஜயகலா அக்காதான் அழைத்து வந்தார் போலும் அறிவிப்பாளர் அடிக்கொரு தடவை எனக்கு மூன்று பிடிக்கும் மூன்று பிடிக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். போதாதற்கு பாடவந்திருந்த இந்தியப் பாடகர்களைப் பார்த்தும் உங்களுக்கு எந்த இலக்கம் பிடிக்கும்? யாரைப் பிடிக்கும்? யார் ஆட்சி அமைப்பது பிடிக்கும்? என்று கேள்விகளை அடுக்கினார். பாவம் அவர்கள் கட்சியும் தெரியாது, வேட்பாளர் பெயரும் தெரியாது, அரசியலே என்னவென்று தெரியாது மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம் பார்த்து தவித்த முயல் அடிப்பதைப்போல், உங்களுக்கு 3ஆம் எண்தானே பிடிக்கும், விஜயகலாவைத்தானே பிடிக்கும் என்று பிடில் வாசித்துக் கொண்டிருந்தார் அறிவிப்பாளர். இந்தப் போங்கு விளையாட்டை சிரித்தபடியே நன்கு ரசித்துக் கொண்டிருந்தது ஒரு கூட்டம்.

✖ பஸ்கள் மூலம் கூட்டம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. முக்கால்வாசிக் கூட்டம் பாட்டுக்கேட்கத்தான் வந்திருந்தது. கொஞ்சப்பேர் விஜயகலா அக்காவுக்காக.... வந்தோம் என்று சொன்னார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 மீதான தமிழர்களின் நம்பிக்கை

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்பு இங்கு வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் இனம் தமிழ் பேசும் இனம் என இரு தேசிய இனங்களாக பிரிந்து வாழ்ந்தார்கள். அடிமை வாழ்க்கையின் பிந்திய காலப்பகுதியில் பிரிட்டிஷ் காலனித்துவத்தில் அது இல்லாமற் செய்யப்பட்டது. ஆக்கிரமிப்பாளனின் கீழ், சிங்களவர் தமிழர் எல்லோருமே அடிமைகள் என்ற ஒரே இனத்தவராயினர். எனினும் சுதந்திரம் கிடைக்கையில் மீண்டும் இனக் குழும முனைப்பு தோன்றியது. தமிழ், சிங்கள மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் அளித்தல் என்பது ஜனநாயகத்துக்கு மாறானதென சிங்கள தலைமைத்துவங்கள் எதிர்த்தன. இதனால் நாட்டின் அரசியற் பிரச்சினைக்கு தீர்வாகாத ஓர் ஒற்றையாட்சி அரசமைப்பு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது.

1983ஆம் ஆண்டு நாட்டை உலுக்கிய பயங்கரவாத வன்முறை தமிழ் மக்களின் வாழ்வை நிலைகுலையச் செய்தது. தமிழ் மாணவர்களின் கல்வி மீது பாரபட்சங்கள் திணிக்கப்பட்டன. தரப்படுத்தல் என்ற துருப்பிடித்த தகரம் தமிழ் மாணவர்களின் கல்விப் பின்புலத்தையும், அதன் பிரதிநிதித்துவத்தையும் நசுக்கியது.

தங்களது கல்வியையும், உரிமைகளையும் பெற்றுக்கொள்ள அமைதியும், அஹிம்சையும் இடம்தராது என்ற நிலையில் ஆயுதப் போராட்டத்தை தங்களின் இலட்சியத்தை அடைவதற்கான பாதையாக வரித்துக் கொண்டனர். 30 வருடங்களுக்கு மேலான பயணத்தின் முடிவில்கூட தீர்வு என்பது சாத்தியப்படவில்லை.

மாறாக அதனை அடக்க அறிமுகப்படுத்தப்பட்ட தீவிரவாத செயற்பாடுகள், பயங் கரவாதத் தடைச்சட்டம் என்பன தமிழ் மக்களின் இருப்புக்கு இன்றும் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றன. இந்தச் சட்டம் மற்றும் அரச பயங்கரவாதம் காரணமாக, தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுதலும் காணாமற்போதலும் அதிகரித்தன. சித்திர வதைகள், கொலைகள், பாலியல் வல்லுறவுகள் சாதாரணமாகின. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரால் 2009ஆம் ஆண்டில் தமிழர்கள் மீது நடத்தப்பட்டன பாரிய மனித உரிமை மீறல்கள். தற்போதும் ஓரங்கட்டுதல்களும், அடக்குமுறைகளும், அடிபணிய வைக்கும் செயற்பாடுகளின் செயல்முனைப்பும் முடிவின்றியே தொடர் கின்றன.

இந்த நிலையில் இலங்கையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி மீண்டும் பொதுத் தேர்தல் நடக்கின்றது. அதற்கான தயார்ப்படுத் தல்களிலும், ஒழுங்கமைப்புக்களிலும் வழக்கம்போல பிரதான அரசியற் கட்சிகள் செயற்படத் தொடங்கியிருக்கின்றன. தமிழர் பிரதிநிதிகள் தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் பேசு வதற்கான சக்தியைப் பெறமுயன்று வருகின்றனர்.



இந்த நிலையில்தான் மீண்டும் சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு வேண்டும் என்று கேட்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற பிரதான சிங்களக் கட்சிகளும், பிரதான தமிழ்க் கட்சிகளும் பங்குபற்றித் தீர்மானித்த திம்புக் கோட்பாடுகள் சிங்களத் தரப்பால் இதுவரையில் ஏற்கப்படவில்லை. இது வரலாறு. இருந்தபோதும் தற்போது மீண்டும் அந்தக் கோட்பாட்டை நிலை நிறுத்தும் வகையில் தமிழர்களுக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியிருக்கின்றது. இந்த இடித்துரைப்பு பிரதான சிங்கள இனவாத கட்சிகளிடையே மீண்டும் ஒரு கலக்கத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக இவர்கள் தங்களுடைய அதிகார மிரட்டலை அரசியல் பரப்புரை மேடைகளில் கடும் சீற்றத்தோடு வெளிப்படுத்தி வருகின்றனர். இது தமிழர்களுக்குத் தீர்வைத் தரமுடியாது என்பதன் ஆரம்ப அறிகுறியா? அதிகாரம் வெற்றி பெறும், உரிமையின் குரல் எப்போதும் நசுக்கப்படும் என்பதன் வெளிப்பாடா? நாங்கள் பெரும்பான்மை, நீங்கள் சிறுபான்மை எனவே நாம் சொல்வதை செய்ய வேண்டும், தருவதைப் பெற வேண்டும் என்ற அதிகார மமதையா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆனால் இத்தனைக்குப் பின்னரும் சிங்களத் தலைமைகள் மாற்றம் பெறவில்லை என்பது மட்டும் உண்மை.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டி முறைத் தீர்வு பொருத்தமற்றதெனவும் ஒரு பிரிவினருக்கு மாத்திரம் தீர்வை வழங்குவதன் மூலம் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்றும் அனைத்து மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமே நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்திருக்கிறது.

இதேபோன்று ஒன்றுபட்ட வடக்கு–கிழக்கு அலகைக் கொண்ட சமஷ்டி கட்டமைப்புக்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்ற தமிழர்களின் நிலைப்பாட்டை நாட்டின் பிரதான அரசியல் கட்சியான ஐ.தே.கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்கூட ஏற்கவில்லை. ஐ.தே.கவாவது பரவாயில்லை, ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வுக்குத் தயார் என்கிறது. ஆனால் சு.கட்சியோ அதிகாரப் பகிர்வுக்கே தயாரில்லை என்று கூச்சலிடுகிறது.

30 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்ட, துன்புறுத்தப்பட்ட இனம் தமிழ் இனம். அவர்களின் நியாயமான வேண்டுதல்களைத் தீர்க்க வேண்டும், உரிமைகளைத்தர வேண்டும், இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் இப்போதுகூட சிங்களத் தலைமைகளிடம் ஏற்படாதது வருத்தத்துக்குரியது.

கடந்த அரசிலே ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தமிழர்களுக்கு தீர்வை முன்வைப்பேன் எனத் தெரிவித்தார். அது தொடர்பில் இந்தியாவிடம்கூட உறுதி மொழிகளை வழங்கினார். ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை. தற்போது ஐ.ம.சு.முன்னணியின் தேர்தல் அறிக்கையில்,ஒருபுறம் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்துக்கு அமைய அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிரப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒற்றை ஆட்சியின் கீழ் இனங்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி நியாயமான அரசியல் தீர்வினைப் பெற்றுத் தருவதே தமது நோக்கம் என்று கூறப்பட்டுள்ளது. அரசு அமைக்கப்பட்டு ஒருமாத காலத்தில் பேச்சு, ஆறு மாத காலத்தில் தீர்வுத் திட்ட முன்மொழிவு என்றும் சொல்லப்படுகிறது. இது நடக்கக்கூடிய விடயமல்ல. ஏனெனில் 30 வருடங்களில் தராமல் முடக்கப்பட்டது, ஆறு மாதங்களில் தரப்படும் என்பது கேள்விக்குரியதே.

போர் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்த நிலையில் இன ரீதியான துன்புறுத்தல்கள், அரசியல் அடக்குமுறைகள், பழிவாங்குதல்கள் என்ற சிங்கள பேரினவாத அரசின் தமிழர் மீதான அடிப்படைக் கட்டமைப்பும், எண்ணவோட்டமும் மாற்றமடைந்ததாகத் தெரியவில்லை. தமிழரின் நியாயமான சமஷ்டிக் கோரிக்கையை நிராகரிப்பதிலேயே அவர்கள் குறியாக இருக்கின்றனர். நல்லிணக்கத்தைப் பாதிக்கும், பிரிவினையை தூண்டும் என்று புதுக்கதையைப் பேசுகின்றனர். தமிழர்களைப் புறந்தள்ளி சிங்கள மக்களை முன்னிலைப்படுத்தியும் அவர்களின் நலன் தொடர்பிலும் மாத்திரம் கரிசனையோடு செயற்படுகின்றனர்.

தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு–கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும், 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலை தொடர்பான மனித உரிமை மீறல்களை சர்வதேசம் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை வேறுவிதமாக அர்த்தப்படுத்துகின்றனர். நாட்டைப் பிரிப்பதற்கு இணங்கமாட்டோம் என குளறுகின்றனர். தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்ற நாமம் கொண்டு நசுக்கிவிட்டு, தாங்கள் செய்த பாவங்களுக்கு பாவமன்னிப்பையும் தகுந்த பிராயச்சித்தங்களையும் செய்யாது நிற்பதற்குத் துடிக்கின்றனர். இது இலங்கை அரசியலில் இருந்து வருகின்ற கோளாறுகளின் தொடர்ச்சியே.

தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கை இலங்கைத் தீவிலும், உலக அரங்கிலும், இனங்களிடையேயும் அமைதியைத் தருமா என்பதைத் தேர்தல் முடிவுகள்தான் சொல்ல வேண்டும். இந்தத் தேர்தல் 17ஆம் திகதி நடக்கின்றது. அதன் கூட்டெண் 8. அந்த எண் எப்போதும் தமிழர்களுக்கு நல்லதையே செய்திருக்கிறது. 8 என்பது தமிழர்கள் மறக்காத எண். நவம்பர் மாதத்தில் வருகின்ற 26இன் கூட்டு. விடுதலையின் பேச்சும், மூச்சும் கலந்த நல்ல இலக்கம். கடந்த காலத்தில் எதிரிக்கு தந்தது கலக்கம். அப்படிப்பட்ட 8 இம்முறை தமிழர்களுக்கு தீர்வை எட்டித் தரும் என்ற நம்பிக்கையை எப்போதும் எண்ணியபடி தமிழ் மக்கள் காத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வலைப்பக்கம்

மீனம்மா @meenammakayal · 20h

முடிவுகள் எப்போதோ எடுத்தாயிற்று ஆலோசனை கேட்பது அதன் சாதக பாதங்களை அறியவே

Pinned Tweet
புகழ் @mekalapugazh · May 26

கும்பிடும் வரை கடவுள்;
திருட்டுப் போனால் சிலை

அனாமிகா @MissLoochu · 2h

கண்டுகொள்ளப்படாமல் இருந்திருக்கிறோம் என்று தெரிந்தும் அர்த்தமற்றுப்போகிறது சேர்த்துவைத்த அன்பும் வாழ்ந்த வாழ்க்கையும்

சத்தியவதி @dpriya_ · Oct 30

முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியவர்களைக் கண்டு யாரும் பரிதாபப்படவேண்டாம், வீட்டில் மகன்,மருமகளிடம் வாங்கும் வசைகளுக்கு அது எவ்வளவோ மேல்

மீனம்மா retweeted
Swathee @iamswathee · 21h

"என் தாயின் சமையலே சிறந்தது" என்று எல்லா குழந்தைகளையும் நினைக்க வைப்பதே தாய் என்ற உறவின் மகத்துவம்!!

சப்பாணி @manipmp · 52m

சித்திரமும் கைப்பழக்கம்
சீரியலும் மனப்பழக்கம்

3:20 PM - 28 Jul 2015






**கணவன் -** தொட்டதுக்கெல்லாம் என் மனைவி கோபப்படுகிறா.
**நண்பன் -** அப்பிடி என்னத்தை தொட்டனீ?
**கணவன் -** மனைவியின் சகோதரியை...

***பெண் :*** அப்பா நான் லவ் பண்ணறேன்..
***அப்பா :*** பையன் எந்த ஊரு..
***பெண்:*** UK ல இருக்கான்...
***அப்பா :*** நீ இங்க இருக்க.. அவன் அங்கே.. எப்படி?
***பெண்:*** Facbook மூலமா நண்பர்கள் ஆனோம்... website மூலமா நானும் அவனும் டேட்டிங் கூட போய் இருக்கோம் whats app ல ரெம்ப நாளா chat பண்ணறோம்... நாங்க லவ் ஐ share பண்ணினது skype ல... அப்புறம் வைபர் மூலமா கணவன் மனைவியா வாழ்கிறோம்..... அப்பா, எங்களுக்கு உங்க ஆசீர்வாதம் வேண்டும் ......
***அப்பா :*** நிஜமாவா!!!! அப்புறம் என்ன டுவிட்டர் மூலமா கல்யாணம் பண்ணிக்கோங்க... ஒன்லைன்ல ஜாலியா இருங்க... ஈ மெயில்ல குழந்தைகளை வாங்கிக்கோங்க... ஜிமெயில் மூலமா அவனுக்கு அனுப்பு... எப்போ வாழ்க்கை பிடிக்கலையோ, அப்போ குழந்தைகளை ஓஎல் லெக்ஸ் மூலமா வித்துடு.... அவ்வுளவுதான்.......
பெண் : !!!





ஆசிரியர் - ஏன்டா நான் வரும்போது மட்டும் கண்ணாடி போடுகிறாய்?
மாணவன் - டாக்டர் தான் சொன்னார்.
ஆசிரியர் - என்ன சொன்னார்?
மாணவன் - தலைவலி வரும்போது மட்டும் கண்ணாடி போடச் சொல்லி

**இது அமெரிக்காவில்...**
**மகள் - அப்பா.. நேற்று எனக்குத் திருமணம். சாரிப்பா உங்களை கூப்பிட மறந்திட்டன்.**
**அப்பா - பரவாயில்லையம்மா.. அடுத்த கல்யாணத்துக்கு மறக்காமல் கூப்பிடு..**

பொலிஸ் - எப்பிடியப்பா ஆக்சிடென்ட் ஆச்சு
ட்ரைவர் - அதான் எனக்கும் தெரியல்லை. ஆக்சிடென்ட் நடக்கேக்க நான் நல்ல நித்திரை.
பொலிஸ் - ???

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைப் பராமரிப்பு

**பெண்**

குழந்தைகள் துருதுருவென செய்யும் சேட்டைகளால் தான் நமது வீட்டுக்கே வெளிச்சம் உண் டாகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும், வளர்க்கவும் தங்களின் பெற்றோர்களின் உதவியை நாடியது எல்லாம் அந்தக் காலம். இன்றைய தாய்மார்களோ, தங்களது வேலைகளில் எப்போதும் மூழ்கி போய்விடுவதால், தங்களது குழந்தைகளை வளர்ப்பதில் கோட்டை விட்டு விடுகிறார்கள். அதனால் இந்தப் பிரச்சனையை போக்க, இன்றைய தாய்மார் களுக்கு குழந்தைப் பராமரிப்பு பற்றி பார்க்கலாம். உங்கள் குழந்தைக்கென எப்போதும் நீங்கள் இருக்க வேண்டும். அது அவர்களுக்கும் உங்களுக்குமான இறுக்கத்தை அவர்களின் மழலை பருவத்தில் இருந்தே அதிகரித்துவிடும். பணத்தின் அருமை மற்றும் முக்கியத்துவத்தை பற்றி ஒவ்வொரு குழந்தையும் தெரிந்து கொள்ளவேண்டும்.



இன்றைய தாய்மார்கள் தங்களது குழந்தைக்கு பணத்தின் மதிப்பைப் பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வயதை அடைந்ததும் தான் உண்ணும் சாக்லெட்டின் விலையை பற்றிக் கண்டிப்பாக குழந்தை தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தங்களது குடும்பத்துடன் குறைந்தது 3 மணிநேரமாவது ஒன்றாகச் செலவிட வேண்டும்.

எவ்வளவு வேலை பளு இருந்தாலும் கூட, இதனை செய்யத் தவறக் கூடாது. இன்றைய தாய்மார்களும், தந்தைமார்களும் தங்களது குழந்தைகளுடன் போதிய நேரத்தை செலவிடுமாறு பார்த்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் அடிப்படையைப் பற்றி குழந்தைக்குச் சொல்லி கொடுக்க தாய் மற்றும் தந்தை என இருவருமே தேவை. இன்றைய தலைமுறை தாய்மார்கள் பார்டிக்குச் செல்லவும், நண்பர்களுடன் பொழுதைக் கழிக்கவும் அதிகமாக விரும்புகின்றனர். இருப்பினும் பார்டிக்குச் செல்லும் போது, குழந்தைகள் நிறைந்துள்ள பார்டிகளுக்கே செல்ல வேண்டும். அதனால் மற்ற குழந்தைகளுடன் எப்படி பழகி நண்பர்கள் ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்பதை உங்கள் குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள். குழந்தைகளை ஊக்கப்படுத்துவது நீங்கள் பின்பற்ற வேண்டிய ஒரு முக்கியமான குழந்தை வளர்ப்பு முறையாகும். இன்றைய தாய்மார்கள் தங்களது குழந்தையை அதன் சின்ன வயதிலுருந்தே ஊக்கப்படுத்தத் தொடங்க வேண்டும். இந்த ஊக்கம் அவர்களுக்குள் தன்னம்பிக்கையை வளர்த்து, அவர்களின் சுய மதிப்பை வளர்த்துவிடும்.

# மன அழுத்தம் குறைய வேண்டுமா?

தற்போதைய வாழ்க்கை முறையில் பெண்கள் அதிக மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். வீட்டில் இருக்கும் பெண்களாகட்டும் பணிபுரியும் பெண்களாகட்டும் அதிக மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாத போது வீட்டில் உள்ளோர் மீது அதனை வெளிப் படுத்தும் நிலையும் ஏற்படும்.

இந்த அவரச யுகத்தில் டி.வி., இணையதளம் போன்ற ஊடகங்களில் நமது பெரும்பாலான நேரங்களை செலவழிக்கிறோம். அது இன்னும் நிலைமையை மோசமாக்கி விடுகிறது. ஊடகங்களில் நம் நேரத்தை செலவழிப்பதினால் வீட்டில் இருப்பவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என அதிக நேரம் செலவழிக்க முடிவதில்லை.

இந்த நிலையிலேயே நம் பிரச்சினைகள் நாளடைவில் மன அழுத்தமாக மாறி விடுகிறது. மன அழுத்தங்களில் இருந்து விடுபட நல்ல இசையேயோ அல்லது நாம் மிகவும் விரும்பும் பாடலையோ கேட்பதின் மூலம் குறைக்கலாம். அதோடு புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். நாம் படிப்பதோடு மற்றவர்களுக்கும் புத்தகம் படிக்கும் ஆர்வத்தை தூண்டிவிடலாம். நல்ல புத்தகங்களை அவர்களுக்கு பரிசளிக்கலாம்.

புத்தகங்கள் அதிகம் வாசிப்போர், குறைவாக புத்தகங்கள் வாசிப்பவர்களுடன் ஒப்பிடும் பொழுது பத்தில் ஒரு பங்கு அளவே மிக குறைவாக மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். எனவே, வாசித்தல் என்பது மன அழுத்தத்தை வெகுவாக குறைப்பதில் பெரும் பணியாற்றுகிறது.



# மகளிர் சிந்திக்க வேண்டியவை



பெண்கள் எப்பொழுதும் தங்களது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நேரம் ஒதுக்குவதேயில்லை. குடும்பம், உறவுகள் போன்றவற்றை பாதுகாப்பதிலேயே அவர்களின் நேரம் கரைந்து விடுகிறது. பெண்கள் தங்கள் உடலையும் பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும்.

கண்டிப்பாக காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. இரவு உணவுக்கும் காலை உணவுக்கும் இடையில் 12 மணிநேர இடைவெளி இருக்கிறது. சாப்பிடாமல் இருப்பது உடலுக்கும் மனதுக்கும் சோர்வைத் தரும். சாப்பிட நேரம் இல்லையென்றால் குறைந்தபட்சம் பாதாம் போன்ற பருப்புகளையும், வாழைப்பழத்தையுமாவது சாப்பிட வேண்டும்.

வயிறு மற்றும் இடுப்புச் சதையைக் குறைக்க முயற்சிப்பது நல்லது. கை, கால் போன்ற பகுதிகளில் இருக்கும் கொழுப்புகள் நமது உடம்பில் சரியான இரத்த சர்க்கரை இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றன. மாறாக வயிறு மற்றும் இடுப்புப்பகுதியில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பானது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். சாப்பாட்டு நேரம் வந்துவிட்டது என்பதற்காக சாப்பிடாமல், பசித்தால் மட்டுமே சாப்பிடுவது என்ற பழக்கத்தை கடைபிடிப்பது நல்லது. வறுப்பது, பொரிப்பது போன்றவற்றை விட்டுவிட்டு, வேக வைத்த உணவுகளை அதிகமாக சாப்பிடுவது நல்ல பலனைக் கொடுக்கும்.

அதிகப்படியாக ஈஸ்ட் சேர்த்த உணவுகளைச் சாப்பிடுவது தவிர்ப்பது நல்லது. அவற்றை அதிகமாக சாப்பிடுவதால் உற்சாகமின்மை ஏற்படும்.

மாதவிடாய் காலத்தை நெருங்கும்போது முகத்தில் வெயிலினால் ஏற்படும் தாக்குதல்கள் அதிகமாக இருக்கும். இந்த காலகட்டத்தில் ஈஸ்ட்ரோஜனும் நம்முடைய உதவிக்கு வராது. அதனால் கண்டிப்பாக சூரிய ஒளிக்கதிர்களிலிருந்து பாதுகாக்கும் கிரீம்களைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

பெரும்பாலான பெண்களிடம் இரும்புச் சத்து குறைபாடு காணப்படும். அதனால் தினமும் கீரை, உலர்ந்த திராட்சை, வெல்லம் போன்றவற்றை சாப்பிடுவதால் இந்தக் குறைபாட்டை நீக்க முடியும். அல்லது இரும்புச் சத்து மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடலாம்.

ஹீல்ஸ் செருப்புகளை தொடர்ந்து உபயோகிப்பது முதுகு வலி, முட்டி வலி போன்ற பிரச்சினைகளைக் கொடுக்கும். தட்டையான அடிப்பாகத்தைக் கொண்ட செருப்புகளை உபயோகிப்பது நல்லது.

தினசரி வாழ்க்கையில் சுலபமான யோகாசனங்களை நடைமுறைப்படுத்தலாம். கீழே விழுந்த பொருள்களை எடுப்பதற்கு முதுகை வளைத்து நன்றாக குனிந்து எடுக்கலாம். உட்காரும்போது நன்றாக சம்மணமிட்டு உட்காரலாம். ஐம்பதுகளில் இருந்தாலும் இதைச் செய்வது நல்ல பலனைக் கொடுக்கும்.

பெண்களுக்கு சோயா மிகவும் நல்லது. அதிகப்படியாக அருந்தப்படும் பசும்பால், எருமைப்பால் போன்றவை கொழுப்புச்சத்தை அதிகரித்து விடும். அதற்குப் பதிலாக சோயா பாலிலிருந்து கிடைக்கும் கல்சியம் [illegible] சோயாவில் [illegible]ச்சத்து உள்ளது. இதை உட்கொண்டால் பெண்களின் [illegible] ஈஸ்ட்ரோஜன் அளவும் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிக வியர்வைக்கு சுப்பர் பேஸ் பேக்



வெயில் காலம் என்றவுடனே அனைவரும் சந்திக்கும் பிரச்னைகளில் ஒன்று தான் வியர்வை. வியர்வை அதிகம் வெளிவந்தால் துர்நாற்றத்தை ஏற்படுத்தி, சங்கடமான சூழ்நிலை உருவாகும். எனவே முகத்தில் அதிக அளவில் வியர்வை வெளியேறாமல் இருக்க பேஸ் பேக் போடுவது அவசியம்.

முல்தானி மெட்டிப் பொடியை ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து, அதனை முகத்தில் தடவி அரை மணிநேரம் உலர வைத்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

இதேபோன்று கடுகை அரைத்து அதனை ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி உலர வைத்துக் குளிர்ந்த நீரில் கழுவினால் பலன் கிடைக்கும்.

அதிக நீர்ச்சத்துள்ள வெள்ளரிக்காயை அரைத்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

பால் மற்றும் தேனை ஒன்றாக கலந்து, சருமத்தில் தடவி அரை மணிநேரம் ஊற வைத்துக் கழுவ வேண்டும்.

பாலுக்குப் பதிலாக எலுமிச்சைச் சாறு மற்றும் தேனை பாதி என்ற விகிதத்தில் கலந்து, சருமத்தில் தடவி மாஸ்க் போட்டு வந்தால் முகம் புத்துணர்ச்சியுடன் வியர்வையின்றிக் காணப்படும்

## மாம்பழ ஐஸ்கிரீம்





### தேவையான பொருள்கள் :

பெரிய மாம்பழம் – 2
குளிர்ந்த பால் – 1 கோப்பை
வனிலா ஐஸ்கிரீம் – 1 கோப்பை
ஜெல்லி – 2 மேசைக்கரண்டி

### செய்முறை :

மாம்பழங்களைத் தோலை நீக்கி விட்டுத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். நறுக்கிய மாம்பழத் துண்டுகளை மிக்ஸியில் போட்டு சிறிது தண்ணீர் விட்டு, கூழாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். அதே மிக்ஸியில் பாலுடன் ஜெல்லி சேர்த்து நன்கு அடிக்கவும். பால் ஜெல்லி கலவையில் மாம்பழக் கூழை சேர்த்து ஒரு முறை அடித்து எடுக்கவும். அந்தக் கலவையை கோப்பையில் போட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைத்து சுமார் 2 மணி நேரம் குளிரவிடவும். அதன் பின்னர் எடுத்து பரிமாறும் கோப்பையில் வைத்து மேலே வனிலா ஐஸ்;கிறீமை வைத்துப் பரிமாறவும்.

## கன்னத்தை பளபளப்பாக்கும் அழகு குறிப்புகள்



தோலுக்குத் தேவையான எண்ணெய்ப் பசை இல்லாதபோது, கன்னப்பகுதியும் வறண்டு, சுருங்கி சப்பிப்போய்க் காணப்படும். அப்பிளை நறுக்கி அரைத்து, கன்னப் பகுதியிலிருந்து காது வரை தடவி, தினமும் பேஷியல் ஸ்ட்ரோக் கொடுத்து வந்தால், ஒரே வாரத்தில் அழகான கன்னத்தை பெறலாம். மூன்று அப்பிள் துண்டுகள், மூன்று கரட் துண்டுகள் இவற்றைத் துருவி ஜூஸ் செய்து, அதனுடன் அரை மூடி எலுமிச்சைச் சாறு கலந்து தினமும் காலையில் குடித்து வந்தால், கன்னத்தில் சதை போட்டு கன்னத்தின் நிறம் மற்றும் பளபளப்பு கூடும்.

## கடுகை பயன்படுத்தி முகத்தை அழகாக்கலாம்



கடுகைப் பொடி செய்து சலித்து அதை தேங்காய் எண்ணெயில் குழைத்து கண்களுக்கு கீழே தடவுங்கள். கடுகு எண்ணெய் 6 சொட்டுகள் எடுத்து சூடாக்கி அதை அரிப்பு, தோல் உதிரும் இடங்களில் தடவி மசாஜ் செய்தால் அரிப்பு பறந்துவிடும். ஒரு வாரம் வரை இதனைச் செய்யவேண்டும். கறுத்த முகத்தை ஜொலிக்க வைக்க கொஞ்சம் கடுகு கொஞ்சம் பயத்தம் பருப்பையும் தயிரில் கலந்து ஊறவைத்து அரைத்து முகத்தில் தடவி வரலாம். முட்டிப் பகுதிகளின் கருமையைப் போக்க சிறிதளவு கடுகை நீரில் ஊறவைத்து குழைத்து தடவி வரவும். கர்ப்பகால வயிற்று வரிகளை ஒழிக்க சூடான கடுகு எண்ணெயுடன் வெண்ணெயை கலந்து தினமும் வயிற்றில் தடவி வரவும். எலும்புகள் உறுதிபட கடுக் எண்ணெயை சூடாக்கி உடல் முழுவதும் தடவி கடலை மாவைத் தேய்த்து குளிக்கவும். கடுகு எண்ணெயை சூடாக்கி பாதம் முழுக்கத் தடவவும். பின்னர் இளஞ்சூட்டு நீரில் கால்களை வைத்திருந்தால் வெடிப்புகள் மறையும். தலை முடிக்கு ஷாம்பூ வேண்டாம்! கடுகு 100, சீயக்காய் ஒரு கிலோ, துவரை 100 கிராம், வெந்தயம் அரை கிலோ அரைத்துப் பொடி செய்து கொண்டு தலைக்கு பயன்படுத்தவும். தலை முடி நிலைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்லூரிக் காலங்கள்

காலங்கள் ஆயிரம்
வருவதுண்டு கல்லூரிக்
காலங்கள் ஒரு முறை தான்

கல்லூரிப் பறவைகளாய்
கல் நெஞ்சம் அற்றவர்களாய்
கல்வி என்னும் வானத்திலே
காற்றாய் சிறகடிக்கின்றோம்

க.பொ.த. சாதாரணதரப்
பரீட்சை நெருங்க நெருங்க
கல்லூரிக் காலங்களும்
உருண்டோடுகின்றன

காலங்கள் ஓடிவிடும் என்
கல்லூரிக் காலம் வருமா ?

இறைவா எனக்கொரு
வரம் தா மீண்டும் என் கல்லூரியில்
கல்வி கற்க அல்லது கல்லாக

ந.திவ்வியா
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## விடுகதைகள்

ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன?
–காட்ஸ்

கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் அது என்ன?
–கண்ணீர்

அடிமேல் அடி வாங்கி, அனைவரையும் சொக்க வைப்பான் அவன் யார்?
–மேளம்

ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?
–வாய்

விடுமுறை இல்லாத கடை எது?
–சாக்கடை

சின்னப்பயல் உரசினால் சீறிப் பாய்வான் அது என்ன?
–தீக்குச்சி

வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்?
–பாம்பு

யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?
–கண் இமை

வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?
–ஆறு அல்லது அருவி

அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?
–வெங்காயம்

வளைஞ்சு நெளிஞ்சு ஆடும் தண்ணீர் குடித்தால் சாகும் அது என்ன?
–நெருப்பு


தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்கமுடியாது அது என்ன?
–முதுகு

# எந்தக் கடமை சிறந்தது?

ஒரு கிராமத்தில் துறவி ஒருவர் இருந்தார். அந்தத் துறவியின் பர்ணசாலைக்கு அருகில் ஒரு குடி யானவனின் வயல் இருந்தது. துறவி தினமும் காலையில் எழுந்து ஆற்றில் நீராடிவிட்டு, இறை நாமத்தை உச்சரிக்கத் தொடங்குவார். துறவி ஆற்றில் நீராடுவதற்கு செல்லும் நேரத்தில், குடியானவன் தனது வயல் வேலைக்குப் புறப்பட்டுச் செல்வது அன்றாட நிகழ்வு. அவ்வாறு துறவியின் பர்ணசாலையைக் கடந்து செல்லும்போது, அவரை வணங்குவதைக் குடியானவன் வழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.

காலையில் பொழுது புலர்ந்ததில் இருந்து மாலையில் சூரியன் அஸ்தமிக்கும் வரை துறவியின் பர்ணசாலைக்கு வந்து செல்லும் பக்தர்கள் அதிகம். துயரத்துடன் வருபவர்களுக்கு துறவி ஆறுதல் கூறி அனுப்புவார். துறவியின் உபதேசம் வந்திருக்கும் பக்தர்களுக்கு நிம்மதியை கொடுப்பதாக இருந்தது.

ஆனால், துறவியை வணங்கும் குடியானவன், வேறு எங்கும் செல்லாமல் தனது வேலையில் கவனமாக இருந்து வந்தான். வருடம் தோறும் நல்ல விளைச்சல். விளைந்ததில் ஆறில் ஒரு பகுதியைப் பறவைகளுக்காகத் தனது வயலில் விட்டுவிட்டான். மீதம் இருந்த ஐந்து பங்கில் ஒரு பகுதியை ஆதரவற்றவர்களுக்கும், வயோதிபர்களுக்கும் உணவு சமைக்க ஒதுக்கினான். ஒரு பகுதியை விதை நெல், காப்பு நெல்லுக்கு பயன்படுத்தினான். தனது குடும்பத் தேவைக்கு ஒரு பங்கை ஒதுக்கினான். மீதம் 2 பங்கு நெல்லை விற்று பணமாக்கிச் செலவு செய்து வந்தான். இதுதான் அவனது வாழ்க்கையாகிப் போனது.




ஆனாலும், துறவி அந்தக் குடியானவனைக் கண்டு புன் முறுவல் செய்வதும், குடியானவன் துறவியை வணங்கி நிற்பதும் தொடர்ந்தது. குடியானவன் தனது பிள்ளைகளின் திருமணத்துக்கு துறவியை அழைத்தான். துறவி ஆசிர்வாதம் செய்தார். ஏறக்குறைய துறவியும், குடியானவனும் ஒரே வயதில் இருந்தார்கள். துறவிக்குத் தனது இறுதி நாள்கள் தெரிந்துவிட்டது. இறை நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தார். அதேபோன்று குடியானவனும் தனது வீட்டில் இருந்தபடி, தனது வாரிசுகளுக்குப் பணிகளைப் பிரித்து, அவர்களை நல்வழிப்படுத்திக் கொண்டிருந்தான். உணவு குறைந்தது. உடல் நலிந்தது. ஒரு கட்டத்தில் துறவியும், குடியானவனும் சில நாழிகை நேர வித்தியாசத்தில் அடுத்தடுத்து இறந்தனர். துறவி சொர்க்கம் புகுந்தார். அவர் சொர்க்கத்தின் வாசலைக் கடந்து உள்ளே நுழைந்த போது, அங்கே அவருக்கு முன்னர் குடியானவன் வந்திருந்தான். அங்கேயும் துறவியை அவன் எதிர் கொண்டு வணங்கி நின்றான். துறவிக்கு ஒரே ஆச்சரியம். நித்தமும் இறை நாமத்தை உச்சரித்த நானும், என்னை வணங்குவதைத் தவிர வேறு எந்தப் பிரார்த்தனையும் செய்யாத குடியானவனும் ஒன்றா? அதிலும் எனக்கு முன்னதாக குடியானவன் சொர்க்கம் புகுந்தது எப்படி? என்று குழம்பினார் அந்தத் துறவி.

சொர்க்கத்தின் அதிபதியான இந்திரனிடம் தனது சந்தேகத்தைக் கேட்டார். துறவியே... நீங்கள் வாழ் நாள் முழுவதும் இறை நாமத்தை உச்சரித்து மக்களுக்கு நல்வழி காட்டினீர்கள். அது உங்கள் பணி. செவ்வனே செய்தீர்கள். நீங்கள் உச்சரித்த இறைநாமம் உங்களை இங்கு கொண்டு வந்து சேர்த்தது. ஆனால், பூமியில் மனிதர்களுக்கான கடமைகள் பல உள்ளன. பெற்றோரை போற்றுதல், மனைவிக்கு ஒழுக்கமான கணவனாக நடந்து கொள்வது. பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் தந்தையாக இருப்பது. சமூகத்துக்கு உதவி செய்வது. பிற உயிர்களின் பசியை போக்குவது... என்று பல கடமைகளைக் குறிப்பிடலாம். இந்தக் குடியானவன் மனிதப் பிறவியில் தனக்கான பணிகளை குறைவர நிறைவேற்றினான். அத்துடன், துறவியான உம்மை தினமும் வணங்கி, உம் மூலம் இறைத் தொழுதலையும் பெற்றுள்ளான். அதனால், உம்மை விட ஒரு நாழிகை முன்னதாக அவன் சொர்க்கம் புகுந்துள்ளான். மனிதப் பிறவியில் தங்களுக்கான கடமையை செவ்வனே நிறைவேற்றுபவர்கள் நிச்சயம் சொர்க்கம் புகுவார்கள் என்று விளக்கம் கூறினார்.

இந்திரனின் விளக்கத்தைக் கேட்டதுறவி, வழக்கம் போல் சொர்க்கத்திலும் குடியானவனைப் பார்த்து புன்முறுவல் செய்தார். அத்துடன் குடியானவனை அணைத்துக் கொண்டார்.



சிவகுகன் பிருத்வி,
வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்.



ம.மதுஷாளன்,
தரம் 1பி, கிளிநொச்சி ம.வி.



ஜெ.நர்மதன்
தரம் 7சி, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.


## உலக நாடுகளின் நாடாளுமன்ற பெயர்கள்

இந்தியா – மக்களவை, மாநிலங்களவை
ஆஸ்திரேலியா– ரெய்–ராத்
பல்கேரியா – சோப்ராஞ்சி
டென்மார்க் – போல்கடிங்
அயர்லாந்து – டேயில்ஐறான்
இங்கிலாந்து – பார்லிமென்ட்
பிரான்ஸ் – தேசிய அசெம்பிளி
ஜேர்மனி – புண்டேச்டாக்
ஐஸ்லாந்து – அல்திங்
இத்தாலி – செனேட்
ஜப்பான் – டையட்
நெதர்லாந்து – ஸ்டேட்ஸ் ஜெனரல்
நோர்வே – ச்டோர்டிங்
பெர்சியா – மஜ்லிஸ்
போலந்து – செஜம்
போர்த்துக்கல் – கோர்டஸ்
ரஷ்யா – சுப்ரீம் சோவியத்
ஸ்பெயின் – கோர்டஸ்
ஸ்வீடன் – ரிக்ஸ்டாக்
சுவிஸ்லாந்து – பெடரல் அசெம்பிளி
சிரியா – மஜ்லிங் – அய் –நௌவம்
துருக்கி – கிராண்ட் நே–னல் அசெம்பிளி
அமெரிக்கா – காங்கிரஸ்
மேற்கு ஜேர்மனி – புன்தஸ்டாக்
ஆப்கானிஸ்தான் – சோரா
ஈரான் – மஜ்லிஸ்
மலேசியா – மஜ்லிஸ்
நேபாளம்– பஞ்சாயத்
தாய்வான் – யுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கட்சிகளுக்கு இடமளிக்கலாமா?

ஸ்டோ ஸ்வாமி



"அறுவடையோ மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் அறுவடையின் ஆண்டவரைப் பார்த்து மன்றாடுங்கள்" என்கிற வேதாகம வசனத்தை றோமன் கத்தோலிக்க மதத்தினர் தமது தேவ அழைத்தல் செபங்களின் போது பயன்படுத்துவது வழக்கம். திருச்சபை விசுவாசிகளுக்கான ஆன்மீகப் பணிகளை மேற்கொள்ள குருவானவர்கள் போதாதுள்ளனர், குருவானவர்களாக வரவிரும்புபவர்களின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரிக்கவேண்டும் என்பதே அந்த வாக்கியத்திற்கு பின்னால் உள்ள மறையுண்மை.

இங்கோ, வாக்கு அறுவடை மிகுதியோ இல்லையோ இம்முறை, அறுவடைக்குத் தேவையான ஆள்கள் மலிந்து கிடக்கிறார்கள் தேர்தல் சந்தையில். அதிலும் வாக்கைப் பிரிக்கும் உத்தியோடு இறங்கியுள்ளவர்களும் தாராளம்.

எதிர்வரும் நாடாளுமன்றிற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தலில் மக்கள் ஆணையைவென்று ஆசனங்களை வெல்லப்போகின்றவர்கள் பட்டியலில் தம்மை இணைத்துக்கொள்ள, தக்கவைத்துக்கொள்ளப் பலரும் பலவிதங்களில் முயன்று வருகின்றனர். வடக்கு – கிழக்கு பிரதேசத்தினரைப் பொறுத்த மட்டில் மக்கள் தமது பிரதேச முடிவுகள் மீது மட்டுமல்லாது தேசிய மட்ட முடிவுகள் மீதும் ஒரு கண் வைத்திருப்பது அவசியமானது. தேசிய மட்ட முடிவுகள் மீது அவர்களின் செல்வாக்கு கடந்த கால தேர்தல்களில் நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும் தமது பிரதேச மட்ட பிரதி நிதித்துவங்களின்போது இரு பிரதான கட்சிகளான ஐ.ம.சு.மு மற்றும் ஐ.தே.க. என்பவற்றை முதன்மைப் படுத்துவதில்லை. ஆனால் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி அக்கட்சிகள் தமது இருப்பை காப்பாற்றியே வந்திருக்கின்றன. இன்னொரு வகையில் சொன்னால், மக்கள் அவர்களையும் பிரதிநிதிகளாக்கியிருக்கின்றார்கள்.

தன்னாட்சி, சுயநிர்ணயம், தாயகம் போன்ற கோசங்களை எழுப்பி வரும் வடக்கு–கிழக்கு பகுதிகளிலிருந்து அத்தகைய சிந்தனைத் தாக்கங்களிலிருந்து விலகி நழுவி மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்ள இவர்களால் முடிந்திருக்கின்றமை கவனிக்கப்பட வேண்டியது. அதனை ஜனநாயகத்தின் சான்றாகவும் கொள்ளமுடியும்.



> தேர்தல் காலம் வந்ததும் ஒரு வாக்கையாவது தேசியக் கட்சிகள் என்று தம்மை அடையாளப்படுத்திவரும் கட்சிகளுக்குக் கொடுக்காதீர்கள். மத்தி நமக்கு நஷ்டஈடாக தர வேண்டிய கோடிகளில் மிகக் குறைந்த அளவே அவர்கள் எமக்குத் தரப்பார்ப்பது. எமது காணிகள் விடுபடவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. பாரம்பரியத் தொழில்களைச் செய்ய அனுமதி கிட்டவில்லை. போர்க் காலத்தில் வெளியில் இருந்து வந்தோர் வியாபாரங்களை விட்டுச்செல்லவில்லை. காணிகளை இராணுவமும் அவர்களை அண்டியோரும் கபளீகரம் செய்வது நிறுத்தப்படவில்லை

**ரணில் வருவது கட்சி வளர்க்கவே-**

க.விவிக்னேஸ்வரன் சிலமாதங்களுக்கு முன்னர் பிரதமர் ரணிலுக்கும் வட மாகாணமுதலமைச்சர் விக்னேஸ் வரனுக்கும் இடையில் சிறு முறுகல் தோன்றியிருந்தபோது, ரணில் மேற்கொண்ட வடபகுதிப் பயணம் தொடர்பில் கருத்து தெரிவித்திருந்த விக்னேஸ்வரன், ரணிலின் பயணம் வட பிரதேசத்தில் தனது கட்சியை வளர்ப்பதற்கானதே என்று குறிப்பிட்டிருந்தார்.

முல்லைத்தீவு [illegible] வைத்தியசாலையின் [illegible] சிகிச்சை விடுதித் தொகுதி மற்றும் குருதி வங்கித் திறப்பு விழாவில் இணை பிரதம அதிதி யாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

"மத்திய அரசு தரும் அனைத்து நன்மைகளையும் இருகரம் நீட்டி வாங்கிக்கொள்ளுங்கள். அவர்கள் அழைக்கும் கூட்டங்களுக்கு போய் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்டுக்கொள்ளுங்கள். ஆனால் தேர்தல் காலம் வந்ததும் ஒரு வாக்கையாவது தேசியக் கட்சிகள் என்று தம்மை அடையாளப்படுத்திவரும் கட்சிகளுக்குக் கொடுக்காதீர்கள். மத்தி நமக்கு நஷ்டஈடாக தர வேண்டிய கோடிகளில் மிகக் குறைந்த அளவே அவர்கள் எமக் குத் தரப்பார்ப்பது. எமது காணி கள் விடுபடவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. பாரம்பரியத் தொழில்களைச் செய்ய அனுமதி கிட்டவில்லை. போர்க்காலத்தில் வெளியில் இருந்து வந்தோர் வியாபாரங்களை விட்டுச்செல்லவில்லை. காணிகளை இராணுவமும் அவர்களை அண்டியோரும் கபளீகரம் செய்வது நிறுத்தப்படவில்லை. எனவே இவற்றை எடுத்துக்கூற உங்களுக்கு எமது நிலையறிந்த மக்கட் பிரதிநிதிகளே மத்தியிலும் மாகாணத்திலும் அவசியம் என்பதை மறந்துவிடாதீர்கள்" –என்று விக்னேஸ்வரன் அந்த உரையில் தொடர்ந்திருந்தார்.

**மைத்திரியும் வந்தார்!**

கடந்த செவ்வாய்க் கிழமை மைத்திரிபால சிறிசேனவும் யாழ். மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் பயணம் செய்திருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராக அவர் விளங்கிய போதினும், கட்சிக்குள் மஹிந்த தரப்பினரின் தலையெடுப்பினாலும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதை கருத்தில்கொண்டும் தேர்தல் தொடர்பில் அமைதி காக்கத் தீர்மானித்திருக்கிறார். தனிப்பட்ட பயணமாக யாழ். வந்த மைத்திரிபால, ஐ.ம.சு.மு.வின் யாழ். மாவட்ட வேட்பாளர் அங்கஜன் இராமநாதனின் இல்லத்தில் காணாமற்போனோர் தொடர்பான அமைப்புக்கள் சிலவற்றின் பிரதிநிதிகளைச்சந்தித்துக்கலந்துரையாடினார் என்றும் தெரிகிறது.

**மஹிந்த வருவாரா?**

2015 பொதுத்தேர்தலுக்கான ஐ.ம.சு.முவின் தேர்தல் பரப்புரைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இம்முறை பரப்புரைக்காக வடபகுதிக்கு வருகை தருவாரா என்பது இது வரை தெரியவரவில்லை. தெரியாத தேவதையை விடுத்து தெரிந்த பிசாசை தெரிவு செய்ய அவர் விடுத்த வேண்டுகோளுக்கு கணிசமான அளவு பின்னூட்டம் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கிடைத்திருந்தமை நோக்கத்தக்கது.


**இராமலிங்கம் சந்திரசேகரன்**

இந்த ஆண்டு சித்திரை மாதம் தமது பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகத்தை பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறையில் திறந்துள்ள ஜே.வி.பி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி, இம்முறை அதன் மத்தியகுழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரனை யாழ். தேர்தல் மாவட்டத்தில் களமிறக்கியிருக்கிறது.

ஆக, தமிழ்தேசிய எண்ணக் கருவில் எழுந்துள்ள சலசலப்புக்களை அறுவடை செய்யப் பலா இருக்கிறார்கள். அபிவிருத்தி பற்றிய கருத்துக்களோடும் வேலைவாய்ப்பு பற்றிய முன்மொழிவுகளோடும் தேசிய கட்சிகள் வரும்போது முன்னுரிமையை எதற்கு வழங்குவது என்னும் தடுமாற்றம் மக்களிடம் எழுவது இயல்பானதே. ஆனால் இனப் பிரச்சினை சம்பந்தமான தெளிவான தமது நிலைப்பாட்டை இந்தக் கட்சிகள் வரையறை செய்யவில்லை என்பதைத் தமிழ் மக்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். குறுகிய கால, நீண்டகால நலன்களை எடைபோடுவதும் சர்வதேசத்துக்கு நமது அபிப்பிராயத்தைக் காண்பிப்பதற்கான தீர்மானத்தை எடுப்பதும் இன்னும் மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலத்து உளற்று



தேவி பரமலிங்கம்

கிழக்கில் கதிரவன் மேலெழுந்து கொண்டிருந்தான்!

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் இறங்கிய கணேசனும், பாமாவும் ரக்ஸியில் கிராமம் சேர்ந்தபோது சின்னத் தங்கம் படுக்கையைவிட்டு எழுந்து வந்து, வீட்டுத் திண்ணைக் குந்தில் குந்திக்கொண்டிருந்தாள்.

முன்பாகக் கடகத்துள் கிடந்த அடைக் கோழியைப் பிடித்து, வெளியில் விட்ட போது அது கேரிக்கொண்டே ஓடியது. அடைக்கோழியின் கேரல் சத்தம் ஓய அவளின் காதுகளில் படலேக்கை வந்து நின்ற காரின் இரைச்சல் கேட்டது.

இருந்தபடியே நேரெதிரில் தெரியும் படலையைப் பார்த்தாள் அவள். படலையைத் திறந்து கணேசன் நுழைகையில் அவன் பின்னால் இளம்பெண்ணும் நுழைவதைக் கண்டு அவளின் பார்வை வியப்பில் விரிந்தது.

அகலத் திறந்த கண்களில் வியப்புக்குறி விழ அவளை நோக்கிய சின்னத்தங்கம் தன்னுள் வெட்கம் சூழ திண்ணையால் எழுந்து குசினியுள் நுழைகிறாள். கணேசன் பெண்ணைக் கூட்டிவந்து வளவுள் நுழைவதைக் கண்டதுமே அவளுக்கு விசயம் விளங்கி விட்டது.

இந்த நாளேப் பொடியள் ஒண்டும் தெரியாததுபோல இருக்கிறாங்கள்... பிறகு பாத்தா ஒண்டைக் கையோடு கூட்டிக் கொண்டந்திடுவாங்கள்... பெட்டையும் நல்ல லட்சணமா அவனுக்குத் தோதாத்தான் இருக்கு.

குசினியுள் நுழைந்த சின்னத்தங்கத்தின் இதயம் பேசிக் கொண்டது.

வந்து திண்ணையில் ஏறிய கணேசன் திரும்பிப் பார்க்கையில் முற்றத்திலே நின்றிட்ட பாமாவைக் கண்டான்.

"பாமா என்ன நின்றிட்டாய்? வா... வா..! இது தான் எங்கட வீடு..! நீயேதோ வேறை மாதிரிக்கோட்டைகட்டியிருப்பாய்இல்லையே..?"

பாமாவை அழைத்துத் திண்ணையில் ஏற்றிய கணேசன் தங்களைக் கண்டதும், தாய் குசினியுள் நுழைந்ததைப் பார்த்ததால் குசினிக்குள் போனான்.

"அம்மா இதில இருந்தவா. குசினிக்குள் ஓடியிட்டா... என்ன சங்கதி நாங்க வந்தது அவவுக்குப் பிடிக்கேல்லையோ...!"

கணேசன் நுழைவதை எதிர்பார்த்த சின்னத்தங்கம், பெட்டையைப் பற்றிக் கேட்டு அறிந்து கொள்ளலாம் என்றே குசினியுள் நுழைந்து கொண்டதன் காரணமாகவும் இருந்தது.

"உதாரடா பெட்டை..? ஏனவளைக் கூட்டி வந்தனி..?"

உள்ளே வந்ததும் வராததுமான சமயம் கணேசனிடம் கேள்விகளைக் கேட்டாள்.

"அது வேறை ஆருமில்லை... உன்ரை மருமோள்தானணை..." இப்படி வார்த்தைகளை உச்சரிக்கையில் லேசாக மனதில் கூச்சம் பிறந்து போயிற்று.

"மருமோளோ..? என்னடா சொல்லுறாய்..?" மெதுவாகக் கடிந்து கொண்டாள் சின்னத்தங்கம்.

"அம்மா கொழும்பில தங்கி இருந்தன்...! அந்த வீட்டுக்காறரின்ர மகள்தான் இவ. நானும் விரும்பினன் அதுகும் விரும்பி என்னைத் தேடி வந்திச்சுது, கூட்டிக்கொண்டு வந்திட்டன். என்னை நம்பி வந்தவளை நடுத்தெருவில விடலாமே!"

கணேசன் தாய்க்கு எடுத்துக்கூறியதில் நியாயம் இருந்தது. அதனால் அவன் செய்த காரியத்தைப் புரிந்துகொண்டாள். அவன் கூறியவற்றில் இருந்து உயர்குலத்தவள்; வேலுப்பிள்ளை மாஸ்டரின் சிநேகிதனுடைய மகள் என்பதும் புரிந்தது.

"என்ன வேலையடா செய்தனி பொடி....! பெடிச்சீன்ர குலமென்ன....? நீயுப்புடிச் செய்து வந்திட்டா நாளைக்கு நாங்க இந்த ஊரில வாழுறேல்லையே? அதுவும் வேலுப்பிள்ளைச் சட்டம்பியார் என்ன நினைப்பார்? கொஞ்சமாவது யோசிச்சுப் பாத்து இதைச் செய்தியே..?"

கூப்பாடு போடுவதைத் தவிர சின்னத்தங்கத்தால் வேறொன்றையும் சிந்திக்கவோ செயற்படவோ முடியாமல் இருந்தது.

"மாமி அவரை ஒண்டுஞ் சொல்லாதேங்க... எல்லாம் நான்தான் செய்தது... எல் லாத்துக்கும் நானே பொறுப்பு... இல்லா மலும் நீங்க பயப்புட வேண்டியதும் இல்லை."

குசினியில் வாக்குவாதம் நடப்ப தைத் தெரிந்து, அங்கேபோய் சேர்ந்த பாமா சின்னத் தங்கத்தின் ஆதங்கத் தைப் புரிந்து இப்படிக் கூறினாள்.

"அப்புடிச் சொல்லு பாமா இதுகள் பழையகாலத்து ஆக்களுக்கு விளங்காது. வேலுப்பிள்ளை மாஸ்டர் விசயத்தை அறிஞ்சா ஒண்டுஞ் சொல்லமாட்டார். முதல்ல அவ ருக்கு நீதான் போய் விச யத்தைச் சொல்லிப்போட்டு வா..."

கணேசனும் சேர்ந்து சொல்லி யதைக் கேட்டு நின்ற சின்னத் தங்கத்துக்கு அதிர்ச்சி தீர வில்லை. மகன் சொன்ன காரியத்தை முன்பே செய்தாக வேண்டுமென்று நினைத்திருந் தாள் அவள். அதனைச் செயற்படுத்தும் நோக்கத்தோடு வீட்டால் வெளிக்கிட்டுப் போனவள் வேலுப் பிள்ளைமாஸ்டர் வீடு சேர்ந்தாள்.

"இப்ப ஆக்களெங்கை இருக்கினம் வீட்டையே... சரி... சின்னத் தங்கம் நட... நான் இந்தா பின்னால வாறன்...." கதையைக் கேட்டதும், வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு ஆச்சரியம் தாளவில்லை. நிலைமையைப் புரிந்த அவர், சின்னத் தங்கத்தைப் போக விட்டு, தானும் வெளிக் கிட்டு அவளின் வீட்டுக்கு நடைபோட்டார்.

"என்ன கணேஸ்.... இப்புடித் தானே நடக்கிறே..?"

பாமா, கணேஸ் இருவரையும் மாறிமாறிப் பார்த்து வேலுப் பிள்ளைமாஸ்டர் கேட்டுவிட்டு திண்ணையில் சின்னத் தங்கம் எடுத்துப் போட்ட பாயில் இருந் தார். நடந்து முடிந்த கதைகளை எல் லாம் ஒன்று விடாமல் விவர மாக அவருக்கு கூறினான் கணே சன். அவனுக்கு அனுசர ணை யாகப் பாமாவும் உறு துணை புரிந் தாள். கதைகளைக் கேட்டு அதிர்ந்து போனவராய் மாஸ் டர் திண்ணையில் இருந்தார்.

"இப்ப சொல்லுங்க.... தேடி வந்துவிட்ட பாமாவைக் கூட்டி வந்தது தவறா?" கணேசன் அழுத்திய கேள்வியை மனதில் வாங்கி அசைபோட்டுக் கொண்டி ருந்த வெத்திலையை எழுந்து போய் துப்பிவிட்டு வந்து இருந்தவர் சொன்னார்.

"தவறெண்டு சொல்லமாட்டன். முதல்ல கேள்விப்பட்டோடனை பதறிப்போனது ஏனெண்டா, என்னை நம்பி அடைக்கலம் தந்தவங்களுக்கு துரோகம் செய்திட்டியாக்கும் எண்டுதான்.... நல்லவன் எண்ட மட்டிலதான் பரிந்துரை செய்திருக்கிறன் எண்டு நம்பியதுகளுக்கு... வம்புத்தனம் செய்தால் நாளைக்கு அதுகளின்ரை முகத்திலே முழிக்கேலாமல் போயிடு மெல்லே! அதால கொஞ்சம் பதறிப்போனன்.... இப்ப நீயும் புள்ளேயும் சொல்றதைப் பாத்தாப் புழையில்லை...."

வேலுப்பிள்ளை மாஸ்டரின் இந்த வார்த்தைகள் அவரையே கண்மூடாமல் பார்த்துக் கொண்டிருந்த சின்னத்தங்கத்துக்கு முதலில் நிம்மதியைக் கொடுத்தது. கிராம மட்டத்தில் பலராலும் மதிக்கப்படுகின்ற ஒருவர் கூறி விட் டால் அதுக்கு மாற்று நீதி இருக்காதல்லவா?

"சாதி எண்டது ஒரு போலித்தனமான அணுகுமுறைதான்... ஒரு சிலர் அதனை ஏற்காவிட்டாலும் இனித்தோன்றும் இளைய தலைமுறையினர் இதுகளை சிறுகச்சிறுக விட்டு விடும்..." தன்னுடைய அபிப்பிராயத்தை வலி யுறுத்த வேலுப்பிள்ளை மாஸ்டர் கூறினார்.

(தொடரும்)

# நீ கடவுள்

மனிதா மரணம்
உன் முடிவல்ல மறுவுலக
வாழ்க்கையின் ஆரம்பம்
இவ்வுலகில்
நன்மையும் தீமையும்
உன் பாதைகள் நீ எதில்
பயணிக்கிறாயோ
அதுதான் உன் முடிவுகள்

அதர்மத்தை அணைத்தால்
தர்மம் வெட்கப்படும்
தர்மத்தை அணைத்தால்
அதர்மம் கோபப்படும்
நீ - உன்
ஆன்மாவை அணைத்தால்
இறையாண்மை
உன்னைத் தேடிவரும்
அதன் பின் நீதான் கடவுள்
உனக்குள்ளே
கடந்து இருப்பவரும்
என்றும் நீதான்

சாம் ரமேஸ்குமார்
மருதனார் மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.உமாசுதன்

# தமிழர்களின் குலச் சின்னம் கற்பகதரு

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய மூத்த குடிகளாக அறியப்படுவது தமிழினம். அதை எண்ணி இன்றும் நாம் பெருமை கொள்கின்றோம். நம்மை ஆண்ட பூர்வீக தமிழ் மன்னர்களின் சின்னமாக பனை மரங்கள் விளங்கி வந்ததை சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. நம் முன்னோர் அரிச்சுவடி கற்றதுகூட பனை ஓலையிலும் எழுத்தாணியிலும்தான். அப்போது கிராமங்களில் கரும்பலகையோ காகிதமோ இருக்கவில்லை.

பழந்தமிழ் இலக்கியங்கள் பனை ஓலைச் சுவடிகளிலேயே எழுதப்பட்டன. யாழ்ப்பாணக் கலாசாரம், தமிழ் மொழியுடனும் இந்து மதத்துடனும் எவ்வளவு இணைந்திருந்ததோ அதே விதமாக ஊணிலும் உறையுளிலும் பனைமரங்களுடனும் ஒன்றிணைந்திருந்தது.

### ஆதி முதல் அந்தம் வரை

தமிழர்களின்வாழ்க்கைமுறையே பனையோடு இணைந்த பனை மரக் கலாசாரமாகவே அறியப்படுகின்றது. வீடு கட்ட மரமாகவும், மேய ஓலையாகவும் பாவித்த ஓலை விவசாய நிலங்களில் பசளையாகவும், வேலி அடைக்கும் பொருளாகவும், கிணற்றுக்குத் துலாவாகவும், அதிலிருந்து நீர் அள்ளும் பட்டையாகவும், பயிரிடலில் தண்ணீர் ஊற்றும் பட்டையாகவும் என எல்லாமுமாகத் தமிழர்களுடன் ஒன்றிணைந்திருந்தது பனை.

குரும்பை, நுங்கு, பனம்பழம், மரம் என்று அடி முதல் முடி வரை அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டோம். பகுதி உணவாக புழுக்கொடியல், அதுசார்ந்த உணவுப் பண்டங்கள், கிழங்கு, பனாட்டு, தேநீருக்கு பனங்கட்டி, மருத்துவ தேவைகளுக்கு பனங் கற்கண்டு என்று இன்னும் வாழ்வுக்குள் ஊடுருவி இரண்டறக் கலந்து கிடக்கிறது பனை.

முழுத் தேவைகளுக்கும் பனையையே நம்பியிருந்த வாழ்க்கை தமிழர் மத்தியில் இருந்த காலம் ஒன்றிருந்தது. பனை செழித்து வளரும் பகுதியில் முற்று முழுதாக அதனை நம்பி வாழ்ந்த மக்கள் கூட்டங்கள் காணப்பட்டன. இப்பொழுதும் அதன் எச்சசொச்சங்களைக்காணலாம்.

போர்த்துக்கேயர்களோ அல்லது டச்சுக்காரர்களோ அல்லது அதற்குப் பின்வந்த ஆங்கிலேயர்களோ பனையை சீனி மரம் என்று அழைத்தனர். இவர்கள் சீனியை அடிப்படையாகக் கொண்டே பனை மரத்தை அறிந்திருந்தனர். டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தை ஆண்டபொழுது யாழ்ப்பாணத்துக்குரிய சின்னமாகப் பனையையே குறித்திருந்தார்கள். அவர்களுடைய யாழ்ப்பாணக் கொடியிலும் பனையே சின்னமாக்க குறிக்கப்பட்டிருந்தது.

தமிழர் வாழ்வில் இன்று பிணைந்திருக்கும் தாலிகூட பனை ஓலையில் செய்யப்பட்ட ஆபரணம் என்றே அறியப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தாலி, காதோலை போன்ற ஆபரணங்கள் பனை ஓலையில் செய்யப்பட்டு அணியப்பட்டதாக இலக்கியக் குறிப்புக்கள் மூலம் அறியக் கிடக்கின்றது. தாலம் என்பது தமிழில் பனைக்கு வழங்கும் ஒருசொல். அத்தோடு திராவிட மொழிகளில் ஒன்றாகிய மலையாளத்தில் பனைக்குதாலி என்ற ஒரு பெயரும் உண்டு. இது மேற்குறிப்பிட்ட கருத்தை மேலும் வலுவூட்டுவதாக அமைந்திருக்கிறது.


### இயற்கையின் பாதுகாப்பு

பனை உயர்ந்து வளரும் ஓர் மரம். இது பல்லாயிரம் சிம்பு வேர்களைக் கொண்டது. இதற்கு ஆணி வேர் இல்லை. என்றாலும் இதன் வேர் 20 தொடக்கம் 25 அடி ஆழம் வரை செல்லக்கூடியது. இதனால் நிலக்கீழ் நீரை இலகுவில் பெற்று மிக வறண்ட காலநிலை உள்ள பிரதேசங்களிலும் இது வளருகின்றது. தாவரப் பரம்பலில் இது காலநிலைச் சமன்பாட்டை ஏற்படுத்தும் ஒரு காரணியாகவும் தொழிற்படுகின்றது.

வடமாகாணத்தில் யாழ். குடாநாட்டிலும் அதன் தீவகங்களிலும் முதன்மைத் தாவரமாக பனை விளங்குகிறது. வெப்பம், மழை ஆகியவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாகக்கூட பனை மரம் திகழ்கின்றது. மண் அரிப்பினையும், கடல் அரிப்பினையும் தடுப்பதற்கு மிக உகந்த மரமாகவும் அடையாளம் காணப்படுகின்றது.







இவை வெப்பம் நிறைந்த இடங்களிலும், குறைந்த மழைவீழ்ச்சியுள்ள இடங்களிலும் மணற்பாங்கான தரை, மணற்குன்றுகள், சுண்ணக்கற்பாறைப் பிரதேசம், உவர்நிலம், கடல் நீர் கலந்த நீரேரி உள்ள இடங்களிலும் வளர்கின்றன. பனைகள் பொதுவாக தை, மாசி மாதத்தில் பூத்து ஆறு மாதங்கள் வரை அதாவது ஆவணி மாதம் வரையில் பாளையாக வளர்கின்றன. பெண் பாளையின் பூக்களில் குரும்பை பிடித்து நுங்கு ஆகி பின்பு பழமாகி விழுகின்றது. பூ பூத்து குரும்பை பிடிக்க ஆரம்பிக்கும் காலத்திலேயே இந்தப் பனைகள் பதப்படுத்தப்பட்டு இதில் இருந்து கள்ளோ அல்லது பதனீரோ பெறப்படுகின்றது.

### அழிவடையும் வளம்

வடக்கு கிழக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் பனைகள் கூடுதலாக வியாபித்திருக்கின்றன. கிளிநொச்சி, பூநகரி பிரதேசங்களில் இவை கூடுதலாக வளர்கின்றன. யாழ்ப்பாணத்தில் தீவகம் மற்றும் தெல்லிப்பழையிலும் இவற்றை அதிகம் காணலாம்.

இந்தியாவைவிட, இலங்கையில் பனம்பழத்தையும் பதநீரையும் மூலப்பொருளாகப் பயன்படுத்தி கூடுதலான விளைபொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக பழத்திலாலான களி, கோடியல், ஜாம் மற்றும் பதநீரிலான பனங்கட்டி , பனங்கள், பனஞ் சாராயம் என்பவற்றைக் கூறமுடியும். பனையின் பாரம்பரியமான முதன்மையான பொருள்களாக மரத்திலான கைப்பணிப் பொருள்கள், கட்டடப் பொருள்கள், இளம் பனைக் கங்கிலான தும்பு, பனம்பழத்தினாலான பணியாரம், பனாட்டு, நுங்கு, பனங்கிழங்கு, ஒடியல் என்பனவும் இதேபோன்று பாணி, கல்லாக்காரம், சீனி என்பனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

போட்டிப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் உள்ளூர்ப் பனம்பொருள் சார்ந்த உற்பத்தியை ஊக்குவிக்கவும் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் பொருட்டும் வெவ்வேறு நிறுவனங்கள் பனை அபிவிருத்தியில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக பனை அபிவிருத்திச் சபை, கூட்டுறவுத் திணைக்களம், பல்கலைக்கழகம் மற்றும் தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் சமாசங்கள் என்பவை இவற்றில் சொல்லத்தக்கவை.

என்றாலும் இந்தக் கற்பகதருவை நாம் அழித்து வருகின்றோம். பற்பல காரணங்களுக்காக பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் முதன்மையாக விளங்குவது வீடு கட்டுவதற்கான மரத் தேவையே. தென்னிலங்கையில் வீடு கட்டும் தேவைக்காக தென்னை மரத்தை பயன்படுத்தும்போது வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பனை மரத்தையே பாவிக்கின்றனர். கடந்த காலங்களில் போர் நடவடிக்கையில் முகாம் பாதுகாப்பு, அரண்கள் மற்றும் பதுங்கு குழிகள் அமைத்தல், முகாம் விரிவாக்கம் போன்ற காரணங்களுக்காக பனைகள் பெருமளவில் அழிக்கப்பட்டன. அதே தேவைகளுக்காக தற்போதும் அவை அழிக்கப்பட்டு வருகின்றன. ஷெல், குண்டுத் தாக்குதல்களினாலும் அதிகளவான பனை மரங்கள் அழிக்கப்பட்டன.

கடந்த காலங்களில் வருடமொன்றுக்கு சுமார் 5 லட்சம் பனைகளுக்கு குறையாமல் அழிவடைந்திருக்கிறது என்கிறது புள்ளிவிவரம். இவற்றின் அழிவானது சூழலைப் பாதிக்கின்றது. மழை வீழ்ச்சியைக் குறைகின்றது. ஆகவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் பனை மரத்தை வளர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. இதன் மூலம் சூழல் பாதுகாப்பையும் மழை வீழ்ச்சியையும் அதிகரிக்க முடியும். அழிந்து போகும் பனை வளத்தை பாதுகாக்கலாம். பனையின் எண்ணிக்கையைப் பெருக்கி, அதனை நம்பி வாழுகின்ற குடும்பங்களின் தொழிலை காக்க முடியும். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

### பாதுகாப்பது நம் கடமை

கற்பகதரு என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற பனையானது யாழ். மண்ணின் முக்கிய வளங்களில் ஒன்று. அந்நிய ஆட்சியும், அந் நிய கலாசாரமும் இந்த மண்ணில் வேரூன்றுவதற்கு முன் எம் மூதாதையர் எமது அடிப்படைத் தேவைகளில் பெரும் பாலான வற்றை பனையிலிருந்தே பெற் றனர்.

அந்நிய மோகம் எம்மைப் பனையிலிருந்து தூர விரட்டிவிட்டது. காலப்போக்கில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள் பனையின் முக்கியத்துவத்தை பின்தள்ளி இருக்கின்றன. பனம் உணவுப் பொருள்களும் அதன் உற்பத்திகளும் இழிவுப்பொருள்களாகிவிட்டன.

இந்த நிலையிலி ருந்து நாம் மீண்டு வரவேண்டும். பனைகளின் நிழலில் வாழும் மனிதர்களாகத் தமிழர்கள் நிமிரவேண்டும்.

பனை மரங்கள் தற்போதும் கண்மூடித்தனமாக தறிக்கப்படுகின்றன. இருந்தபோதும் காலமாற்றமும் எம்மீது சுமத்தப்பட்ட பல்வேறு நெருக்கடிகளும் நமது பாரம்பரிய வளமாக பனையைப் பேணவும் அதனைப் பயன்படுத்த வேண்டிய விழிப்புணர்வையும் நம்மிடையே ஏற்படுத்தி இருக்கின்றன.

அது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அதனைப் பாதுகாக்க ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும். அந்த வகையில் வடமாகாண விவசாய அமைச்சு கடந்த வாரம் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடத்திய பனம்பொருள்சார் உற்பத்திகளின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் வரவேற்கத்தக்கன. வடமாகாண நகரங்கள் எங்கும் அவை கொண்டு செல்லப்பட வேண்டும். பனையின் நிழல் வடக்கு கிழக்கு முழுவதும் படர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒற்றையாட்சியும் அதிகாரப் பகிர்வும்

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு உரையாற்றும்போது ஒற்றையாட்சிக்குள் அதி உச்ச அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்ட பின்பு ஊடகவியலாளர் மத்தியில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு என்பதை ஏற்க முடியாது எனவும், ஒற்றையாட்சி எப்போதுமே பெரும்பான்மை இனத்தின் கைகளிலேயே இருக்கும் என்பதால் நியாயமான அதிகாரப் பகிர்வு சாத்தியமில்லை என்றும் தெரிவித்திருந்தார். மாறாக இணைந்த வடக்கு, கிழக்கு தமிழரின் பாரம்பரிய வாழிடம் என்பது ஏற்கப்பட்டு, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வு என்பதே கூட்டமைப்பின் கொள்கை எனவும் தெரிவித்தார். அதேவேளையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் எனவும் ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு, கிழக்கு இணைந்த எமது நிலம், பொருளாதாரம், கலாசாரம், பாதுகாப்பு என்பன தொடர்பான சுயாட்சியே கோரிக்கை எனவும் தெரிவித்திருந்தார்.

**தீர்வும் சிங்களமும்**

திம்புக் கோட்பாடுகளின் அடிப்படை, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதும் வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதுமாகும். அந்தக் கோரிக்கையை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா முற்றாக நிராகரித்த காரணத்தாலேயே திம்புப் பேச்சு முறிவடைந்தது என்பதை நாம் மறந்து விடமுடியாது. இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரும் அரசியல் ஞானகுருவும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாதான் என்ப தும் இங்கு கவனிக்கப்படவேண்டியது.

2002ஆம் ஆண்டு ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு, கிழக்கு இணைந்த உள்ளகசுயநிர்ணய உரிமையுடன்கூடிய அதிகாரப் பரவலாக்கம் என்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளுக்கும் ரணில் தலைமையிலான அரசுக்குமிடையே பேச்சுகள் இடம்பெற்றன என்பதும் கவனத்துக்குரியது. இந்த ஒப்பந்தத்தில் அன்றைய ஜனாதிபதி திருமதி சந்திரிகா விஜயகுமாரதுங்க அரச தரப்பில் கையெழுத்திட்டார் என்பதையும் மறந்துவிடமுடியாது. ஆனால் ரணில், கருணாவை விடுதலைப் புலிகளிடமிருந்து சதி மூலம் பிரித்து எடுத்தமையால் பேச்சுக்கள் முறிவடைந்தன.

அந்தப் பேச்சுக்களுடன் சம்பந்தப்பட்ட ரணிலும், திருமதி சந்திரிகாவும் நல்லாட்சிக்கான ஒரே அணியில் இப்போது இணைந்துள்ளார்கள் என்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். எப்படியிருப்பினும் பண்டா – செல்வா ஒப்பந்தம் முதல் புலிகள் – ரணில் பேச்சு வரை அவை அரச தரப்பாலேயே கைவிடப்பட்டன. அல்லது கைவிட வைக்கப்பட்டன.

இப்படி ஒரு பக்கம் பேச்சு நடந்து வந்தபோதும் இன ஒடுக்கு முறை நடவடிக்கைகளும் காலம் காலமாக மேலும் மேலும் வலுவடைந்தே செல்கின்றன. தமிழர் தரப்பின் பலம் அதிகரிக்கும்போதும், போராட்டங்கள் தீவிரமடையும் போதும் பேச்சை ஆரம்பிப்பதும் பின்பு அவற்றைக் கைவிடுவது அல்லது குழப்புவது என்பதும் வரலாறாகி வருகிறது.

இந்த நிலையில்தான் 2015 நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தமிழ் மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. அது மட்டுமன்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்தும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒன்றுடன் ஒன்று ஒட்ட முடியாத இரு வேறு தரப்பட்ட கருத்துக்கள் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்ட பின்பு. இன்று எமது பேரம் பேசும் சக்தியை அதிகரிப்பதைவிட எமக்கு மாற்றுவழிகள் எதுவுமே இல்லை. பேரம் பேசும் சக்தி அதிகரிக்கப்பட எமது நாடாளுமன்றப் பலம் அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன் ஜனநாயகப் போராட்டங்கள் முனைப்புடன் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கு எமது இலட்சிய உறுதியும் இரும்பு போன்ற ஐக்கியமுமே முக்கியமானதாகும் என்பதை எவருமே மறுத்துவிட முடியாது.

அதாவது எமது உரிமைப் போராட்டத்தில் எப்போதுமே எமது பலம் என்பதே அடிப்படையானது.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் போராட்டங்களோ, இந்தியத் தமிழ் மக்கள் வழங்கும் ஆதரவோ சர்வதேச நாடுகளின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான நிலைப்பாடோ எமது பலத்தின் அடிப்படையிலும் எமது இலட்சிய உறுதியிலுமே பயன்தரவல்லவையாக அமைய முடியும். எனவே எதிர்வரும் தேர்தலில் எமது மக்களின் ஐக்கியம் மீண்டுமொருமுறை உறுதி செய்யப்படவேண்டும்.

**மஹிந்த எதிர்ப்பு**

ஏற்கனவே 2010இல் இடம்பெற்ற பொதுத் தேர்தல், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ஒரு முகமாக வாக்களித்தமை போன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது மக்கள் எமது ஐக்கியத்தையும் இலட்சிய உறுதியையும் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

எதிர்வரும் தேர்தலிலும் இப்படியான ஒரு வெளிப்பாடு அவசியத்திலும் அவசியமாகத் தேவைப்படுகிறது. அதிலும் தென்னிலங்கையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடையில் கடும்போட்டி நிலவும் நிலையில் எவரும் அமோகமான வெற்றியைப் பெற்று ஆட்சியமைக்கும் சாத்தியம் இல்லை. எனவே மூன்றாவது சக்தியுடன் பேரம் பேசி ஆதரவைத் திரட்ட வேண்டிய தேவை எழும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த மூன்றாவது சக்தியாகத் தமிழர் தரப்பு நிலைபெற வேண்டுமானால் எமது நாடாளுமன்றப் பலம் அதிகரிக்கப்படுவது அவசியமானதாகும். ஆனால், அது சாத்தியம்தானா என்ற கேள்வி எழுகிறது.

தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் தமது ஐக்கியத்தை துலாம்பரமாக வெளிப்படுத்திய போதும், தமிழ்த் தலைமைகளால் தங்களிடையே நட்பு ரீதியான அணுகுமுறை மூலம் அந்த மாதிரியான ஐக்கியத்தை உருவாக்க முடியவில்லை. அது மட்டுமன்றி கடந்த கால அனுபவங்களிலிருந்து எவரும் பாடங்களைக் கற்று ஆரோக்கியமான வழித்தடத்தில் பயணிக்கவும் தயாராயில்லை. ஒவ்வொரு தரப்பும் தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற தோரணையில் அரசியலைக் கையாள்கின்றனரே தவிர, அனைவரும் ஐக்கியப்பட்டு எமது பலத்தைப் பெருக்க எவரும் தயாராயில்லை.

**ஐக்கியப்படமுடியாத் தலைமைகள்**

2010ஆம் ஆண்டும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழர் தரப்பில் போட்டியிட்டன. முன்னணி அந்தத் தேர்தலில் ஓர் ஆசனத்தைக்கூடப் பெறவில்லையாயினும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு விழ வேண்டிய வாக்குகளையே பிரித்துக்கொண்டது. அதன் காரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்க வேண்டிய ஆசனங்கள் குறைவடைந்தன.

இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்குகள் குறைவடைந்த நிலையில் விகிதாசார அடிப்படையில் ஈ.பி.டி.பிக்கு 3 ஆசனங்களும் ஐக்கிய தேசிக் கட்சிக்கு ஓர் ஆசனமும் கிடைத்தன. ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போதும், மாகாணசபைத் தேர்த லின்போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடவில்லை. அதன் காரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெற்றது. ஏனைய தரப்பினரால் ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களையே பெறமுடிந்தது.

இந்த அனுபவத்தைத் தமிழ்த் தலைமைகள் கற்றுக்கொள்ள மறுத்து குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரை கொடுப்பது போல் எதிர்த்தரப்பினருக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றாலும் சரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்றாலும் சரி முன்னாள் போராளிகளின் ஜனநாயக அமைப்பு என்றாலும் சரி ஒரே கொள்கையையே பேசுகின்றன. எவரும் தமிழீழம் கோரவில்லை. எல்லோருமே இணைந்த வடக்கு, கிழக்கில் சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கையையே முன் வைக்கின்றனர். அப்படியானால் ஏன் இவர் களால் ஐக்கியப்படமுடியாது? மக்களிடம் ஐக்கியம் கோரும் இவர்களால் ஏன் தங்களுக்குள் ஐக்கியப்படமுடியவில்லை?

இப்படியான ஓர் ஐக்கியம் ஏற்படவிடாமல் அன்னிய உளவு நிறுவனம் ஏதாவது தடுக்கிறதா? அதாவது இந்திய உளவு நிறுவனமான றோவின் மறை கரங்கள் செயற்படுகின்றனவா? அல்லது விடுதலைப் புலிகளின் அடையாளங்களைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து அகற்ற எடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியா? அல்லது ஒரு சில புலம்பெயர் அமைப்புக்களின் ஒரு தீவிரப் போக்கின் அழுத்தமா?

எப்படியிருப்பினும் தமிழ்க் கட்சிகள் மத்தியில் நிலவும் ஐக்கியமின்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பலத்தைப் பாதிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. உணர்ச்சிகரமான மேடை முழக்கங்களாலோ அல்லது ஒருவரை ஒருவர் திட்டித் தீர்ப்பதனாலோ இந்தப் பின்னடைவைத் தடுத்து நிறுத்திவிடமுடியாது.

இப்படியான தனித்தோடும் போட்டிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ எந்தவித பயனையும் பெற்றுவிடமுடியாது. தமிழ் மக்களுக்கும் ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்திவிட முடியாது. மாறாக அதனால் பயன் பெறுபவர்கள் ஈ.பி.டி.பியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினருமே என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு என்ற கட்டத்துக்கு அப்பால் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். கட்சிகளின் நலன்களைவிட மக்கள் நலனே முக்கியம் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். முதலமைச்சரும் அண்மையில் அதனைத்தான் கூறியிருக்கிறார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்படுத்தக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்தும் யுத்திபூர்வமான கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரிஹான பகுதியில் பிடிபட்ட வெள்ளை வான் ஏற்படுத்திய அரசியல் பரபரப்பு





ரம்யன்

கடந்த வாரம் 20ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் மிரிஹான பொலிஸார் சந்தேகத்துக்குரிய விதத்தில் வந்த வெள்ளைவான் ஒன்றை நிறுத்திச் சோதித்து அதில் பயணம் செய்த இராணு வத்தினர் மூவரைக் கைது செய்தனர். அந்தச் சமாசாரம் அர சியலில் பரபரப்பாகப் பேசப்பட்டது ஒருபுறமிருக்க, அரசியல் வாதிகள் அவசர குடுக்கைத்தனமாக வெளியிடும் கருத்துக்கள் சில சமயம் அவர்களுக்கே சிக்கலை ஏற்படுத்துவதாக அமைந்து விடுவதையும் காட்டுவதாய் இருந்தது.

கைது செய்யப்பட்ட ஓர் இராணுவச் சிப்பாயிடம் கைத்துப்பாக்கி ஒன்றும் இருந்துள்ளது. கைத்துப்பாக்கியும் வெள்ளை வானும் இராணுவத்தின் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவின் தனிப்பட்ட பாதுகாப்பு சேவைப் பிரிவுக்குரியவை என்று பின்னர் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி ஆங்கிலப் பத்திரிகை ஒன்று பல தகவல்களை வெளியிட்டுள்ளது. அதன் சில பகுதிகளை நாம் இங்கு, பார்க்கலாம்.

இந்த இராணுவத்தினரும் அவர்கள் பயணம் செய்த வானும் கைப்பற்றப்பட்டதையடுத்து அதுபற்றிய மர்மத்தைக் கண்டறிய பொலிஸார் தீவிர முயற்சியில் இறங்கியிருந்தவேளையில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்குள் ஓர் அரசியல் நாடகம் இடம்பெறத் தொடங்கியது. கைது நடைபெற்றது திங்கட்கிழமை இரவு (20). அதனை பொலிஸார் வெளிப்படுத்தியது செவ்வாய்க்கிழமை (21) பிற்பகல். இதில் விசித்திரம் என்னவென்றால், செவ்வாய்க்கிழமை பிற்பகல் விவரத்தை பொலிஸார் அல்லது அரசு வெளியிடுவதற்கு முன்பே அந்த விடயம் சுதந்திரக் கூட்டணிக்கு தெரியவந்திருந்தமைதான்.

செவ்வாய்க்கிழமை சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளர் உதய கம்பன்பிலவுக்கான தேர்தல் கூட்டத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பேசுகையில் அந்த வெள்ளை வான் விடுதலைப் புலிகளுக்குரியது. அதை இப்போது இராணுவத்தினர் பாவிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அத்துடன் வெள்ளை வானை அனுப்பியிருப்பதானது தம்மையும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் கொலை செய்வதற்கான முயற்சி என்றும் குமுறினார். நாங்கள் நுகேகொடையில், வான் கைப்பற்றப்பட்ட குறித்த சுற்றுவட்டாரத் திலேயே வாழ்கிறோம் என்றும் தெரிவித்திருந்தார்.

"நான் மிரிஹானவில் வசிக்கிறேன். மஹிந்தவும் மிரிஹானவிலேயே வசிக்கின்றார். ஒரு வெள்ளை வான் கடந்த இரவு (ஜூலை 20) மிரிஹானா பகுதியில் பிடிபட்டுள்ளது. அதில் போலி இலக்கத்தகடே இருந்துள்ளது" என்று அவர் கூறினார்.

"அந்த வான் முன்பு விடுதலைப்புலிகளால் பாவிக்கப்பட்டது. ஆயுதத்துடன் கைப்பற்றப்பட்டது. மூன்று படையினர் அதில் சிவில் உடையில் இருந்துள்ளார்கள். இப்போது அவர்கள் மிரிஹானா பொலிஸ் காவலில் இருக்கிறார்கள்" என்று அவர் மேலும் கூறினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய விவரத்தை மேலும் வெளியிடுமாறு கேட்டபோது தாம் அரசின் அதிகாரபூர்வ அறிக்கையையே மேற்கோள் காட்டுவதாக கோத்தபாய கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா புதன்கிழமை (22) ஊடகங்களுக்கு இதுபற்றித் தெரிவித்தபோது இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி அந்த வாகனம் விடுதலைப்புலிகளுடையது, முந்திய ஆட்சிக் காலத்தில் அது இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டிருந்தது என்றார். அவர் மேலும் கூறுகையில், இராணுவ பாதுகாப்பில் இருந்தபோது பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் பாதுகாப்புப் படைகளினால் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றார். இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட வாகனம் பதிவு செய்யப்படாமல் இருந்துள்ளது. அந்த இராணுவப் பிரிவு, முன்னாள் செயலாளர் கோத்தபாயவின் கீழ் இயங்கியுள்ளது. ஏனைய வெள்ளை வான்களுக்கும் என்ன நடந்தது என்பதை நாங்கள் வெளியிடவிருக்கிறோம் என்று அமைச்சர் கூறினார்.

குறித்த வாகனம் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்குரியது என்று இராணுவத்தினர் பின்னர் உறுதிப்படுத்தினார்கள்.

## ஆயுதத்தை எடுத்து வரவே சென்றனர்

அன்றை தினம் அந்த வாகனம் மேஜர் ஜெனரல் சில்வாவின் கட்டளைக்கு இணங்க, நுகேகொடையிலுள்ள அவரது வீட்டிலிருந்த அவரது கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு கொழும்பிற்குத் திரும்புவதற்காக அனுப்பப்பட்டிருந்ததாகவும் கொழும்பிலிருந்து அவர்கள் கண்டிக்குச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயந்த ஜயவீர தெரிவித்திருந்தார். மேஜர் ஜெனரல் சில்வாவின் கைத்துப்பாக்கியை அவருடைய பாதுகாவலர்களில் ஒருவர் கொண்டு சென்றதில் குற்றம் எதுவும் இழைக்கப்படவில்லை என்றும் பயிற்சிபெற்ற இராணுவத்தினரை தமது ஆயுதத்தை வைத்திருக்கும்படியாக மூத்த இராணுவ அதிகாரிகள் உத்தரவிடுவது ஒன்றும் புதிய விடயமில்லை என்றும் இராணுவ சட்டப் பணிப்பாளர் பிரிகேடியர் ராஜபதிரன உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் படையினர் ஆயுதம் எடுத்துச் செல்கையில் கட்டாயம் சீருடை அணிந்திருக்க வேண்டும் என்பதில்லை என்றும் அவர் கூறினார்.

## வீரவன்ஸ கிளப்பியுள்ள புரளி

இவ்வாறு இதில் சதி முயற்சி எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்று இராணுவத்தினர் மறுத்துரைத்துக் கொண்டிருந்த அதேவேளை, புதன்கிழமை மதியம், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்பாளர் விமல் வீரவன்ஸ ஓர் ஊடகச் சந்திப்பில் அந்த வெள்ளை வான் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவையும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் கொலை செய்வதற்கான சதி முயற்சியில் ஈடுபட்டிருந்தது என்று தெரிவித்திருந்தார்.

"அந்த வெள்ளை வான் விடுதலைப் புலிகளுடையது. அதில் பிரயாணம் செய்த நால்வரிடம் தானியங்கித் துப்பாக்கி ஒன்று இருந்துள்ளது. அது மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்குச் சொந்தமானது. அவர்கள் 24 மணி நேரத்துக்குள் விடுதலையானார்கள். இது ஓர் அரசியல் உள்நோக்கம் கொண்டது. சுடுகருவிகள் சட்டத்தின் கீழ் இது ஒரு பெரிய குற்றச்செயல். இது ஒரு சதி முயற்சி. எனது மனைவியின் தேசிய அடையாளஅட்டைப் பிரச்சினை எடுக்கப்பட்டபோது பல தடவைகள் அவர் விசாரிக்கப்பட்டார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், காவலில் வைக்கப்பட்டார்" என்று கூறிய வீரவன்ஸ மேலும் கூறியதாவது;

"மிகப் பாரதூரமான வெள்ளை வான் விடயம் அப்படியே கைவிடப்பட்டுள்ள நிலையில் என் மனைவி விடயம் ஏன் அவ்வளவு விரிவுபடுத்தப்பட்டது? வாகனத்தில் இருந்த நால்வரும் முறையாக விசாரிக்கப்பட்டிருந்தால் கேலிச்சித்திர வரைஞர் மர்மமான முறையில் காணாமற்போனது தொடர்பான உண்மைகளும் வெளிவந்திருக்கும்" என்று வீரவன்ஸ கூறினார்.





வீரவன்ஸவின் கூற்றுப்படி கேலிச்சித்திரக் கலைஞர் (பிரகீத் எக்னெலிகொட) வெள்ளை வானால் கடத்தப்பட்டது மட்டுமல்ல அதனுடன், மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவையும் சம்பந்தப்படுத்தி குறிப்பிட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

புகழ்பெற்ற படை அதிகாரியாகக் கருதப்படும் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவை சட்ட விரோதக் கொலையுடன் தொடர்புபடுத்துவதான வீரவன்ஸவின் கூற்று உயர் வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தியிருப்பதுபோக, வழமையான வீரவன்ஸவின் தேசப்பற்று பிரலாபத்துடன் ஒத்துப்போவதாகவும் இல்லை.

வீரவன்ஸவின் கருத்தை பலர் கண்டித்திருப்பதுடன் ஓய்வு பெற்ற இராணுவத்தினரின் அமைப்பான அபிரணவிருவோ உறுப்பினரான கேணல் ஜயவி பெர்னாண்டோ கூறுகையில், இந்த மாதிரியான கருத்துக்களை அரசியல் இலாபம் பெறுவதற்கான அரசியல்வாதிகளின் கூற்று என்றார். ரியர் அட்மிரல் எஸ். ஆர்.சமரதுங்க கூறுகையில்; "வெள்ளை வான் கலாசாரம் ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர்தான் நிலவி வந்தது" என்றார்.

கடந்த காலங்களில் வெள்ளை வான் அச்சுறுத்தல் நிலவிய போது மனித உரிமை அமைப்பொன்று 2011ஆம் ஆண்டு ஒக்ரோபரிலிருந்து 2012ஆம் ஆண்டு பெப்ரவரி வரையில் எடுத்த புள்ளிவிவரத்தின்படி கொழும்பு சுற்றுவட்டத்தில் மட்டும் 29 ஆள்கடத்தல்கள், மூவர் காணாமற்போன சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஒவ்வொரு ஆள்கடத்தலோடும் ஒரு வெள்ளை வான் சம்பந்தப்பட்டிருந்துள்ளது. கடத்தப்பட்ட அனேகர் இன்னமும் காணாமற் போனவர்களாகவே கருதப்படுகின்றனர்.



# கொழும்பு தெருக்களில் சீனப் பிச்சைக்காரர்கள்

பிச்சை எடுப்பது சட்டவிரோதம். ஆனால், பிச்சை எடுப்பதை எவ்வாறு தடுப்பதென்பதில் அதிகாரிகள் பெரும் திக்குமுக்காடி வருகிறார்கள். குறிப்பாக கொழும்புத் தெருக்களில் பிச்சைக்காரர்களின் தொல்லை அதிகரித்துவிட்டது என்று கூறப்படுகின்றது.

பிச்சைக்காரர்களில் பலர் உண்மையாகவே தம்மைப் பராமரிப்பவர்கள் இல்லை என்ற காரணத்தினால் இந்தத் தொழிலுக்கு வருகிறார்கள். இன்னும் சிலர் இதனை தினசரித் தொழிலாகவே செய்கிறார்கள். இதில் பலவிதமான தந்திரங்களைக் கையாள்பவர்களும் உண்டு.

இப்பொழுது கொழும்புத் தெருக்களில் வெளிநாட்டுப் பிச்சைக்காரர்கள் அதிகரித்துக் காணப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. அதுவும் அண்மையில் கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்துக்கு அருகில் பிச்சை எடுப்பதன் மூலம் பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்தார்கள் என்ற வகையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கொழும்பு கோட்டை நீதிமன்றில் நிறுத்தப்பட்ட ஆறு சீனர்களுக்கு தலா 100 ரூபாய் வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த சீனர்கள் எப்படி இங்கு வந்தார்கள்? ஏன் பிச்சை எடுத்தார்கள்? என்பது ஒன்றும் தெரியவரவில்லை. கொழும்பில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கும் இவர்கள் பிச்சை எடுப்பதில் ஈடுபடுகிறார்கள் என்று கூறப்படுகின்றது. அவர்களுக்கென்று ஒரு தலைவர் இருப்பதாகவும் அவரே அவர்களைப் பிச்சை எடுப்பதில் ஈடுபடுத்துகிறார் என்றும்கூட கூறப்படுகின்றது.

சீனாவில் பிச்சை எடுப்பது ஒரு பெரிய குற்றமாகும். அதனால் அங்கு தெருக்களில் பிச்சை எடுப்பவர்களைக் காண முடியாது. இருந்தாலும் பாடி ஆடி மக்களை மகிழ்வித்து பிச்சை எடுப்பதாகக் கவனிக்கப்படுவதில்லை அங்கு. வாழ்வாதாரத்துக்காகத் தம் திறமையைப் பயன்படுத்தும் ஒரு தொழில் என்று கருதப்படுகின்றது.

கொழும்பு கோட்டையில் பிச்சை எடுக்கையில் கைது செய்யப்பட்ட சீனர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். இவர்களில் இரண்டு எதிரிகளே குற்றத்தின் சூத்திரதாரிகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெட்டிப் பொழுதுபோக்கு



தலைப்பே படத்தின் கதையைச் சுமந்து கொண்டிருக்கிறது. பத்து பவுன் தங்கச் சங்கிலி தெருவில் கிடக்கிறது. அதை யாரும் எடுக்க மாட்டேன் என்கிறார்கள். தொலைத்தவரே திரும்ப வந்து எடுத்துக்கொண்டு போய் விடுவார் என்ற ரீதியில் அடுத்தவர் பொருளுக்கு ஆசைப் படாமல் வாழ்கிறார்கள். அந்த அளவுக்கு நேர்மையாக இருக்கும் ஒரு கிராமம் பொற்பந்தல். மது, புகை எதுவும் இல்லாத கிராமம் அது. கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவரிடம், சாக்கடை அடைத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், அவரே தனது வெள்ளைச் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டுச் சாக்கடை அடைப்பை நீக்கும் வேலையைச் செய்துவிட்டுச் செல்லும் அளவுக்கு அற்புதமான அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு கிராமம்.

சிறந்த கிராமம் என்று தொடர்ந்து ஜனாதிபதி விருது வாங்கும் இந்தக் கிராமத்தில் ஒரு காவல் நிலையம். குற்றமே இல்லாத ஊரில் காவல் நிலையத்துக்கு என்ன வேலை? அருள்நிதி, சிங்கம்புலி, பகவதி பெருமாள், ராஜ்குமார் ஆகியோர் வேலை செய்யும் அந்தக் காவல் நிலையம் மனமகிழ் மன்றம்போல நடக்கிறது. ஆளில்லாத கடையில் டீ ஆற்ற வேண்டாமே என்று இவர்கள் நால்வரையும் வேறு ஒரு ஊருக்கு மாற்றல் செய்ய முடிவெடுக்கிறது மாவட்டக் காவல்துறை. சிங்கம் புலி கூட்டணிக்கு அந்த ஊரை விட்டுச் செல்ல விருப்பமில்லை. போகும் ஊரில் குற்றங்கள் அதிகம் என்பதால் பயமும் அவர்களைப் பிடித்துக்கொள்கிறது. கிராமத்தில் குற்றம் நிகழச்செய்து வழக்கு பதிவு செய்துவிட்டால் அந்த ஊரிலேயே இருக்கலாம் என்ற நப்பாசையில் நச்சு வேலைகளில் இறங்குகிறது இந்த நால்வர் அணி. அதன் பிறகு அந்த அமைதியான ஊரின் நிலை என்னவாக மாறியது என்பதுதான் கதை.

கதையாகக் கேட்பதில் இருக்கும் சுவாரஸ்யம் காட்சிகள் மற்றும் திரைக்கதையில் இல்லாமல் போனமை படத்தின் பெரும் சோகம். ஊரின் அருமையான சூழலையும் அதைக் கெடுக்க பொலிஸார் செய்யும் அபத்தமான முயற்சிகளையும் கொண்டு முதல் பாதியை நகைச்சுவையாக நகர்த்துகிறார் அறிமுக இயக்குநர் கிருஷ்ணா.

இரண்டாம் பாதியில் ஊர் கெட்டுப் போவதையும் அதைத் தடுக்கும் முயற்சிகளையும் சொல்கிறார். இரண்டுமே சொல்லப்படும் விதத்தில் கூறியது கூறல் ஆகிச் சோதிக்கின்றன.

அருள்நிதியின் காதல், அவர் கனவுலகில் சஞ்சரிப்பது, கனவிலேயே காதலைச் சொல்வது, நடந்தது உண்மையா கனவா எனத் தெரியாமல் குழம்புவது என்று இளமை ரசத்தையும் கூட்ட முயல்கிறார் இயக்குநர். ஆனால் படத்துக்கு எந்த விதத்திலும் ஒட்டாத தனிப் பாதையில் பரிதாபமாக நிற்கிறது காதல் அத்தியாயம்.

எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும் சக மனிதர்கள் மீது நம்பிக்கை குலையும்போதும், தன்முனைப்பு எட்டிப் பார்க்கும்போதும் நல்லுணர்வுகள் பின்னுக்குப் போய் கோபமும் வெறுப்பும் முனைப்பு பெறுவதை வலுவாகக் காட்டியிருக்கிறார் இயக்குநர். ஆனால் இந்தப் புள்ளிக்கு வருவதற்கான காரணங்களை முறையாகக் காட்சிப்படுத்தத் தவறிவிட்டார். தூய்மை, பக்குவம், கருணை, விட்டுக் கொடுத்து வாழ்தல், ஒவர் மீது ஒருவருக்கு இருக்கும் நம்பிக்கை என எல்லா நல்ல குணங்களின் கலவையாக வாழும் மனிதர்கள் சட்டென்று உணர்ச்சிவசப்படுவதும் இரு அணிகளாகப் பிரிந்து கடும் வன்முறையில் இறங்குவதும் ஏற்றுக் கொளும்படியாக இல்லை. அதை நம்பும்படி இயக்குநர் சொல்லவும் இல்லை.



திருந்தி வாழும் திருடர் மீண்டும் திருட ஆரம்பிப்பது, நேர்மையான இளைஞர்களை அவர் திருட்டுக் கும்பலாக மாற்றுவது ஆகியவையும் நம்பும்படியாக இல்லை. சிங்கப்புலி தனது வழக்கமான மிகை நடிப்பைக் கொட்டினாலும் நால்வர் அணியில் அவரே பளிச் சென்று பதிவாகிறார். அருள்நிதி கிட்டத்தட்ட ரன் அவுட்தான். வழக்கமான நாயக வேடங்களைத் தவிர்த்து வித்தியாசமான வேடங்களைத் தேர்ந்தெடுப்பது நல்ல விஷயம்தான். ஆனால் வலுவான பாத்திரமாக அமைய வேண்டாமா?

நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம் படத்தில் அறிமுக நட்சத்திரங்களாகக் கலக்கிய பகவதி பெருமாள், ராஜ்குமார் இருவரும் பரிதாபகரமாக எந்த வேலையும் இல்லாத பொலீஸ்காரர்களாக வந்து போகிறார்கள்.

இயக்குநர் காட்சிகளை வலுவாகவும் நம்பகத்தன்மையோடும் அமைக்கத் தவறிவிட்டது தான் பெரும் கோளாறு. எனினும் காட்சிகளில் இருக்கும் கலகலப்பு படத்தை ஓரளவு காப்பாற்றுகிறது. வெட்டியாக நேரம் நிறைய இருந்தால் இந்தப் படத்தைப் பார்க்கலாம்.

# எங்கே போகிறோம்......?

பிறர் வாழத்
தமை ஈந்து
புது வரலாறு எழுதி
மௌனித்த மறவர்கள்
பிறந்திட்ட நாட்டில் அவர்
உறவாகிப்போன
தமிழர்கள் வாழ்வில்
இது என்ன ஈனம்.....?
தெருவோரம் உறவொன்று
ரணம் வாங்கித் துடிக்க
தொடர்பற்ற நபராகி
வேடிக்கை பார்க்கும்
நிலை வந்ததேன்....?
வலி நூறு கண்டு
வதையோடு வாழ்ந்து
விழி நீரில் மூழ்கி
இருள் சூழ்ந்தபோதும்
உறவெல்லாம் ஒன்றென்று
கரம் சேர்ந்த மக்கள்
இது நியாயந்தானோ....?
அழியாத வடுக்கள்
ஆறாத காயங்கள்
தொடர் வண்டியாகி
துயரேந்திச் செல்கின்ற
நெடுந்தூரப் பயணத்தில்
விடியல்கள் புலனாகும்
நிலைவந்த இவ்வேளை
விசர் வந்த இக்கோலம் முறையோ...?
மனச்சாட்சிகொன்று
மனிதத்தைத் தின்று
மனிதத்தை சினிமாவாய்
வேடிக்கை பார்த்து
பயணிக்கும் வழி சரியா...?
நவீனங்கள் புடைசூழ
கடுக்தியில் பயணிப்பு
உலகோடு நடைபோட
தினந்தினம் எத்தனிப்பு
மனிதாபிமானமென்ற
உயிர்மூச்சை அறுத்தெறிந்தால்
பிணந்தானே நாமெல்லாம்....
இது புரியாது
பயணிப்பு எதை நோக்கி....?

**பா.பொன்நிலவன்**
**மீசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.மு 3 ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் நாகர் ஆட்சி

## வெளிவருகின்றது உண்மை புதிய கல்வெட்டாய்வுகள் மூலம்

தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன்,
வேந்தர், யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.


இலங்கைத் தமிழர் இன்று வரை, மிகக் கூடுதலாகச் செறிந்து வாழும் யாழ்ப்பாண மாவட்டத்தில், ஒப்பீட்டளவில், தமிழ்க் கல்வெட்டுகள் மிகக் குறைவா கவே காணப்படுகின்றன என்ற கருத்து, சென்ற நூற்றாண்டு முடியும்வரை நிலவியது. ஆனால், இப்பொழுது அங்குதான் மிகக் கூடுதலான தமிழ்க் கல்வெட்டுகள் உண்டென்பது உணரப் படுகின்றது. அவற்றுள் பெரும்பாலானவை 17ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை.

சிங்கை நகரிலிருந்து மத்திய காலத்தில் ஆட்சி புரிந்த ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு முற்பட்ட கால வரலாறு மறைந்திருந்தது. அதற்கு ஆதாரமான தொல்பொருட் சின்னங்கள் பல நிலத்துள் புதைந்து கிடந்தன. வேறு சில சின்னங்கள் மறைந்து கிடந்தன. அவை அடையாளங் காணப்படாதிருந்தன. இப்பொழுது நிலைமை முற்றாக மாறிவிட்டது.

ஆதி காலத்திலே பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்துவிற்கு முற்பட்ட மூன்றாம் நூற்றாண்டு முதலாக, நாகர்குல மன்னர்கள் குடாநாட்டில் அரசு புரிந்தமை இப்பொழுது உறுதியாகிவிட்டது. இதுவரை காலமும் மகாவம்சம், மணி மேகலை, தொலமியின் ஜியோகிரஃபியா என்னும் நூல் போன்றவற்றிலுள்ள குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டே ஆய்வாளரும் அறிஞரும் நாகன் அரசுகள் பற்றிப் பேசிவந்தனர். ஆனால், இப்பொழுது நாகன் பண்பாட்டுச் சின்னங்கள் தொல்பொருள் சின்னங்கள் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாணத்து நாகன் அரசு பற்றிப் பேச முடிகின்றது. அந்த அரசும் மகாவம்சம், மணிமேலை போன்ற நூல்கள் எழுதப்பட்ட காலம்வரை நிலைபெற்றது என்று கருதலாம்.

நாகர்குல மன்னர்களைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவற்றில் இரண்டு யாழ்ப்பாணத்து அருங்காட்சியகத்திலுள்ள நீர்த் தொட்டிகளில் அமைந்துள்ளன. நாகர் நாணயங்களை வெளியிட்டனர். அவற்றில் வேள் ணாகன் பொலம் என்ற வாசகம் காணப்படும். அவற்றுள் சில வட்டவடிவமானவை சில சதுரமானவை. வேறு சில சீரற்ற நீள் சதுரமானவை. இவற்றிலுள்ள வாசகங்களை இதுவரை எவரும் சரியாக அடையாளங் காணவில்லை. நாணயவிய லாளர் ஒருவர் ஒரு நாணயத்திலுள்ள பெயரை ஊதியன் என்று கொண்டதாகச் சொல்லப் படுகின்றது.

நாணயவியலாளர் 'லஷ்மி' நாணயங்கள் என்று வகைப்படுத்தியவை சிலவற்றிலும் வேள் ணாகன் பொலம் என்று எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா 'லஷ்மி' நாணயம் என்று வர்ணித்துள்ள நீள் சதுரமான தகடொன்றில் வேள் ணாகன் பொலம் என்ற வாசகம் ஆறு வரிகளில் எழுதப்பட்டுள்ளது. அதன் தலைப்பாகத்தில் ஒன்றன் பின் ஒன்றாக இரு இடங்களிலும் நடு, கீழ்ப் பகுதிகளில் மும் மூன்றிடங்களிலும் இந்த வாசகம் அமைந்துள்ளது.



'லஷ்மி' நாணயங்களை நாகரான அரசர்களே முதன்முதலாக வெளியிட்டனர் என்று கொள்ள முடிகின்றது. இலங்கையின் வடமேற்கிலே குதிரைமலையிலிருந்து ஆட்சி புரிந்த நாகரும் இந்த விதமான நாணயங்களை வெளியிட்டுள்ளனர். அடங்காப்பற்று வன்னியிலுள்ள நாகன் வேள்புலங்களில் வட்டவடிவமான நாணயங்களையும் நீள் வட்டமான நாணயங் களையும் வெளியிட்டுள்ளனர். அவற்றிலும் வேள் ணாகன் பொலம் என்ற வாசகம் காணப் படுகின்றது.

யாழ்ப்பாணத்து நாக மன்னனின் சில கல்வெட்டுகளும் நாணயங்களும் யாழ்ப்பாணத்து அருங்காட்சியகத்திலே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றோடு அவர்களின் பதவிப் பெயர் பொறித்த மட்கலத் துண்டங்களும் கல்லிலே குடைந்த பாவனைப் பொருள்களும் அங்குள்ளன. இப்பொழுது அந்த அருங் காட்சியகத் துக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறையிலே பயின்ற தொல்லியற் பட்டதாரிகள். தொல்பொருட் சின்னங்களைச் சீராக வகைப்படுத்திக் காட்சிக்கு வைத்துள்ளனர். அவர்களின் ஆர்வத்தினாலும் கடமை உணர் வினாலும் கணிசமான அளவிலான அரும் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.





### நாக மன்னன் கல்வெட்டுகள்

முன்னே குறிப்பிட்டவாறு, அருங்காட்சியகத்திலே கல்வெட்டுப் பொறித்த இரண்டு நீர்த் தொட்டிகள் உள்ளன. இரண்டிலும் தமிழ்ப் பிராமி வடிவங்களிலே தமிழ்க் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. எழுத்தியலமை தியின் அடிப்படையில் அவை 2000 ஆண்டு களுக்கு முற்பட்டவை என்று கொள்ள முடி கின்றது. அவை கி.மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றாண்டுகளுக்குரியவை என்று கருதலாம். இதுவரை யாழ்ப்பாண வரலாறு பற்றி எழுதிய ஆய்வாளர்களும் அறிஞர்களும் இந்தக் கல்வெட்டுக்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

2013ஆம் ஆண்டில் ஒருமுறை பேராசிரியர் செ. கிருஷ்ணராஜாவோடு அருங்காட்சியகத்திற்குச் சென்றபொழுது, அங்குள்ள நீர்த் தொட்டி ஒன்றை அவர் எமக்குக் காட்டினார். அது கந்தரோடையிற் கிடைத்ததென்றும் பத்தாம் நூற்றாண்டிற்குரியதென்றும் அருங் காட்சியகத்தார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த நீர்த்தொட்டி கல்லில் குடையப்பட்டது. நீள் சதுரமானது. 2 அடி 6 அங்குலம் நீளமும் 2 அடி அகலமும் ஓரடி 6 அங்குல ஆழமும் கொண்டது. அதன் வெளிப்புறத்திலே சில அலங்கார வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. மேற்புறத்து நான்கு மூலைகளிலும் இலை வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. அது அரசமிலை போன்றது. எனவே நீர்த்தொட்டி பௌத்தப் பள்ளியொன்றின் உடைமையானது என்றும் கருதலாம். நீர்த்தொட்டியின் புகைப்படங்களை எடுத்துக்கொள்ள முடிந்தது.

> தமிழ்ப் பிராமி வடிவங்களிலே தமிழ்க் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. எழுத்தியலமைதியின் அடிப்படையில் அவை 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கொள்ள முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக அண்மைக் காலத்திற் கண்டுபிடிக்கப்பட்ட, கணிசமான தொகையிலுள்ள தமிழ்ப் பிராமிச் சாசனங்களை அடையாளங் கண்ட அனுபவத்தின் அடிப்படையிலே சில வாரங்களுக்கு முன் கந்தரோடையில் கிடைத்த நீர்த்தொட்டியின் புகைப்படங்களைக் கூர்ந்து அவதானிக்க முடிந்தது. அதில் எழுத்துகளை அடையாளங் காண முடிந்தது. அவை ஆழமாக வெட்டப் படாமையால் எழுத்துகள் ஓரளவுக்குத் தேய்ந்து விட்டன. ஆயினும் எழுத்துகளைக் கூட்டி வாசித்த பொழுது சாசனமொன்று அமைந்திருப்பதை அறிய முடிந்தது. அது நாகன் சாசனம். அது மேல்வருமாறுள்ளது:

"வேள் ணாகன் மகன் வேள் கண்ணன்
வேள் கண்ணன் மகன் வேள் ணாகன்"

இதில் மூன்று தலைமுறைகளிலுள்ள நாகரின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவர்கள் வேள் என்னும் பதவிநிலை பெற்றவர்கள். கல்வெட்டுகளைப் பொறிக்குமிடத்து மூன்று தலைமுறைகளிற் பதவியிலிருந்த வேளிரைக் குறிப்பிடுவது நாகரின் வழமை. மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் மிக அண்மைக் காலத்திற் கண்டுபிடிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகளின் வாசகங்களை அடையாளம் கண்ட அனுபவத்தினால் இதனை அறிய முடிகின்றது.

இந்த அருங்காட்சியகத்திலுள்ள வேறொரு நீர்த்தொட்டியில் வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் என்ற வாசகம் தெரிகின்றது. அதற்கு மேலாகவும் எழுத்துகள் இருத்தல்கூடும். ஆனால், அவை எமது கட்புலனுக்கு எட்டவில்லை. இரண்டாவது நீர்த்தொட்டி எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்பது பற்றி எதுவிதமான குறிப்புகளும் இல்லை. அது திருக்கேதீஸ்வரத்திலிருந்து எடுத்துவரப்பட்டதென்று யாரோ சொன்னதாகக் கேள்விப்பட்டோம். அது எந்தளவிற்கு உண்மையானது என்பதை எம்மால் இப்பொழுது தீர்மானிக்க முடியவில்லை. ஆயினும், நாகரைப் பற்றிய கல்வெட்டு அமைந்துள்ளதால் வரலாற்றுச் சின்னமென்ற வகையில் அதுவும் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. சாசனம் நாகரான வேளிரைப் பற்றியதென்பது குறிப்பிடற்குரியது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜாங்க அமைச்சின் கறுப்புப் பட்டியல் தயாரிப்பில் அரசியல் நோக்கம் இருந்ததா?

## கியூபா- மலேஷியா நாடுகளின் தரம் உயர்த்தப்பட்டமைக்கு எதிர்ப்பு



மனிதர்கள் வர்த்தக முறையில் நகர்த்தப்படும் (அரசியல் தஞ்சம் கோருவோர் அல்லது அகதிகள்) நாடுகள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு பராமரித்துவரும் கறுப்புப் பட்டியலில் மலேஷியாவும் கியூபாவும் 3ஆம் நிலையிலிருந்து 2ஆம் நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டிருப்பதை மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அரசியல் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள கணிப்பீடு என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

ஆள்கள் வர்த்தகத்துக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பான ராஜாங்க அமைச்சின் பட்டியல் தரவரிசையில் மிக மோசமான நாடுகளுக்குரிய மூன்றாம் நிலையில் கடந்த ஆண்டு இந்த இரு நாடுகளும் வைக்கப்பட்டிருந்தன. நவகால அடிமைத்தனத்துக்கு எதிராகச் செயற்படாத அல்லது அந்த வகையில் முன்னேற்றகரமான நகர்வுகளைச் செய்யாத நாடுகள் 3ஆம் நிலையில் வைத்து கணிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு 23 நாடுகள் இந்த வரிசைக்குள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 2ஆம் இடத்திலுள்ள 44 நாடுகளின் தரவரிசைக்கு கியூபாவும் மலேஷியாவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த நாடுகள் எதிர்பார்க்கப்படும் தரத்தில் இல்லாது போனாலும் அந்த வகையில் முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகள் என்ற வகையிலானவையாகக் கருதப்படும்.

மலேஷியாவும் கியூபாவும் பட்டியலில் தரம் உயர்த்தப்பட்ட சூழ்நிலையும் காலமும் இதில் அரசியல் இடம் பெற்றிருப்பதான சந்தேகத்தை ஏற்படுத்துவதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையில் 54 ஆண்டுகளுக்குப் பின்னர் ராஜதந்திர உறவுகள் நிலை நாட்டப்பட்டன. அரச பயங்கரவாதம் இடம்பெறும் நாடுகள் பட்டியலில் இருந்தும் கியூபா இந்த ஆண்டு ஆரம்பத்தில் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒபாமா நிர்வாகத்தின் பசிபிக் பங்காளித்துவ அமைப்பின் 12 நாடுகளில் ஒன்றான மலேஷியாவின் தூரத்திலுள்ள தாய் எல்லைப் பகுதியில் கடத்தல்காரர்களால் நடத்தப்பட்ட முகாம்கள் இருந்த பகுதியில் கடந்த மே மாதம் பெரும் எண்ணிக்கையில் சவக்கிடங்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் மலேஷியாவும் பட்டியலில் தரம் உயர்த்தப்பட்டிருப்பது குறித்து மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவிக்கின்றன.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் வோஷிங்டன் பணிப்பாளர் சாரா மார்கொன் பின்வருமாறு கூறியுள்ளார். "அறிக்கையில் இம்முறைதான் முதல் தடவையாக அரசியல் நோக்கங்கள் பல இணைக்கப்பட்டிருப்பது தெரிகின்றது. இது ஓர் அபாயகரமான முன்னேற்றம். அறிக்கையின் நம்பகத் தன்மையை இது கீழ் இறக்குவதாய் உள்ளது. காங்கிரஸ் சபையிலிருக்கும் 160 உறுப்பினர்களும் 19 செனட்டர்களும் இது தொடர்பாக ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜோன் கெரிக்கு ஆட்சேபனை கடிதம் அனுப்பியிருக்கிறார்கள்."

இது பற்றி செனேட்டர் பொப் மெனென்டஸ் கூறுகையில், "மலேஷியாவைப் பட்டியலின் மூன்றாம் இடத்திலேயே வைக்கும்படி கேட்டிருக்கிறோம். மலேஷியாவும் கியூபாவும் பட்டியலில் தரம் உயர்த்தப்பட்டிருப்பதைக் கடுமையாக எதிர்க்கிறோம்" என்றும் கூறினார்.

கியூபா தரம் உயர்த்தப்பட்டிருப்பதற்கு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நியாயம் என்னவென்றால், பால்நிலை வர்த்தக நகர்வுகள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள அது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண சேவைகள் வழங்கவும் எத்தனித்து வருகின்றது என்பதாகும்.

ஆள்கள் வர்த்தகப் பொருள்களாக பயன்படுத்தப்படுவதானது 21ஆம் நூற்றாண்டின் மனித இதயங்களைத் தகர்க்கச் செய்யும் ஒரு செயலாகும் என்று தெரிவிக்கும் அறிக்கையில், உலகம் முழுவதிலும் 20 மில்லியன் மக்கள் தொழிலாளர்களாகப் பணியாற்ற அடிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் விபச்சாரம், வீட்டு வேலை, கட்டுமானத் தொழில், மீன்பிடித்தல் மற்றும் சுரங்கப் பணிகளில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவுக்கு தொடர்ந்தும் 2 ஆம் இடம்

உலகம் முழுவதும் மனிதர்களை வியாபாரப் பொருள்களாக பயன்படுத்தும் செயற்பாடுகள் நிலவும் நாடுகளை உன்னிப்பாகக் கவனித்து வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அறிக்கையில், இந்தியாவின் நிலை தொடர்ந்தும் 2ஆம் இடத்திலேயே தக்க வைக்கப்பட்டுள்ளது. ஆள்வர்த்தக பாதிப்புக்கு உட்படுபவர்களை பாதுகாக்கும் சட்டத்தின் பிரிவுகளை இந்திய அரசு முழுமையாகக் கடைப்பிடிக்கவில்லை என்பது இதன் கருத்தாகும். இருந்தாலும் அவ்வாறான ஒரு நிலையை அடைவதற்கு குறிப்பிடத்தக்க முயற்சிகளில் அது ஈடுபட்டு வருகின்றது என்பதையும் அது எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

இந்த ஆண்டுக்கான அறிக்கையை வெளியிடும் வைபவத்தில் ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி பேசுகையில் நாடுகளின் பெயர்களை வெளியிட்டு அவமானப்படுத்துவதல்ல நோக்கம் என்றார். உலகம் முழுவதும் 150 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகமாக இது காணப்படுகின்றது. மனிதர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, குற்றச் செயல்கள் மூலம் அதிகார பூர்வமான ஆதரவுடன் இந்தத் தொழில் முன்னெடுக்கப்படுகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.



# தென்சூடானில் அமைதியை ஏற்படுத்த ஒபாமா முயற்சி

ஆபிரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தென்சூடானில் இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்கு கொண்டு வந்து அங்கு அமைதியைத் தோற்றுவிக்கும் வகையிலான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். இது தொடர்பாகப் பல ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களின் கூட்டமொன்றை ஒபாமா நடத்தியிருந்தார். அதில் ஆபிரிக்க ஒன்றியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். இரண்டு மணி நேரம் நடைபெற்ற கலந்துரையாடல்களின்போது பொருளாதாரத் தடைகள் அல்லது இராணுவத் தலையீடு பற்றி ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

எதியோப்பிய பிரதம மந்திரியுடன் நடத்திய பேச்சுக்களின்போது அந்தப் பகுதியில் எவ்வாறு மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக அமைப்புக்களை மேம்படுத்தலாம் என்பது குறித்து ஒபாமா ஆலோசித்தார் எனத் தெரிகின்றது. தென்சூடானில் அமைதியைத் தோற்றுவிப்பதற்கு எதியோப்பியாவின் தலைமையில் ஆபிரிக்க நாடுகள் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்த இரண்டு வருடங்களாக முயன்று வருகின்றன. பிராந்தியத்தில் செயற்படும் அரசுகளுக்கிடையிலான அபிவிருத்தி அதிகாரசபையின் மூலமாக இந்த உடன்பாட்டை எட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வந்துள்ளது.

போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்களுக்கிடையில் ஓர் உடன்பாட்டுக்கான ஆலோசனைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இது பற்றி பதில் கூறுவதற்கு ஓகஸ்ட் 17ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு உடன்படுவார்கள் என்பது சந்தேகமே.

இந்த நிலைமையில்தான் தென்சூடான் மோதல்களைத் தீர்த்து வைப்பதற்கான ஒரு முயற்சியாக எதியோப்பியா, உகண்டா, கென்யா, சூடான் மற்றும் ஆபிரிக்க ஒன்றியத் தலைவர்களை அடிஸ் அபாபாவில் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார் ஒபாமா.

தென்சூடான் மக்கள் அங்கலாய்ப்புடன் எதிர்பார்க்கும் அமைதியை எம்மால் உருவாக்க முடியும் என்று நம்புகிறோம் என்று ஒபாமா பின்னர் தெரிவித்திருந்தார்.

தென்சூடானியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க அமெரிக்க நிர்வாகம் பல ஆண்டு காலமாக முயன்றுவருகின்றது. தென்சூடானிய அதிபர் சல்வாகிர் மயார்தித்துக்கும் அவரது உதவி அதிபராக இருந்த றீக்மசாருக்கும் இடையில் நல்லிணக்கம் இல்லை. உதவி அதிபர் 2013ஆம் ஆண்டு சதிப்புரட்சி ஒன்றை நடத்த் முயன்றார் என்று அதிபர் குற்றஞ்சாட்டியிருந்தார். இருவரும் வெவ்வேறு இனத்தவர்களாய் இருப்பதால் எதிரிகளாக நீண்ட காலமாக இருந்து வருகின்றனர். அதிபர் கிர் டிங்கா இனத்தவர், மசார் நுயயர் இனத்தவர் தென்சூடான் உருவாக்கப்பட்ட போது இருவரும் ஒன்றாகச் செயற்பட முன்வந்தார்கள்.



# அணு ஆயுதங்கள் விளையாட்டுப் பொருள்கள் அல்ல - வடகொரியா

அணு ஆயுதங்கள் வெறும் விளையாட்டுப் பொருள்கள் அல்ல. அவைகளை பேச்சுகளுக்காக மேசைகளின் மீது வைக்க முடியாது என்று சீனாவுக்கான வடகொரிய தூதுவர் பீஜிங்கில் கூறியுள்ளார். ஈரான் மீதான கடும் பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்குப் பதிலாக அந்த நாட்டின் அணு ஆராய்ச்சிகள் மீது சர்வதேசக் கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையிலான ஓர் உடன்பாடு ஏற்பட்டிருக்கும் பின்னணியில் வடகொரியாவின் இந்தக் கருத்து வெளிவந்திருக்கிறது.

வடகொரியாவின் அணு சக்தித் திறமையானது பேச்சு மேசையின் மீது வைக்கப்படக்கூடிய ஒரு விளையாட்டுப் பொருள் அல்ல. அது எமது இறைமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கான அவசியமான ஒரு மார்க்கமாகும். அமெரிக்காவின் அணு ஆயுத அச்சுறுத்தல் மற்றும் பகைமைக் கொள்கைகளுக்கு எதிரான முக்கிய உரிமையுமாகும் என்று வடகொரிய தூதுவர் ஜி ஜாஏ – ரியோங் கூறினார்.



அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் பீஜிங் வரவிருக்கும் பின்னணி யில் வடகொரிய தூதுவரின் இந்த அரியதான ஊடகப் பேட்டி வந் துள்ளது.

# துருக்கி விவகாரம் நேட்டோ அவசர சந்திப்பு

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் தூதுவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் அவசர கூட்டமொன்று துருக்கியின் கோரிக்கையின் பேரில் நடைபெற இருக்கின்றது.

துருக்கியில் செயற்பட்டுவரும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு அந்தநாடு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக விவாதிப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபகாலத்தில் தீவிரவாதிகள் நடத்தியுள்ள படுமோசமான படுகொலைகள் மற்றும் அவர்கள் மீது அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்படும் என்று நேட்டோ அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஜூலை 24ஆம் திகதியிலிருந்து துருக்கிய விமானப் படை விமானங்கள் ஈராக்கில் குர்திஷ் கிளர்ச்சியாளர் நிலைகள் மீதும் சிரியாவில் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் மீதும் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் இணைந்த குழுவொன்று தென்துருக்கியில் 32 பேரைக் கொன்றொழித்ததை அடுத்து குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் அதற்கு எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கியிருந்தார்கள். இந்த இரு தரப்பினராலும் நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்று துருக்கிய பிரதமர் அகமத் தாவு தொகு கூறியுள்ளார்.



உலக நடப்பு
ரெங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புள்ள மக்களே!

கலாபூஷணம்
நடராசா இராமநாதன்

காலை உறக்கம் கலைந்த போதும் சிவராசாவால் பாயைவிட்டு எழும்ப முடியவில்லை. பொழுது விடிந்து சூரியன் உதயமாகி ஒளி எங்கும் பரவத் தொடங்கிய நிலையிலும் சிவராசா படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. சுந்தரலிங்கத்தின் நினைவலைகள் சிவராசாவின் நெஞ்சைத் துளையிட்டுக் கொண்டிருந்தன.

சுந்தரலிங்கத்தின் இறப்பை, அதனால் ஏற்பட்ட இழப்பை சிவராசாவால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. நண்பனான, சக தொழிலாளியான, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட நல்ல மனிதனான சுந்தரலிங்கத்தோடு பழகிய காலங்களின் நினைவலைகள் சிவராசாவின் மனதிலே வந்து வந்து போய்க்கொண்டிருந்தன.

ச்சாய்....! எப்படியாய் இருந்த மனிதன் இப்போது இறந்தொழிந்து போனாரே! மதுவும் புகையிலையும் அந்த நல்ல மனிதனை சாவுக்குள் தள்ளிவிட்டதே! தொட்டால் ஒட்டிக்கொள்ளும், சாவுவரை தொற்றிக்கொள்ளும் அந்தத் தீய பழக்கம் சுந்தரலிங்கத்தை சாவுக்குள் வீழ்த்திவிட்டதே! அன்புள்ள மனைவியை ஆசைக்குழந்தைகளைப் பிரிந்து, உற்றார் உறவினர்களைத் தவிக்கவிட்டு இந்த உலகை விட்டே மறைந்து போனாரே சுந்தரலிங்கம்!

சுந்தரலிங்கத்தின் செத்தவீடுச் சமயம் அப்பா, அப்பா என்று அவரது ஐந்து குழந்தைகளும் தந்தையின் உடலைச் சுற்றிச் சுற்றிக் கதறி அழுத காட்சி அங்கு நின்ற அனைவரின் இதயங்களையும் கரைத்துவிட்டிருந்தது.

"சிவராசாண்ணை! இவரைப் பாருங்கோ! எங்கள் எல்லாரையும் இப்பிடி இடைநடுவில தவிக்கவிட்டிட்டுப் போய்விட்டாரே! இனி இந்த ஐஞ்சு குஞ்சுகளையும் வச்சு நான் என்ன செய்யப்போறன்? எப்பிடி வளர்த்தெடுக்கப்போறன்?......."

அழுது அழுது குரல் அடைத்துக் களைத்தபோதும் தன்கவலைகளைச் சொல்லி சொல்லி அழுது கொண்டிருந்த சுந்தரலிங்கத்தின் மனைவி மணியை எண்ணும் போதெல்லாம் சிவராசாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த நினைவுகளைத் தூரவீசிவிட்டு மன அமைதியோடிருக்கவோ, நாளாந் தக் கடமைகளைச் செய்யவோ சிவராசாவால் முடியவில்லை.

மேசன் தொழிலாளர்களான சுந்தரலிங்கமும் சிவராசாவும் நீண்ட கால இணைபிரியாத ஜோடிகள். களங்கமில்லாத நட்பு; கருத்தொருமித்த பற்று, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு என்பன இருவரையும் நண்பர்களாக்கின. நகைச்சுவை உணர்வு கொண்ட சுந்தரலிங்கம் எப்போதுமே கலகலப்பாகவே இருப்பார்.

தலைமயிரை மேவி இழுத்து நெற்றியில் விபூதி சந்தனம் இட்டு, வெற்றிலை வாய் சிவக்க ஆஜானுபாகுவான தோற்றங் கொண்ட சுந்தரலிங்கம் நடந்துவரும் அழகே தனிதான். தனிமையிலே இருக்கும் போதெல்லாம் சுந்தரலிங்கம் இசை நாடகப் பாடல்களை மிக அழகாகப் பாடுவார். தந்தை வழி, பாட்டன் வழி என இசை நாடக மரபின் வேர் வழி வந்த சுந்தரலிங்கத்துக்கு இயமன் வேடம் மிகக் கச்சிதமாகப் பொருந்தும்.

"சூரா சூரா சிவரோதயா........" என்ற பாடலோடு சூலத்தையும், பாசக்கயிற்றையும் கையிற்கொண்டு தர்பாரில் நின்று ஆக்ரோசமாக சுந்தரலிங்கம் பாடும்போது கரகோசம் அரங்கையே அதிரவைக்கும். நீண்ட வசனங்களைப் பிசிறல் ஏதும் இல்லாது பேசும் நேர்த்திகூட இரசிகர் மனங்களைக் கவர்ந்திருந்தது. அப்படியான சுந்தரலிங்கம் இறுதிக் காலங்களில், இருமி, இருமி குரல் தளர்ந்து பேசமுடியாத நிலையில் உடல் ஒட்டியுலர்ந்து........

மதுப்பாவனையும் புகையிலைப் பாவனையும் சுந்தரலிங்கத்தின் உடல் உள் உறுப்புக்களை அரித்து அரித்துத் தின்றுவிட்டிருந்தன.

சிறிது சிறிதாக ஆரம்பித்த அந்தப் போதைப் பழக்கம் மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கியது. அவரின் உழைப்பின் ஒரு பங்கு இந்த மது, புகையிலைப் பொருள்களுக்கென ஒதுக்கப்பட்டு இப்போ உழைப்பின் பெரும் பங்கே போதைப்பொருள்களுக்கென ஆயிற்று. இதனால் குடும்பத்தின் வறுமையும் நிரந்தரமாயிற்று.

"சுந்தரலிங்கம் நெடுக நெடுக நானும் சொல்றன், நீங்களும் கேக்கிறதாய் இல்லை. உப்பிடிக் குடிச்சுக்கொண்டிருந்தால் உடம்பு என்னத்துக் காகும். உந்தவெத்திலைப் பழக்கத்தையும் குடிப்பழக்கத்தையும் கைவிடுங்கோவன். உங்கட குழந்தை குட்டியளை ஒருக்கா நினைச்சுப் பாருங்கோவன்........"

சிவராசா இப்பிடி எத்தனையோ தடவைகள் கேட்டுக் கேட்டு மீண்டும் ஒருநாள் கேட்டுவிட்டார்.

"என்ன செய்யிறது சிவராசா நானும் இந்தப் பழக்கத்தை விடவேணும் எண்டுதான் நினைக்கிறன். பாப்பம் இந்த வரியத்தோட விடுவம்." கரகரத்த குரலில் சுந்தரலிங்கம் சொல்லிமுடித்தார்.

இப்படி எத்தனையோ தடவைகள் சிவராசா கேட்பதும், சுந்தரலிங்கம் சொல்வதுமாய் காலங்கள் கடந்தன. சுந்தரலிங்கம் எப்படி இப்படியான போதைகளுக்கு அடிமையானார்? எண்ணவே சிவராசாவுக்கு வியப்பாக இருந்தது. எப்படி ஒரு சாதுவானவராயும், அமைதியானவராயும், நல்ல அறிவுடையவராயும் இருந்தவர் சுந்தரலிங்கம்! அவரா இப்போது இப்பிடி. கசிப்பு என்ற கொடிய போதைக்கு அடிமையாகி வாழவேண்டிய வயதில் தன் உயிரை இழந்தார். சிவராசாவால் நம்பவே முடியவில்லை.

ஒருநாள் காலை வேலையாள்கள் ஒன்றுகூடும் இடத்தில் தொழிலாளர்கள் சிலரின் வருகைக்காகக் காத்திருந்த நேரம்.

"சிவராசா இண்டைக்குக் காலமை ஒரு விசயம் நடந்தது கேளுமன்...."

> "சுந்தரலிங்கம் நெடுக நெடுக நானும் சொல்றன், நீங்களும் கேக்கிறதாய் இல்லை. உப்பிடிக் குடிச்சுக்கொண் டிருந்தால் உடம்பு என்னத்துக் காகும். உந்தவெத்திலைப் பழக்கத் தையும் குடிப்பழக்கத்தையும் கைவிடுங்கோவன். உங்கட குழந்தை குட்டியளை ஒருக்கா நினைச்சுப் பாருங்கோவன்......"

என்றபடியே சுந்தரலிங்கம் பம்பல் கதையொன்றுக்கான அத்திவாரத்தைப் போட்டார்.

"ம்..... சொல்லுங்கோ கேட்பம்!" சிவராசா ஆவலோடு கேட்டார்.

"நான் காலமை பாண் வாங்க எண்டு துரைகடைக்குப் போயிருந்தன். காலமைதான். அங்க கொஞ்சம் சனமாகக் கிடந்தது. அதால சனங்கள் போகட்டும் எண்டு கொஞ்சம் பின்னுக்கு நிண்டன். ரோட்டில செல்லத்துரையரும் காசிநாதனும் கதைக்கிறது காதில கேட்டது."

"அ....! ரெண்டு பேருமே நல்ல கசிப்புக்காரரெல்லோ!"

சிவராசா அவர்கள் பற்றிய மேலதிகக் குறிப்பு ஒன்றைத் தூவி விட்டார்.

"ஓ...! அதுதான் சொல்லப்போறன்."

"சரி சொல்லுங்கோ சுந்தர்....." சிவராசா கேட்டார்.

"செல்லத்துரையரின் கதையில சாடையா பயங்கலந்திருக்கிறது தெரியுது. செல்லத்துரையர் ஒவ்வொரு நாளும் கசிப்பு அடிச்சுப் போட்டு வீட்டுக்குப் போறதால வீட்டில ஒரே ஏச்சாம். வருத்தம் வந்து சாகப்போறியளே எண்டு பிள்ளையள் வெருட்டுதுகளாம். எண்டு காசிநாதருக்கு சொல்லுறார்."

"ம்... காசிநாதர் பற்றிய குறிப்பு ஒன்றையும் தூவிவிட்டார்."

"ஓ....! இதுதான் பகிடி கேளுங்கோவன்....."

சுந்தரலிங்கம் இன்னும் ஆவலைத் தூண்டுகிறார்.

"மெய்யே! காசி கசிப்புக் குடிக்கிறதால கான்சர் வரும் எண்டு சொல்லுறாங்கள், அதுதானப்பா பயமாக்கிடக்குது எண்டு சொல்ல, காசிநாதர் சொல்லுறார் செல்லத்துரை நீ ஒண்டுக்கும் பயப்பிடாத. நீ விடிய வெள்ளணவா ஒரு போத்தல் கள்ளைக்குடி. அதுக்கு மேல நீ எவ்வளவு கசிப்பெண்டாலும் குடி. அது ஒண்டும் செய்யாது. கசிப்பு காசிநாதர் சொன்னதைக் கேட்டுக் கொண்டு செல்லத்துரையர் நிம்மதியோட வீட்டுக்குப் போறார். இவையளின்ர கதையைக் கேக்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஒரு குருடனுக்கு ஒரு குருடன் வழி காட்டினது மாதிரி....."

இப்படிச் சொன்ன சுந்தரலிங்கத்தையா இந்தப் போதை ப[illegible]க் கொண்டது? இந்தச் சுந்தரலிங்[illegible] இன்று கசிப்பாலும் வெற்றி[illegible]லும் உயிரை மாய்த்துக் குடு[illegible]த் தைத் தவிக்கவிட்டுச்சென்[illegible]? சிவராசாவால் அமைதி கொ[illegible] முடியவில்லை.

"என்னப்பா எழும்புங்கோவன் [illegible] நாளும் இல்லாத மாதிரி இன்[illegible] இவ்வளவு நேரமாய் படுத்[illegible]க் கிறியள். பிள்ளையள் பள்ளிக்[illegible]த் துக்கும் போயிட்டுதுகள்."

"இல்லை சறோ! சுந்தரலிங்[illegible] நினைக்க, அவரின்ர குடும்[illegible] நினைக்க எவ்வளவு கவலை[illegible] கிடக்கு. (18 ஆம் பக்கம் பார்[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள மக்களே!

தொடர்ச்சி.....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இந்தக் குடியும் வெத்திலை போடுற பழக்கமும் அந்த மனுசனை எந்த மாதிரி மாத்திப்போட்டுது பாத் தியா!"

"ம்..... பெருமூச்சொன்றாலேயே பதில் சொன்னாள் சறோ. ஒரு நாள் வீடொன்றைக் கட்டுவிப்பதற்காக சிவராசாவின் வீட்டுக்கு வந்த முருகையா முதலாளி, "என்ன சிவராசா யோசிக்கிறீர் சொல்லுமன்...." என்றார்.

"ம்...... ஒண்டுமில்லை முதலாளி, சுந்தரலிங்கம் இப்ப வேலைக்கு வராததால எனக்கு கை ஒண்டு முறிஞ்சுது போல இருக்கு. அதுதான் யோசிக்கிறன்......"

"ஏன் சுந்தரலிங்கத்துக்கு என்ன நடந்தது....." முருகையா முதலாளி ஆவலோடு கேட்டார். சிவராசா விசயத்தைச் சொல்லி முடித்தார்.

"அதனால இப்ப ஏலாது. சரியான வருத்தம்...." கவலைபொங்க சொல்லி முடித்தார் சிவராசா.

"தாங்கள் தாங்கள் தேடினதுக்கு ஆர் என்ன செய்யமுடியும் சிவராசா?" முருகையா முதலாளி தெரிந்த தத்துவத்தைச் சொல்லிமுடித்தார்.

..............................

..............................

..............................

மதிய நேர வெய்யில் அடித் துக்கொண்டிருந்தது. மணற்பாதை யால் மிதிவண்டியை ஓடிவந்த சிவ ராசாவுக்கு அந்த வாழைத் தோட்டம் கண்களுக்குப்பட்டது. வாழைத்தோட்டத்தைப் பார்த்தபடி மிதிவண்டியை ஓட்டினார். வேலி யின் கதியாலைப் பிடித்தபடி சுந்தரலிங்கம் நின்றார். இருமி இருமி களைத்துப் போயிருந்தார் அவர். மிதி வண்டியை நிறுத்திவிட்டு சுந்தர லிங்கத்துக்குக் கிட்டே வந்த சிவராசா,

"என்ன சுந்தரலிங்கம் இதில நிக்கிறியள்?" பரிவோடு கேட்டார்.

"இண்டைக்கு....... வீட்ட..... செலவுக்கு..... காசில்லை.... பிள்ளை....யள் பட்......டினி...... அதுதா.....ன்...., இ......ந்தப் புல்லைச் செ.....ருக்கித் .......தரச்சொல்லி..... வேலுப்......பிள்ளையர்....... கேட்....டவர். எப்பன்..... செருக்கு.....வம் எண்டால்...... இந்த ..... இரு....மல் விடுகுதில்லை...... களைச்சுப்போ.....னன். அதுதான்...... இதில நிக்கிறன்......."

சொல்லிச் சொல்லியே தொடர்ந்து இருமுகிறார். சளியும், இரத்தமும் வெளியே வர ஓரமாகத் துப்புகிறார் சுந்தரலிங்கம்.

சிவராசாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத் தது. சுந்தரலிங்கத்தின் நடுங்கிய கைகளை ஆதர வாகப் பற்றுகிறார். சுந்தரலிங்கத்தின் முகத்தில் துயரரேகைகள் படர்ந்திருந்தன.

ஆட்டோ ஒன்றைப் பிடித்து அவரை வீட்டுக்கனுப்பி மறுநாள் மருத்துவமனையில் சேர்ப்பித்து ....

"ஐயோ சிவராசண்ண..... எவ்வளவு சாப்பாட்டைச் சாப்பிட்ட மனுசன். கடைசிக் காலத்தில ஒரு சொட்டுச் சாப்பாடுகூட தின்னேலாமல் சீவனை விட்டிட்டுதண்ண......"

சுந்தரலிங்கத்தின் மனைவி சொல்லிச் சொல்லி அழுதது சிவராசாவின் மனதில் எதிரொலித் துக்கொண்டேயிருந்தது.

"சிவராசா....என்னால இந்த தீயபழக்கத்தை விடேலாம போய்ச்சுது. இனியுள்ள பிள்ளையள் எண்டாலும் குடிக்கும் வெத்திலைக்கும் அடிமையாகாமல் இருக்கவேணும். வருங்கால சந்ததி இதுகளைத் தொடாமல் இருக்க நல்ல வழியேதும் செய்து கொள்....

இதுதான் சாவுப்படுக்கையில் இருந்து சுந்தரலிங்கம் சிவராசாவுக்குச் சொன்ன கடைசி வார்த்தை. அந்தக் கடைசி வார்த்தையின் ஆழத்தைப் புரிந்து கொண்ட சிவராசா அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கினார்.

"அன்புள்ள மக்களே வணக்கம்.....!"

தொண்டையைச் செருமிவிட்டு ஒலி வாங்கியைச் சீர்செய்த சிவராசாவின் கணீரென்ற குரல் காற்றிலே கலந்து ஒவ்வோர் இதயங்கையும் தொட்டுச் சென்றது, தொடர்ந்து சென்றது.



## சொற்சிலம்பம் - போட்டி இல: 380

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ✿ | 4 | 5 | 6 |
| 7 | | | ✿ | 8 | | | |
| 9 | | | 10 | | ✿ | 11 | |
| | ✿ | 12 | | ✿ | 13 | | |
| ✿ | 14 | | | 15 | | | ✿ |
| 16 | | ✿ | 17 | | | ✿ | 18 |
| 19 | | | ✿ | | ✿ | 20 | |
| 21 | | ✿ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1.வீரதீரச் செயல்
4.மிகுந்த
7.முனிவர்கள் இயற்றுவது
8. ஒருவரின் வதனத் தோற்றத்தினால் கிட்டும் பலன்
9.சரஸ்வதி
11. ரக
12. மரம்
13.சமுத்திரம்
14.அரசர்களது இருக்கை
16. பின் அல்ல
17.மேடு, களம், மைதானம்
19.நித்திரையில் காண்பது
20.தடிமன் பீடித்தால் வருவது
21. நாங்கள்
22. ஒன்றின் பெயரால் மற்றொன்று அழைக்கப்படுவது

### மேலிருந்து கீழ்

1. தமது தரப்புக்கு இலாபகரமாக அமைவது
2.துன்பத்தால் வருவது
3. இணக்கச் சொல்
4. உள்
5.தமிழகம் இதற்குள் அடங்கும்
6.சிறிய அளவில் வெளியேறுவது/ஊறுதல்
8. இது காலில் குத்தும்
10. இறுதிச் சடங்கு
13. நெருப்பு
14.தேர்தலில் வேட்பாளரை அடையாளப்படுத்த ஒதுக்கப்படுவது
15. கிரியை
16. முன்னிலையில்
18. பனி காலத்தில் இது வாட்டும்
20. கழித்தல் குறியீடு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 378 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அமுதம் (4) மசகு (7) பரண் (8) ஆடவன் (9) கண்டித்தல் (10) நாம் (11) காதலித்தல் (13) கனல் (14) தலை (16) முக (17) பல்விதம் (19) கும்பல் (20) திரிபு

### மேலிருந்து கீழ்

(1) அபகரி (2)முரண் (3)தண்டித்தல் (4)மடல் (5)சவ (6) குன்றம் (8) ஆதரித்தல் (10) நால் (11) கானகம் (12)தலைவிதி (13) கழுகு (15) கம்பு (17) பல் (18)தரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.380 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (12.08.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.380 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 16.08.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 378 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
திருமதி கு.குலநாயகி,
இல.69, ஆனந்தநகர், கிளிநொச்சி

**2 ஆம் பரிசு**
திருமதி சா.ஜெயபாலன்,
ஆலடி மில் லேன்,
புலோலி தெற்கு, புலோலி.

**3 ஆம் பரிசு**
கு.சசிகலா,
ஆனந்த குமாரசாமி விடுதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
கே.சுவர்ணலதா,
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

**5 ஆம் பரிசு**
ஐங்கரன் விதுரன்,
கெற்பேலி கிழக்கு,
மிருசுவில்

**பாராட்டுப் பெறுவோர்**

யோ.யோ.யோகராசா,
வல்லை வீதி, தொட்டிலடி
சங்கானை.

தம்பித்துரை மதி
சடச்சப்பை, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

சின்னத்துரை சஞ்சீவ்
பூசைபந்தலடி, வதிரி,
கரவெட்டி.

சொற்சிலம்பம் போட்டி 378 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**02.08.2015 முதல் 08.08.2015 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சூரியன், சனி, கேது தவிர ஏனைய கிரகங்கள் நற்பலன் தருவர். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். அக்கம் பக்கத்தினரின் பாராட்டுக் கிடைக்கும். வாகனப் பயணம் இனிதாக அமையும். புத்திரரின் நற்செயல், புகழ் தேடித் தரும். உடல்நிலை சீராகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிப் பாதையில் செல்லும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், அக்கறையுடன் படிப்பர். அம்பிகை வழிபாடு, வாழ்வில் நன்மை சேர்க்கும்.

## இடபம்

சூரியன், சுக்கிரன், சனி, கேது நற்பலன் தருவர். எண்ணிய திட்டம், செயல் வடிவமாகும். பணவரவில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் சுபம் குறித்த பேச்சு நிகழும். தாய் வழி உறவினர்கள், பாசமுடன் பழகுவர். புத்திரரின் போக்கை மென்மையாக சீர்படுத்துவீர்கள். பணக் கடனில் ஒருபகுதி செலுத்துவீர்கள். மனைவியின் செயல்பாடு பெருமையளிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, புதியவர்களின் உதவி கிடைக்கும். பணியாளர்கள், சுறுசுறுப்பாக செயல்படுவர். பெண்கள், ஆன்மிக விடயத்தில் ஈடுபடுவர். மாணவர்கள் படிப்புக்கான சூழ்நிலை அமையப் பெறுவர். தன்வந்திரி வழிபாடு, ஆரோக்கியம் அளிக்கும்.

## கடகம்

குரு, சுக்கிரன், ராகுவால் நன்மை உண்டாகும். உறவினர்களிடம் அளவாக பேசுவது நல்லது. உழைப்பினால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு செய்ய நேரிடும். பிள்ளைகளின் பிடிவாத குணத்தால், பணம் செலவாகும். விருந்து, விழா என சென்று மகிழ்வீர்கள். மனைவியின் செயல்பாடு, உங்களின் கௌரவத்தை மேம்படுத்தும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர் எதிர்பார்த்த கடனுதவி வந்து சேரும். பெண்கள், குடும்ப பெருமையை நிலைநாட்டுவர். மாணவர்கள், பொது விடயங்களில் ஆர்வம் கொள்வர். வைரவர் வழிபாடு, துன்பத்தைப் போக்கும்.

## மிதுனம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நற்பலன் உண்டாகும். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள், கல்வியில் சிறந்து விளங்குவர். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. மனைவியின் செயல்பாடு, மன நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளானாலும், வருமானம் குறையாது. பெண்கள், வீட்டுப் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது அவசியம்.மகாலட்சுமி வழிபாட்டால், தொழிலில் வளர்ச்சி ஏற்படும்.

## சிங்கம்

சுக்கிரன், சனி, செவ்வாய் நற்பலன் தருவர். இனிய பேச்சால், பிறரைக் கவர்வீர்கள். உடன்பிறந்தவரால் உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பிள்ளைகளின் செயல்பாடு, பெருமிதம் அளிக்கும். வழக்கு விவகாரத்தில், சாதகமான தீர்வு கிடைக்கும். மனைவி, குடும்ப நலனில் அக்கறை கொள்வார். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். இனிய அணுகுமுறையால், தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், அழகு சாதனப் பொருள் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.ஆஞ்சநேயர் வழிபாடு, செயலில் வெற்றியை அளிக்கும்.

## கன்னி

சூரியன், சுக்கிரன், புதனின் நல்லருள் பலமாக உள்ளது. பேச்சு, செயலில் புத்துணர்ச்சி வெளிப்படும். விலகிய சொந்தம் நெருங்கி வந்து பாராட்டும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். வாகனப் பயணம் இனிதாக அமையும். புத்திரர்களின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். எதிரியால் ஏற்பட்ட தொல்லை மறையும். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். பெண்களுக்கு, தாய்வீட்டுச் சீதனம் கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் கவனம் செலுத்துவர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, குடும்ப அமைதிக்கு வழிவகுக்கும்.

## துலாம்

சனி, செவ்வாய், ராகு தவிர மற்ற கிரகங்கள் வியத்தகு அளவில் நற்பலன் தருவர். புதிய பணிகளை நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் உயரிய அந்தஸ்துக் கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு உண்டாகும். பிள்ளைகள் உங்களிடம் எதிர்காலம் குறித்து ஆலோசிப்பர். எதிரியாக செயல்பட்டவரும் மறைமுகமாக உதவுவார். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில் வளர்ச்சிக்கான அரசின் உதவி கிடைக்கப் பெறலாம். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பத்தை கற்றுக் கொள்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி குவிப்பர். மாணவர்கள், நண்பர்களுடன் சேர்ந்து படிப்பர்.சூரியன் வழிபாட்டால், ஆரோக்கியம் மேம்படும்.

## தனுசு

புதன், குரு, சுக்கிரன், சனி ஆகியோரால் நற்பலன் உண்டாகும். சிறிய முயற்சிக்குக் கூட பெரிய நன்மை காண்பீர்கள். நண்பர்களின் உதவி, தக்க சமயத்தில் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பூர்வீகச் சொத்தில் அதிர்ஷ்டவசமாக வருமானம் கிடைக்கும். பிள்ளைகளை கண்டிப்பதில் நிதானத்தைக் கடைபிடிக்கவும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்த வாய்ப்புண்டு. மனைவி வழி உறவினர்களுடன் இணக்கம் ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சி இலாபம் உயரும். பணியாளர்கள், சுதந்திர மனப்பான்மையுடன் செயல்படுவர். பெண்கள், சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவர். மாணவர்கள், ஆர்வமுடன் படித்து முன்னேறுவர். காமதேனு வழிபாடு, தொழில் வளர்ச்சி அளிக்கும்.

## விருச்சிகம்

ராகு, சந்திரனால் நற்பலன் உண்டாகும். பணிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுங்கள். உடன் பிறந்தவர்களின் உதவி, ஓரளவே கிடைக்கும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்துவது நல்லது. புத்திரர்கள், தன்னம்பிக்கையுடன் செயல்படுவர். உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். இல்லறத் துணையின் செயல்பாடு, மன ஆறுதலுக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபடுவர். விஷ்ணு வழிபாட்டால், தொழில் வளர்ச்சி பெருகும்.

## மகரம்

கேது, செவ்வாய், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் நன்மை வழங்கும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். சகோதரர்களின் ஆலோசனை, வளர்ச்சிக்குத் துணை நிற்கும். வாகனப் பயணம் இனிதாக அமையும். புத்திரரின் செயல்பாடு பெருமை சேர்க்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய நடைமுறையை பின்பற்றி, இலாபத்துக்கு வழிவகுப்பீர்கள். பணியாளர்கள், பணிச்சுமையில் இருந்து விடுபட்டு மகிழ்வர். பெண்கள், குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர். மாணவர்கள், கல்வியோடு விளையாட்டிலும் ஈடுபடுவர். மாரியம்மன் வழிபாடு, மனதில் நம்பிக்கையை வளர்க்கும்.

## மீனம்

சந்திரன் சாதகமான இடத்தில் இருக்கிறார். மற்ற விடயத்தில் தலையிடுவதைத் தவிர்க்கவும். குடும்பத் தேவைக்கான பணச் செலவு அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணங்களில் விழிப்புடன் இருப்பது நல்லது. புத்திரர், பிடிவாத குணத்துடன் செயல்பட வாய்ப்புண்டு. உடல் நலத்துக்கு ஒவ்வாதவற்றை தவிர்ப்பது நல்லது. இல்லறத் துணையின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி, ஆதாயம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள், மின் உபகரணங்களைக் கவனமுடன் கையாளவும். மாணவர்கள், பாதுகாப்புக் குறைந்த இடத்துக்குச் செல்ல வேண்டாம். நவக்கிரக வழிபாடு, நன்மை பெற வழிவகுக்கும்.

## கும்பம்

சூரியன், புதன் இருவரும் யோகத்தின் நற்பலனை வாரி வழங்குவர். குருவால் நன்மை ஏற்படும். சிறு முயற்சியிலும் பெரிய நன்மை உண்டாகும். எதிரிகள், இருந்த இடம் தெரியாமல் பறந்தோடுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். ஆன்மிக விடயத்தில் ஆர்வம் கூடும். இல்லறத் துணையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், அதிகாரிகளின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. பெண்கள், உறவினர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். மாணவர்கள், [illegible] பிரச்சினை யாவும் மறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.நற்குணலிங்கம்

# தோல்வி வாழ்வின் முடிவல்ல

தோல்வி என்கிற எண்ணம் ஆக்கபூர்வமான சிந்தனை யாகாது. அது ஓர் எதிர் மறைச் சிந்தனை. தோல்வி என்பது எமது வாழ்வில் துன்பமான சம்பவம். அவமானமாக எண்ணப்படுகின்றது. தோல்வி ஏற்படும்போது அதை எமது வாழ்வின் ஒரு கஷ்டமான பகுதியாக நினைக்கின்றோம்.

உண்மையில் தோல்வி என்று கருதப்படுவது தற்காலிக சரிவுகளே. அதை நேர்மறையான மனோபலத்துடன் கையாண்டால் விலை மதிப்பற்ற செல்வமாக மாற்றலாம். தோல்வியை ஏற்றுத் தொடர்ந்து போராடுபவனை உலகம் மதிக்கிறது. தோல்வி அகந்தையை அழித்து வாழ்வின் உண்மைகளைப் பற்றிய உபயோக மான அறிவைத் தருகிறது. வெற்றி எமக்குக் கற் றுத்தரும் பாடத்தைவிட தோல்விகளின் அனு பவங்களே எமக்கு அதிகம் கற்றுத்தருகின்றன. வெற்றி என்பது பெற்றுக் கொள்வது, தோல்வி என்பது கற்றுக்கொள்வது. எமது வாழ்வு குறுகிய கால எல்லைக்குள் இருப்பதால் தோல்வியைக் கற்றுக்கொள்ளப் பழக்கப் படுத்தினால் எமது மிகுதி வாழ்வில் தோல்விகளையும் ஏற்றுக் கொண்டு வெற்றிகளைக் காணமுடியும். ஆரோக்கிய வாழ்வை வாழமுடியும்.

தோல்வி புதிய வாய்ப்புகளின் கதவுகளைத் திறக்கிறது. தோல்வி வாழ்வின் உண்மைகளைப் பற்றிய உபயோகமான அறிவைத் தருகிறது. தோல்விகளைச் சந்தித்திருந்தால் அதைவெறும் அனுபவ பாடமாக மட்டுமே ஏற்கும் மனோ பலத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். தோல் வியை எண் ணிக் கொண்டிருப்பின் வாழ்க்கை வெறு மையாகிவிடும். வாழ்க்கையில் எதுவும் நிரந்தர மல்ல. அதைப் புரிந்துகொண்டு வெற்றிக் கான தேடலைத் தொடங்க வேண்டும்.

தோல்வி என்ற வார்த்தை வாழ்வில் தொல்லை தரக்கூடியது. வாழ்க்கையில் வெற்றிபெற தோல்வி ஒரு தடையல்ல. முயற்சியே பக்கபலம், அந்த முயற்சியே வெற்றிப் பாதையின் பக்க பலம். தவறு செய்து விடுவோமா என்ற பயத்துடன் செய்யும் வேலைதான் தோல்வியைத் தழுவும். மனிதர் களுடைய பெரும்பாலான தோல்விகளுக்கு அவர்களிடம் குடிகொண்டுள்ள பயமே காரணம் என மாவீரன் நெப்போலியன் குறிப்பிட்டுள்ளார். எல்லோருக்கும் வாழ்க்கையில் தோல்விகள் ஏற்படுவது இயல்பானதே. ஒவ்வொருவரும் அவற்றைக் கையாளும் முறையிலேயே வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது.

தோல்வி என்பது ஒரு நாணயத்தின் வெற்றிப் பக்கத்தின் மறுபக்கமாகும் என்பதை புரிந்து கொண்டால் எமது வெற்றிப் பயணம் தொடரும். தோல்விக்கான காரணத்தைத் தெரிந்துகொண் டால் பாதையை மாற்றி நாணயத்தின் வெற்றிப் பக்கத்தை அடையலாம். வெற்றியை எப்படி ஏற்றுக் கொள்கின்றோமோ அவ்வாறே தோல்வியையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு தோல்வி யும் எம்மை வெற்றிக் கோட்டின் அருகே கொண்டு செல்கிறது. எனவே தோல்வியைக் கண்டு துவண்டு விடாதே.

கடின உழைப்பின் அவசியத்தை வெற்றியைவிட தோல்வியே எமக்குக் கற்றுத்தந்துள்ளது. கடின உழைப்பு இலக்கை அடை யும் மிகவும் உறுதியான பாதை என்பதை எப்போதும் உணர்த்திக் கொண்டிருப்பது தோல்வியேதான். உலகத்தில் உள்ள வெற்றிகள் அனைத்தும் ஏதாவது ஒரு வகையில் தோல் வியிலிருந்துதான் தோன்றி யிருக்கும். தோல்வியை ஒரு முடிவாகப் பார்த்தால் அதிலி ருந்து எதுவுமே கிடைக்கப் போவதில்லை. எப்போதும் பல வீனங்களை நினையுங்கள், பல முள்ள செயல்களைச் செய் யுங் கள், உங்களுக்கு எப்போதும் வெற்றிதான்.

தன்னால் எதையும் சாதிக்க முடியும் என எண்ணு பவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக மாறும். அவர்களிடம் தோல்வியைக் காண முடியாது. அனைத்தையும் வெற்றி கொள்ளக்கூடிய தன் மைகள் இருக்கும். தன்னம்பிக்கை ஒரு மனிதனது வாழ் வின் உயிர்த் துடிப்பாகும். தன்னம்பிக்கையு டையோர் எந்தச் செயலிலும் சூழ்நிலையைக் கண்டு அஞ்சாமல் துணிவுடன் செயற்பட்டு வெற்றி பெறுவர். எனவே எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் வாழ்ந்தால் தோல்வி உன்னை நெருங்காது.

இப்போது பல்வேறு காரணங்களுக்காக பல தரப்பட்டவர்களும் தற்கொலை முயற்சிகளில் இறங்குகின்றனர். இதற்கு பல்தரப்பட்ட தோல்வி களும் காரணமாக உள்ளன. உலகில் 40 விநாடிக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். நாள் ஒன்றுக்கு 3,000 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். கட்டாயத்தினால் எதனையும் நிரந்தரமாகச் சாதித்து விடமுடியாது. விருப்புடன் முயல்வதுதான் தோல்வியிலிருந்து விலக்கி வெற்றியை ஈட்டித்தரும். தற்கொலை என்பது தோல்வியிலிருந்து மீள நிரந்தரத் தீர்வாக அமை யும் என எண் ணக்கூடாது.

வெற்றியாளர் ஆகவேண்டுமெனில் வெற்றியாள ராகவே உங்களைப் பார்த்துக் கொள்ள நீங்கள் பயிற்சி செய்ய வேண்டும் என்கிறார் எழுத்தாளர் டொரி.எல்.ஹார்ன்பக்கின். வாழ்க்கையின் முன்னேற்ற இலக்கை சரிவர நகர்த்துவோமாயின் தோல்வியல்ல வெற்றி கிட்டும். இதற்கு உங்கள் அனுபவப் பயிற்சிப் பகிர்வும் உதவி செய்யும். இலக்கை தேர்வு செய்வதிலும் தேர்வு செய்த இலக்கை அடைவதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால், வாழ்க்கையில் தோற்றவர்களின் பட்டியலில் உங்களின் பெயரும் இடம் பெற்றுவிடும்.

இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு உயிரும் பெறுமதிமிக்க வரங்களாக இறைவனால் எமக்குத் தரப்பட்டுள்ளன. ஆதலால் அவற்றை நாம் இயன்ற வகையில் பாதுகாக்க, எம்மைத் தயார்ப்படுத்த, தெரிந்துகொள்ளவேண்டும். வாழ்க்கை என்பது வெற்றி தோல்விகளைச் சந்திக்கும் நிலை. தோல்வி என்பது எமது வாழ்வை முடிவுறுத்தும் காரணி அல்ல. தோல்விதான் பல துறைகளில் வெற்றிபெற உதவிடும் படிக்கட்டு. இதனை எண்ணி வாழ்வோ மாயின் வாழ்வு சுகமானதாகும்; சுமையற்றதா கும்; வெற்றியளிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதிகளின் கட்டுக்குள் மஹிந்த



அதிரன்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் விசாரணைக்குச் சென்ற சமயம் அவருக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது நடுவில் சிங்கமும் நான்கு மூலைகளிலும் அரச இலைகளும் பொறிக்கப்பட்டு, சிறுபான்மை இனங்களான தமிழ்–முஸ்லிம் இனங்களின் நிறங்கள் நீக்கப்பட்டு தேசியக் கொடி போன்று வடிவமைக்கப்பட்ட கொடிகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் வைத்திருந்தனர். இந்த விவகாரம் ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்திய சமயம், அது தற்செயலாக இடம்பெற்ற ஒன்று அரசியல் உள்நோக்கம் கிடையாது என்று மஹிந்த ஆதரவுத் தரப்பினரால் கூறப்பட்டது. இந்த விவகாரம் அத்துடன் முடிந்து விட்டது என்றே நம்பினோம். ஆனால் இது அத்துடன் முடிந்து விடவில்லை. தற்செயலானதும் அல்ல என்பது கடந்த திங்கள்கிழமை குருநாகல் மாவட்டத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த யட்டிநுவரவில் இடம்பெற்ற சம்பவம் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த பேசவிருந்த பிரசார மேடைக்கு முன்னால் இத்தகைய கொடிகள் உயரமான கம்பங்களில் ஏற்றப்பட்டு கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தன. இதனைப் படமெடுத்த ஊடகவியலாளர்கள் மஹிந்தவின் பாதுகாப்புப் பிரிவினரால் பிடிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். கொடிகள் அகற்றப்படும்வரை இவர்களின் கமராக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மஹிந்தவின் தேர்தல் பிரசார ஏற்பாட்டாளர்களால் தான் அத்தகைய கொடிகள் ஏற்றப்பட்டன என்று கூறி மஹிந்த அங்கு வரமுன்னரே அக்கொடிகள் அகற்றப்பட்டு விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த நாளில் இருந்து தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களும் பெரும்பான்மை சிங்கள மக்களின் அடக்குமுறைகளுக்கு உள்ளாகிய நீண்ட வரலாறு எமக்கு உண்டு. தற்பொழுது தேசியக் கொடியில் உள்ள சிறுபான்மை இனங்களின் நிறங்களை நீக்க சிலர் கிளம்பியிருக்கிறார்கள். இது மிகவும் ஆபத்தான அறிகுறியாகும். இந்த நாட்டில் இனவாதம் தீவிரமடைந்து வருவதை இந்த விவகாரம் கோடிட்டுக் காட்டுகிறது.

கோத்தாவுக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இத்தகைய கொடிகள் காணப்பட்டதற்கு ஏதாவது சாக்குப் போக்குக் கூற முடிந்தாலும் மஹிந்த பேசவிருந்த பிரசார மேடைக்கு முன்னால் இக்கொடிகள் கம்பத்தில் ஏற்றப்பட்டிருந்ததை தற்செயலான சம்பவம் என்று கூற முடியாது. மஹிந்தவுக்கு ஆதரவான ஒரு குழுவினர் மிகவும் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர். இதன்மூலம் சிறு பான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு மஹிந்தவுக்குத் தேவையில்லை என்பதை இவர்கள் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளனர். தாம் ஏற்றியது தேசியக் கொடி அல்ல என்று இவர்கள் எதிர்வாதம் புரியலாம். இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்டச்சிக்கல்கள் ஏற்படலாம். ஆகவே இத்தகைய சம்பவங்களை மஹிந்த பகிரங்கமாக கண்டிக்கவேண்டும். இச்சம்பவம் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் சிறுபான்மைக் கட்சிகளை இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிட்டுள்ளது.

யட்டிநுவரக் கூட்டத்துக்கு மறுநாள் வெளியிடப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் தீர்வு காணப்படும் என்றும் அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் நியாயத்தையும் சமத்துவத்தையும் உறுதி செய்வதற்காக தேசிய நல்லிணக்கக் கொள்கை மூலம் விரிவான அதிகாரங்கள் மற்றும் மாவட்ட ரீதியான பொறிமுறை ஒன்றுடன் கூடிய தேசிய நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மஹிந்த தனது பத்தாண்டு ஆட்சிக்காலத்தில் சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கிடைத்த அரிய வாய்ப்புகளைத் தவறவிட்டுவிட்டார். 2009 மே மாதம் புலிகளைத் தோற்கடித்த கையோடு தெற்கில் எதிர்பார்ப்பு இல்லாத சூழ்நிலையில் ஓர் அரசியல் தீர்வை முன்வைத்திருக்கலாம். கடைசி நான்கு ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்த சமயம் கூட ஓர் அரசியல் தீர்வை முன்வைத்திருக்கலாம். அத்தனையையும் கோட்டை விட்டுவிட்டு தற்பொழுது 13க்குள் தீர்வு என்றால் [illegible] நம்பு வார்கள்? அத்துடன் மஹிந்த [illegible] வாளர்களின் தனிச் சிங்கள தேசி[illegible] கொடிகள் அவர்களின் சுயரூபத்[illegible] வெளிக்காட்டுகின்றன. சிறுபான்[illegible] தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்[illegible]யைப் பெறவேண்டுமானால் இனவா[illegible]தின் பிடியிலிருந்து மஹிந்த வெளி[illegible] வேண்டும்.

> **கோ**த்தாவுக்கு ஆதரவு தெரிவித்து நடத் தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இத்தகைய கொடி கள் காணப் பட்டதற்கு ஏதாவது சாக்குப் போக்குக் கூற முடிந்தாலும் மஹிந்த பேசவிருந்த பிரசார மேடைக்கு முன்னால் இக்கொடிகள் கம்பத்தில் ஏற்றப்பட்டிருந்ததை தற்செயலான சம்பவம் என்று கூற முடியாது. மஹிந்தவுக்கு ஆதரவான ஒரு குழுவினர் மிகவும் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலசை ஆய்வின் சுவாரஸியங்கள்!

த.வி.வெங்கட்

மே 22, 1822. ஜெர்மனி. குளிர்காலம் சென்று வசந்தம் பிறந்தது. மெக்லென்பேர்க் பிரதேசத் தில் இருக்கும் போத்மேர் எஸ்டேட் முதலாளி எப்போதும்போல பறவைகளைச் சுடும் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார். அவரது தலைக்கு மேலே வசந்த காலத்தில் பறந்தது செங்கால் நாரை (White Stork). எடுத்தார் தனது துப்பாக்கியை. சரியாகக் குறிவைத் தார். டுமீல்... கீழே விழுந்தது நாரை.

### இரண்டாம் வேட்டை

நாரையின் அருகே விரைந்தனர் அவரும் அவரது கூட்டாளிகளும். குண்டடி பட்டு இறக் கும் தறுவாயில் கிடந்த நாரையைப் பார்த்த தும் வியப்பில் ஆழ்ந்தார்கள். திகைப்பில் ஒரு கணம் விறைத்துப்போனார்கள்.

ஏற்கெனவே அந்த நாரை வேட்டையாடப் பட்டிருந்தது. அதன் கழுத்தில் 80 சென்ரி மீட்டர் நீளமுள்ள இரும்பு முனையுடன் ஈட்டி பாய்ந்து கிடந்தது.

உடனே அருகில் உள்ள பல்கலைக்கழகத் துக்கு அவர்கள் விரைந்தார்கள். ரோஸ்டோக் (Rostock) பல்கலைக்கழகத்தில் அந்தப் பறவையை ஒப்படைத்தார்கள். அங்கே, அந்தப் பறவையைப் பதப்படுத்தி, ஈட்டியுடன் வைத்தார்கள். அந்த ஈட்டி ஐரோப்பாவில் பயன்படுத்தும் ஈட்டி அல்ல என்றும் மத்திய ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்கள் பயன் படுத்தும் ஈட்டி என்றும் தெரியவந்தது. அதா வது அந்த நாரை ஆப்பிரிக்காவிலிருந்து பறந்துவந்திருக்கிறது என்பது விளங்கியது.

பட்ட காலிலே படும் என்பார்களே அதுபோல ஆப்பிரிக்காவில் வேட்டையாடப்பட்டு, தப்பிப் பிழைத்து ஐரோப்பா வந்தால், அங்கு குண்டடி பட்டு இறந்துபோனது அந்த நாரை.

ஜெர்மன் மொழியில் அம்பு தைத்த நாரை எனும் பொருள்படும்படி பைல்ஸ்ட்ரோச் (pfeilstorch) என்று செல்லமாகப் பெயர் வைக்கப்பட்டு இன்றளவும் பதப்படுத்தி வைக் கப்பட்டிருக்கும் அதன் உடல் ரோச்டோக் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் பார் வைக்கு வைக்கப்பட்டுள்ளது.



### நிலாவுக்கு அல்ல

குண்டடிபட்டு மடிந்த நாரை அறிவியல் உல குக்குப் புது வெளிச்சம் பாய்ச்சியது. அது வரை அறிவியல் உலகை உலுக்கிக்கொண்டி ருந்த ஒரு கேள்விக்குப் பதில் தந்தது அந்த நாரை. பனிக் காலத்தில் ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து வலசை செல்லும் செங் கால் நாரைகள் எங்கு செல்கின்றன என்பது தான் அந்தக் கேள்வி. ஐரோப்பியப் பனிக் காலத்தின்போது இந்தச் செங்கால் நாரை மத்திய ஆப்பிரிக்காவுக்குப் புலம்பெயர்கிறது என்பதை ஆப்பிரிக்க ஈட்டியைத் தாங்கிவந்த நாரை சுட்டிக்காட்டியது.

1703இல் எழுதப்பட்ட ஒரு நூலில் பனிக் காலத்தில் பறந்து செல்லும் பறவைகள் நில வுக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொள்கின்றன என்று சொல்லப்பட்டிருந்தது. பனிக் காலத் தில் உறைந்துபோகும் ஏரிகளின் அடியில் நீரில் இவை வசந்தம் வரும்வரை வாழும் என்றும் கூறினார்கள். அரிஸ்டோட்டில் தனது நூலில் பனிக் காலத்தில் செங்கால் நாரை போன்ற பறவைகள் குளிர்கால உறக்கத்தில் (hibernation) செல்லும் என்று கூறியி ருந்தார். பனிக் காலத்தில் அந்தப் பறவைகள் எங்கு வலசை செல்கின்றன என்பது குறித்து 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வெறும் யூகங்களும் கற்பிதங்களும்தான் நிலவின. இந்த நிலையில்தான் ஆப்பிரிக்க ஈட்டியுடன் வந்த செங்கால் நாரை இந்தப் புதிரை அவிழ்த்தது.

### முதல் முயற்சி

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த சர் ஆர்தர் தாம்சன் (Sir Arthur Landsborough Thomson) என்பவர்தான் முதன்முதலில் பறவைகளின் கால்களில் உலோக வளையத்தை அணி வித்து ஆராய முனைந்தவர். 1909இல் இந்த முயற்சியை முதன்முதலில் அவர் மேற் கொண்டார். அதன் பிறகுதான் பறவைகளின் காலில் உலோக வளையங்களை மாட்டி பறவைகளின் வலசை குறித்து ஆராய்ச்சி செய்தார்கள். அந்த உலோக வளையங் களில் எண் பொறிக்கப்படும்.

மேலும், எந்த இடத்தில் அந்த உலோக வளையம் பொருத்தப்பட்டது என்பது பற்றிய குறியும் பொறிக்கப்படும். பறவை பறந்து செல்லும்பொது எங்காவது சிக்கிக்கொண் டால் எங்கு பிடிக்கப்பட்டது, என்று பிடிக்கப் பட்டது போன்ற தகவல்கள் திரட்டப்படும். இவ்வாறு திரட்டப்பட்ட தகவல்களின் அடிப் படையில்தான் பறவைகள் குளிர்காலத்தில் ஐரோப்பா போன்ற பகுதிகளிலிருந்து வெப் பப் பிரதேசமான ஆப்பிரிக்கா போன்ற தொலைதூரப் பிரதேசங்களுக்குச் செல்கின் றன என்பது தெரியவந்தது.

இன்று, பறவைகள் மட்டுமல்ல காண்டாமிரு கம் போன்ற விலங்குகள் மீதும், ஆலிவ் ரிட்லி ஆமைகள் முதலானவற்றின் மீதும் கருவிகள் பொருத்தப்பட்டு அவற்றின் நகர்வுகள் கண் காணிக்கப்படுகின்றன. ரேடியோ கருவி களைப் பொருத்தி ஜி.பி.எஸ். கருவி உதவியு டன் இந்த விலங்குகள், பறவைகள் போன் றவை செல்லும் பாதை உட்பட எல்லாவற் றையும் ஆய்வாளர்கள் பதிவுசெய்து ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

இலங்கைக்கும் இதுபோன்று வலசை வரும் பறவையினங்கள் குறிப்பாக நாரையினங் கள் பல உண்டு. அவற்றையும் பாதுகாப் பதற்கு இதுபோன்ற ஆய்வுகள் கண்டிப்பாக உதவும்.

# கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் நாகர் ஆட்சி

(15 ஆம் பக்க தொடர்ச்சி)

அமைப்பினைப் பொறுத்த வரையில் இரண் டாவது நீர்த்தொட்டி முன்னையதைக் காட்டி லும் வேறுபட்டது. அது அளவிற் பெரியது ஏறக் குறைய ஐந்தடி உயரமானது. அது ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. கல்லும் மிகவும் கருமையான கருங்கல். அதில் மூன்று பாகங் கள் உள்ளன. அடிப்பாகம் விசாலமான பீடம் போன்றது. இடைப்பாகம் பருத்த, கட்டையான தூண் போன்றது. மேற்பாகம் அரைவட்டம் போன்றது. அதன் உட்புறம் மிக விசாலமாக வும் ஆழமாகவும் ஒரு கொள்கலனைப் போலக் குடையப்பட்டுள்ளது. அது ஒரு நீர்த் தொட் டியா? அல்லது கஞ்சித் தொட்டியா? என்பதை நிச்சயிக்க முடியவில்லை. இதுவரை வட மாகாணத்திற் கிடைத்துள்ள மிகவும் புராதன மான பாவனைப் பொருள்களில் இதுவே மிக வும் பெரியது. அதுவும் 2,000 வருடங்களுக்கு முற்பட்ட அரும்பொருள்.


### நெடுந்தீவில் நாகரின் கல்வெட்டுகள்

வேளை நாகனைப் பற்றிக் குறிப்பிடும் தமிழ்க் கல்வெட்டுகள் நெடுந்தீவிலும் உள்ளன. அங் குள்ள புராதன காலத்துப் பௌத்தப் பள்ளி யொன்றின் வளாகத்தில் தமிழ்ப் பிராமி வரி வடிவங்களில் எழுதிய மூன்று தமிழ்க் கல் வெட்டுகள் உள்ளன. அவற்றின் மைப் படி களைத் தொல்பொருள் திணைக்களத்திலே சாசனவியலுக்குப் பொறுப்பதிகாரியாக வுள்ள நாமல் கொடித்துவக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் எம்மிடம் ஒப்படைத்தார்.

அந்த மூன்று கல்வெட்டுகளிலும் பிற்காலத் தமிழ் வரி வடிவங்கள் காணப்படுகின்றன. ஒன்றிலே ஆளவந்தான் என்ற பெயர் அமைந் துள்ளது. வேறொன்றிலே ஒரே மொழித் தொடருடன் ஆரம்பமாகிப் பின் இரண்டு வரிகளாகப் பிரிந்து செல் லும் வாசகம் தெரிகின்றது. மூன் றாவது மைப்படியில் ந என்னும் தமிழ் எழுத்தின் பெரிதான தனி வடிவம் தெரிகின்றது. இந்தக் கல்வெட்டுகளின் மைப் படிகளை உருவாக்கியவர்கள் புராதன மான பிராமிச் சாசனங்கள் அதில் இருப்பதை அவதானிக்கவில்லை. பிற்காலத் தமிழ் எழுத்துகளைக் குறிவைத்தே அவர்கள் மைப்ப டிகளை உருவாக்கியுள்ளனர். அளவுக்கு மேலாகக் கருமை யினைப் பூசியவிடத்துப் பழைய தமிழ்ப் பிராமிச் சாசனங்களின் பெரும் பகுதிகள் மைப்படியில் பதிவாகவில்லை.

சில மாதங்களுக்கு முன் இச்சாசனப் படிகளை மிகக் கவனமாக அவதா னித்தபொழுது அவற்றிலே தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் எழுதப் பட்டிருப்பதை அறிய முடிந் தது. அவை நாகர் குல வேளிரின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. வழமை போல மூன்று தலை முறை களிலுள்ள வேளிர்களின் பெயர்கள் மீண்டும் மீண் டும் எழுதப்பட்டுள்ளன. வேள்ணாகன் மகன் வேள் கண்ணன் வேள் கண்ணன் மகன் வேள் ணாகன் என் பதே சாசன வாசகம்.





சில சமயங்களில் சாசனத் தின் தலைப்பில் அது அமைந்துள்ள நிறுவனத் தின் பெயரைக் குறிப்பிடு வது வழக்கம். ஆயினும், இந்தச் சாசனப்ப டிகளில் அவ்விதமான பெயர் எதனையும் காணமுடியவில்லை. தலத்திற்குச் சென்று, சாசனம் எழுதிய பகுதிகளை நீரினாற் கழுவிச் சுத்தப்படுத்திய பின் தரமான ஒளி படங்களை எடுக்குமிடத்து, இப்பொழுது எமக் குக் கிடைக்காத சில விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியமுண்டு.

நெடுந்தீவில் நாகரின் ஆட்சி ஏற்பட்டிருந் தமைக்கு மேற்குறித்த சாசனங்கள் உறுதி யான ஆதாரங்களாகும். இந்தச்சாசனங்கள் குடாநாட்டிலிருந்து அரசு புரிந்த நாகர்களைக் குறிப்பிடுகின்றனவா? அல்லது நெடுந்தீவில் நாகரின் தனியான வேள்புலமொன்று அமைந் திருந்ததா? என்ற வினாக்கள் இயல்பாகவே எழுகின்றன. காரைதீவில் (கார திவயின) ஆட்சி புரிந்த அரசனொருவனை அகித்த ஜாத கம் குறிப்பிடுகின்றது. அதேபோல நெடுந்தீவி லும் தனியான வேள்புலமொன்று அமைந்திருத் தல்கூடும். நாகதீபத்திலுள்ள அற்புதங்கள் நிகழும் பௌத்த பீடிகை தொடர் பாக நாக மன்னர் இருவரிடையில் ஏற்பட்ட தகராறு பற்றிய மகாவம்சக் கதை, குடாநாட்டி லும் தீவுப்பற்றிலும் நாகமன்னர் பலர் ஒரே காலத் தில் வெவ்வேறு வேள்புலங்களில் ஆட்சி புரிந்தமை பற்றிய ஐதீகமொன்றை ஆதார மாகக் கொண்டுள்ளது போலத் தொகின்றது. பல நூற்றாண்டுகளாக ஏற்பட்டு வந்த ஆதி இரும்புக்கால (பெருங்கற் பண்பாட்டுக் கால) மக்களின் குடியிருப்புகள் கி.மு. மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் நாகரின் ஆட்சி யின் கீழ் அமைந்த வேள்புலங்களாக, சிற்ற ரசுகளாக வளர்ச்சியடைந்தமை ஒரு குறிப் பிடத்தக்க வரலாற்றம்சமாகும். நாக மன்னர் கள் பௌத்த சமயத்திற்கு ஆதரவு புரிந்தனர் என்பதற்குக் கந்தரோடையில் கிடைத்துள்ள நீர்த்தொட்டியில் காணப்படும் கல்வெட்டும், நெடுந்தீவுக் கல்வெட்டுகளும் உறுதியான ஆதாரங்களாகும். சங்கமித்தை வெள்ளரச மரக் கிளையுடன் சம்புத்துறையில் வந்திறங்கி, அங்கிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் வழி நெடுகிலும் ஆரவாரமான வரவேற்புக் கிடைத்த தென்று மகாவம்சம் குறிப்பிடுவதும் இங்கு கவனித்தற்குரிய தாகும். நெடுந்தீவிலே புரா தனமான பௌத்தப் பள்ளி கள் நாகமன்னர் களால் அமைக்கப்பட்டன என்றும் கருத முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் போற்றிய உத்தமன்!

ராமச்சந்திரன்

எளிய குடும்பத்தில் பிறந்து பல உயரங்களைத் தொட்ட சாதனையாளர் கலாம். ராமேஸ்வரத்தில் தொடங்கிய அவரது பயணம், ஷில்லாங்கில் முடிந்திருக்கிறது. தன் சிறுவயதில் அன்றாடம் ரயிலில் பத்திரிகைக் கட்டைச் சேகரித்து விநியோகிக்கச் சென்ற ஒரு பையனின் இறப்பு, இந்தியத் துணைக் கண்டத்தின் அத்தனை பத்திரிகைகளிலும் முதல் பக்கச் செய்தி. ஒருவருடைய வாழ்வின் பெருமதி பிறப்பில் அல்ல; மறைவில்தான் வெளிப்படுகிறது என்பதை உணர்த்திச் சென்றிருக்கும் பெருந்தகை அவர்.

இளம் வயதிலேயே லட்சியங்களை வகுத்துக்கொண்டதன் மூலம் வாழ்வின் திசையை வெற்றிப்படிகளை நோக்கித் திருப்பியமைத்துக்கொண்டவர் அப்துல் கலாம். திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் இளங்கலை (கலைமாணி) இயற்பியல் பட்டப்படிப்பை முடித்த பின்னர், வானூர்தி பொறியியல் படிக்க வேண்டும் என்ற முயற்சியில் தீவிரமாக இறங்கினார். எம்.ஐ.டி. கல்லூரியில் வானூர்தி பொறியியல் படிப்பை முடித்தவுடன் டி.ஆர்.டி.ஓவில் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது. மூன்று ஆண்டுகள் வெற்றிகரமாகப் பணிபுரிந்த அப்துல் கலாமுக்கு 'ஏரோநாட்டிகல் டெவலப்மெண்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட்டிடமிருந்து' அழைப்பு வந்தது. அதில் பணிபுரிந்துகொண்டிருந்த சமயத்தில், இஸ்ரோவில் பணிபுரியும் வாய்ப்பும் அவரைத் தேடிவந்தது. இம்முறை அவருக்கு அழைப்பு விடுத்தது இந்திய விண்வெளித் துறையின் தந்தை என்று அழைக்கப்படும் விக்ரம் சாராபாய். நம்ப முடியாத ஆச்சரியத்துடன் அவரைச் சந்தித்த அப்துல் கலாம், அவரைத் தனது வழிகாட்டிகளில் ஒருவராகவே கருதத் தொடங்கினார்.

இஸ்ரோ பணிகளில் ஒன்றாகக் கேரளத்தின் தும்பா ராக்கெட் ஏவுதளத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த அப்துல் கலாம், அமெரிக்க விண்வெளித் துறையான நாஸாவில் ஆறு மாத காலப் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ராக்கெட் தொழில்நுட்பம் தொடர்பாக நாஸாவில் கற்றுக்கொண்ட பயிற்சியைத் தவிர, வெளிநாடுகளில் அவர் வேறு எந்த பயிற்சியையும் எடுத்துக்கொள்ளவில்லை. அவரது திறமை, உழைப்பு மற்றும் ஆர்வத்தால் வாய்ப்புகள் அவரைத் தேடி வந்தன.


### இந்தியாவின் பெருமை

அமெரிக்கர்களின் கடும் உழைப்பும் அறிவியல் ஆர்வமும் விண்வெளித் துறையில் சாதனைகளுக்கு வழிவகுத்தது குறித்த வியப்பு அப்துல் கலாமுக்கு இருந்தது. அதேசமயம், ராக்கெட் தொழில்நுட்பத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவும் ஈடுபட்டிருந்ததைக் காட்டும் ஓவியம் நாஸா ஆய்வுக்கூடம் ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததைக் கண்ட அப்துல் கலாம் ஆச்சரியத்தில் உறைந்து நின்றார். பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராகப் போரிட்ட திப்பு சுல்தான் பயன்படுத்திய ஏவுகணைகளின் ஓவியம் அது. விண்வெளித் துறையில் அமெரிக்காவுக்கு இணையாக இந்தியாவும் வெற்றிகளைக் குவிக்க முடியும் என்ற நம்பிக்கை அவருக்குள் நிலைபெற்றதும் அப்போதுதான்.

இந்தியா திரும்பிய அப்துல் கலாமுக்கு மற்றொரு மகத்தான வாய்ப்பை வழங்கினார் விக்ரம் சாராபாய். எஸ்.எல்.வி. ராக்கெட் திட்டத்தின் தலைவராக அப்துல் கலாமை நியமித்தார். 1971இல் விக்ரம் சாராபாய் மறைவுக்குப் பிறகு, இஸ்ரோ தலைவராகப் பொறுப்பேற்ற சதீஷ் தாவனும் அப்துல் கலாமின் திறமை மீது பெரும் மதிப்பு கொண்டிருந்தார். அப்துல் கலாமை, எஸ்.எல்.வி. ராக்கெட் திட்டத்தின் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுத்தார் சதீஷ் தாவன். கடும் சவால் நிறைந்த பணியில் ஆரம்பக் கட்ட தோல்விக்குப் பிறகு, உலக அரங்கில் விண்வெளித் துறையில் இந்தியாவைத் தலைநிமிரச் செய்தார் அப்துல் கலாம்.

அந்தக் காலகட்டத்தில் தான் எதிர்கொண்ட அனுபவங்களை அவர் பதிவுசெய்திருக்கிறார். 1979இல் எஸ்.எல்.வி–3 ராக்கெட்டை ஏவும் பணி ஹரிகோட்டா ஏவுதளத்தில் நடந்துகொண்டிருந்தது. கடைசி நேரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாமல், ராக்கெட்டைச் செலுத்துமாறு தானே உத்தரவிட்டார் எனவும், ஆனால் அந்த ராக்கெட் புவிவட்டப் பாதையில் நிலைகொள்வதற்குப் பதிலாக வங்காள விரிகுடாவில் விழுந்துவிட்டது என்றும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார் அப்துல் கலாம்.

"தவறு என்னுடையதாக இருந்தாலும் அணியின் தோல்வியை இஸ்ரோ தலைவராக இருந்த சதீஷ் தாவன் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டார். விமர்சனங்களையும் அவரே எதிர்கொண்டார். ஆனால், 1980 ஜூலை 18இல் ரோஹிணி செயற்கைக் கோள் எஸ்.எல்.வி– 3 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களைச் சந்திக்க என்னை அனுப்பினார் சதீஷ் தாவன்" என்று அப்துல் கலாம் நினைவுகூர்ந்தார்.



### எளிமையான குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் தேர்வு செய்யப்பட்ட பின், பதவியேற்பு விழாவை ஏற்பாடுசெய்ய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அந்த அமைச்சர் அப்போது சென்னையிலிருந்த கலாமைத் தொடர்புகொண்டு, கலாம்ஜி நீங்கள் பதவி ஏற்க நல்ல நேரம் தேர்வு செய்துகூறுகிறீர்களா? என்று கேட்டாராம். அதற்கு கலாம் சொன்னாராம், "பூமி தன்னைத் தானே சுற்றிக்கொள்ள 24 மணி நேரம் பிடிக்கிறது. அவ்வாறு சுற்றிக்கொண்டே சூரியனைச் சுற்றுகிறது. அவ்வாறு சூரியனைச் சுற்றிவர அதற்கு 365 நாள் பிடிக்கிறது. அதுபோல சூரியன் விண்மீன் திரளையும் சுற்றுகிறது. ஆகவே நேரம் என்பது இந்த நடைமுறையைக் குறிக்கும் ஒரு நிகழ்ச்சி. அது ஒரு வானவியல் நிகழ்ச்சியே தவிர, ஜோதிட நிகழ்ச்சி இல்லை." எப்போதுமே சரி, அவர் ஒரு விஞ்ஞானியாகவே இருந்தார்!

பிற்காலத்தில், மாபெரும் கூட்டு முயற்சியும் அர்ப்பணிப்பும் தேவைப்படும் அறிவியல் உலகில் சாதிக்க நினைப்பவர்களுக்கு உதவும் பணியை முனைப்புடன் செய்தார் அப்துல் கலாம். 2002இல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற பிறகு, அறிவியல் கண்டுபிடிப்புகளில் ஈடுபடுபவர்களுக்கு மதிப்பளிக்கத் தொடங்கினார். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும், அறிவியல் துறையின் புதுமையாளர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகை மதிப்பளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

> இந்திய இளம் தலைமுறையினரிடம் பிரபலமாக இருந்த குடியரசுத் தலைவர் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சொல்லலாம். திரைப்படப் பாடல்களிலும், மக்கள் மேடைகளிலும் உச்சரிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் அவர் ஒருவர்தான். அதனால்தான் அவருக்கு இந்திய எல்லையைத் தாண்டி யாழ்ப்பாணத்திலும் இன்னும் தமிழர்கள் வாழும் இடங்கள் பலவற்றிலும் அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

### லேசான மனது!

அமெரிக்க செயற்கைக்கோள்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பொக்ரான் அணுகுண்டு சோதனை நடத்தியது, அக்னி, பிரித்வி ஏவுகணைகளை உருவாக்கியதன் மூலம் இந்திய இராணுவத்தின் பலத்தை அதிகரித்தது என்று பல்வேறு சாதனைகளைப் புரிந்தஅப்துல்கலாம்,400கிராம்எடைகொண்ட லேசான செயற்கைக் கால்களை உருவாக்கியதுதான் தனது உண்மையான வெற்றி என்று குறிப்பிட்டிருக்கிறார். "4 கிலோ எடை கொண்ட செயற்கைக் கால்களைத் தூக்கி நடக்க முடியாமல் குழந்தைகள் சிரமப்பட்டனர். எனது அணியினர் தயாரித்திருக்கும் இந்த இலகு ரக செயற்கைக் கால்களை அணிந்து குழந்தைகள் ஓடி விளையாடுவதைப் பார்க்க அத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று நெகிழ்வுடன் கூறியவர் அவர்.

### மக்களின் நாயகன்

உயர் பதவிகளில் இருப்பவர்கள் அதிகார மட்டத்திலும் வெளிநாட்டுத் தலைவர்களின் மத்தியிலும் வளைய வருபவர்களாகவே இருப்பார்கள் என்ற பிம்பத்தை உடைத்தவரும் அப்துல் கலாம்தான். இந்திய இளம் தலைமுறையினரிடம் பிரபலமாக இருந்த குடியரசுத் தலைவர் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சொல்லலாம். திரைப்படப் பாடல்களிலும், மக்கள் மேடைகளிலும் உச்சரிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் அவர் ஒருவர்தான். அதனால்தான் அவருக்கு இந்திய எல்லையைத் தாண்டி யாழ்ப்பாணத்திலும் இன்னும் தமிழர்கள் வாழும் இடங்கள் பலவற்றிலும் அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. ஒபாமா போன்ற தலைவர்கள்கூட இரங்கல் தெரிவித்தார்கள்.

தான் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் போது அரங்கில் இருப்பவர்களிடம் ஆக்கபூர்வமான மனநிலையையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துவதிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார். ஒழுக்கம், நற்பண்பு, உழைப்பு ஆகியவற்றை வலியுறுத்தும் வாசகங்களை வாசித்துக் காட்டுவதுடன், அரங்கில் இருப்பவர்கள் அவற்றைத் திரும்பக் கூறும்படி சொல்வதும் அவரது வழக்கம். யாழ்ப்பாணம் வந்திருந்தபோது யாழ். இந்துக் கல்லூரியிலும் அவர் இதனைத்தான் செய்தார். எதிரில் இருப்பவர்கள் குழந்தைகளானாலும், பெரியவர்களானாலும் அதைச் செய்தாக வேண்டும் அவருக்கு. அந்த நேரத்தில் அது வேடிக்கையாகத் தெரிந்தாலும் அவரது வார்த்தைகளைத் திரும்பச் சொல்லும் கணத்தில் ஒவ்வொரு மனதிலும் நல்லொழுக்கம், கடின உழைப்புக் குறித்த சிந்தனைகள் வலுப்பெறுவதையும் மனம் தெளிவு பெறுவதையும் அவர் பங்கேற்ற கூட்டங்களில் கலந்துகொண்டவர்களால் உணர்ந்திருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்பாப்வே பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரிலிருந்து பாகிஸ்தான் விலகியமைக்கு வீரர்களின் உடல்நல அக்கறை, உலகக்கிண்ண ரி-20 தொடருக்கான தயார்ப்படுத்தல்கள் இவ்வாறான காரணங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முன்வைத்தாலும் சிம்பாப்வேயுடன் தோல்வியடைந்தால் மினி உலகக்கிண்ண வாய்ப்பு பறிபோகும் என்ற காரணத்தினால், சிம்பாப்வேக்கு பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால்தான் பாகிஸ்தான் சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரைக் கைவிட்டிருக்கும் என்றும் எண்ணத்தோன்றுகிறது.

ஏனெனில் பாகிஸ்தானுக்கு சிம்பாப்வே செய்த உதவியை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையோ அல்லது கிரிக்கெட் உலகமோ இலகுவில் மறந்துவிட முடியாது. கடந்த 7 ஆண்டுகளாக பயங்கரவாத நாடுகளில் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டு பாதுகாப்புக் காரணங்களுக்காக வேறு எந்த அணியும் பாகிஸ்தான் சென்று தொடரில் பங்கெடுக்காத நிலையில் சர்வதேச ஆட்டங்களை பாகிஸ்தான் பக்கமும் திருப்பும் விரும்பாது. அதேநேரம் உலகக்கிண்ணத்துக்கு இன்னும் நாள்கள் உள்ள நிலையில் வீரர்களின் உடல்நலம் பாதிக்கப்படும் என்று சொல்லும் அளவுக்கு பாகிஸ்தான் தொடர்ச்சியாக தொடர்களில் பங்கெடுக்கவில்லை. எனவே இவற்றிலிருந்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை சொல்லும் காரணங்கள் வெறும் போலியானவை என்று தெளிவாகத் தெரிகிறது.

சிம்பாப்வேக்கு எதிரான தொடரை பாகிஸ்தான் கைவிடுவதுக்கு ஒரேகாரணம் சிம்பாப்வேயுடன் தோற்றுப்போவோம் என்ற பயம்தான். ஏனெனில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் வென்றதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தரவரிசையில் பாகிஸ்தான் 9ஆவது இடத்திலிருந்து



# சிம்பாப்வேக்கு பயந்தொடுங்கிய பாகிஸ்தான்

பயந்தே பாகிஸ்தான் தொடரைக் கைவிட்டிருக்கும் என்ற சந்தேகங்களும் தற்பொழுது பலமாக எழத்தான் செய்கின்றன.

ஆகஸ்ட் 17ஆம் திகதி முதல் செப்டம்பர் 17ஆம் திகதிவரை சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் ரி-20 தொடரில் விளையாடவிருந்த பாகிஸ்தான் திடீரென அந்தத்தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. இதற்கு வெளிப்படையான காரணங்களாக மேற்குறிப்பிட்ட சில காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், 2017ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மினி உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி நோக்கில் தமது உயிரைப் பணயம் வைத்து சிம்பாப்வே வீரர்கள் பாகிஸ்தானுக்குச் சென்று ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் பங்கெடுத்தனர். சிம்பாப்வே அணி பாகிஸ்தானில் கடந்த மே மாதம் சுற்றுப்பயணம் மேற்கொண்டதால்தான் இது சாத்தியமானது. இதற்குப் பிரதியுபகாரமாக சிம்பாப்வே செல்ல பாகிஸ்தான் ஒப்புக் கொண்டது. எனவே இவ்வாறான ஒரு கிரிக்கெட் உறவை உலகக்கிண்ண தயார்ப்படுத்தல்களையோ அல்லது வீரர்களின் உடல்நலத்தைப் பற்றி தெரிவித்தோ முறித்துக்கொள்வதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை 8ஆவது இடத்துக்கு முன்னேறியது. மினி உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெறுவதற்கு இதுபோதுமானது. சிம்பாப்வேயுடன் விளையாடி, பாகிஸ்தான் தொடரை இழந்தால் மீண்டும் ஒன்பதாவது அல்லது பத்தாவது இடத்துக்குத் தள்ளப்படும். அது மினி உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெறும் வாய்ப்பைச் சிதைத்துவிடும். எனவே மினி உலகக்கிண்ணத்துக்கு தகுதிபெறுவதில் சிக்கல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதாலும் தம்மைத் தமது சொந்த மண்ணில் வைத்து மிரட்டிய சிம்பாப்வே, சிம்பாப்வேயில் வைத்து தம்மைத் தோற்கடித்தாலும் என்ற பயமுமே பாகிஸ்தான் சிம்பாப்வேக்கு எதிரான தொடரை கைவிட காரணமாகியுள்ளது.

# நீதிக்கும் அப்பால் பந்தாடப்படும் ஸ்ரீசாந்த்......




2013ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல்.தொடரில் ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து கைதுசெய்யப்பட ஸ்ரீசாந்த் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு போதிய ஆதாரம் இல்லை என்று தெரிவித்து அவர் மீதிருந்த குற்றச்சாட்டை இல்லாமல் செய்து விடுதலை செய்தது நீதிமன்றம். ஆனபோதிலும் ஸ்ரீசாந்த் குற்றமுள்ளவர்தான். ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபட்டார் என்று தொடர்ந்தும் வாதாடி வருவதுடன் ஸ்ரீசாந்த் மீதான தடையை நீக்க முடியாது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

'கேரள எக்ஸ்பிறஸ்' என்ற புனைபெயரில் தனது வேகத்தால் எதிர் வீரர்களைக் கிறங்கடித்தவர் ஸ்ரீசாந்த். இந்திய அணி கைப்பற்றிய உலகக் கிண்ணங்களில் ஸ்ரீசாந்தின் பங்களிப்பு மிகப்பெரியது. அதிலும் குறிப்பாக இந்திய அணி ரி-20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்ற ஸ்ரீசாந்த் மிகப்பெரும் காரணமாக இருந்தார். மிஷ்ரா அடித்த பந்தை ஓடிச்சென்று பிடியெடுத்ததன் மூலமே இந்திய அணி ரி-20 கிண்ணத்தைக் கைப்பற்றியது. ஒருவேளை அந்த பிடியெடுப்பை ஸ்ரீசாந்த் தவறவிட்டிருந்தால். கிண்ணம் பாகிஸ்தானிடம் சென்றிருக்கும்.

இவ்வாறாக இந்திய அணி கொடிகட்டிப் பறந்தமைக்கு முக்கிய பங்காற்றிய ஒரு வீரரை குற்றமற்றவர் என்று தெரிவித்த பின்னரும் அவர் மீதான தடையைத் தொடருவது நிச்சயம் இந்தியக் கிரிக்கெட்டுக்கு ஆரோக்கியமானதாக இருக்காது. நீதிமன்றமே நிரபராதி என்று விடுவித்த பின்னர் ஒருவரைக் குற்றமுள்ளவர் என்று தெரிவிக்கும் அதிகாரம் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் கீழ் செயற்படும் எந்த அமைப்புக்களுக்கும் இல்லை. இவ்வாறிருக்கையில் ஸ்ரீசாந்த் மீதான தடை எந்தப்பின்னணியில் தொடரப்படுகிறது. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு நீதிமன்றத்துக்கு மேலான அதிகாரங்களைக் கொடுத்தது யார்? இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கின்ற பொழுது வீரர்களுக்கும் திறமைகளுக்கும் விட பிரதேசத்துக்கும் மதத்துக்கும் மொழிக்குமே இந்தியக் கிரிக்கெட் சபை முக்கியத்துவம் கொடுக்கிறது என்று எண்ணத்தோன்றுகிறது.

# மலிங்க அண்ணனுக்கு ஒரு மடல்



அன்புள்ள மலிங்கவுக்கு, நான் நலம் நீங்கள் நலமா எண்டு கேட்டு வெந்த புண்ணில வேலப் பாய்ச்ச நான் விரும்பல. ஏனென்டால் பாகிஸ்தான் போட்டு புரட்டியெடுத்துப் பந்தாடினதில மனசுடைஞ்சு போயிருப்பியள். நம்பிக்கையான சில வீரர்கள் அணியில இருந்து விலகின அணி பலவீனமடையிறதும் பிறகு பலம் பெறுகிறதும் காலம்காலமாக கிரிக்கெட்டில நடந்து வருகிற விடயம்தான். அதனால உந்தத் தோல்விகளையெல்லாம் விட்டுத்தள்ளுங்கோ.

ஆனால் பாருங்கோ உங்களில ஒரு விசயம் எனக்கு உறுத்தலாவே இருக்கு என்னெண்டு கேட்டியள் எண்டால் உங்களின்ர அறிக்கையள். ஒருநாள் தொடர், டெஸ்ட் தொடர் எண்டு இருக்கிற அத்தனை தொடரையும் சொந்த மண்ணில பறிகொடுத்துப்போட்டு ரி-20 தொடரில் பாகிஸ்தானை வீழ்த்துவோம், உறுட்டிப் பிரட்டுவோம், வெட்டி விழுத்துவோம் எண்டு பக்கம் பக்கமாய் அறிக்கையள அடிச்சு விட்டியள். ஆனால் நீங்கள் சொன்ன எல்லாத்தையும் பாகிஸ்தான் உங்களுக்குச் செஞ்சுட்டாங்கள். அணியின்ர தலைவர், அனுபவ பந்து வீச்சாளர், மூத்த வீரர் எண்டு அடைமொளியள அடுக்கி வைச்சிருக்கிற நீங்கள் கொஞ்சம் அப்பப்ப விளையாடினால்தான் பாக்கிற எங்களுக்கும் சந்தோசமாக இருக்கும். அதனால தலையில இருக்கிற கனத்தோட (தலைமுடியைக் குறிப்பிடவில்லை) பேச்சையும் குறைச்சிட்டு கொஞ்சம் விளையாட்டில கவனத்த செலுத்துங்கோ. அணித்தெரிவு எண்டபெயரில் விடுற பகிடியள ஓரமா வைச்சிட்டு சந்திமாலையும் திரிமன்னேயையும் அணிக்கு உடனடியாக திருப்பினியள் எண்டால் கொஞ்சம் அடி வாங்கிறது குறைவா இருக்கும்.

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org